வெளியீடு 31-8-2005

Issued 31-8-2005

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மார்ச் 21, 2005—தொகுதி 74—எண் 2

Monday, the 21st March 2005—Volume 74—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

D
V211, 31'P05
P05 · 74 · 2
226642

[Price Rs. 3.00

21-3-2005

உள்ளடக்கம்

பக்கங்கள்

1. **தகவல் கோரல்—**

(அ) மக்களவைத் தலைவர் கூட்டிய கூட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் பங்கேற்காதது 305-306

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு 306-307 310-311

2. **கவன ஈர்ப்பு—**

ஆலங்காயம் ஒன்றியம், ஜவ்வாது மலையில் பழுதடைந்த மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றுதல் 307-310

3. **முன்பண மானியக் கோரிக்கைகள், 2005–2006, அளித்தல்—**

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 311-315

4. **இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2004–2005, அளித்தல்—**

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 315-322

5. **மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 45—தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை— இந்து சமய அறநிலையத் துறை

(ஆ) கோரிக்கை எண் 43–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

322-386 —தொடர்ச்சி

பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

*மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி	323-339, 340 343
மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி	340-351, 353-373
(இ) கோரிக்கை எண் 18 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	387-499
மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்	387, 402, 412-414, 424, 426, 430-432, 434-439, 442-443, 448-450, 452-454, 456-458, 462, 463, 465-466, 469-493
*டாக்டர் பி. வள்ளல் பெருமான்	403-411
திரு. பி.எஸ். அருள்	414-423
திரு. என்.ஆர். ரங்கராஜன்	423-432
டாக்டர் ஆர். கோவிந்தசாமி	388, 433-440
திரு. டி. மணி	392, 442-448
திரு. ஜி. பழனிசாமி	398, 451-463
* திரு. ஜெக. வீரபாண்டியன்	464-468

பக்கங்கள்

6. அறிவிப்பு—	
இலங்கை நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் தலைமையில் வந்துள்ள குழுவினர் நேரில் அவை நடவடிக்கைகளை பார்வையிட்டுக் கொண்டிருப்பதற்கு வரவேற்பு	354
7. அரசினர் தீர்மானம்—	
விதி 32–ஐத் தளர்த்தல்	441
8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்	500

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 8, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 மார்ச் 21, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு"

இது நமது கடமையென்றறிந்து சான்றாண்மையை மேற்கொண்டொழுகுவார்க்கு, நல்வினைகளெல்லாம் செய்யப்பட வேண்டிய கடமையாகும் என்று கூறுவர் அறிஞர்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. தகவல் கோரல்

(அ) மக்களவைத் தலைவர் கூட்டிய கூட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் பங்கேற்காதது

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றங்களுக்கும், நீதித் துறைக்கும் மோதல் வலுத்து வருகிறது. கடந்த சில நாட்களாக இதுகுறித்துப் பொது விவாதம் நடைபெற்று வருகிறது. நேற்றையதினம், மக்களவை சபாநாயகர் அவர்கள், பேரவைத் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி இருந்தார்கள். இந்த மோதல் நல்லதல்ல என்பதை நான் அறிவேன். ஆனால் சட்டசபையின் அதிகாரம் என்ன? அதேபோல, நீதித் துறையின் அதிகாரம் என்ன என்பது தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். ஒன்றுக்கொன்று வரையறையைத் தாண்டிச் செல்லக்கூடாது; லட்சுமண ரேகையைத் தாண்டிச் செல்லக்கூடாது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். எனவே, நீங்கள்

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2005 மார்ச் 21

நேற்றையதினம் நடைபெற்ற இந்தக் கூட்டத்திலே கலந்துகொள்ளவில்லை. ஆக, நம்முடைய நிலை என்ன, பேரவைத் தலைவருடைய நிலை என்ன, அரசின் நிலை என்ன என்பதை அறிந்துகொள்ள எல்லோரும் ஆவலோடு இருக்கிறார்கள். இந்த மோதல் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பதில் சந்தேகம் இல்லை.. ஆனால் அதிகாரங்களைப் பொறுத்த வரையில், ஒருவருடைய அதிகாரத்தில் இன்னொருவர் குறுக்கிடக்கூடாது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். எனவே நம்முடைய நிலை என்ன என்பதையும், பேரவைத் தலைவர் தன்னுடைய நிலை என்ன என்பதையும், ஏன் கலந்துகொள்ளவில்லை என்பதையும் விளக்குவார்கள் என நம்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுகுறித்து நம்முடைய சட்டப் பேரவையின் நிலையையும், சட்டப் பேரவையை உள்ளடக்கிய அரசின் நிலையையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 20–3–2005 அன்று புது டெல்லியில் அனைத்து மாநிலங்களின் சட்டப் பேரவைத் தலைவர்களின் கூட்டம் நடத்தப்பட உள்ளது என்றும், இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, மக்களவையின் செயலகத்திலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. அண்மையில் நடைபெற்ற நிகழ்வுகளின்பேரில், சட்டமன்றப் பேரவைகளுக்கும், நீதிமன்றங்களுக்கும் உள்ள உறவுகள் பற்றி விவாதிக்க இந்தக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. தமிழகச் சட்டமன்றப் பேரவை, நீதிமன்றங்களின்பால் வைத்துள்ள மிக உயரிய மரியாதையும், மதிப்பும் பன்னெடுங்காலமாகவே தொடர்ந்து வருகிறது. அதுபோன்றே நீதிமன்றங்களும் தமிழகச் சட்டப் பேரவைக்கு உரிய மதிப்பும், மரியாதையும் அளித்து வருகின்றன. எனவே, தமிழகத்தில் சட்டப் பேரவைக்கும், நீதிமன்றங்களுக்கும் என்றைக்குமே சுமுகமான உறவு நிலவி வருகிறது. அரசியல் சட்ட அமைப்பால் வரையறுக்கப்பட்டுள்ள அதிகார வரம்பின் எல்லைக்குள்ளேயே நீதிமன்றங்களும், சட்டமன்றமும் செயலாற்றி வருகின்றன. எனவே, ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு அக்கூட்டத்தில் பங்கேற்கும் அவசியம் எழவில்லை என்று நான் கருதித்தான் அந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை-(குறுக்கீடு)

226642

2005 மார்ச் 21]

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு உரிமை மீறல் பிரச்சினையை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்மீது கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என் ஆய்வில் இருக்கிறது.

2. கவன ஈர்ப்பு

ஆலங்காயம் ஒன்றியம், ஜவ்வாது மலையில் பழுதடைந்த மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், ஜவ்வாது மலையில் காவலூரிலிருந்து மந்தாரக்குட்டை வரையுள்ள பழுதடைந்த மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வனக் கோட்டத்துக்கு உட்பட்ட ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஜவ்வாது மலையில் காவலூரிலிருந்து மந்தாரக்குட்டை வரை செல்லும் வனச் சாலை 1924–25 ஆம் ஆண்டில் வனத் துறையால் அமைக்கப்பட்டது. காவலூர் மற்றும் மந்தாரக்குட்டை கிராமங்களின் நாற்புறமும், ஜவ்வாது மலையைச் சார்ந்த ஆலங்காயம், பூங்குளம் மற்றும் இன்னர் ஜவ்வாது காப்புக் காடுகளால் சூழப்பட்டுள்ளது. இச்சாலையின் மொத்த நீளம் 5.22 கி.மீ., அகலம் 4.0 மீ. ஆகும். இச்சாலை முழுவதும் தற்போது மண் சாலையாகவே உள்ளது. இச்சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்தாலும், போக்குவரத்துக்கு ஏற்ற நிலையிலேயே உள்ளது.

D
V211, 31 P05
P05.74.2

இச்சாலையினை வனத் துறையினரும், மந்தாரக்குட்டை மற்றும் பீமன்குளத்தைச் சார்ந்த கிராம மக்களும் பயன்படுத்தி வருகின்றனர். இச்சாலை மண் சாலையாக, போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் இருந்த போதிலும், சாலை மிகவும் பழுதடைந்துள்ள நிலையில், பொது மக்கள் நலன் கருதி, இச்சாலையினைத் தார்ச் சாலையாக மாற்ற ரூ.80.00 இலட்சம் தேவைப்படும். வனத் துறை வசம் போதிய நிதி இல்லாத காரணத்தால் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலம் நிதி பெற வனத் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிதி கிடைக்கப்பெற்ற பின்னர், இச்சாலையினைத் தார்ச் சாலையாக மாற்ற வனத் துறைமூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்திலேயே முதல் தரமான சந்தனம் கிடைக்கக்கூடிய மலை இந்த ஜவ்வாது மலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மண் சாலையைத் தார்ச் சாலையாக ஆக்கவேண்டும் என்பது. எங்கேயோயிருந்து ஆரம்பிக்கிறீர்களே?

திரு. சி. ஞானசேகரன்: அந்த ஜவ்வாது மலையில் பல கிராமங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. மலைவாழ் மக்கள் அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக மந்தாரக்குட்டை, பீமவிளம், ஜெரபெண்டா, ரெட்டியூர் போன்ற கிராமத்து மக்கள் வரக்கூடிய பாதை இல்லாமல், பாதையே இருக்கிற இடம் தெரியாமல் மறைந்து போய் இருக்கிறது. *1924-25* ஆண்டுகளிலேயே அங்கே வனச் சாலை போடப்பட்டிருக்கிறது. புதிதாக ஒரு சாலை போடுவது என்று சொன்னால்தான், இன்று Supreme Court-க்கும், மற்றவற்றிற்கெல்லாம் நாம் அனுமதி கேட்க வேண்டும்; மத்திய அரசை அனுமதி கேட்கவேண்டும் என்ற நிலை. ஆனால் இதிலே ஏற்கெனவே சாலை போடப்பட்டு, சாலை (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன கேள்வி?

திரு. சி. ஞானசேகரன்: என்னுடைய கேள்வி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்—தொடர்ந்து 10 ஆண்டு காலமாக இதை வற்புறுத்தி வருகிறேன். அந்தப் பகுதி மக்கள்—ஏனென்று சொன்னால், பிரசவத்திற்குப் பெண்கள் வரவேண்டுமென்று சொன்னாலும்கூட, பாதை இல்லை. மண் சாலை போக்குவரத்துக்கு ஏற்புடையதாக இருக்கிறது என்று ** இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே அமைச்சர் வந்தால் நானே அழைத்துக்கொண்டு போய்க் காட்டுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்று சொல்லாதீர்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. என்ன என்று கேள்வியைக் கேளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இப்பொழுது வனத் துறை மூலமாக, வனத் துறையினுடைய— வனத் துறையிலே ஒரு Engineering Department இருக்கிறது. அந்தப் பொறியியல் துறை அதற்கான ஒரு அனுமதியைக் கொடுக்காத காரணத்தினாலேதான் பாரதப் பிரதமருடைய கிராமச் சாலைகள் திட்டத்தில்கூட அதை எடுக்க முடியாத ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது. பாரதப் பிரதமர் கிராமச் சாலைத் திட்டத்திலே எடுத்துவிட்டார்கள். ஆனால் வனத் துறையினுடைய பொறியாளர்கள் அதற்கு அனுமதி கொடுக்காத காரணத்தால்தான் இன்னும் தடைப்பட்டு நிற்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து, பொறியாளர்களை அழைத்துப் பேசி, அதற்கான அனுமதியை வழங்குவதற்கு ஆவன செய்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10–05*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராஜசேகரன் அவர்கள் காவலூரிலிருந்து மந்தாரக்குட்டைக்கு மட்டும்தான் கேட்டிருந்தார். ஆனால் (குறுக்கீடு) ஞானசேகரன்; ஞானசேகரன் அவர்கள், காவலூரிலிருந்து மந்தாரக்குட்டைக்கு மட்டும்தான் கேட்டிருந்தார். ஆனால் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையின்பேரில் ஜெரபெண்டா, பீமவிளம் மற்றும் மலைரெட்டியூர் ஆகிய குக்கிராமங்களை இணைக்கும் சாலைகளைத் தார்ச் சாலையாக மாற்ற பிரதம மந்திரியின் கிராமச் சாலை இணைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.1.76 கோடி மதிப்பீட்டிற்கான தொகை வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற மதிப்பீடு வனத் துறையால் தயார் செய்யப்பட்டு, வேலூர் திட்ட அலுவலருக்கு மார்ச் 2005, முதல் வாரத்தில் அனுப்பி வைக்கப்பட்டது. திட்ட அலுவலர் பார்வையிட்ட பின்னர், பிரதம மந்திரியின் கிராமச் சாலை இணைப்புத் திட்ட மதிப்பீட்டுக் குழு, பெங்களூருக்கு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பெங்களூரிலிருந்து ஒப்புதல் பெற்ற பின், வேலைகள் வரும் நிதியாண்டில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2005 மார்ச் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். பொதுவாக வனத் துறைப் பகுதிகளிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது யார் என்ற ஒரு கேள்வி வந்துவிடுகிறது. இப்போதெல்லாம் கிராமச் சாலைத் திட்டத்திலே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஞானசேகரன், வரும் நிதியாண்டில் வேலை தொடங்கப்படும் என்று சொல்கிறார்.

திரு. சி. ஞானசேகரன்: தொடங்கப்படும்; யார் செய்யப் போகிறார்கள்? இதிலே ஒரு சிக்கல் வந்து இன்னும் இரண்டு வருடங்கள் இழுத்து விடக்கூடாது, அதற்காகத்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நான் கேட்க விரும்புவது எல்லாம், ஒன்று வனத் துறையே இதை உடனடியாகச் செய்தாலும் சரி, இல்லையென்று சொன்னால், Highways Department இப்போது இந்தக் கிராமச் சாலைத் திட்டத்தை எல்லாம் எடுத்துச் செய்து கொண்டிருக்கிறார்கள், அவர்களிடம் நீங்கள் தரமான சாலை அமைப்பதற்கு ஒப்படைத்தாலும் சரி; மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த நிதியாண்டில் வனத் துறை செய்யப் போகிறதா? அல்லது Highways Department-இடம் விடப் போகிறீர்களா என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: வனத் துறைக்கு உட்பட்ட சாலையை வனத் துறைதான் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

1. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

திரு. கே.சி. கருணாகரன்: கடலூரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. ஏற்கெனவே சொன்னீர்கள். அது என் ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள். கருணாகரன், எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள். என் ஆய்வில் இருக்கிறது. எப்போது எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமோ, அப்போது எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடு)

2005 மார்ச் 21]

திரு. கே.சி. கருணாகரன்: பேச வாய்ப்பளிக்காததால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

[இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.]

3. முன்பண மானியக் கோரிக்கைகள், 2005–2006, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2005–2006 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைத்தல். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005–2006 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கின்றேன்.

2005–2006 ஆம் ஆண்டு உடனடிச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

	கோரிக்கை (Demand)	ரூபாய் ஆயிரத்தில் (Rupees in Thousands)		
		வருவாய் (Revenue)	மூலதனம் (Capital)	கடன் (Loan)
1	மாநிலச் சட்டமன்றம்	3,28,33	—	—
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	3,48,27	—	—
3	நீதி நிருவாகம்	38,12,80	1,68,06	—
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	101,83,49	10,57,97	6,25
5	வேளாண்மைத் துறை	201,52,61	12,07,61	—
6	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு	41,42,51	4,40	—
7	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம்	18,97,30	1,00,49	—

	கோரிக்கை (Demand)	ரூபாய் ஆயிரத்தில் (Rupees in Thousands)		
		வருவாய் (Revenue)	மூலதனம் (Capital)	கடன் (Loan)
8	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால்வளம்	3,03,39	—	—
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	47,67,31	24,13,39	—
10	வணிக வரித் துறை—வணிக வரிகள்	106,66,25	1	—
11	வணிக வரித் துறை—முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு	25,07,96	—	—
12	கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை	328,56,96	13,68,16	2,29,43
13	எரிசக்தித் துறை	273,34,18	6,25,00	27,15,45
14	சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை	29,99,54	27,11,40	—
15	நிதித் துறை	98,48,14	1	4,56,76
16	கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல்	78,09,51	—	10,00
17	கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்	15,36,43	—	—

	கோரிக்கை (Demand)	ரூபாய் ஆயிரத்தில் (Rupees in Thousands)		
		வருவாய் (Revenue)	மூலதனம் (Capital)	கடன் (Loan)
18	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	364,37,55	48.63,48	—
19	உயர் கல்வித் துறை	183,02,41	2,41,95	1
20	நெடுஞ்சாலைகள் துறை	227,40,30	520,46,42	1
21	உள் துறை—காவல்	317,30,27	17,34,11	12,50
22	உள் துறை—தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்	17,13,74	1	—
23	உள் துறை—சிறைச்சாலைகள்	17,76,90	6,25,01	—
24	உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம்	14,42,28	—	—
25	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	57,99,34	5,50,03	28,87,50
26	தொழில் துறை	12,68,60	19,53,90	—
27	செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம்	8,01,80	—	—
28	செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா	4,50,95	3,59,62	—
29	செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு	13,67,81	25,00	—
30	தகவல் தொழில்நுட்பவியல் துறை	3,52,17	—	—

கோரிக்கை (Demand)	ரூபாய் ஆயிரத்தில் (Rupees in Thousands)		
	வருவாய் (Revenue)	மூலதனம் (Capital)	கடன் (Loan)
31 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	47,52,50	1,13,36	—
32 சட்டத் துறை	2,08,42	—	—
33 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	175,53,64	166,57,56	30,42,31
34 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	6,22,23	—	—
35 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	31,16,03	2,08,25	—
36 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை	8,82,51	—	—
37 பொதுத் துறை	20,30,78	2,50,00	—
38 பொதுப் பணித் துறை	174,77,01	168,16,60	—
39 வருவாய்த் துறை	248,98,15	2	—
40 ஊரக வளர்ச்சித் துறை	484,07,58	119,94,10	—
41 பள்ளிக் கல்வித் துறை	1,068,05,05	18,91,43	3,88
42 சிறு தொழில்கள் துறை	14,22,04	13,00	—
43 சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	139,54,47	1	—
44 தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி—பண்பாடு	9,59,67	25,63	—
45 தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை	7,20,61	12,90	—

கோரிக்கை (Demand)	ரூபாய் ஆயிரத்தில் (Rupees in Thousands)		
	வருவாய் (Revenue)	மூலதனம் (Capital)	கடன் (Loan)
46 போக்குவரத்துத் துறை	67,37,89	3	—
47 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	8,49,21	1	—
48 ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	1,207,78,50	—	—
49 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	502,69,01	—	—
பெருமொத்தம்	**6,881,24,40**	**1,200,38,93**	**93,64,10**

4. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2004–2005, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2004-2005 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004-2005 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்க விழைகின்றேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்த அவையில் வைக்கப்பட்ட இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் 10728.52 கோடி ரூபாய் நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கின்றன. இதில், 3005.04 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 1364.65 கோடி ரூபாய் முந்தைய கால மூலதனச் செலவு உட்பட 1645.04 கோடி ரூபாய் மூலதனக் கணக்கிலும் மற்றும் எஞ்சிய தொகையான 6078.44 கோடி ரூபாய் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. இந்தத் துணை மதிப்பீடுகளில் இடம் பெறுகின்ற சில முக்கியமான திட்டப் பணிகள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகின்றேன்.

3. ஆதி திராவிடர் மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகை மற்றும் பயிற்சி உதவித் தொகை வழங்குவதற்காக கூடுதலாக 29.76 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது. மேலும், ஆதிதிராவிடர் மாணவர்களுக்கான அரசு மாணவரில்லங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்காக கூடுதலாக 44.10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 4—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை" என்பதன்கீழ் 27.42 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

4. பண்ணை பம்பு செட்டுகளைப் பயன்படுத்தும் விவசாயிகளின் சார்பாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நிலுவைத் தொகைகள் மற்றும் முன்பண மானியம் வழங்குவதற்காக கூடுதலாக 106.17 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 5— வேளாண்மைத் துறை" என்பதன்கீழ் 21.79 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10-10

5. கடன் தொகையை முறையாகத் திருப்பிச் செலுத்தும் சிறிய மற்றும் குறு விவசாயிகளுக்கு வட்டி ஊக்கத் தொகை அளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக அரசு 34.24 கோடி ரூபாய்க்கு அனுமதி வழங்கியுள்ளது. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு உணவு உதவித் தொகை மற்றும் ஏனைய வகை தொகை கொடுப்பதற்காகக் கூடுதலாக 259.99 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 12—கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை" என்பதன்கீழ் 257.55 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

6. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்குக் கொள்முதல் ஆதரவு வழங்குவதற்காக 300 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது. இந்தத் தொகை இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 12—கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

7. வீட்டு உபயோகத்திற்கான மின்சாரக் கட்டணத்தைக் குறைத்ததன் காரணமாக வருவாயில் ஏற்பட்ட குறைவை ஈடுசெய்வதற்காக, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு உதவித் தொகை வழங்குவதற்காக கூடுதலாக

225 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 13—எரிசக்தித் துறை" என்பதன்கீழ் 178.93 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

8. செயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் உற்பத்தித் திட்டத்திற்குப் பங்கு மூலதன நிதியுதவி அளிப்பதற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 60 கோடி ரூபாய் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 13—எரிசக்தித் துறை" என்பதன்கீழ் இத்தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

9. ஊரகச் சாலைகள் பராமரிப்பதற்காக 27.87 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது. ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 4,545 கி.மீ. நீளத்திற்கான மாவட்ட ஏனைய சாலைகளை மேம்படுத்துவதற்காக அரசு 250 கோடி ரூபாய்க்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 20—நெடுஞ்சாலைகள் துறை" என்பதன்கீழ் 27.87 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

10. சென்னை மாநகரில் 6 வழி தகவல் தொழில்நுட்ப விரைவுப் பாதை அமைக்கும் பணியை மேற்கொள்ள, மூலதன மானியமாக 21.50 கோடி ரூபாய்க்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 20—நெடுஞ்சாலைகள் துறை" என்பதன்கீழ் அடையாள நிதி ஒதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

11. 'ராஷ்டிரீய சம் விகாஸ்' திட்டத்தைச் செயற்படுத்துவதற்குக் கூடுதலாக 32 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 35—திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை" என்பதன்கீழ் இத்தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

12. கிராம ஊராட்சிகள், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய மின் கட்டண நிலுவைத் தொகைகளைக் கொடுத்துத் தீர்க்க உதவுவதற்காக 219.35 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது. இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 40—ஊரக வளர்ச்சித் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

13. "நமது கிராமம்" திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு 100 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 40—ஊரக வளர்ச்சித் துறை" என்பதன்கீழ் 85.15 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

14. மாணவர்களுக்குப் பேருந்துக் கட்டண வகையில் சலுகை அளிப்பதற்காக அரசுப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு சமுதாயச் செலவை ஈடுசெய்வதற்குக் கூடுதலாக 106.39 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இத்தொகை இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 46—போக்குவரத்துத் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

15. சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள உதவுவதற்காக அரசு இதுவரை 901.88 கோடி ரூபாய்க்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 49—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன்கீழ் 720.56 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

16. பல்வேறு கடன்களைக் கொடுத்துத் தீர்க்க, 450 கோடி ரூபாய் தொடக்க நிதியைக் கொண்டு கடன் கரைப்பு நிதி ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "கடன் செலவுகள்" என்பதன்கீழ் அடையாள நிதி ஒதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

17. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2004–2005 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று, இசைவளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

2004–2005 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

	கோரிக்கை (Demand)	ரூபாய் ஆயிரத்தில் (Rupees in Thousands)		
		வருவாய் (Revenue)	மூலதனம் (Capital)	கடன் (Loan)
1	மாநிலச் சட்டமன்றம்	1	—	—
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	3	—	—
3	நீதி நிருவாகம்	5	31,85	—
4	ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	20,82,42	6,59,80	—
5	வேளாண்மைத் துறை	21,79,30	9,40,41	—

	கோரிக்கை (Demand)	ரூபாய் ஆயிரத்தில் (Rupees in Thousands)		
		வருவாய் (Revenue)	மூலதனம் (Capital)	கடன் (Loan)
6	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு	29	—	—
7	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம்	8,83,63	1,26,20	—
8	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால்வளம்	1	—	—
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	21,70,46	—	—
10	வணிக வரித் துறை—வணிக வரிகள்	9	—	—
11	வணிக வரித் துறை—முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு	5	—	—
12	கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை	257,55,60	19,99	300,00,02
13	எரிசக்தித் துறை	178,93,38	60,00,00	—
14	சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை	3,25,21	11,36,35	—
15	நிதித் துறை	21	—	—
16	கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல்	6,68,54	—	1,87,80

	கோரிக்கை (Demand)	ரூபாய் ஆயிரத்தில் (Rupees in Thousands)		
		வருவாய் (Revenue)	மூலதனம் (Capital)	கடன் (Loan)
17	கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்	6,55,61	—	—
18	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	1,72	—	—
19	உயர் கல்வித் துறை	33	44,16	—
20	நெடுஞ்சாலைகள் துறை	51,44,29	19	4,38,70
21	உள் துறை—காவல்	32,36,95	187,98,32	—
22	உள் துறை—தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்	6	1,39	—
23	உள் துறை—சிறைச்சாலைகள்	1	—	—
24	உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம்	4,91,70	—	—
25	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	5	301,20,88	—
26	தொழில் துறை	64,11	80,57,69	26,76,50
27	செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம்	8	—	94,00
28	செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா	94,12	1,96,68	2,36,64
29	செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு	3	—	—
30	தகவல் தொழில்நுட்பவியல் துறை	1	—	—

	கோரிக்கை (Demand)	ரூபாய் ஆயிரத்தில் (Rupees in Thousands)		
		வருவாய் (Revenue)	மூலதனம் (Capital)	கடன் (Loan)
31	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	12	10,06	—
32	சட்டத் துறை	1	—	—
33	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	42,98,39	689,11,39	100,00,02
34	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	4	—	—
35	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	35,43,23	—	—
36	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை	4,81,66	—	—
37	பொதுத் துறை	7,59,48	—	—
38	பொதுப் பணித் துறை	41	43	—
39	வருவாய்த் துறை	37	14,38,62	—
40	ஊரக வளர்ச்சித் துறை	416,99,10	278,42,68	—
41	பள்ளிக் கல்வித் துறை	35	98,00	11,60
42	சிறு தொழில்கள் துறை	6	11,22	7,53,45
43	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	17,92,63	33,50	—
44	தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி—பண்பாடு	12	10,66	—
45	தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை	2	—	—

[திரு. சி. பொன்னையன்] [2005 மார்ச் 21

கோரிக்கை (Demand)	ரூபாய் ஆயிரத்தில் (Rupees in Thousands)		
	வருவாய் (Revenue)	மூலதனம் (Capital)	கடன் (Loan)
46 போக்குவரத்துத் துறை	116,85,75	—	—
47 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	1,66,12	13,53	3,00,00
48 ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	2	—	—
49 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	1,739,38,60	—	—
பெருமொத்தம்	3,000,14,83	1,645,04,00	446,98,73

முற்பகல் 10-15

5. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 45 – தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை

(ஆ) கோரிக்கை எண் 43 – சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2005–2006 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் ஆகியோரால், 18–3–2005 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற, 2005–2006 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மற்றும் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதத்திற்குப் பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2005 மார்ச் 21]

***மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கோடானுகோடி தொண்டர்களுள் ஒருத்தியாக இருந்த என்னை, இன்றைக்கு அம்மா அவர்களுடைய அமைச்சரவையில், சமூக நலத் துறையின் அமைச்சராகப் பணியாற்றிட வாய்ப்பளித்த, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு என்னுடைய நன்றியை நான் காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.

"காரிருளில் மாதரினம் கட்டுண்டுக் கிடக்கையிலே,
கண்ணிலே நெருப்பேந்திக் காக்கவந்த காவியமே!
மங்கையர்கள் வாழ்த்துரைக்க மகத்தினில் பிறந்தவரே!
சொக்க வெள்ளிப் பால் நிலவே! கொங்குத் தமிழே!
குறையில்லா மாணிக்கமே! சிங்கத் திருமகளே!
திராவிடத்தின் ஒளிவிளக்கே! எங்கள் குலவிளக்கே!
இந்நாட்டின் பொக்கிஷமே! "

அம்மா! உங்களது அடி வணங்கிப் பேசுகிறேன். அன்புடனே, பூக்களினால், தாள் வணங்கிப் போற்றுகிறேன்.

சமூகத்தில் ஓர் அங்கம் பெண்கள். சமூகத்தில் எல்லாக் கடமைகளும் அவர்களுக்கே என்று கூறிய சமுதாயம், அவர்களுக்கே உரிய உரிமைகளைத் தர மறுக்கிறது. அந்தப் பெண்களுக்கு உரிமைகளைப் பெற்றுத் தர ஒருவர் வந்தார். அவரே எங்கள் இதய தெய்வம், அன்புத் தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பெண் குலத்தின் காவலர் அம்மா அவர்கள், தொட்டில் குழந்தைத் திட்டம் கொண்டு வந்திருக்காவிட்டால், எத்தனையோ பெண் சிசுக்கள் இன்று மண்ணோடு மண்ணாக மக்கிப் போயிருப்பார்கள். இந்த நிலையை மாற்றி, மாபெரும் சரித்திரம் படைத்திருப்பவர், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா, புரட்சித் தலைவி அம்மா அவர்களாகும். (மேசையைத் தட்டும் ஒலி) பெற்ற தாயே, பச்சிளங்குழந்தையை குப்பைத் தொட்டியில் போட்டுவிட்ட காலம் இன்று. எல்லோரும் இந்தக் காட்சியை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தபொழுது, 'கண்மணிகளே, உங்களைக் காப்பதற்கு நான் இருக்கின்றேன்' என்று சொல்லிக் காப்பாற்றினாரே ஒருவர், அந்த ஒருவர்தான் மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கருணைத் தாயின் தாயுள்ளத்தை, என்ன சொல்லிப் பாராட்ட! மண்ணுக்கும் கிழாய்ப் பெண்ணை மதிப்பவர்கள் உண்டு. ஆனால், அவர்களுக்கு

மத்தியிலே, கண்ணுக்குள் வைத்துப் பெண் குழந்தையைக் காப்பாற்றுகின்றவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பொன்மனத் தலைவிக்குப் பெண் குலத்தின் சார்பாக நன்றி மலர்களை நான் காணிக்கையாக்கி, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

சமூக நலத் துறையின் பணியினை அனைத்துத் தரப்பினரும் போற்றும் வகையில், சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் கடமையுணர்வோடும், பொறுப்போடும் செயல்படும் வகையில், அவர்களுக்கு ஊதிய உயர்வும், பணிக் கொடையும் அளித்து, உடல் ஊனமுற்றோருக்குப் பணி வாய்ப்பையும் அளித்து, அவர்களின் நெஞ்சங்களில் தேன்மாரி பொழிந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவர் சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியபோது, இந்தத் திட்டத்தினை அன்றைக்குப் பிச்சைக்காரத் திட்டம் என்று எள்ளி நகையாடியவர்கள், இன்றைக்கு வெட்கித் தலை குனியும்வண்ணம், சத்துணவுத் திட்டத்தினை (மேசையைத் தட்டும் ஒலி) மிகச் சிறப்பாகச் செயல்படுத்தியது மட்டுமல்லாமல், இன்று மற்ற மாநிலங்களும் வியந்து போற்றிப் பின்பற்றும் வகையில் செயல்படுத்திக் காட்டியவர், புரட்சித் தலைவி அம்மா அவர்களே ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தை முதன்மை மாநிலமாக்குவேன் என்று கூறியதோடு மட்டுமல்லாமல், அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், சமூக நலத் துறையின் மானியக் கோரிக்கையை, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாமன்றத்தில் தாக்கல் செய்வதில் நான் பெருமையடைகின்றேன்.

முற்பகல் 10–20

நலிந்து, மெலிந்துள்ள சமுதாயப் பிரிவினரை மேம்படுத்தும் இலட்சியத்தோடு, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்பேரிலும், இன்றைக்கு மிகச் சிறப்பான முறையில் சமூக நலத் துறை செயல்பட்டு வருகின்றது. மக்கள் நலன்களை மையமாகக் கொண்டு எண்ணற்ற அரிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. கடந்த கால இருண்ட வாழ்க்கையின் பிடியில் தவித்துக் கொண்டிருந்த பெண் இனத்திற்கு வாழ்வளிக்க, பெண் குழந்தைகள் என்றாலே பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த போக்கினைத் தகர்த்திட

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தினை வகுத்தளித்தார்கள். மேலும், தொட்டில் குழந்தைத் திட்டம் என்ற புரட்சிகரமான திட்டத்தை வகுத்து, சிசு வதையைத் தடுக்கும் போர்க்கொடி உயர்த்தியதும் அம்மா அவர்களே ஆகும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) சமுதாயச் சூழலில் ஆதரவற்றுக் கிடந்த குழந்தைகளுக்குக் காப்பகங்கள் கண்டு அவர்களைக் கரை சேர்க்க முனைந்ததும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே. "ஏழை விதவை மகள் திருமண உதவித் திட்டம், ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம், விதவை மறுமண உதவித் திட்டம், கலப்புத் திருமண உதவித் திட்டம்" என்றவாறு, பெண் இனத்தின் வாழ்வையும், வளத்தையும் பெருமையுற உணர்த்திட முனைந்து வருவது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியே. ஆதரவற்று, சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட பெண்களுக்குச் சேவை இல்லங்கள் கண்டு, தொழிற்பயிற்சிகள் வழங்கி, அவர்களின் வாழ்வினைப் பரிணமிக்கச் செய்ய அடித்தளம் அமைத்ததும் அம்மா அவர்களே. வயது முதிர்ந்து, உடலும், உள்ளமும் தளர்ந்து, வாழ்க்கையின் மாலை வேளையில், சோகத்தின் பிடியில் சிக்கி, சிதைந்துவிடாமல், முதியோர் இல்லங்கள் கண்டு, அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து, அவர்களின் அகமும், முகமும் மலரச் செய்யும் ஒளிவிளக்கு அம்மா அவர்களே ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

குடும்பம் நிலைகுலைந்துவிடாமல் தடுத்து, உறவு தழைக்க, பெண்களின் தரம் பொருளாதாரரீதியில் உயர்ந்திடும் வகையில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் முனைப்போடு செயல்பட வழிவகுத்துத் தந்தது அம்மா அவர்களே ஆகும். சாதி, மத, மொழி, கலாச்சார பேதங்களைக் கடந்து, மகளிர் நலத்திற்கென சுய உதவிக் குழுக்கள் உருவாக்கி, வறுமையில் வாடிக் கொண்டிருந்த பெண்களை வளமுடன் வாழ வழி கண்டதும் அம்மா அவர்களின் ஆட்சியே ஆகும். சுய தொழில் முனைவோர் பயிற்சிகள் அவர்களுக்குக் கற்பக விருட்சங்களாக மிளிர்கின்றன. அதுமட்டுமல்லாமல், தொழிற்திறன் பயிற்சி, தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி, வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாராத தொழில்களில் பயிற்சி என்றவாறு அமைந்துள்ள பயிற்சிகள் அவர்களது வாழ்க்கைப் பாதையை வளமாக்கிட உருவாக்கப்பட்டது அம்மா அவர்களுடைய ஆட்சியிலே.

தாய்–சேய் நல மேம்பாட்டுத் திட்டம், சத்துணவுத் திட்டத்தில் புதிய உத்திகள், குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அங்கன்வாடி மையங்களில் மேற்கொண்டுள்ள அரிய பணிகள், இவைகளெல்லாம்

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே பொங்கி எழுகின்ற, பூரிப்படையச் செய்யும் சில சாதனைத் திட்டங்களாகும். உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கு ஆற்றப்பட்டுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க அம்மா அவர்களின் சாதனைகள் அனைத்திந்திய அளவிலே பெருமிதம் கொண்டு பாராட்டப்பட்டவையாகும்.

சுனாமி பேரலை தமிழகத்தை நிலைகுலைய வைத்து, வாட்டியபோது, ஒப்பாரும், மிக்காருமின்றி ஆற்றல் நிறைந்த அம்மா அவர்கள், அல்லும், பகலும், அயராது, சுற்றிச் சுழன்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆற்றிய பணிகள், அனைத்துத் தரப்பினரின் நெஞ்சங்களிலெல்லாம் நிறைந்துள்ளவையாகும். தியாக உணர்வோடு தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, மக்கள் நலப் பணிகளை ஆற்றி வரும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை, தமிழகத்தின் கருணையே வடிவான அன்னை தெரசா என்றால், அது மிகையாகாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை நான் கூறிக்கொள்கின்றேன். அம்மா அவர்களின் திறமையாலும், நுண்ணறிவாலும் ஆற்றி வருகின்ற பணிகளில் தமிழகம் தனது பொற்கால வரலாற்றை எழுதி வருகின்றது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், சத்துணவு மற்றும் சமூக நலத் துறையின்மூலம் இன்றைக்கு இந்த மாமன்றத்தில் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற மானியக் கோரிக்கையில் கலந்துகொண்டு ஏழு உறுப்பினர்கள் இங்கே தங்களுடைய கருத்துகளை எடுத்து வைத்திருக்கின்றார்கள். இதில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், திருமண உதவித் திட்டத்தைப் பற்றி இங்கே பேசினார்கள். இந்தத் திருமண உதவித் திட்டத்திற்கு வழங்கக்கூடிய உதவித் தொகையை அதிகப்படுத்தி, உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று இங்கே பேசுகின்ற நேரத்தில் எடுத்துக் கூறினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001–2002 ஆம் ஆண்டு தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு—இதற்கு முன்பு திருமண உதவித் திட்டம் ரூ.7,000 ஆக இருந்தது—இந்தத் திருமண உதவித் திட்டத்தினை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 10,000 ரூபாயாக ஏற்கெனவே (மேசையைத் தட்டும் ஒலி) உயர்த்தி ஆணையிட்டு, அந்தத் திட்டமும் இப்போது சிறப்பான முறையில் இங்கு தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதனை நான் மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்களுக்குக் கூறிக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–25

மேலும், மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் இங்கு பேசுகின்ற நேரத்தில், மங்களூர் சத்துணவு மையங்கள்—அந்த சத்துணவு மையங்களுக்கு எல்லாம் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று இங்கே எடுத்துக் கூறினார்கள். அங்கு சத்துணவு—கடலூர் மாவட்டத்திலுள்ள மங்களூர் ஒன்றியம் மற்றும் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள்.

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: நல்லூர் வட்டாரங்களில் முறையே 120, 68, ஆக... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: 188 சத்துணவு மையங்கள் உள்ளன. இந்தச் சத்துணவு மையங்களில் ஆறு மையங்களில் மட்டும் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் பேசி முடிக்கட்டும். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: சமையல் பணி திறந்த வெளியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மற்ற அனைத்து மையங்களும் கட்டடங்களில்தான் இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த ஆறு மையங்களிலும் இந்த நடப்பாண்டில் சத்துணவு சமையல் கூடங்கள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதனையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள், இங்கு வழிகாட்டி மையங்கள் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், சிறு தொழில்கள் புரிகின்ற பெண்கள் கடன் பெற வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டு அதன்மூலம் செய்யக்கூடிய பொருட்களை எல்லாம் விற்பனை செய்வதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும் என்று இங்கு பேசுகின்ற நேரத்தில் எடுத்துக் கூறினார்கள். இன்றைக்கு சமூக நலத் துறையின்மூலம் தமிழ்நாட்டில் 19 மாவட்டங்களில் வழிகாட்டு மையங்கள் இருக்கின்றன. இந்த வழிகாட்டு மையங்களில் சென்னையில் சமூக நல

இயக்ககத்தில் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்தப் பத்தொன்பதில் ஒன்று சென்னையில் சமூக நல இயக்ககத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த வழிகாட்டு மையங்கள் மூலம் காய்கறி, பழம், பூ வியாபாரம், துணி வியாபாரம், சிற்றுண்டிக் கடை போன்ற சிறு தொழில்கள் புரிவதற்காக விண்ணப்பிக்கும் ஏழை, எளிய பெண்களின் விண்ணப்பங்கள் மட்டுமே வங்கிகளுக்குப் பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்பட்டு, அதிகபட்சமாக ரூபாய் ஐயாயிரம் வரை கடன் உதவி பெற வழிவகை செய்யப்பட்டு வருகிறது. பெருமளவில் உற்பத்தி செய்யக்கூடிய சிறு தொழில்களுக்கு வழிகாட்டு மையங்கள்மூலம் வங்கிகளுக்கு விண்ணப்பங்கள் ஏதும் பரிந்துரை செய்யப்படுவதில்லை. எனவே, வழிகாட்டு மையங்கள்மூலம் கடன் பெற்று உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்வதில் சிரமம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை எனவும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அங்கன்வாடி ஏழைக் குழந்தைகள் ஆங்கிலம் கற்க அரசு உதவி செய்ய வேண்டும் என்று இங்கு பேசுகின்ற நேரத்தில் எடுத்துக் கூறினார்கள். ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு தமிழ்க முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின்கீழ் இதுவரை 20 ஆயிரம் அங்கன்வாடி மையங்கள் மழலையர் பள்ளிகளாக (நர்சரி பள்ளியாக) இரண்டு நிலைகளில் ரூபாய் 735.10 இலட்சம் செலவில் நிலை உயர்த்தி, ஆணை வெளியிடப்பட்டது. இதன்மூலம் ஏழைக் குழந்தைகளும் ஆங்கிலம் கற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதனையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் காசாம்பு பூமாலை இங்கு பேசுகின்ற நேரத்தில் எடுத்துக் கூறினார்கள். தாம்பரம் சேவை இல்லத்திற்கு வகுப்பறைகள் கட்ட வேண்டும் என்று இங்கு பேசியிருக்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆறு வகுப்பறைகள் கட்டுவதற்கு ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள். அதற்காக 19.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இப்போது வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதனையும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் காசாம்பு பூமாலை அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–30

மேலும் இங்கு பேசுகின்ற நேரத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இன்றைக்கு இந்த சமூக நலத் துறையின் மானியக் கோரிக்கையினைப் பற்றிப் பாராட்டியே பேசினார்கள். அந்தப்

பாராட்டுகளுக்கு உரியவர் அம்மா அவர்கள்தான் என்பதனை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், இன்றைக்கு சமூக நலத் துறையின்மூலம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற சத்துணவு மற்றும் அங்கன்வாடியைச் சேர்ந்த பணியாளர்கள், அமைப்பாளர்கள், உதவியாளர்கள், சமையலர்கள் அனைவருக்கும் இப்போது ஊதிய உயர்வு மற்றும் அவர்களுக்குப் பணியிலிருந்து ஓய்வுபெறும்போது ரூ.50 ஆயிரம், ரூ.20 ஆயிரம் என்பதனையும் நிர்ணயம் செய்து, அவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அதனையொட்டி இன்றைக்கு இங்கு சட்டமன்றத்தில் பேசிய உறுப்பினர்கள் அனைவரும், இன்றைக்குப் பல்வேறு கட்சிகள் இருந்தாலும், அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும், இதைப் பற்றிப் பாராட்டித்தான் பேசினார்களே ஒழிய, ஒரு குறைபாடும் கூறவில்லை. அந்த அளவுக்குத்தான் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பான முறையில் தமிழக மக்களுக்கும், ஏழையெளியவர்களுக்கும், குழந்தைகளுக்கும், விதவைகளுக்கும், ஆதரவற்ற விதவைகளுக்கும் பல்வேறு திட்டங்களைச் சிறப்பான முறையில் செயலாற்றி வருகின்றார்கள் என்பதனை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றைக்கு சமூக நலத் துறையின் மூலம் பல்வேறு சிறப்பான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துவதோடு, இன்று அம்மா அவர்களுடைய ஆணையோடு சமூக நலத் துறையின்மூலம் பல்வேறு புதிய அறிவிப்புகளை, நான் அம்மா அவர்களுடைய ஆசியோடு இங்கு அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2005–2006 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகள்:

1. இங்கு ஏற்கெனவே அம்மா அவர்களுடைய ஆட்சியில் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், தொட்டில் குழந்தைகள் திட்டம் என்ற திட்டங்கள் எல்லாம் மிகச் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தத் திட்டத்திற்கு ஏற்கெனவே சென்ற ஆண்டு அம்மா அவர்கள், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்திற்காக 3.5 கோடி ரூபாயினை ஒதுக்கீடு செய்து அந்தத் திட்டத்தினால் பல்வேறு பெண் குழந்தைகள் பயனடைந்திருக்கின்றனர். அந்தத் திட்டத்திற்காக நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாய் உள்ளத்தோடு, இந்த ஆண்டு மேலும் அந்தப் பெண் குழந்தைகளுக்காக இன்னும் அந்தத் தொகையை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அம்மா

அவர்கள் இந்த ஆண்டு, இந்தப் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்திற்காக 2005–2006 ஆம் ஆண்டு, இந்த நிதியாண்டில் 50 கோடி ரூபாயினை இன்றைக்கு ஒதுக்கி இருக்கின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தற்போது பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் விண்ணப்பங்களை அளிப்பதற்கான கால அவகாசம் ஏற்கெனவே இந்தப் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்திற்காக, ஒரு வருடத்திற்குள் உள்ள 2–வது பெண் குழந்தையாக இருந்தால், இவ்வளவு நாட்களாக பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. அந்த ஆணையினை இப்போது அம்மா அவர்கள், ஓராண்டிலிருந்து 3 ஆண்டு காலம் என, இக்கால அளவை, அவகாசத்தை 1–4–2005 முதல் 3 ஆண்டுகளாக, அம்மா அவர்கள் நீட்டித்துக் கொடுப்பதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதனையும் நான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. மாறி வரும் சூழ்நிலையில், படித்த பெண்கள் பலரும் பணிபுரிவதற்காக வெளி இடங்களுக்குச் செல்வதை நாம் அறிவோம். அவ்வாறு பணிபுரியும் பெண்கள் குறைந்த செலவில் பாதுகாப்பான இருப்பிடமும், நல்ல உணவும் பெற்றிட உத்தரவாதம் அளிக்கும் வகையில், நான்கு பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிகளை நடத்திட நான்கு தொண்டு நிறுவனங்களுக்கு, தலா ரூபாய் 5 இலட்சம் வீதம் ரூ.20 இலட்சத்தினை அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்து தந்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன். நேற்றையதினம்கூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இந்த விடுதிகள் கட்டப்படுவதைப் பற்றி இங்கு பேசி இருந்தார்கள். இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இந்த அறிவிப்பினை அறிவித்ததைப் பார்த்த பிறகு அவர்கள் எல்லாம் மிக மகிழ்ச்சியடைந்து இருப்பார்கள் என்பதனை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

4. குழந்தைகள் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆதரவற்ற நிலையில் எந்த ஒரு குழந்தையும் அவதியுறக்கூடாது எனும் உன்னத நோக்குடன் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றார்கள். இத்தகைய திட்டங்களில் ஒரு திட்டமாக ஆதரவுக் கரம் நாடும் 100 குழந்தைகள் பயனடையும் வகையில் ரூபாய் இரண்டு இலட்சம் செலவில் ஆதரவற்ற குழந்தைகள்

இல்லம் ஒன்று கரூரில் ஏற்படுத்தப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–35

5. நலிவுற்ற, கணவனால் கைவிடப்பட்ட, உடல் ஊனமுற்ற மற்றும் விதவைப் பெண்கள் பயனடையும் வகையில், அரசு சேவை இல்லங்களை சமூக நலத் துறை செயல்படுத்தி வருகின்றது. இவற்றில், தனியார் கட்டடங்களில் செயல்பட்டு வரும் சேவை இல்லங்களில் ஒன்றான திருநெல்வேலி மாவட்ட சேவை இல்லத்திற்கு, உள்ளுறையும் பெண்கள் சுகாதாரமான இடத்தில் நல்ல ஆரோக்கியமான சூழலில் வசிக்கவும், அதன் வழியாக தங்களுடைய எதிர்காலத்தை சுபிட்சமாக்கிக் கொள்ளவும் உதவும் வகையில் ரூ.12 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடம் அரசால் கட்டிக் கொடுக்க அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

6. மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தினை அமல்படுத்துவதோடு, பெண் சிசுவதையைத் தடுக்க, 'தொட்டில் குழந்தைத் திட்டம்' என்னும் அகிலம் போற்றும் திட்டம் ஒன்றைத் தீட்டி, அதனை இத்துறையின்மூலம் செயல்படுத்தி வருகிறார்கள். அவ்வாறு அரசுத் தொட்டில்களில் இடப்படும் குழந்தைகளை தத்து நிறுவனங்களுக்கு அளித்து பராமரித்திடவும், முறையாக தத்து கோருபவர்களுக்கு அளித்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக்குழந்தைகளில் இருதயக் கோளாறு, உடல் ஊனம், எய்ட்ஸ் போன்ற பல்வேறு உடல்நலக் கோளாறினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளை கவனிக்க சிறப்பான சிகிச்சையும், பராமரிப்பும் அளிக்கும் வகையில், ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு ரூ.100 வீதம் பராமரிப்புச் செலவை அரசு வழங்கும் என்பதனையும் அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

7. சேவை இல்லங்களில் உள்ளுறையும் நலிவுற்ற, கணவனால் கைவிடப்பட்ட, உடல் ஊனமுற்ற பெண்கள் மற்றும் விதவையர் பயனடையும் வகையில் தையல் பயிற்சி, செவிலியர் பயிற்சி, துணி மற்றும் வடிவமைப்பு, ஆய்வகப் பயிற்சி போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. நவீன காலத்திற்கேற்ற வகையில் இப்பெண்கள் பயிற்சி பெற்றிட, அவர்களுக்கு அரசால் ரூ.11.64 இலட்சம் செலவில் கணிப்பொறிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. நேற்றையதினம் இந்த மாமன்றத்தில் பேசிய சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் இந்த கணினிப் பயிற்சியைப் பற்றி இங்கு பேசியிருந்தார்கள். நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர்

அம்மா அவர்கள் இன்றைக்கு அதற்காக ரூ.11.64 இலட்சத்தினை இங்கு ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். இந்த அறிவிப்பினை ஏற்று மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்பதனையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

8. மலைவாழ் பெண்களின்மீது அக்கறை கொண்ட இவ்வரசு, சுய தொழில் செய்திடும் வகையில் அவர்களுக்குப் பயிற்சி அளித்து ஊக்குவித்து வருகிறது. அப்பயிற்சிகளில் ஒன்றான தையல் பயிற்சி பெறுவோர்க்கு, மாதந்தோறும் வழங்கப்படுகின்ற கல்வி உதவித் தொகையினை ரூ.50-லிருந்து உயர்த்தி, ரூ.75 ஆக அரசு வழங்குவதற்கு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள் என்பதனையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

9. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் பள்ளிக் குழந்தைகளுக்கு ஆண்டுதோறும் சீருடைகள் வழங்கும் பணிக்கென 9 மாவட்டங்களில், 9 புதிய துணி வெட்டும் இயந்திரங்களை நடப்பு நிதியாண்டில் வழங்கிட ரூ.11.25 இலட்சம் ரூபாயினை அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள் என்பதனையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

10. முதியோரின் நலன்மீது மிகுந்த அக்கறை கொண்ட அரசு, அவர்களுக்கென 16 முதியோர் இல்லங்களை தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தி வருகின்றது. இவ்வில்லங்களில் முதியோரை நன்முறையில் பாதுகாத்திட, பத்தாம் வகுப்பிற்கு மேல் படித்த நலிவுற்ற, கணவனால் கைவிடப்பட்ட மற்றும் விதவைப் பெண்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு ரூ.1.76 இலட்சம் செலவில் முதியோர் பராமரிப்புப் பயிற்சி ஒன்று, வரும் ஆண்டில் அளிக்கப்படும் என்பதனையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

11. ஆதரவற்ற குழந்தைகளைத் தத்து எடுத்து வளர்ப்பதன் அவசியத்தை மக்களுக்கு உணர்த்தும் வகையில், வரும் 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.2.24 இலட்சம் செலவில் விழிப்புணர்வு முகாம்களை அரசு நடத்தும் என்பதனையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

12. ஆதரவற்ற குழந்தைகளின்மீது அளப்பரிய பற்றும், பாசமும் கொண்ட நமது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தக் குழந்தைகளைப் பராமரிக்கும் அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில், மழைக் காலங்களில் மின் வசதி துண்டிக்கப்படாமல், அக்குழந்தைகளின் படிப்பு பழுதில்லாமல் தொடர்ந்திடவும், பயமின்றி அவர்கள் தேர்வுகளை எழுதிடவும் உதவும் வகையில், எமர்ஜென்சி விளக்கு வசதி செய்து தர மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இவ்வாணையின்படி, 25 அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களுக்கு ரூ.1 இலட்சம் செலவில் 200 எமர்ஜென்சி விளக்குகள் வாங்கி அளிக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

13. சமூக நலத் துறையின்மூலம், பணிபுரியும் மகளிருக்கென 8 அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இம்மகளிர் விடுதிகளில் உணவுப் பண்டங்கள் சுகாதாரமான முறையில் அளித்திடும் வகையில் 8 புதிய மாவரைக்கும் இயந்திரங்கள் ரூ. 0.80 இலட்சம் செலவில் வாங்க அரசு அனுமதி வழங்கியிருக்கின்றது. இதற்காக அம்மா அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள் என்பதனையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

14. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சிறப்பான முறையில் உதவுவதற்கு வசதியாக, கணிப்பொறி, ஒளிநகல் இயந்திரம் மற்றும் நிகரி வசதி ஆகியவற்றை ஏற்படுத்திக்கொள்ளும் வகையில் மகளிர் ஆணையத்திற்கு ரூ.2.50 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்து இருக்கிறது.

15. தாம்பரத்தில் செயல்பட்டு வரும் சேவை இல்லத்தின் பணி சிறப்பாகவும், துரிதமாகவும் அமைந்திட ஜெராக்ஸ் இயந்திரம் ஒன்று வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு இருக்கின்றார்கள்.

16. கை, கால் ஊனமுற்றவர்களுக்கு/முதுகுத் தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்த பின்னர் தேவைப்படும் பராமரிப்புத் தொகையும், மருத்துவப் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகையும் வழங்கப்படுவதற்காக அம்மா அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்காக ரூ.4 இலட்சம் அளிக்கப்பட்டு இருக்கின்றது என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

17. 13 மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலகங்களுக்கு ரூ.60,000/– மதிப்புள்ள புள்ளி வரிசை அச்சுப் பொறியுடன்கூடிய கணினிகள் ரூ.7.80 இலட்சம் செலவில் வழங்குவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு இருக்கின்றார்கள் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

18. ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அலுவலகத்திற்கு அறைக்கலன் மற்றும் எல்.சி.டி. புரொஜெக்டருடன்கூடிய மாநாட்டுக் கூடம் ரூ.1.75 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

19. ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அலுவலகத்தின் பழைய சாதனங்களை ஒப்படைத்து புதிய இலக்குமுறை படிப்பெருக்கியை/ நகலெடுக்கும் சாதனத்தை வாங்குவதற்காக ரூ.1.93 இலட்சம் வழங்கப்பட இருக்கிறது.

20. ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அலுவலகத்தின் துரிதப் பணி மேம்பாட்டிற்காக ஜெஸ்டட்னர் டிஜிட்டல் படிப்பெருக்கி, நெட்வொர்க், அச்சுப்பொறி, ஸ்கேனர் மற்றும் மின் அஞ்சலுக்கு ஸ்கேன் செய்தல் வசதியுடன் ரூ.1.40 இலட்சம் வழங்கப்பட இருக்கின்றது.

21. தருமபுரியில் உள்ள காது கேளாதோருக்கான அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு ரூ.3.40 இலட்சம் செலவில் கணினிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கின்றது என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

22. தஞ்சாவூரில் உள்ள பார்வையற்றோருக்கான நடுநிலைப் பள்ளியை ரூ.5.06 இலட்சம் செலவில் உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்த, நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு இருக்கின்றார்கள் என்பத்னையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

23. தாம்பரத்தில் உள்ள மன வளர்ச்சி குன்றியவர்களுக்கான அரசு நிறுவனத்திற்கு ரூ.1 இலட்சம் செலவில் உடற்பயிற்சி சாதனங்கள் வழங்கப்பட இருக்கின்றன.

24. பார்வையற்றோர்களுக்கான 8 சிறப்புப் பள்ளிகள், காது கேளாதோருக்கான 9 சிறப்புப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு ரூ.1.56 இலட்சம் செலவில் தொலைபேசி வசதிகள் செய்து கொடுக்கப்பட இருக்கின்றன.

25. காது கேளாதோருக்கான 10 அரசுப் பள்ளிகளுக்கு, ஒவ்வொரு பள்ளிக்கும் தலா ரூ.60,000 மதிப்பில் வகுப்பறை சாய்வு மேசைகள் ரூ. 6 இலட்சம் மதிப்பில் அந்த காது கேளாதோர் பள்ளிக் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு இருக்கின்றார்கள் என்பதனையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

26. பார்வையற்றோருக்கான 11 அரசுப் பள்ளிகள், காது கேளாதோருக்கான 10 அரசுப் பள்ளிகள் மற்றும் கடுமையாக கை, கால் ஊனமுற்றோருக்கான அரசுப் பள்ளி ஒன்று ஆகியவற்றிற்கு, தலா ரூ.8,000 வீதம் கல்வி கற்பிப்பதற்கான கருவிகள் ரூ.1.76 இலட்சம் செலவில் வழங்கப்பட இருக்கின்றன.

27. பார்வையற்றோருக்கான 2 மேல்நிலைப் பள்ளிகள், காது கேளாதோருக்கான 2 மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் காது கேளாதோருக்கான 4 உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு, தலா ரூ.15,000 வீதம் ரூ.1.20 இலட்சம் செலவில் குறிப்புப் புத்தகங்களும், நூலகப் புத்தகங்களும் வாங்கி வழங்கப்பட இருக்கின்றன.

முற்பகல் 10–45

28. ஊனமுற்றோருக்காக சக்கர நாற்காலிகள், 3 சக்கர சைக்கிள்கள், காதொலிக் கருவிகள், கைக் கடிகாரங்கள், செயற்கை அவயவங்கள் போன்ற உதவி உபகரணங்கள் 7,750 நபர்கள் பயன்பெறும் வகையில் 75 இலட்சம் ரூபாய் செலவில் இலவசமாக வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

29. 180 உடல் ஊனமுற்ற பயனாளிகள் பயன்பெறும் வகையில் மருத்துவம் சார்ந்த ஆய்வுக் கூடப் பயிற்சி மற்றும் கணினிப் பயிற்சி 20 இலட்சம் ரூபாய் செலவில், அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

30. ஊனமுற்றோருக்கான சுய வேலைவாய்ப்புப் பயனாளிகளின் எண்ணிக்கையை 875–லிருந்து 1,000 ஆக உயர்த்தியும், அரசு மானியத்தை 2,000/– ரூபாயிலிருந்து, ரூபாய் 3,000-ஆக உயர்த்திக் கொடுப்பதற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணை வழங்கியிருக்கின்றார்கள் என்பதனை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். இதன்மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.12.50 இலட்சம் கூடுதலாகச் செலவாகும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

31. தாம்பரத்தில் உள்ள அரசு மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான அரசு நிறுவனத்தில் பயிலும் மாணவ/ மாணவியருக்குக் கூடுதலாக இருப்பிடம் மற்றும் பள்ளிக் கட்டடம் கட்ட 60 இலட்சம் ரூபாயினை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கீடு

[திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி] [2005 மார்ச் 21

செய்திருக்கின்றார்கள் என்பதனையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். நடப்பு 2005–2006 ஆம் நிதியாண்டுக்கு ரூபாய் 24 இலட்சம் ஒதுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

32. அனைத்து அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் மேல்பாக்கத்தில் உள்ள அரசு பாதுகாப்பு இல்லம் ஆகியவற்றிற்கு சமையல் செய்வதற்கான பாத்திரங்கள் ரூபாய் 3 இலட்சம் செலவில் வாங்கிக் கொடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

33. அரசு குழந்தைகள்/கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் சிறப்பு இல்லங்களுக்கு இணையாக அரசு காப்பகங்கள் மற்றும் பிற்காப்பு இல்லங்களிலுள்ள குழந்தைகளுக்கான உணவு, உடை மற்றும் ஒப்பனைப் பொருட்களின் அளவு உயர்த்தி வழங்கப்படும். இதற்கென ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 4 இலட்சம் செலவிடப்படும்.

34. சென்னை, பால விஹார் நடத்தும் மனநலம் குன்றிய வயது வந்த மகளிர் இல்லத்தின் பணிக்கள்ரி கட்டடத்திற்கான பராமரிப்பு மானியம் உயர்த்தி வழங்கப்படும். இதற்கென ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 50,000/– செலவிடப்படும்.

35. வேலையை நோக்கமாகக் கொண்ட தொழில் பயிற்சி வகுப்புகளைத் தொடங்குவதன்மூலம் ஆத்தூர், செங்கல்பட்டில் உள்ள பிற்காப்பு இல்லம் வலுப்படுத்தப்படும். இதற்கென ரூபாய் 2.80 இலட்சம் வழங்கப்படும்.

36. மதுரை வட்டார அலுவலகத்திற்கு ரூபாய் 1 இலட்சம் செலவில் ஜெராக்ஸ் இயந்திரம் வழங்கப்படும்.

37. சமூகப் பாதுகாப்புத் துறை இயக்ககத்திற்கென ரூபாய் 1 இலட்சம் செலவில் இரண்டு கணினிகள் வழங்கப்படும்.

38. பயனற்றவை என கழிக்கப்பட்ட ஊர்திகளுக்குப் பதிலாக பஞ்சப்பள்ளி மற்றும் தட்டப்பாறை சிறுவர் இல்லங்களுக்கு ரூபாய் 8.75 இலட்சம் செலவில் இரண்டு புதிய ஊர்திகள் வாங்கப்படுவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

39. சமூகப் பாதுகாப்புத் துறை இயக்ககத்தில் ரூபாய் 50,000/- செலவில் அகத் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படும்.

2005 மார்ச் 21] [திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி]

40. சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் இயங்கும் குழந்தைகள் நலக் குழுக்களுக்கு ரூபாய் 50,000/– செலவில் அறைகலன்கள் வழங்கப்படும்.

41. தட்டப்பாறை, சென்னை ஆகிய இடங்களில் இயங்கும் மூன்று அரசு நிறுவன துயில்கூடங்களில் மின் இணைப்புகளைச் சீர் அமைத்தல் மற்றும் மின் விசிறிகளைப் பொருத்தும் பணிக்கென ரூபாய் 4.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

42. சென்னை, அரசு காப்பகம் மற்றும் வேலூர், அரசு மகளிர் பிற்காப்பு நிறுவனம் ஆகியவற்றில் மின்னிணைப்புகள் சீரமைப்புப் பணிக்கென ரூபாய் 2.60 இலட்சம் வழங்கப்பட்டிருக்கின்றது.

43. தஞ்சாவூர், அரசினர் சிறுவர் இல்லத்திலுள்ள பணியாளர் குடியிருப்புகளின் சிறப்பு பழுதுபார்த்தல் பணிக்கென 10 இலட்சம் ரூபாயினை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கி, அந்தப் பராமரிப்புப் பணியினைச் செய்வதற்கு ஆணையிட்டிருக்கின்றார்கள் என்பதனையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–50

44. செங்கல்பட்டு, அரசு சிறார் இல்லத்திலுள்ள பணியாளர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்புகள் வழங்கும்பொருட்டு ரூபாய் 84,000/– வழங்கப்பட்டிருக்கின்றது.

45. மத்திய அரசின் 50 சதவீத நிதியுதவியுடன் சென்னையிலுள்ள அரசு கூர்நோக்கு இல்லத்திற்கு ரூபாய் 5.72 இலட்சம் செலவில் உணவு அருந்தும் கூடம் கட்டப்படும்.

46. மத்திய அரசின் 50 சதவிகித நிதியுதவியுடன் சென்னையிலுள்ள அரசு கூர்நோக்கு இல்லத்தில் ரூபாய் 4 இலட்சம் செலவில் சமையலறை ஒன்று கட்டப்படும்.

47. சேலம், அரசு கூர்நோக்கு இல்லக் கட்டடத்தின் மேம்பாட்டுப் பணிகளுக்கென ரூபாய் 3.50 இலட்சம் வழங்கப்பட்டிருக்கின்றது.

48. ஈரோடு, அரசு சிறார் இல்லத்தில் கண்காணிப்பாளருக்கான குடியிருப்பு கட்டும்பொருட்டு ரூபாய் 2.40 இலட்சம் வழங்கப்பட்டிருக்கின்றது.

49. திருச்சி, அரசு கூர்நோக்கு இல்லத்தில் புதிய கட்டடங்கள் கட்டும்பொருட்டு ரூபாய் 16.71 இலட்சம் வழங்குவதற்காக—இந்த அரசு கூர்நோக்கு இல்லத்திற்காக புதிய கட்டடம் கட்டுவதற்கு—மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

50. தட்டப்பாறை மற்றும் பஞ்சப்பள்ளி ஆகிய அரசு சிறார் இல்லங்களில் துயில்கூடங்கள் கட்டும்பொருட்டு அம்மா அவர்கள் ரூபாய் 10 இலட்சம் வழங்கியிருக்கின்றார்கள்.

51. மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள அரசினர் காப்பகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு அம்மா அவர்கள் 5 இலட்சம் ரூபாயை வழங்கி ஆணையிட்டிருக்கின்றார்கள் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

52. திறன் உருவாக்கம்/பாலியல் தொழிலை ஒழித்தல் மற்றும் பெண்கள் குழந்தைகள் ஆகியோரை பாலியல்ரீதியில் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுத்தல் ஆகியவை குறித்த பாலின நேர்மை நெறி பயிற்சித் திட்டத்திற்கென ரூபாய் 1 இலட்சம் வழங்கப்பட்டிருக்கின்றது.

53. 2005–2006 ஆம் ஆண்டில் வளரிளம் பெண்களுக்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சமூக பாலினப் பாகுபாடு மற்றும் பெண்கள் மேம்பாடு என்பதைப் பற்றி ரூபாய் 3 இலட்சத்து 17 ஆயிரம் செலவில் ஒரு நாள் பயிற்சி அளிப்பதற்காக அரசு ஏற்பாடு செய்திருக்கின்றது.

54. தரமணியில் உள்ள தகவல் தொடர்பு பயிற்சி மையத்தின் விடுதி ரூ.10 இலட்சம் செலவில் சீரமைத்துத் தரம் உயர்த்தப்படும். இதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

55. சத்துணவுப் பயனாளிகளுக்கு ஒரு எவர்சில்வர் தட்டும், சத்துணவு மையத்தில் சத்துணவு பெறக்கூடிய குழந்தைகளுக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தக் குழந்தைகளுக்காக எவர்சில்வர் தட்டும், டம்ளரும் வழங்கக்கூடிய ஆணையைப் பிறப்பித்து, அந்தத் திட்டத்திற்காக இந்த ஆண்டு, 2005–2006–ல் 1 கோடி ரூபாயை தாயுள்ளத்தோடு ஒதுக்கிக் கொடுத்திருக்கின்றார்கள் என்பதனையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

56. தலைமைச் செயலக சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் பயன்பாட்டிற்காக ரூ.1 இலட்சத்து 52 ஆயிரம் செலவில் ஒளிநகல் இயந்திரம் ஒன்றும் வழங்க அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை இங்கே எடுத்து வைத்திருக்கின்றார்கள். அவற்றையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, உங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றுவதற்கு அம்மா அவர்கள் நிச்சயம் உங்களுக்கு உதவி செய்வார்கள் என்பதை இந்த நல்ல நேரத்தில் நான் தெரிவித்து, இந்த சமூக நலத் துறையின்மூலம் இன்று பல்வேறு சிறப்பான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டியிருக்கின்றீர்கள். இதுபோல் என்றென்றும் நம்முடைய தமிழக மக்களுக்காக, தமிழகத்திலுள்ள ஏழை, எளிய குழந்தைகளுக்கும், ஆதரவற்ற முதியோர்களுக்கும், ஏழை, எளிய விதவைப் பெண்களுக்கும் இதுபோன்ற நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வரும் நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் என்றென்றும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதனை இந்த நல்ல நேரத்தில் நான் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கின்றார்கள். அவற்றையெல்லாம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கனிவோடு பரிசீலித்து, உங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அம்மா அவர்கள் உதவி செய்வார்கள் என்பதனைக் கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்கும்படிக் கேட்டு, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10–55

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதிலுரைக்கிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். பெண்கள் திருமண உதவித் திட்டத்திற்கு ரூபாய் 7,000 என்று இருந்ததை, இப்பொழுது ரூ.10,000 ஆக உயர்த்தித் தந்திருப்பதாக ஒரு அறிவிப்பை வெளியிட்டார்கள். இராமாமிர்தம் திருமண உதவித் திட்டம்மூலம் கடந்த 3½ ஆண்டுகளில் எத்தனை பேருக்கு உதவி வழங்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர். (குறுக்கீடு) இல்லை, அப்புறம் பேசும்போது சொல்லுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்புக்கோர் வடிவம்... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். உட்காருங்கள். சொல்ல வேண்டிய கருத்தை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். என்ன புகழேந்தி, என்ன?

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10-வது வகுப்பு வரை படித்த பெண்ணிற்கு 10,000 ரூபாய் தருகின்ற திட்டம் இருக்கிறதா, இல்லாமல் போய்விட்டதா என்பதற்கான பதிலைத்தான் கேட்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர். (குறுக்கீடு) சரி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு திருமண உதவித் திட்டத்தில் ரூ.7,000-லிருந்து ரூ.10,000 ஆக உயர்த்தப்பட்டு இருக்கின்றது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார். அதற்காக அரசு ஆணையே இருக்கின்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001-2002 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற பிறகு, அக்டோபர் மாதம் இந்த உதவித் திட்டத்தினை ரூ.7,000-லிருந்து ரூ.10,000 ஆக உயர்த்தி இருப்பதற்கு அரசு ஆணையே இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் கேட்டீர்கள், பதில் சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அன்புக்கோர் வடிவம் அறம் வளர்க்கும் அன்னை
அம்மாவின் கருணையினை என்றென்றும் நான் மறவேன்....
(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள். ஞானசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கேட்டதற்குப் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. வைதியலிங்கம், உட்காருங்கள் (குறுக்கீடு) திரு. ரங்கநாதன், உட்காருங்கள். (குறுக்கீடு) இரண்டு பேரும் எழுந்து கேட்டீர்களென்றால் எப்படி? உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. புகழேந்தி (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதியதோர் உலகம் செய்யப்
புறப்பட்டு இருக்கும்—புரட்சித் தலைவியே!
கெட்டோரிடமிருந்து உலகத்தை வேரோடு சாய்க்கும்—
அஞ்சா நெஞ்சமே!
தொடரும் வெற்றிகளை—
தொடர்ந்து கொண்டே இருக்கும்—
வெற்றியின் முகவரியே!
தென்றலைக் கண்டு இன்புறுவதும் இல்லை
புயலைக் கண்டு புறமுதுகிடுவதும் இல்லை
என்றும் ஒரே திட சிந்தனை படைத்த.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லிவிட்டார்கள். ஏற்கெனவே விளக்கம் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அடிநிலை கொண்ட சமூக நீதியே
சொல் இல்லாமல் மொழி இல்லை
பாதை இல்லாமல் பயணம் இல்லை
காற்று இல்லாமல் உயிரினங்கள் இல்லை
அதுபோல அம்மா இல்லாமல் நாங்கள் இல்லை

அந்தத் தாயை, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின் பதிலுரையை சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொட்டதெல்லாம் பொன்னாகும் அம்மாவின் திருக்கரத்தால் தொடரப்பட்ட திட்டங்களால் இன்று அறநிலையத் துறை ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. திருக்கோயில்களுக்கு அன்று மன்னர்கள் முக்கியத்துவம் அளித்தார்கள். அந்தச் செய்திகள் எல்லாம் ஆலயத்தின் திருச்சுவர்களின் கல்வெட்டுக்களில் பதிவு செய்யப்பெற்றிருக்கின்றன. இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருக்கோயில்களுக்குச் செய்து வரும் பணிகளை எத்தனை கல்வெட்டுக்களில் பதிப்பது? அதனால்தான் இலட்சோபலட்சம் பக்தர்கள் தமது இதயங்களைக் கல்வெட்டுக்களாக்கி அம்மா அவர்களின் ஆலயத் திருப்பணிகளை எல்லாம் தங்களது இதயக் கல்வெட்டுக்களில் பதித்து இருக்கிறார்கள்.

அன்னதானத் திட்டம்—ஆலயத்தின் உள்ளே இருக்கும் ஆண்டவனுக்கு அமுது படைக்கிறோம். ஆலயத்திற்கு வருகின்ற பக்தர்களுக்கும் அமுது படைக்க வேண்டும் என்று அன்னதானத் திட்டத்தை அறிமுகப்படுத்தி வைத்தார்கள் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆண்டவன் சன்னிதானத்தில் சீர்மிகு அன்னதானத் திட்டம்....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு)

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி வரிசையில் ஒரு சந்தேகம் எழுந்திருக்கிறது. இராமாமிர்தம் அம்மையாருடைய திட்டம் தொடர்ந்து இந்த ஆட்சியில் இருக்கிறதா? இந்தத் திட்டம் இருந்திருந்தால், இதுவரையில் இந்த நான்கு ஆண்டு காலத்தில் எவ்வளவு பேருக்குக் கொடுத்திருக்கிறீர்கள் என்பதை இந்த அரசு தெளிவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், இதுவரையில் (குறுக்கீடு) நிதிநிலைக்கு ஏற்ப கொடுத்திருந்தாலும் உங்களிடத்திலே இந்த நேரத்தில் Demand-ல் புள்ளிவிவரம் இருக்கவேண்டும். எங்கள் ஆட்சியில், ஆட்சிக்கு வந்தவுடன் இத்தனை பேருக்குக் கொடுத்திருக்கிறோம், இந்த நான்கு ஆண்டில் எத்தனை பேருக்குக் கொடுத்தோம் என்று சொல்ல வேண்டும் முதலில் இருக்கிறதா என்று சொல்ல வேண்டும். இருந்திருந்தால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் புகழேந்தி கேட்டார், (குறுக்கீடு) அதற்கு மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லி விட்டார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதில் சொல்கிறார்கள் (குறுக்கீடு)

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமண உதவித் திட்டம், ஏற்கெனவே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திற்கு முன்பு இருந்த ஆட்சியில் பல்வேறு முறைகேடுகள் நடந்ததாகத் தெரிய வந்தது. அதை வைத்து அந்த திருமண உதவித் திட்டம் நிறுத்தப்பட்டிருக்கின்றது. மேலும், நான்கு திருமண உதவித் திட்டங்கள் இப்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரையைத் தொடரலாம். (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன்: அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆமாம். அதுதான் சொன்னார்களே! முறைகேடுகள் நடந்ததைக் கேள்விப்பட்டு அந்தத் திட்டத்தினை நிறுத்திவிட்டோம் என்று சொன்னார்கள். (குறுக்கீடு) அதுதான் பதிலில் சொன்னார்கள். முறைகேடுகள் நடந்ததால் நிறுத்தப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டவன் சன்னிதானத்தில் சீர்மிகு அன்னதானத் திட்டம் வளர்பிறை போல வளர்ந்து சிறந்தோங்கி வருகிறது. வாடிய பயிர்களைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலாரைப் போல, பக்தர்களைப் பசியார வைத்திருக்கும் பாங்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கே உரிய ஈகைப் பண்பை வெளிப்படுத்துகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களால் 23-3-2002 அன்று மயிலை கபாலீசுவரர் திருக்கோயிலில் தொடங்கப்பட்ட இத்திட்டம் ஏறக்குறைய மூன்றாண்டுகளில் 171 திருக்கோயில்களில் விரிவுபடுத்தப்பட்டு இதுவரை

1 கோடியே 76 இலட்சத்து 59 ஆயிரம் பக்தர்கள் பயனடைந்துள்ளனர் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும், இங்கு வாழும் மனிதர்களுக்கெல்லாம்' என்ற பாரதியின் பாட்டு வரிகளுக்கு ஏற்றம் கிடைத்துவிட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் பசிப்பிணி நீக்கிய மருத்துவராய் இன்றைக்குத் திகழ்கின்றார்கள். எந்தச் செயல்பாட்டிலும் மிகச் சிறந்த, முதல் எடுத்துக்காட்டாகச் செயல்படும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் தனது 35 மாத ஊதியமான 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயை 35 திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு வழங்கியுள்ளார்கள் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அன்னதானத் திட்டம் நடைபெறும் பெரிய திருக்கோயில்கள் அருகே பிச்சைக்காரர்களுக்கென மறுவாழ்வு இல்லம் கட்டித் தர வேண்டும் என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. விநாயகமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்கள். பிச்சை எடுப்பவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க சமூக நலத் துறையின்மூலம் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்கள் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ளன. எனவே, திருக்கோயில்களுக்கு அருகில் உள்ள பிச்சைக்காரர்களுக்கு, திருக்கோயில்களின் பக்கத்திலே மறுவாழ்வு இல்லம் கட்டிக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இருப்பினும், திருக்கோயில்கள் அருகே உள்ள பிச்சைக்காரர்கள், பசி என்று வரும்போது மாண்புமிகு அம்மா அவர்களின் அன்னதானத் திட்டம் அவர்களுக்குத் தடை விதிப்பதில்லை. அதே நேரத்தில், வெளியூர்களிலிருந்து திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கே அன்னதானத் திட்டத்தில் முதலிடம் தரப்படுகிறது என்பதை மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

தர்மத்தில் சிறந்தது தமிழ்நாடு, தானத்தில் சிறந்தது தமிழ்நாடு, தயையிலே சிறந்தது தமிழ்நாடு, தர்மத் தலைவி ஆளுகின்ற காரணத்தால் இன்று சகலத்திலும் சிறந்தது தமிழ்நாடு என்று விளங்குகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவின் முதல் மாநிலமாகத் தமிழகத்தை ஆக்கும் இதய தெய்வம் அம்மா அவர்களால் இந்து சமய அறநிலையத் துறை இன்று இந்தியாவிலேயே ஆன்மீகப் பணிகளிலும் முதல் நிலை பெறுகிறது.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ப. இராஜரெத்தினம்) தலைமை]

யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம்—மாண்புமிகு முதலமைச்சர் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம்—மாண்புமிகு முதலமைச்சர் எல்லா உயிரினங்களிடத்திலும் அன்பு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எல்லா உயிரினங்களிடத்திலும் அன்பு செலுத்தும், உன்னதமான, எல்லையற்ற அன்பை வெளிப்படுத்தும் முகத்தான், யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் எனும் சீரிய திட்டத்தை இந்தியக் கண்டத்திலேயே முதன்முதலாக அறிமுகப்படுத்தினார்கள்.

எங்கோ ஒரு மலையில் பிறந்த நதியால்தான் நம்முடைய தாகம் தீர்ந்தது;

எங்கோ ஒரு மரத்தில் பிறந்த கனியால்தான் நம்முடைய பசி தீர்கிறது;

எங்கோ ஒரு செடியில் பிறந்த மலரால்தான் நமக்கு வாசம் கிடைக்கிறது.

அதுபோல, கோயில்களில் பூஜை, வீதி உலா, உற்சவ மூர்த்தி உலா போன்றவற்றுக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் யானைகளுக்குப் புத்துணர்ச்சி ஊட்டும் வகையில் அமைந்ததுதான், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் உயர்ந்த திட்டம்தான் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம். இத்திட்டம் பெரிய அளவில் வரவேற்பைப் பெற்றதன் காரணமாக, சென்ற ஆண்டு 100 யானைகளுடன் 30 நாட்கள் நடந்த யானைகள் நலவாழ்வு முகாம் அனைத்துத் தரப்பினரும் பாராட்டும் வகையில் சிறப்பாக நடத்தப்பட்டது. இவ்வாண்டு 113 யானைகளுடன் 48 நாட்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு, முகாமில் மகிழ்ச்சியோடு இருந்த யானைகள் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பிச் செல்ல மன வருத்தப்பட்ட நிகழ்வுகளும் உண்டு. வெற்றிகளைக் குவித்து வரும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் வெற்றிகளிலே இதுவும் ஒரு மகத்தான வெற்றி.

பழனி திருக்கோயில் கம்பி வட ஊர்தி—தமிழகத்தின் அதிபதி, தமிழர்களின் வழிபாட்டுக்குரிய தமிழ்க் கடவுள் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் கம்பி வட ஊர்தி, ஒரு சிறப்பான திட்டமாகும். எரியும் விளக்கின் சுடரொளியில், சுடர்விடும் புரட்சித் தலைவியின் மகத்தான செயல்பாடு, கம்பி வட ஊர்தித் திட்டமாகும். மக்களுக்கும், மகேசனுக்கும் ஒருசேரத் தொண்டாற்றும் ஒரே துறை அறநிலையத் துறை ஆகும். பக்தர்களுக்கு வசதிகள் செய்து தருவதையே முதல் நோக்கமாகக் கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சரின் எண்ணத்தில் உதித்த இத்திட்டம் குறுகிய காலத்தில் செயல்படுத்தப்பட்டு 3-11-2004 அன்று பக்தர்களின் வசதிக்காக அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களால் துவக்கப்பட்ட இக்கம்பி வட ஊர்தி மூலம் இதுவரை சுமார் 5 இலட்சத்து 60 ஆயிரம் பக்தர்கள் பயனடைந்துள்ளனர். இதன்மூலம் சுமார் 90 இலட்சம் ரூபாய் இன்றைக்கு வசூலாகியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பலர், பழனி திருக்கோயில் பக்தர்களுக்கு வசதிகளை மேம்படுத்துவது குறித்தும், திருக்கோயிலின் வருவாயைப் பெருக்கவும் பல வெட்டுத் தீர்மானங்களை அளித்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்து அவ்வப்போது தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

திருப்பணி – ஆலயப் பணி ஆன்மீகப் பெருமக்களுக்கு ஆணிவேர்போல நம்பிக்கையைக் கொடுக்கும். விஞ்ஞானம் அறிவைப் பெருக்கும். மெய்ஞானம் பேரறிவைக் கொடுக்கும். மெய்ஞான உணர்வை ஆலயங்கள் ஒருமுகப்படுத்தும். புகழ்மிக்க புனிதத் தலங்களைக் கட்டிக் காப்பதிலும் சிதிலமடைந்த திருக்கோயில்களைப் பேணிக் காப்பதிலும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் முனைப்போடு செயலாற்றியிருக்கிறார்கள். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று பெரியவர்கள் சொல்வார்கள். தொழுவது நன்றுதான், ஆனால் அதைவிடச் சிறந்தது, அந்த ஆலயத்தைச் சீர்படுத்தும் பணியில் ஈடுபடுவது. அதைத்தான் அப்பர் அடிகள் செய்தார். ஆண்டவனின் பூரண அருள் பெற்றவர்களுக்குக்கூட திருக்கோயிலுக்குப் பணி செய்வதை தெய்வத்தின் சேவையாகவே கருதுகிறார்கள். அதனால்தான் ஒவ்வொரு திருக்கோயிலாகச் சென்று அதனைச் சீர்படுத்தும் உழவாரப் பணியை அப்பர் அடிகள் செய்தார்கள். அப்படிப்பட்ட அருளாளர்கள் வழியிலே ஆலயங்களைச் சீரமைக்கவும், குடமுழுக்கு விழாக்களை நடத்தவும் அரும்பெரும் முயற்சிகளை எடுத்து வருபவர்தான் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். திருக்கோயிலுக்கு 12 ஆண்டுகளுக்கு ஒருமுறையேனும் குடமுழுக்கு நடைபெற வேண்டும். அப்பணிகளை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு முனைப்புடன் இன்றைக்குச் செயல்படுத்தி வருகிறது. மல்லிகைக்கு அதன் மணத்தால்தான் சிறப்பு உண்டாகிறது. ரோஜாவுக்கு அதன் நிறத்தால்தான் சிறப்பு உண்டாகிறது. மனிதர்களுக்கு அவர்கள் முகத்தின் சிரிப்பால்தான் சிறப்பு உண்டாகிறது. அதுபோல திருக்கோயில்களுக்குச் சிறப்பே குடமுழுக்குதான். அந்தச் சிறப்புக்குச் சிகரம் வைக்கும் வண்ணம் சிங்க நிகர்த் தலைவி மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் பேசும்போது, தி.மு.க. ஆட்சியின்போது சுமார் 2,000 திருக்கோயில்களுக்கு மேல் திருப்பணி செய்து குடமுழுக்கு நிறைவேற்றப்பெற்றிருப்பதாகத் தெரிவித்தார். ஆனால் முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றது முதல் கடந்த 4 ஆண்டு காலத்திற்குள், அதாவது 16-3-2005 வரை 3,817 திருக்கோயில்களில் திருப்பணி செய்து குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு, இந்தத் தேதியில், அதாவது 21-3-2005 மட்டும், அம்மாவினுடைய முயற்சியின் காரணமாக, அம்மா அவர்கள் எடுத்த சீரிய நடவடிக்கையின் காரணமாக 753 சிறிய, பெரிய திருக்கோயில்களுக்குக் கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கிறது என்பதை இம்மாமன்றத்திற்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் இதுவரை ஒரே நாளில் கும்பாபிஷேகம் நடத்திய சரித்திரமே இல்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். மாண்புமிகு அம்மா அவர்களால்தான் இத்தகைய சரித்திரம் படைக்க முடியும் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் அதிகமாக வசிக்கும் பகுதிகளில், அவர்கள் வழிபாடு செய்ய நல்ல முறையிலே கோயில்கள் அமையவில்லை என்ற குறையைத் தீர்க்கும்பொருட்டு சென்றாண்டு அப்பகுதிகளில் 6,000 திருக்கோயில்களைச் சீரமைத்துப் புதுப்பிக்க சுமார் 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் முடிவடையும் நிலையிலுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்கள் வெட்டுத் தீர்மானத்தில் தங்கள் பகுதிகளிலுள்ள திருக்கோயில்களைப் பழுதுபார்த்து, புதுப்பித்து, திருப்பணிகள் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அந்தந்தத் திருக்கோயில்களின் நிதிநிலையைக் கருத்திற்கொண்டு அவர்களுடைய கோரிக்கைகள் கருத்தில் கொள்ளப்படும் என்று இந்நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் பேசும்போது, திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு வசதிகள் செய்யக் கோரினார்கள். திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் கடந்த 26 ஆண்டுகளாகக் கும்பாபிஷேகம் செய்யாது இருந்ததைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன், 2 கோடி ரூபாய் செலவில் திருப்பணி வேலைகள் செய்யப்பட வேண்டுமென ஆணையிட்டார்கள். அதனடிப்படையில் திருப்பணி வேலைகள் விரைந்து முடிக்கப்பட்டு, 27-6-2003 அன்று கும்பாபிஷேகம் சிறப்பாக நடத்தப்பட்டது. இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள்

சிரமமின்றி வரிசையில் சென்று சுவாமி தரிசனம் செய்ய ஏதுவாக 34 இலட்சம் ரூபாய் செலவில் வரிசை அமைப்புகள் ஏற்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் 60 இடங்களில் பக்தர்கள் அமர்ந்து செல்வதற்கு வசதியும், ஒரு இடத்தில் ஓய்வு எடுத்துச் செல்ல வசதியும் உள்ளது. இப்பணியை ஏற்ற ஒப்பந்தக்காரர், பணியைக் குறித்த காலத்தில் செய்து முடிக்கத் தவறியதால், ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டு, பணி பாரத் மிகுமின் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு, விரைவில் செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் மூலம் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒருகால பூஜை—ஒருகால பூஜைகூட செய்ய இயலாத திருக்கோயில்களே தமிழ்நாட்டில் இருக்கக்கூடாது என்ற எண்ணம் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின்கீழ் இதுவரை 10,227 திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன. இந்த நிதியாண்டில் மட்டும் 432 திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருத்தேர்கள்—மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்களது வெட்டுத் தீர்மானங்களில், தங்கள் பகுதிகளிலுள்ள திருக்கோயில்களின் தேர்களைப் பழுதுபார்த்துத் தர வேண்டுமெனவும், ஓடாத தேர்களை ஓடவைக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளார்கள். இந்நிதியாண்டில் மட்டும் 22 திருத்தேர்கள் பழுதுபார்க்கப்பட்டு, தேர்த் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. கடந்த 2001 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் திருத்தேர் திடீரென்று தீ விபத்தினால் முற்றிலும் சேதமடைந்த தகவலை அறிந்த நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அன்றே 25 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாகத் தேர் செய்வதற்கு ஆணையிட்டார்கள். அதன்படி புதிய தேர் செய்யப்பட்டு, கடந்த மாதம் தேரோட்டம் நடைபெற்றது. அந்தச் சமயத்தில் கூடியிருந்த பக்தர்கள் திருக்கோயிலுக்குப் புதிதாகத் தேர் செய்து கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டுகிறோம், அதே நேரத்தில் மழை மற்றும் வெயிலிலிருந்து பாதுகாக்க ஒரு பாதுகாப்புக் கூடாரம் அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்தனர். உடனடியாக அக்கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்கள் பரிசிலித்து, அதற்கு 5 இலட்சம் ரூபாய் செலவில் பாதுகாப்புக் கூடாரம் அமைக்க ஆணையிட்டார்கள் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-10

பொதுவாக, திருக்கோயில்கள் திருப்பணியும், திருத்தேர் திருப்பணியும் மேற்கொள்ள பெருமளவில் நிதி தேவைப்படுகிறது. இம்மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள், தொன்மைவாய்ந்த கோயில்களிலே திருத்தேர்த் திருவிழா நடைபெறுகின்றபோது, தேரினுடைய சக்கரங்கள் உடைந்து கிடக்கின்றன என்று அதனுடைய நிலைமை குறித்துப் பேசினார்கள். தற்போது பெரும்பாலான திருக்கோயில் திருத்தேர்கள் பாரத கனரக மின் நிறுவனம்— BHEL— மூலம்தான் அச்சு மற்றும் சக்கரங்கள் செய்யப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழுள்ள 38 ஆயிரத்திற்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் சில ஆயிரம் திருக்கோயில்களில் மட்டுமே போதுமான நிதி வருவாய் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நிலையில் நிதிநிலைக்கேற்ப கோரிக்கைகள் கருத்தில் கொள்ளப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். இவைதவிர, தற்போது 20 திருக்கோயில்களில் தங்கத் தேர்கள் பயன்பாட்டில் உள்ளன. மேலும் 4 திருக்கோயில்களில் தங்க ரதத் திருப்பணி நடைபெற்று வருகிறது.

சிவகங்கை மாவட்டம், கண்டதேவி அருள்மிகு சொர்ணமுக்தீஸ்வரர் என்கிற சிறகிலிநாத சுவாமி திருக்கோயிலின் தேரோட்டம் மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய ஆணையின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு, எவ்விதப் பிரச்சினைகளும் இல்லாமல், 2004 ஆம் ஆண்டு சிறப்பாக ஓட்டப்பட்டது என்பதை இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ் அர்ச்சனை—

'அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு'.

அஞ்சுதல் இல்லாத துணிவும், இல்லையென்னாத கொடைத் தன்மையும், தெளிந்த அறிவும், தளர்வில்லாத ஊக்கமுடைமையும் குறைவின்றிப் பெற்றிருப்பதே அரசர்க்கு இயல்பாகும் என்கிற வள்ளுவர் கருத்துக்கேற்ப, தமிழ் வளர்ச்சியில் உண்மையான அக்கறை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழ் அர்ச்சனையை திருக்கோயில்களில் ஊக்குவிக்க அறிவுறுத்தியுள்ளார்கள்.

உச்ச நீதிமன்றம் 2–4–1992 ஆம் நாளிட்ட தீர்ப்பில், திருக்கோயில்களில் வழிபாடுகள் வடமொழியின் ஆகம விதிகளின் அடிப்படையில் நடத்தப்பட்டு வருகின்றன என்றும், இருப்பினும், விலைமதிப்பற்ற தமிழ் நூல்களான தேவாரம் மற்றும் திருவாசகம் போன்றவை பொது மக்களின் வழிபாட்டுக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளன என்றும், இத்தகைய வழிபாட்டு முறைக்கு நல்லாதரவு வழங்கப்பட வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளது. எனினும், தற்போதைய ஆகம அடிப்படையிலான வழிபாடு தொடர்ந்து செய்யப்பட வேண்டுமென்றும், தமிழ் வழிபாட்டு முறையில் தேர்ச்சிபெற்ற அர்ச்சகர்கள் மூலமாக, திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, தமிழில் வழிபாடு நடத்தலாம் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தற்போது பக்தர்களின் தேவைக்கேற்ப வழிபாட்டு முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களில் கேட்டுக்கொண்டுள்ளபடி, தமிழில் மட்டுமே வழிபாட்டை நடத்துவது என்பது உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கு மாறானதாக இருக்கும். தமிழ் அர்ச்சனை முறையைப் பரவலாக்கும் நோக்கத்துடன் இதுவரை 15 போற்றி நூல்கள் வெளியிடப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அர்ச்சகர் நியமனம்—1971 ஆம் ஆண்டில் இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம் திருத்தப்பட்டு, பரம்பரை வழியாக அர்ச்சகர்கள் நியமிக்கப்பட்டது நீக்கப்பட்டது. இச்சட்டத் திருத்தம் அரசியல் சாசனத்திற்கு எதிரானது என ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், 5 நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற பெஞ்ச் தனது தாப்பில் அர்ச்சகர்களை பரம்பரை அடிப்படையில் நியமனம் செய்ய வேண்டிய தேவையில்லை என்ற சட்டத் திருத்தம் செல்லும் எனவும், அதே நேரத்தில் அந்தந்தத் திருக்கோயில்களில் பின்பற்றப்படும் பழக்க வழக்கப்படி, ஆகம விதிகளின்படி அர்ச்சகர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும், இவ்வாறு செய்யத் தவறுவது, மேற்படி சட்டப் பிரிவு 28 (1)–ன்கீழ் அறங்காவலருக்கு அத்திருக்கோயிலின் பழக்க வழக்கங்களை மாற்றாமல் பின்பற்றப்பட வேண்டும் என்ற கட்டுப்பாட்டிற்கு ஊறுவிளைவிப்பதாகும் எனவும் கருத்துத் தெரிவித்தது.

இதன் அடிப்படையில், அர்ச்சகர் நியமனம் குறித்து ஆராய ஒரு வல்லுநர் குழு நியமிக்கப்பட்டது. அக்குழு அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக நியமிக்க வேண்டுமெனில் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமெனப் பரிந்துரை

செய்தது. இந்தப் பரிந்துரை தொடர்பாக மைய அரசுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. இப்பரிந்துரையின் அடிப்படையில் மைய அரசுக்கு, அரசமைப்புச் சட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்யுமாறு கோரி கடிதங்கள் அனுப்பப்பட்டன. ஆயினும், மைய அரசு இத்தகைய திருத்தங்கள் ஏற்புடையதாக இருக்காது எனவும், தற்போதைய நிலையையே தொடர்ந்து செயல்படுத்தலாம் எனவும், இரு முறை, 1975 ஆம் ஆண்டு மற்றும் 1985 ஆம் ஆண்டு கருத்துத் தெரிவித்தது.

இதற்கிடையில் கேரள மாநிலத்தில் சிவன் கோயில் ஒன்றில் சாந்திகரணம் அல்லது பூஜாரி நியமனம் என்பது பற்றி கேரள உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கைத் தள்ளுபடி செய்த கேரள உயர் நீதிமன்றம், அத்தகைய நியமனம் சரியானதே என கருத்துத் தெரிவித்தது. இதனை எதிர்த்து மீண்டும் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், இரண்டு நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற பெஞ்ச், திருக்கோயிலில் அர்ச்சகர்/பூசாரிகள் பூசை செய்வது பழக்க வழக்கங்களின்மூலம் வந்த உரிமையே என்றும், மேற்படி உரிமையை சட்டம் இயற்றுதல்மூலம் நீக்க முடியும் என்றும், இந்திய அரசமைப்புச் சட்டத்தில் 25 மற்றும் 26–வது ஷரத்துகளில் கூறப்பட்டுள்ள உரிமைகள்..(குறுக்கீடு)

முற்பகல் 11–15

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை ஆற்றிய பிறகு, சில எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவி கொடுக்கும் திட்டம் ஏதோ இப்போது நடைமுறையில் இல்லை என்பதுபோலவும், கடந்த 4 ஆண்டு காலத்தில், இந்த ஆட்சி அமைந்த பின்னர், ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவியே அளிக்கப்படவில்லை என்பது போலவும் இங்கே ஒரு குற்றச்சாட்டு சொன்னார்கள்.

தற்போது ஏழைப் பெண்களுக்கு, திருமணத்திற்காக நிதியுதவி அளிக்க நான்கு திட்டங்கள் இந்த அரசின் செயல்பாட்டில் உள்ளன. அவை, ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையரது மகள் திருமண உதவித் திட்டம்; இதன்கீழ் வழங்கப்படும் உதவித் தொகையின் அளவு 10 ஆயிரம் ரூபாய். இரண்டாவது, அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம்; இந்தத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியுதவியின் அளவு 10 ஆயிரம் ரூபாய். மூன்றாவதாக, டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித்

திட்டம்; இதன்கீழும் வழங்கப்படும் நிதியுதவியின் அளவு 10 ஆயிரம் ரூபாய். நான்காவதாக, தமிழக அரசு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்கீழ் இரண்டு விதமான உதவிகள் வழங்கப்படுகின்றன. மணமக்களில் ஒருவர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினராக இருந்தால், அவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது. முற்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைத் திருமணம் செய்தால், அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டங்களின் விவரங்கள் எல்லாம் கொள்கை விளக்கக் குறிப்பிலேயே 17-வது பக்கத்தில் உள்ளன. இந்த நான்கு உதவித் திட்டங்களின்கீழ், இந்த ஆட்சியின் கடந்த 4 ஆண்டு காலத்தில் எத்தனை பேருக்கு, எத்தனை பயனாளிகளுக்கு உதவி வழங்கப்பட்டது என்ற விவரத்தையும் இப்போது தெரிவிக்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண உதவித் திட்டத்தின்கீழ், 2001–2002 ஆம் ஆண்டில் திட்ட இலக்கு 735 பேர்; ஆனால் சாதனையோ 1,051 பேர். (மேசையைத் தட்டும் ஒலி) இலக்கையே மிஞ்சியிருக்கிறோம். 2002–2003 ஆம் ஆண்டில் திட்ட இலக்கு 750; ஆனால், சாதனை 1,068. (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் இலக்கை மிஞ்சியிருக்கிறோம். 2003–2004 ஆம் ஆண்டில் திட்ட இலக்கு 750; ஆனால் சாதனை 1,741. (மேசையைத் தட்டும் ஒலி) 2004–2005 ஆம் ஆண்டில் திட்ட இலக்கு 1,220; ஆனால் சாதனை 1,336. (மேசையைத் தட்டும் ஒலி) 2005–2006 ஆம் ஆண்டிற்கான திட்ட இலக்கு 3,000 என்று உள்ளது. நிச்சயமாக இந்த இலக்கையும் மிஞ்சி விடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ், 2001–2002 ஆம் ஆண்டில் திட்ட இலக்கு 70 பேர்; ஆனால் சாதனை 100. (மேசையைத் தட்டும் ஒலி) 2002–2003 ஆம் ஆண்டில் திட்ட இலக்கு 100; ஆனால் சாதனை 139. (மேசையைத் தட்டும் ஒலி) 2003–2004 ஆம் ஆண்டில் திட்ட இலக்கு 100; ஆனால் வழங்கப்பட்டதோ 105 பேருக்கு. (மேசையைத் தட்டும் ஒலி) 2004–2005 ஆம் ஆண்டில் 85 பேருக்கு வழங்கப்பட்டது. 2005–2006 ஆம் ஆண்டிற்குத் திட்ட இலக்கு 100; நிச்சயமாக அந்த இலக்கை எய்திவிடுவோம்.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டத்தின்கீழ், 2001–2002 ஆம் ஆண்டில் 194 பேருக்கும், 2002–2003 ஆம் ஆண்டில் 149 பேருக்கும், 2003–2004 ஆம் ஆண்டில் 150 பேருக்கும், 2004–2005 ஆம் ஆண்டில் 114 பேருக்கும் உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. தமிழக அரசு கலப்புத் திருமண உதவித் திட்டத்தின்கீழ் 2001–2002 ஆம் ஆண்டில் 1,414 ஜோடிகளுக்கும், 2002–2003 ஆம் ஆண்டில் 1,024 ஜோடிகளுக்கும், 2003–2004 ஆம் ஆண்டில் 1,209 ஜோடிகளுக்கும், 2004–2005 ஆம் ஆண்டில் 998 ஜோடிகளுக்கும் நிதி உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த ஆட்சி வந்த பின்னர் ஏதோ ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவியே அளிக்கவில்லை என்பதுபோல ஒரு தோற்றத்தை எதிர்க்கட்சியினர் ஏற்படுத்தப் பார்ப்பது சரியல்ல. அவர்கள் குறிப்பாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தைப் பற்றிக் கேட்டார்கள். 4–6–2002 முதல் அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–20

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972 ஆம் ஆண்டு 5 நீதிபதிகள் அடங்கிய உச்ச நீதிமன்ற பெஞ்ச் தனது தீர்ப்பில், அந்தந்தக் கோயில்களில் பின்பற்றப்படும் ஆகம நெறிமுறைகளுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் ஒட்டியே அர்ச்சகர்கள் நியமிக்கப்படவேண்டும் என்றும், வேறு பிரிவினரை, அவர்கள் ஆகம விதிமுறைகளின்கீழ் பயிற்சி பெற்றவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக மட்டும் அர்ச்சகர்களாக நியமிக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளது. இதுபோன்ற நியமனங்கள், ஆகம நெறிமுறைகளுக்கு மாறாக நியமிப்பது, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் 25 மற்றும் 26–ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள சமய சுதந்திரத்திற்கு முரணாக அமையும் என்று தெரிவித்துள்ளது. ஆனால் 3–10–2002 அன்று இரண்டு நீதிபதிகள் அடங்கிய உச்ச நீதிமன்ற பெஞ்ச், கேரள மாநிலத்தில் உள்ள ஒரு சிவன் கோயில் தொடர்பான பூசாரிகள் நியமனம் குறித்த வழக்கில், சாதிப் பாகுபாடின்றி திருக்கோயில் அர்ச்சகர்கள் நியமிப்பதை எதிர்க்க முடியாது என்று தெரிவித்துள்ளது. மேற்கண்டவாறு உச்ச நீதிமன்றமே இரு வேறு தீர்ப்புகள் வழங்கியுள்ளது. சாதிப் பாகுபாடின்றி அர்ச்சகர்கள் நியமனம் செய்வது, உச்ச நீதிமன்றத் தீர்ப்பு குறித்து சட்ட வல்லுநர்களின் கருத்துகளைக் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 மார்ச் 21

6. அறிவிப்பு

இலங்கை நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் தலைமையில் வந்துள்ள குழுவினர் அவை நடவடிக்கைகளை நேரில் பார்வையிட்டுக் கொண்டிருப்பதற்கு வரவேற்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இலங்கை நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் மாண்புமிகு W.J.M. லோகுபண்டாரா தலைமையில் இலங்கை நாடாளுமன்றத்தின் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் தற்போது பேரவையில் உள்ள பார்வையாளர்கள் மாடங்களிலிருந்து நமது அவை நடவடிக்கைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் சார்பாகவும், உறுப்பினர்கள் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் அவர்களை வரவேற்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

I am pleased to inform that the delegation consisting of 11 Members of Parliament of Sri Lanka of various political parties headed by Hon. W.J.M. Lokubandara, Speaker, Parliament of Sri Lanka are watching the proceedings of the Assembly from V.I.P. Galleries. On behalf of Hon. Chief Minister, Members of the Legislative Assembly and people of Tamil Nadu, I extend my hearty welcome to them. *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

5. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 45 – தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – இந்து சமய அறநிலையத் துறை—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:

சமயச் சான்றோர் விழா–

“வஞ்சனை செய்வோர்க்கு சிம்மமாய்
வாகைதனைப் படைப்போர்க்கு சிகரமாய்
வாழ வழியறியோர்க்கு வசந்தமாய்
வரையுணர் கொண்டோர்க்கு வெஞ்சுடராய்
வீறுகொண்டெழுந்து, வெற்றிதனை அடைந்து
தங்கத் தமிழ்நாட்டை தரணி போற்றும் நற்சான்றாய்

2005 மார்ச் 21] [திரு. பி.சி. ராமசாமி]

நல்லாட்சி நடத்தும் தங்கத் தாரகை அம்மா அவர்களின் ஆணையின்படி சமயச் சான்றோர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் விழா நடத்தப்பட்டு வருகின்றது. சென்ற 2004 ஆம் வருடம் மே மாதம் ரூபாய் ஐந்து இலட்சம் வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு, தெய்வப் புலவர் சேக்கிழார் விழா நடத்தப்பட்டது. மேலும் சமயக்குரவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தரின் நினைவைப் போற்றும் வகையில் திருஞானசம்பந்தர் இசை விழா இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் சார்பில் திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீசுவரர் திருக்கோயிலில் 2001 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. இவ்வாண்டு ஏப்ரல் மாதம் நாகை மாவட்டம், வேதாரண்யம் வட்டம், துளசியாபட்டினம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஔவையார் மற்றும் விஸ்வநாதசுவாமி திருக்கோயிலில் ஔவை விழாவை 50 ஆயிரம் ரூபாய் செலவில் அரசு விழாவாக நடத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து—மதச்சார்பற்ற தலைவரான அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் திருக்கோயில்களில் பொது விருந்து நடத்துவது முறையா என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் கேட்டார்கள். நிதி வசதிமிக்க திருக்கோயில்களில், ஆண்டுதோறும் சுதந்திரத் திருநாள், பேரறிஞர் அண்ணா நினைவு நாள் ஆகிய இரு தினங்களில் பொது விருந்து நடத்தப்படுகிறது. அறிஞர் அண்ணா அவர்கள் மதச்சார்பற்ற தலைவர் என்பதை மாண்புமிகு உறுப்பினர் உட்பட அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. அவர் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கருத்தையும் ஏற்றுக்கொண்ட தலைவர். எனவே பேரறிஞர் அண்ணா நினைவு நாளில் சாதி, இனப் பாகுபாடு இன்றி, அனைவரும் சரிநிகர் சமமாகப் பொது விருந்து நடத்துவது குறித்து எவ்வகையிலும் விமர்சிப்பது என்பது பொருத்தமற்றது. இப் பொது விருந்து சாலச் சிறந்த ஒரு செயலாகவே பொது மக்களால் வரவேற்கப்படுகிறது என்பதை இம்மாமன்றத்திற்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–25

திருக்கோயில் சொத்துக்கள்—மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எச். ராஜா அவர்கள், திருக்கோயில் நிலங்கள் குத்தகை பாக்கி நிலுவையாக ரூ. 4 கோடியே 48 இலட்சம் தொகைக்கு வசூல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறதென்றும், ஆனால் அதில் வசூலான தொகை

குறிப்பிடப்படவில்லை எனவும் இம்மானியக் கோரிக்கையின்போது தெரிவித்தார்கள். திருக்கோயில் நிலக் குத்தகை நிலுவைக்காக வருவாய் நீதிமன்றத்தில் ரூபாய் 25 கோடியே 73 இலட்சத்திற்கு—குத்தகை நிலுவைக்காக—வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அதில் 7,292 வழக்குகள் முடிவுற்று, ரூபாய் 4 கோடியே 48 இலட்சத்திற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன், என்ன? (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவிக்கிறபோது, இராமாமிர்தம் அம்மையாருடைய பெயரிலே இருக்கிற அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்று அறிவித்தார்கள். தமிழ்நாட்டில் பெண்கள் முன்னேற்றத்திற்காகவும், ஜாதி ஒழிப்புக்காகவும், விதவைத் திருமணத்திற்காகவும், தேவதாசி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும், பால்யத் திருமணத்திற்கெதிராகவும் காடும், மேடும் திரிந்து பெண்களுக்காக, அவர்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர் இராமாமிர்தம் அம்மையார் என்பதை நாடு அறியும். அத்தகைய பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட அவருடைய பெயரால் அமைந்த ஒரு திட்டத்தை இந்த அரசு தூக்கி எறிந்துவிட்டதைக் கண்டிக்கிற வகையில் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. விட்டுவிடுங்கள். (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: இராம்மாமிர்தம் அம்மையார் யார் என்றாவது உங்களுக்குத் தெரியுமா? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துரைமுருகன் (குறுக்கீடு) துரைமுருகன், போவதற்கு முன்னால், புதுக் கவிதை ஒன்று சொல்கிறேன்; கேட்டுவிட்டுப் போங்கள். துரைமுருகன், 'இவர்கள் வெளியே போவதற்காகவே உள்ளே வருகிறார்கள்'. (சிரிப்பு)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ மதிப்பிற்குரிய மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களையே நாங்கள் மதிக்கவில்லை என்பதுபோல் இங்கே எதிர்க்கட்சித்

துணைத் தலைவர் பேசிவிட்டுச் சென்றார். அதற்கு நான் ஆட்சேபம் தெரிவிக்கிறேன். ஒரு திட்டத்தின் பெயர் முக்கியம் அல்ல. பயனாளிகள் பயன்பெறுவதுதான் முக்கியம். இராமாமிர்தம் அம்மையார்மீது இந்த அரசுக்கும் மிகுந்த மதிப்புள்ளது. ஆனால் அவர்கள் குறிப்பிட்ட அந்தத் திட்டம் திமுக. ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட திட்டம். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் தெரிவித்ததுபோல், அந்தத் திட்டத்தில் பல்வேறு முறைகேடுகள் நிகழ்த்தப்பட்டன. அதனால்தான், எண் 10243/SW/3/2002 நாளிட்ட கடிதத்தின்மூலம் 4–6–2002 முதல் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. அதே திட்டம் வேறு பெயர்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நான் ஏற்கெனவே விவரமாக இங்கே விளக்கிக் கூறியதுபோல், ஏழைப் பெண்களுக்கு, திருமணத்திற்கு உதவி செய்வதற்கு என்றே 4 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம் எத்தனை பயனாளிகள் பயனடைந்திருக்கிறார்கள் என்பதையும் நான் குறிப்பிட்டேன். ஆகவே எதிர்க்கட்சியினர் வெளிநடப்புச் செய்வதற்காக ஏதோ ஒரு காரணத்தைத் தேடிக் கொண்டிருந்தார்கள். வேறு ஒன்றும் கிடைக்காததால், இப்படி ஒரு குற்றத்தைச் சுமத்தி, அவர்கள் வெளியேறி இருக்கிறார்கள். அது அவர்களுடைய விருப்பம். ஆனால் இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டதற்கும், இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அவர்மீது இந்த அரசு மிகுந்த மதிப்பும், மரியாதையும் கொண்டிருக்கிறது என்பதை நான் உறுதியாகக் கூற விரும்புகிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, உட்காருங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அமைச்சர் பேசி முடித்த பின்பு சந்தேகங்களையெல்லாம் கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில், ரூபாய் 1 கோடியே 3 இலட்சத்திற்குத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் ரூபாய் 3 கோடியே 45 இலட்சத்திற்கு வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் பேசி முடித்த பின்பு வாய்ப்புத் தருகிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir, I am on a point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. (குறுக்கீடு) நீங்கள் point of order-ஐ சீர்குலைக்கிறீர்கள்; உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், ஞானசேகரன். உட்காருங்கள், உட்காருங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir, I am on a point of order regarding this subject. Speaker Sir, please permit me.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். பாலபாரதி, உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் பேசி முடித்த பிறகு கேளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir, please allow me to talk.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir, I am on a point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் பேசி முடிக்கட்டும். உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்றும் வருவாய் நீதிமன்றத்தில் மீதமுள்ள ரூபாய் 21 கோடியே 25 இலட்சத்திற்கு உரிய வழக்குகளில் விரைந்து தீர்ப்புகள் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆக்கிரமிப்புகள்—திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களைப் பலதரப்பு மக்களும் ஆக்கிரமிப்புச் செய்து, அனுபவித்து வருகின்றனர். ஆக்கிரமிப்பில் உள்ள திருக்கோயில் நிலங்களைப் பொறுத்த வரை, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, விருப்பு, வெறுப்பு மற்றும் வேறு பாரபட்சம் ஏதுமின்றி ஆக்கிரமிப்புகள் முழுவதையும் அகற்ற இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாக, கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் திருக்கோயில்களுக்குச் சொந்தமான 596 ஏக்கர் நிலமும், 99 வீட்டுமனைகளும், 52 கட்டடங்களும் மீட்கப்பட்டுள்ளன என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். பெரும்பாலான இனங்களில் ஆக்கிரமிப்புகள் அகற்றுவது தொடர்பாக, இத்துறை எடுத்துள்ள நடவடிக்கையை எதிர்த்து, ஆக்கிரமிப்புதாரர்கள் பல்வேறு நீதிமன்றங்களிலே வழக்குகள் தொடுத்திருக்கிறார்கள். அந்த வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், அத்தகைய ஆக்கிரமிப்புகளைப் பட்டியலிட்டு இங்கு விவாதிப்பது உகந்ததாக அமையாது. இந்த வழக்குகளையெல்லாம் நீதிமன்றத்தில் எதிர்கொண்டு, திருக்கோயில்கள் சார்பாக வாதிடுவதற்கு, திறமைவாய்ந்த வழக்குரைஞர்கள் அமர்த்தப்படுகின்றனர். ஆக்கிரமிப்புகளை அகற்றி, நிலங்களை மீட்பதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்குளங்கள் திருப்பணி—

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே"

என்பது அப்பர் சுவாமிகளின் தேவாரமாகும். கோயிலின் அழகு, அதை ஒட்டிய குளத்தாலும் கூடுகிறது. தமிழ்நாடு முழுவதும் திருக்கோயில் குளங்களைத் தூர் வாரிச் செப்பனிட்டு, அவை நீர் நிரம்பிய தடாகங்களாக விளங்குவதற்கு ஒரு பெரும் திட்டம் தீட்டிச் செயல்படுத்தி வருபவர்கள்தான் நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் பகுதிகளிலுள்ள திருக்குளங்களைப் பழுதுபார்த்து, சீரமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளனர். மேலும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் இம்மானியக் கோரிக்கையின்மீது பேசும்பொழுது, திருக்கோயிலுக்குச் சொந்தமான திருக்குளங்களைச் சீரமைப்பதற்கு எவ்வாறு நிதி ஆதாரம் பெறப்படுகிறது என்று கேட்டார்.

இத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 2,235 திருக்குளங்கள் உள்ளன. இவ்வரசு பொறுப்பேற்றபின், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திட்டத்தின்படி, 507 திருக்குளங்கள் சீரமைக்கப்பட்டு, நல்ல நிலையில் உள்ளன. இத்திருக்குளங்களில் பெரும்பாலானவை மாவட்ட ஆட்சியர்மூலம் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் வாயிலாகப் பணிகள் நிறைவேற்றப்பட்டன. சில குளங்கள் அந்தந்தத் திருக்கோயில்களின் நிதியிலிருந்தும், வேறு சில, தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் சீரமைக்கப்பட்டன. இதே அடிப்படையில், இதர திருக்குளங்களையும் சீரமைக்கும் பணியை முடிக்கும்படி அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், திருக்கோயில் அலுவலர்களுக்கும்

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

வண்டியூர் அருள்மிகு மாரியம்மன் தெப்பக்குளத்திற்குத் தண்ணீர் நிரப்புவது பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்கள் குறிப்பிட்டார்கள். மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுடன் இணைந்த வண்டியூர் அருள்மிகு மாரியம்மன் தெப்பக்குளத்தில் நீர் நிரப்புவதற்கு மதுரை மாநகராட்சி, மணலூர் குடிநீர்த் திட்டத்திலிருந்து தண்ணீர் வழங்க ஒப்புதல் அளித்து, அதற்கான மின் கட்டணம், மாதம் ஒன்றுக்கு 55 ஆயிரம் ரூபாய் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள குறைந்த நீர்மட்ட நிலையில், மணலூர் குடிநீர்த் திட்டத்திலிருந்து தண்ணீர் எடுப்பது இயலாது என்று மாநகராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரால் குடிநீர் வடிகால் வாரியத்திடம், சோழவந்தானில் இருந்து தெப்பக்குளத்திற்கு நிரந்தரமாக நீர் நிரப்பும்பொருட்டு தண்ணீர் கொண்டுவர திட்ட அறிக்கை கோரப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இம்மாமன்றத்திற்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அறங்காவலர் நியமனம்—திருக்கோயில்களின் நிர்வாகத்தில் மக்கள் பங்கேற்கும் வகையில் அறங்காவலர் குழுக்களை ஏற்படுத்தி, அவர்களிடம் நடைமுறை நிர்வாகத்தை ஒப்படைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் பேசும்போது, "கோயில் கூடாது என்பதல்ல எங்கள் நோக்கம், அது கொடியவர்களின் கூடாரமாக மாறிவிடக் கூடாது என்பதற்காகத்தான்" என்று அவரது தலைவர் 'பராசக்தி' திரைப்படத்தில் கதை-வசனம் எழுதியதாகத் தெரிவித்தார். நான் இங்கே அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் 1965 ஆம் ஆண்டு தைப்பொங்கல் அன்று வெளியிடப்பட்ட 'எங்க வீட்டுப் பிள்ளை' என்ற படத்தில் ஒரு பாடலில், "நான் ஆணையிட்டால், அது நடந்துவிட்டால், இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார். ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்" என்று பாடியுள்ளதை, (மேசையைத் தட்டும் ஒலி) அவர் ஆட்சிப் பொறுப்பில் உள்ள வரை நடைமுறைப்படுத்தியவர் எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள். அவரது மறைவிற்குப் பின்னால், எங்களது கட்சியையும், ஆட்சியையும் நடத்துகின்ற எங்களது தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி, தங்கத் தாரகை அம்மா அவர்கள், புரட்சித் தலைவர் அன்று கூறிய, ஏழைகள்

வேதனைப்படக்கூடாது என்று பாடியதற்கு ஒப்ப, ஏழை மாணவிகளுக்கு சைக்கிள் வழங்கும் திட்டம், அரசுமூலம் நிலம் வாங்கி, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது, ஆலயங்களில் அன்னதானத் திட்டம், ஆதி திராவிடர் பகுதிகளில் திருக்கோயில் திருப்பணி போன்ற நலப் பணிகளை ஆற்றி வருகிறார்கள். இன்றைக்கு கோயில்களில் மட்டுமல்ல, ஆட்சியிலும் கொடியவர்கள் வரக்கூடாது என்பது மட்டுமல்லாமல், தமிழகத்திலேயே கொடியவர்களின் காலடிச் சுவடு படக்கூடாது என்பதற்காக, கண் துஞ்சாது, இரவு, பகல் பாராது, மக்கள் நலனுக்காகப் பணியாற்றி வருகிறார் என்பதை அன்போடு இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-35

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ரூபாய் 10 இலட்சத்திற்கு மேல் வருமானம் பெறும் புகழ்பெற்ற திருக்கோயில்களுக்கு அறங்காவலர் குழுத் தலைவர் பதவிக்கு உரிய நபரைத் தேர்வு செய்வதில் தனிக் கவனம் செலுத்தி, ஆன்மீகப் பற்றும், கொடையுள்ளமும் கொண்ட செல்வந்தர்களையும், புரவலர்களையும், தொழிலதிபர்களையும் தலைவர்களாக 93 திருக்கோயில்களுக்கு பரம்பரை முறை வழிசாரா அறங்காவலர்களாக நியமனம் செய்துள்ளார்கள். இக்கோயில்களின் நிர்வாகத்தில் நற்பெயர்பெற்ற செல்வந்தர்கள் அறங்காவலர் குழுத் தலைவர்களாகப் பொறுப்பேற்றதால் இத்திருக்கோயில்கள் தூய்மைப்படுத்தப்பட்டு புதுப் பொலிவுடன் திகழ்கின்றன. பக்தர்களின் வசதிக்கும், கோயில் பராமரிப்புக்கும், கோயில் சொத்துக்கள் பாதுகாப்பிற்கும் இந்தத் தலைவர்கள் அரும்பாடுபட்டுக் கடமையாற்றி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற குறள் நெறிக்கு ஏற்ப, பெரிய திருக்கோயில்களுக்கு, கொடையுள்ளம் கொண்ட செல்வந்தர்களை அறங்காவலர் குழுத் தலைவர்களாக நியமித்த மாண்புமிகு அம்மா அவர்களின் புத்தி சாதுர்யத்தையும், ஆளுமைப் பண்பையும் உலகமே வியந்து பாராட்டுகிறது.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எச். ராஜா அவர்கள், அறங்காவலர் நியமனம் பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார். அரசால் நியமனம் செய்யப்பட்டுள்ள அறங்காவலர் குழு போக மீதமுள்ள திருக்கோயில்களுக்கு அறங்காவலர் குழு உறுப்பினர்களை நியமிக்க

அந்தந்த மாவட்ட அறங்காவலர் தேர்வுக் குழுக்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. பரம்பரை அறங்காவலர்கள் நிர்வாகத்தில் உள்ள திருக்கோயில்களுக்கு மேலே குறிப்பிட்டபடி அரசு அறங்காவலர்கள் நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை. இதைத்தான் கொள்கை விளக்கக் குறிப்பில். 8,633 அற நிறுவனங்களுக்கு அறங்காவலர்கள் நியமிக்க இயலாத நிலை உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் பரம்பரை அறங்காவலர்கள் நிர்வாகத்தில் உள்ள திருக்கோயில்கள், கட்டளைகள், மடம், ஆக மொத்தம் 6,303 திருக்கோயில்கள் உள்ளன. மேலும், 2,330 திருக்கோயில்களில் நிர்வாகம் தொடர்பான வழக்குகள் பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. எனவே, இந்நிறுவனங்களில் அறங்காவலர்களை நியமிக்க இயலாத சூழ்நிலை உள்ளது. நீதிமன்ற வழக்குகளின் தீர்ப்பைப் பொறுத்து அறங்காவலர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதையும் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகைகள்/உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு—மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எச். ராஜா அவர்கள் பேசும்பொழுது திருக்கோயில்களில் உள்ள நகைகளைப் பாதுகாப்பதற்கு ஒரு குழு நியமனம் செய்யப்பட வேண்டுமென்று கோரினார். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கணேசன் மற்றும் திருமதி காசாம்பு பூமாலை ஆகியோர் பேசும்போது, திருக்கோயில் நகைகளைக் கணினியில் பதிவு செய்யக் கோரினார்கள். திருக்கோயில்களில் உள்ள நகைகளுக்கென ஒரு பதிவேடு ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இப்போது, திருக்கோயில்களில் மறு மதிப்பீடும், புனர் மதிப்பீடும் செய்து நகை சரிபார்க்கப்பட்டு, பதிவேட்டில் பதியப்பட்டு வருகிறது. ஆகவே, நகைகளுக்கு என்று குழு நியமிக்க அவசியம் ஏற்படவில்லை எனக் கருதப்படுகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள், அனைத்துத் துறைகளிலும் கணினியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி வருகிறார்கள் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அனுமதியைப் பெற்று, திருக்கோயில் நகைகள் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்துப் பதிவேடுகளும் கணினியில் பதிவு செய்வது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களைப் பாதுகாத்திட கள்வர் எச்சரிக்கை மணிகள், கோள்சொல்லிக் கடிகாரம், தொட்டிப் பூட்டுகள் மற்றும் இரும்புக் கதவுகள் நிறுவுதல், இரவுக் காவலர்கள் நியமனம், திருக்கோயில்கள் பாதுகாப்புப்

படை நியமனம் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விலைமதிக்க முடியாத உலோகத் திருமேனிகளைப் பாதுகாக்க, தமிழகத்தில் முக்கிய நகரங்களில் உலோகப் பாதுகாப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமண மண்டபங்கள்—ஏழையெளிய மக்கள் தங்கள் இல்லத் திருமணங்களைச் செய்யும்பொழுது பெரும்பாலும் கோயில்களிலேயே செய்கின்றனர். அவர்களுக்கு உதவும்பொருட்டு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்பேரில், நிதி வசதிமிக்க திருக்கோயில் சார்பாகத் திருமண மண்டபங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதன்மூலம் ஏழையெளிய மக்கள் மிகவும் பயன்பெறுகின்றனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்துறையின் ஆளுகையின்கீழுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 192 திருமண மண்டபங்கள் உள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி தற்போது 4 புதிய திருமண மண்டபங்கள் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் 4 திருமண மண்டபங்கள் சுமார் 2 கோடி ரூபாய் செலவில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை இங்கே நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நியாய வாடகை--மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்பொழுது, திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலம் மற்றும் கட்டடங்களின் குத்தகை மற்றும் வாடகை மிக அதிகமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக இங்கே குறிப்பிட்டார். முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் குத்தகை மற்றும் வாடகையை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது. அதனடிப்படையில், தற்போது திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டடங்களில் குடியிருப்பவர்களுக்கு சம்பந்தப்பட்ட இடத்தின் சந்தை மதிப்பு மற்றும் குத்தகைதாரர்களால் பயன்படுத்தப்படும் இடத்தின் பரப்பளவு ஆகியவற்றின் அடிப்படையில் நியாய வாடகைக் குழுவினரால் திருத்திய நியாய வாடகை நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வாறு திருத்தி அமைக்கப்பட்ட வாடகை அதிகமாக உள்ளதாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, பல குத்தகைதாரர்களிடமிருந்தும், வாடகைதாரர்களிடமிருந்தும் புகார்கள் பெறப்படுகின்றன. இதுபோன்ற நிகழ்வுகளில் வாடகை அதிகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகக் கருதினால், சட்ட விதிகளின்படி இந்து சமய அறநிலையத் துறையின் ஆணையரிடம் முறையீடு செய்யத் தற்போது சட்டத்தில் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன என்பதை இப்பேரவையின் உறுப்பினர்களுக்கு, குறிப்பாக சிவபுண்ணியம் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

சிறப்பு இணையதளம்—விஞ்ஞான வளர்ச்சியின் விளைவாகவும், கணினியின் வரவாலும் தற்போது உலகத்தின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிக்குச் செய்திகளை அனுப்புவதற்கு நொடிப் பொழுது நேரமே ஆகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, அறநிலையத் துறையின் செயல்பாட்டை உலகம் முழுவதும் உள்ள ஆன்மீக பக்தர்கள் அறியும் பொருட்டு, துறையின் செயல்பாடு மற்றும் பல்வேறு நலத் திட்டங்கள் முதலியவற்றுடன், பற்பல திருக்கோயில்களின் அரிய தகவல்களை அறிவதற்கு என்று தனி இணையதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த இணையதளம்மூலம் உலகின் எந்தப் பகுதியிலிருந்தும், எந்த நேரத்திலும், எவர் ஒருவரும், தான் விரும்பிய திருக்கோயிலின் பூஜைகளை, விரும்பிய நாள் மற்றும் நேரத்தில் பதிவு செய்துகொள்ள e-pooja எனும் சிறப்புத் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ளார்கள் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இணையதளம் பல்வேறு திருக்கோயில்களின் இணையதளத்துடன் தொடர்பு ஏற்படுத்தக்கூடியதாகையால், அத்திருக்கோயில்களின் வரலாறு, புராணம், வளர்ச்சிப் பணிகள் போன்ற தகவல்களுடன் தெய்வத் திருவுருவங்களின் படங்கள் பலவற்றையும் கண்கவர் வண்ண வடிவமைப்பில் ஒளி—ஒலியுடன் காணும் வசதிகள் செய்யப்படுகின்றன.

கல்வி நிறுவனங்கள்—நன்னெறிகளைக் கடைப்பிடிக்கத் தேவையான கட்டுப்பாட்டினையும், கலாச்சாரம் மற்றும் சமயக் கோட்பாடுகளையும், கலை மற்றும் பண்பாட்டினையும் இளமையிலிருந்தே பயிற்றுவிக்கும் சமூக நோக்கோடு, திருக்கோயில்கள் சமயம், கலை, பண்பாடு மற்றும் பொது கல்வி தொடர்பான பள்ளிகள், கல்லூரிகள், பாடசாலைகள், கருணை இல்லங்கள், முதியோர் இல்லங்கள், சித்த வைத்தியசாலை மற்றும் ஆங்கில மருத்துவமனைகள் என்று 113 நிறுவனங்கள் அறநிலையத் துறையால் நிருவகிக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திருக்கோயில் சார்பாக, பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களை ஏன் ஏற்று நடத்தக்கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இத்துறை சம்பந்தமான கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் பக்கம் 42, 43-ல், கல்வி நிறுவனங்கள் சம்பந்தமான விவரங்கள் தரப்பட்டுள்ளன. மேலும், அறநிலையத் துறைமூலமாகப் பல்கலைக்கழகம் ஒன்றை

ஏற்படுத்துவதற்குப் போதிய நிதி ஆதாரம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான பள்ளி/கல்லூரி நிறுவனங்களை நிர்வகித்திட, அவற்றைத் தனி வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் சொன்னார்கள். இந்த நிறுவனங்களுக்கு அறநிலையத் துறை ஆணையர்/இணை ஆணையரைத் தலைவராகக் கொண்ட குழுக்கள் அந்தந்தக் கல்லூரிகளை/பள்ளிகளை சட்ட விதிகளுக்குட்பட்டு நிர்வகித்து வருகின்றன. இக்குழுவில் பல்கலைக்கழகப் பிரதிநிதியும், அறங்காவலர் குழுவின் தலைவரும் உறுப்பினராக உள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறநிலையத் துறைமூலம் நடத்தப்படும் பள்ளிகள்/கல்லூரிகளில் அந்தந்தப் பகுதிகளிலுள்ள ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்கள் மற்றும் மாணவர்கள் பயனடைகின்றனர் என்பதை இங்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பக்தர்களுக்கு வசதி—திருக்கோயில்களுக்கு வருகின்ற பக்தர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து தரவேண்டும் என்பதில் சிறப்புக் கவனம் செலுத்தி வரும் நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, திருக்கோயில்களில் காலணிப் பாதுகாப்புக்காக வசூலிக்கப்பட்ட கட்டணம் 1-7-2004 முதல் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதை இங்கே நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இதன் காரணமாக, இப்போது திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களின் காலணிகள் இலவசமாகப் பாதுகாக்கப்படுகின்றன. 2,091 திருக்கோயில்களில் சுத்திகரிக்கப்பட்ட, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது. அதேபோன்று, 272 திருக்கோயில்களில் கழிப்பிட வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் அதிக அளவில் வரும் அனைத்துத் திருக்கோயில்களிலும் தங்கும் வசதிகளை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களில் குறிப்பிட்டுள்ள திருக்கோயில்களில் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்துதர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோயில் பணியாளர்கள்—மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்கள் பேசும்பொழுது, திருக்கோயிலில் பணிபுரிபவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்றும், தொகுப்பூதியம்

பெறுபவர்களுக்குச் சம்பள விகிதம் நிர்ணயிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்கள்.

கன்னியாகுமரி மாவட்ட இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் தொகுப்பில் 490 திருக்கோயில்கள் உள்ளன. இக்கோயில்களில் பணிபுரியும் முதுநிலைப் பணியாளர்களுக்கு மற்ற திருக்கோயில்களுக்கு உள்ளதுபோல ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சில்லரைச் செலவினப் பணியாளர்களைப் பொறுத்தமட்டில், இவ்வரசு பொறுப்பேற்ற பின்பு, அவர்களுக்கு வழங்கப்படும் குறைந்த சம்பளத்தினைக் கருத்திற்கொண்டு கணிசமாக சம்பள உயர்வு செய்து அரசாணை வெளியிடப்பட்டு அமல்படுத்தப்பட்டுள்ளது. இச்சம்பளச் செலவினை ஈடுகட்டுவதற்காக நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து 1 கோடியே 50 இலட்சம் ரூபாயும், மற்றும் அரசு மானியமாக 50 இலட்சம் ரூபாயும் சேர்த்து, மொத்தம் 2 கோடி ரூபாய் முதலீடு செய்து, அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து ஈடு செய்து சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தவாறு, கன்னியாகுமரி மாவட்ட இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில் பணியாளர்களுக்குப் பாகுபாடு ஏதும் காட்டப்படவில்லை என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோயில்களில் அவ்வப்போது ஏற்படும் தேவைக்கேற்ப, அர்ச்சகர், பூ கட்டுபவர், துப்புரவுப் பணியாளர் போன்ற பல பணியிடங்களுக்குத் தற்காலிக ஏற்பாடாக தினக் கூலி அடிப்படையில் உரிய நபர்கள் நியமிக்கப்படுகின்றனர். இத்தகைய பணியாளர்களை அந்தந்தத் திருக்கோயில்களில் ஏற்படும் நிரந்தரக் காலியிடங்களில் நியமனம் செய்வது, அந்தந்தத் திருக்கோயில்களின் வருமானத்திற்கேற்ப முடிவு செய்யப்படுகிறது. போதிய வருமானம் இல்லாத கோயில்களில் தேவைக்கு அதிகமாக நிரந்தரப் பணியாளர்களை நியமிக்க இயலாது. இதுபோன்று தொகுப்பு ஊதியம் பெறும் பணியாளர்களுக்கு அந்தந்தத் திருக்கோயிலின் தேவைக்கேற்பவும், வருமானத்திற்கேற்பவும் சம்பள விகிதங்கள் நிர்ணயம் செய்து, பணி நிரந்தரம் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–45

திருக்கோயில் பணியாளர்களுக்கு வருங்கால வைப்பு நிதி, குடும்ப நல நிதி, ஆலய ஊழியர் நல நிதி, மருத்துவப் படி, சலவைப் படி,

விடுப்புச் சலுகை, வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி, அவ்வப்போது அரசு அறிவிக்கும் அகவிலைப் படி உயர்வு ஆகியன உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், திருக்கோயிலில் பணியாற்றும்போது மரணமடையும் திருக்கோயில் பணியாளர்களின் சட்டபூர்வ வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. ஆண்டு வருமானம் 40 ஆயிரம் ரூபாய்க்குக்கீழ் பெறும் திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சம்பள நிலுவைத் தொகையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்ற பின்னர் ஒரு கோடி ரூபாயை 2,761 பணியாளர்களுக்கு வழங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எச். ராஜா அவர்கள் பேசும்போது, பூஜை, புனஸ்காரங்களைக் கவனிக்கின்ற அர்ச்சகர் போன்றவர்களுக்கு ஆண்டுச் சம்பளம் ரூ.1.93 கோடிதான் என்றும், ஆனால் ஆலய நிர்வாகத்தைக் கண்காணிக்கின்ற அரசுத் துறை அலுவலர்களுக்கு வழங்கப்படும் ஆண்டுச் சம்பளம் ரூ.23.88 கோடி என்றும் குறிப்பிட்டார். இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையில் அரசுப் பணியாளர்களுக்காக 2,355 பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு, 1,795 பணியாளர்கள் மட்டுமே பல நிலைகளில் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களின் ஆண்டுச் செலவுத் தொகை ரூ.21.55 கோடி ஆகும். இப்பணியாளர்கள் தமிழகம் முழுவதும் 38 ஆயிரத்து 409 இந்து சமய அறநிலையங்களில் கண்காணிப்புப் பணியை மேற்கொண்டு வருகிறார்கள். மொத்த சமய நிறுவனங்களின் எண்ணிக்கையை நோக்கும்போது, பணியாளர்களின் எண்ணிக்கை மிகச் சொற்பமே. மேற்கண்ட சமய நிறுவனங்களில் 37 ஆயிரத்து 819 முழுநேரப் பணியாளர்களும், இவர்களில் 4 ஆயிரத்து 751 பணியாளர்கள் முதுநிலைத் திருக்கோயில்களிலும் பணிபுரிந்து வருகிறார்கள் என்பது கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கோயில் வருமானத்தில் 10 முதல் 20 சதவிகிதம் வரை பெரிய திருக்கோயில் பணியாளர்களுக்குச் சம்பளம் வழங்கப்படுகிறது. சிறிய திருக்கோயில் பணியாளர்களுக்கு ஆண்டு வருமானத்தில் 40 சதவிகிதம் வரை சம்பளம் வழங்கப்படுகிறது. இவர்களுக்கும் சம்பளம் என்ற வகையில் கணிசமாகச் செலவாகிறது. இது அரசு நிதிக் கணக்கில் வராது. எனவே, அரசுப் பணியாளர்களுக்குச் சம்பள வகையில் அதிகம் செலவு ஆவதாகவும், கோயில் பணியாளர்களுக்குக் குறைவாகச் செலவு ஆவதாகவும் சொல்வது, தவறான ஒப்பீட்டின் அடிப்படையிலானதாகும் என்பதை இம்மாமன்றத்தில் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம்—மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எச். ராஜா அவர்கள் பேசும்போது, கிராமப்புறப் பூசாரிகளுக்கு ஓய்வூதியத் திட்டத்தின்கீழான எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்று கோரினார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் 1996 ஆம் ஆண்டில் கிராமக் கோயில் பூசாரிகள் மாநாட்டின்போது முறையிட்டுக்கொண்டதன்பேரில், முதன்முதலாக அம்மா அவர்கள்தான் பூசாரிகளுக்கு ஓய்வூதியத் திட்டத்தினை அறிவித்தார்கள். அதுவும், இத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத கோயில் கிராமப் பூசாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500 வீதம் 3,000 கிராமப் பூசாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்க ஆணையிட்டவர்தான் நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான செலவுத் தொகை அரசு மானியமாக வழங்கப்படுகிறது. 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயதினை அடைந்து ஓய்வுபெற்ற பூசாரிகள் 2,632 நபர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்று வருகின்றார்கள். இந்த ஓய்வூதியம் வேண்டி பூசாரிகளிடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு, தகுதியுடையவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்—1. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 3–11–2004 அன்று பழனிக்கு வருகை தந்து, கம்பி வட ஊர்தியைத் துவக்கி வைத்தபோது, பக்தர்கள் பெரும்பாலோர் பழனி மலைக் கோயிலுக்கும், இடும்பன் மலைக் கோயிலுக்கும் இடையே ஒரு கம்பி வட ஊர்தியை ஏற்படுத்தித்தர வேண்டுமென வேண்டுகோள் வைத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் கனிவுடன் பரிசீலித்து, பழனி மலைக் கோயிலுக்கும், இடும்பன் மலைக் கோயிலுக்கும் இடையே சுமார் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கம்பி வட ஊர்தி 2005–2006 ஆம் ஆண்டிலே அமைக்க வேண்டுமென்று ஆணையிட்டார்கள் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. பழனி, தமிழ்நாட்டின் மிக முக்கிய ஆன்மீகத் தலமாகவும், கொடைக்கானல் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமாகவும் விளங்கி வருகின்றன. பழனியிலிருந்து கொடைக்கானலுக்கு மலைச் சாலை வழியாக 61 கிலோ மீட்டர் தூரத்தைக் கடப்பதற்கு நீண்ட நேரம் ஆவதாலும், மிகுந்த சிரமம் ஏற்படுவதைக் கருத்திற்கொண்டும், தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உயர்த்திக் காட்ட உறுதி பூண்டுள்ள நமது

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பழனிக்கும், கொடைக்கானலுக்கும் இடையே 15 கிலோ மீட்டர் வான்வழி தூரத்திற்குக் கம்பி வட ஊர்தி வசதி 30 கோடி ரூபாய் செலவில் பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயில் நிர்வாகமும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் இணைந்து கூட்டுத் திட்டமாக நிறைவேற்ற ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது பக்தர்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமையும். இத்திட்டத்தின்படி சுமார் ஒரு மணி நேரத்திற்குள் பழனியிலிருந்து கொடைக்கானலுக்கு எந்தவித இடர்ப்பாடுமின்றி விரைவில் செல்ல முடியும் என்பதை இம்மாமன்றத்திற்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

3. சோளிங்கர் என்றால் நம் நினைவிற்கு வருவது அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில். ஆனால் கோயில் இருக்கும் மலையின் உயரத்தை நினைத்தாலோ மனதில் ஒரு மலைப்பு ஏற்படும். குறிப்பாக வயோதிகர்கள், உடல் ஊனமுற்றோர் போன்றவர்கள் 750 அடி உயரத்திற்கு 1,305 படிகள் ஏறி சுவாமி தரிசனம் செய்வது இயலாத காரியமாக இருந்து வருகிறது. ஆனால் இறையருள் துணை கொண்டு, முடியாது என்பதையெல்லாம் முடித்துக் காட்டும் ஆற்றல் கொண்ட நமது முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு ஒரு வழிவகுத்துள்ளார்கள். சோளிங்கர் மலை அடிவாரத்திலிருந்து மலைக் கோயில் வரை சுமார் ரூ.4 கோடி செலவில் கம்பி வட ஊர்தி ஏற்படுத்தித் தருவதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) அவர் கேட்டார். (குறுக்கீடு) அவர் கேட்டார். இதற்கான செலவு இத்திருக்கோயில் நிதியிலிருந்தும், இதர வசதிமிக்க திருக்கோயில்களின் நிதியிலிருந்தும் மேற்கொள்ளப்படும்.

4. மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் குளத்தில் தண்ணீர் நிரப்பி, அது பூமிக்கடியில் கசிந்து செல்லாவண்ணம், குளத்தின் அடிப்பாகத்தில் கான்கிரீட் தளம் ரூ.80 இலட்சம் செலவில் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. மக்களுக்குப் பல்வேறு நலத் திட்டங்களை அளித்து வரும் மாண்புமிகு அம்மா அவர்கள், சென்ற நிதி ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் உள்ள 6,000 திருக்கோயில்களைச் செப்பனிட்டுப் புதுப்பிப்பதற்கு ஆணையிட்டு, அதனடிப்படையில் வரப்பெற்ற கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதியாண்டில் மேலும் 6,000 திருக்கோயில்களை (மேசையைத் தட்டும் ஒலி) திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/- வீதம் மொத்தம் ரூ.15 கோடி செலவில் செப்பனிட்டுப் புதுப்பிக்க ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

6. ஆதி திராவிடர் பெருமக்கள் வாழும் பகுதிகளில் உள்ள கோயில்களைச் செப்பனிட்டுப் புதுப்பிப்பதற்குத் திட்டம் அறிவித்து, பணிகள் சிறப்பாக நடைபெற்று வருவதைக் கண்ணுற்று, கிராமப்புறங்களில் உள்ள, போதிய வருமானம் இல்லாத, பழுதுபட்ட நிலையில் உள்ள இதர கோயில்களையும் செப்பனிட்டுப் புதுப்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் கோரிக்கை விடுத்தனர். இக்கோரிக்கையினைக் கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு அம்மா அவர்கள், அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும் 4,000 திருக்கோயில்களை, திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/- வீதம் மொத்தம் ரூ.10 கோடி செலவில் 2005-2006 ஆம் நிதியாண்டில் செப்பனிட்டுப் புதுப்பிக்க ஆணையிட்டுள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இங்கே இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

7. மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட இலவச காலணிப் பாதுகாப்புத் திட்டம் பக்தர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. இதுபோல் பக்தர்கள் பெருமளவில் வருகை தரும் பழனி, மதுரை, சமயபுரம், திருத்தணி, ஸ்ரீரங்கம், திருச்செந்தூர், திருவண்ணாமலை போன்ற திருக்கோயில்களில், திருக்கோயில் சார்பாக ஏற்படுத்தப்பட்டுள்ள கழிப்பிட வசதியை பொது மக்களுக்கு இலவசமாக ஆக்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

8. ஸ்ரீரங்கம், சமயபுரம், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், வடபழனி, இன்ன பிற திருக்கோயில்களில் திருஆபரணங்கள் (தங்க நகைகள்) செய்யப்படும். இதற்காக திருஆபரண திருப்பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

9. பக்தர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் வகையில் பின்வரும் பெரிய திருக்கோயில்களில் தங்க ரதம் நிர்மாணிக்கப்படும்:

(1) பண்ணாரி, அருள்மிகு பண்ணாரி அம்மன் திருக்கோயில்

(2) சிறுவாச்சூர், அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில்

(3) மயிலாப்பூர், அருள்மிகு முண்டகக்கண்ணியம்மன் திருக்கோயில்

(4) திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில்

(5) கோயம்புத்தூர், அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயில்

(6) திண்டுக்கல், அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில்

10. 2005-2006 ஆம் ஆண்டில் 1,008 திருக்கோயில்களுக்குக் கும்பாபிஷேகம் செய்யப்படும்.

11. திருக்கோயில்களின் திருப்பணியில் ஈடுபாடு உடையோரை ஊக்குவிக்கும் நோக்கோடு ஒவ்வொரு ஆண்டும் அரசு மானியம், ஆணையர் பொது நல நிதி, ஆலய மேம்பாட்டு நிதி, திருக்கோயில்களின் உபரி நிதி ஆகியவற்றிலிருந்து பாடல் பெற்ற, மங்களாசாசனம் பெற்ற, தொன்மை மிகுந்த, புகழ்பெற்ற திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. வரும் 2005-2006 ஆம் ஆண்டில் தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு திருக்கோயில்கள் என்ற அடிப்படையில் ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ரூ. 5 இலட்சத்திற்கு மிகாது நிதி உதவி அளிக்கப்படும் என்பதை இங்கே மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

12. பத்து திருக்கோயில்களுக்குச் சொந்தமான பழுதடைந்த மரத்தேர்களைப் பழுது நீக்கியும், புதுப்பித்தும் தேர்த் திருவிழா நடத்தப்படும். இங்கேகூட பல சட்டமன்ற உறுப்பினர்கள் இன்னும் தேர்ப் பணி முடியவில்லை என்று சொன்னார்கள். இங்கே அறிவிக்கப்பட்டிருக்கின்ற அனைத்துக் கோயில் தேர்களும் கூடிய விரைவில் செப்பனிடப்பட்டு, புதிதாக்கப்பட்டு, தேர் ஓட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இங்கே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

13. நூறு திருக்கோயில்களில் அந்தந்தத் திருக்கோயில்களின் தேவைக்கான மலர்களைப் பெறும் வகையில் புதிய நந்தவனங்கள் ஏற்படுத்தப்படும்.

14. சிறுவர் மற்றும் சிறுமியர்களை நல்வழிப்படுத்தும்பொருட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி 171 திருக்கோயில்களில் ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வகுப்புகளின் அவசியத்தைக் கருதி, மேலும் 216 திருக்கோயில்களில் இவ்வகுப்புகள் தொடங்கப்படும்.

15. திருக்கோயில்களின் வரலாறு, கட்டடக் கலை, திருவிழாக்கள் போன்றவற்றை அனைவரும் எளிதில் அறிய ஏதுவாக ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்து குறுந்தகடாக வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும். முதற்கட்டமாக 18 திருக்கோயில்களில் இக்குறுந்தகடு வெளியிடப்படும்.

16. சமஸ்கிருதத்தில் உள்ள ஆகம நூல்களை, அனைவரும் அறிய ஏதுவாக தமிழில் மொழி பெயர்த்து வெளியிடும் பணி தொடரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதுவரையில் பதிலுரையில் கூறியுள்ள விளக்கங்களை ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தாமல் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றி, நான் கோரிய தொகையை அரசுக்கு வழங்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி யசோதா. (குறுக்கீடு) பாலபாரதி, உங்களைப் பிறகு கூப்பிடுகின்றேன்.

***திருமதி டி. யசோதா:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலிலே— என்னுடைய தொகுதிக்குட்பட்ட குன்றத்தூரில் இருக்கின்ற திருநாகேஸ்வரம் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நகர் என்றும் அங்காள பரமேஸ்வரி நகர் என்றும் திருவள்ளுவர் நகர் என்றும் கன்னியப்பன் நகர் என்றும் 4 நகர்கள் இருக்கின்றன. கோயிலுக்குச் சொந்தமான இடங்களிலே மக்கள் அங்கே வீடுகளைக் கட்டிக்கொண்டு, பல ஆண்டுக் காலமாக வசித்து

வருகின்றார்கள். அவர்களுக்கு இன்றைக்கும் வாடகை நிர்ணயம் செய்யாத காரணத்தால், அவர்களுக்கு No objection certificate-ம் இல்லாத காரணத்தால், மின்சாரத் துறையின்மூலமாக அவர்களுக்கு மின் வசதி கிடைக்காத சூழ்நிலையில் அங்கிருக்கின்ற மக்கள் படுகின்ற வேதனையை நான் அமைச்சர் அவர்களுக்குப் பல சமயங்களில் சுட்டிக்காட்டி இருக்கின்றேன். அருள்மிகு மாங்காடு காமாட்சியம்மன் கோயிலுக்கு வருகை தந்தபோதுகூட, அமைச்சரவர்கள் இதை உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று நான் நடவடிக்கை எடுப்பேன் என்று சொன்னார்கள். காலையிலேயும் அவர்களிடம் அதைக் குறிப்பெடுத்துக் கொடுத்திருந்தேன். எனக்கு அதற்கு விளக்கம் கிடைக்கவில்லை, உங்கள்மூலமாக அதற்கு விளக்கம் கோர விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரவர்கள்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு இடங்களில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. உடனடியாக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடன் கலந்து ஆலோசித்து, இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவபுண்ணியம் (குறுக்கீடு) பாலபாரதி, திரு. சிவபுண்ணியம் வெள்ளிக்கிழமையிலிருந்து கேட்டுக்கொண்டிருக்கின்றார்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கோயில் மனைப் பகுதிகளுக்கான வாடகை நிர்ணயம் குறித்து இங்கே ஒரு கருத்தை வெளியிட்டுக் கொண்டேயிருக்கின்றார்கள். சென்ற ஆண்டும் அப்படி வெளியிட்டார்கள். சென்ற தி.மு.க. ஆட்சியிலே ஒரு அரசாணை போடப்பட்டது என்பது உண்மை. ஆனால் பன்மடங்கு வாடகை உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை சட்டமன்றத்திலேகூட நான் குறிப்பிட்டுச் சொல்லி, அன்றைய முதலமைச்சர் அவர்கள் அந்த அரசாணையை நிறுத்தி வைத்தார்கள். இப்பொழுது வந்திருக்கின்ற இந்த அரசு அந்த அரசாணையைத் திரும்பவும் விடுத்து அமல்படுத்துகின்றது என்பதுதான் உண்மையே தவிர, சென்ற ஆட்சியில் போடப்பட்டது, போடப்பட்டது என்று கூறியே, பன்மடங்கு வாடகையை உயர்த்துவது என்பது மிகப் பெரிய சுமையாக இருக்கின்றது. ஆகவே

பன்மடங்கு உயர்த்தியிருக்கின்ற வாடகையை—வாடகையை உயர்த்த வேண்டாமென்று நான் சொல்லவில்லை. ஆனால் 100 மடங்கு, 200 மடங்கு உயர்த்தப்பட்டிருக்கின்ற வாடகையைக் குறைப்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். அரசாணை நிறுத்தி வைக்கப்பட்டது, இப்பொழுதும் அந்த அரசாணையை நிறுத்தி வைக்கவேண்டுமென்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதற்கு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலுரையிலே, கோயில்களில் தமிழிலே அர்ச்சனை செய்யப்படும் என்ற ஒரு அறிவிப்பைச் செய்திருக்கின்றார்கள். இது வரவேற்கக்கூடியது, மகிழ்ச்சி அளிக்கக்கூடியதுதான். உள்ளபடியே நாங்கள் வரவேற்கின்றோம். அதே நேரத்தில் 'தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும்' என்ற வாசகம் அங்கே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆகவே தமிழில் கேட்டால் மட்டும் அல்லாமல், தமிழர்கள் வழிபடக்கூடிய கோயில்களில், தமிழ்நாட்டில் இருக்கின்ற அந்தக் கோயில்களில் முழுமையாகத் தமிழிலேயே அர்ச்சனை செய்யப்பட வேண்டும். பிற மொழிகளில் அர்ச்சனை செய்யவேண்டுமென்று யாராவது விரும்பிக் கேட்டால் அதைச் செய்யலாமே தவிர, எல்லா நிலைகளிலும் தமிழில் அர்ச்சனை செய்ய இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தொடர்ந்து அமைச்சரிடத்திலே, தொடர்ந்து அறநிலையத் துறை மானியக் கோரிக்கையிலே இவற்றையெல்லாம் பேசுவதுண்டு. என்னுடைய திருத்துறைப்பூண்டி தொகுதியிலே உள்ள திருக்கோயிலுக்கு நன்கொடையாளர்கள் 40 இலட்சம் ரூபாயில் தேர் ஒன்றை இனாமாகச் செய்து கொடுத்திருக்கின்றார்கள். அந்தக் கோயிலுக்கு ஒப்படைத்திருக்கின்றார்கள். 40 இலட்சம் ரூபாய்க்குச் செய்து கொடுத்த அந்தத் தேரை சென்ற தடவை ஓட்டியிருக்கின்றோம். அந்தக் கோயிலுக்குச் சொந்தமான பல ஏக்கர் நிலமுள்ள அந்தக் குளம் இன்றையதினம் வரை தூர் வாரப்படவில்லை. சென்ற தடவையே அமைச்சரிடத்திலே அதைச் சொல்லி, அவரும் ஒப்புக்கொண்டார்கள். அவையிலேயே ஒப்புக்கொண்டார்கள். இன்னும் அதைச் செய்யவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றதையெல்லாம் எழுதிக் கொடுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: நான் எழுதிக் கொடுத்துவிடுகின்றேன். அதோடு, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் சொன்னதைப் போல, Revenue Courts பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள். Revenue Courts விவசாயிகளுடைய எல்லாக் கடன்களையும் ஒத்தி போட்டு—விவசாயிகளுடைய கடன்களை ஒத்திவைத்திருக்கின்றீர்கள். வைத்திருக்கின்றீர்கள். கூட்டுறவுக் கடன்களை ஒத்திவைத்திருக்கின்றீர்கள். ஆனால் இந்த Revenue வரி வசூலை ஒத்திவைத்திருக்கின்றீர்கள். ஆனால் இந்த Revenue Courts—ஐ மட்டும் வைத்தால் விவசாயிகள் எப்படிச் செலுத்துவார்கள்? தினந்தோறும் நூற்றுக்கணக்கான விவசாயிகள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றவற்றையெல்லாம் எழுதிக் கொடுங்கள். அமைச்சரின் கவனத்திற்கு எழுதிக் கொடுங்கள். செல்வி பாலபாரதி.

செல்வி க. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை என்பது அரசினுடைய துறை. ஆனால் ஒரு பெண்கூட இதுவரை அர்ச்சகராக நியமனம் செய்யப்படவில்லை. வேத ஆகமக் கல்லூரியில் ஆண்கள் மட்டும் தேர்வு செய்யப்படுகின்றார்கள். மனு சாஸ்திரத்தின்படி பெண்கள் வேதம் கற்க உரிமையில்லை என்று எழுதி வைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெண்களை அர்ச்சகராக நியமனம் செய்வதற்குக் கொள்கை ரீதியாக என்ன நடவடிக்கை எடுக்க இருக்கின்றீர்கள் என்பது எனக்குத் தெரிய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மைதீன்கான்.

நண்பகல் 12—00

திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போன ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருடைய திருக்கோயில்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் திருப்பணிக்கு என்று அறிவிக்கப்பட்டது. அது ஒரு தொகுதிக்கு எத்தனை கோயில் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா என்று தெரியாவிட்டாலுங்கூட, நான் தேர்ந்தெடுக்கப்பட்ட பாளையங்கோட்டை தொகுதிக்கு, இதுநாள் வரை ஒரு கோயிலுக்குக்கூட அந்தச் சமுதாயத்திற்குக் கொடுக்கப்படவில்லை என்பதை அமைச்சர் அறிவாரா என்பதும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அதை எழுதிக் கொடுங்கள்.

(அ) கோரிக்கை எண் 45 – தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை- இந்து சமய அறநிலையத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 45—தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன். திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை. திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

திரு. டி. கே. இராஜா: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

திரு. எஸ். நடராஜன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

திருமதி காசாம்பு பூமாலை: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

திரு. அ.இரா. மலையப்பசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

திரு. கி. பாரிமோகன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

திரு. கே. ஆறுமுகம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. (குறுக்கீடு) திரு. துரைமுருகனுடைய கோரிக்கையினை ஏற்றுத்தான் இப்போது ஒவ்வொரு பெயராக வாசித்துக்கொண்டிருக்கிறேன். திரு. எச்.எம். ராஜு.

திரு. எச்.எம். ராஜு: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

திரு. சு. சிவராஜ்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

திரு. கே.சி. கருணாகரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை. திரு. எ.வ. வேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி. கணேசன்.

திரு. வி. கணேசன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே.வி. முரளிதரன், இருக்கையில் இல்லை. திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி.பி.எம். மைதீன்கான்.

திரு. டி.பி.எம். மைதீன்கான்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை. திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எம். ராம்குமார்.

திரு. எம். ராம்குமார்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

திரு. மு. கார்த்தி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

திரு. ஆ. ராஜகோபால்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

திரு. சோ. இராசேந்திரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

திரு. மே.ப. காமராஜ்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

திரு. கோ. இரவிராஜ்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அன்பில் பெரியசாமி, இருக்கையில் இல்லை. திரு. அன்பில் பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி எ. எஸ். மஹேஸ்வரி.

***திருமதி எ. எஸ். மஹேஸ்வரி:** இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி எ.எஸ். மஹேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.. திரு. கா. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம்.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. பாரமலை.

திரு. க. பாரமலை: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி க. பாலபாரதி.

செல்வி க. பாலபாரதி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. (குறுக்கீடு) இடையிலே குறுக்கிடக் கூடாது. சிவ பூஜையிலே கரடி நுழையக் கூடாது.

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.28,82,43,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.51,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

மானியக் கோரிக்கை எண் 43. (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: நீங்களே சொல்லுங்கள். இல்லையென்று சொல்லட்டும். ஒரு கேள்வியை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துரைமுருகன், நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரிகிறது. நான் பதில் சொல்கிறேன். கேள்வி கேட்பது என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவது. அரசு அதை ஆராயும். அதைப் பற்றிச் சிந்திக்கும், அவ்வளவுதான்.

(ஆ) கோரிக்கை எண் 43 – சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 43—சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை. திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

திரு. டி.கே. இராஜா: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

திரு. எஸ். நடராஜன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

திருமதி காசாம்பு பூமாலை: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

திரு. அ.இரா. மலையப்பசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

திரு. கி. பாரிமோகன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். கிருஷ்ணன்.

திரு. ஆர். கிருஷ்ணன்: இல்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நான்தான் சொன்னேன் அல்லவா? அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து விட்டீர்கள். அரசு அதற்கு மேலே நடவடிக்கை எடுக்கும். எல்லாவற்றுக்கும், ஒவ்வொன்றுக்கும் மறுபடியும் மறுபடியும் பேசி மறுபடியும் அமைச்சர் பதில் சொல்லிக்கொண்டிருந்தால் எப்போது நிறைவேற்றுவது? (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: அரசு கவனிக்கும் என்றுதான் சொன்னாரே தவிர, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவேதான், அதேதான். அதுவேதான் பதில் எல்லாவற்றுக்கும்.

திரு. ஆர். கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

திரு. எச்.எம். ராஜு: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

திரு. சு. சிவராஜ்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி. கணேசன்.

திரு. வி. கணேசன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன். (குறுக்கீடு) நீங்கள் பேசக் கூடாது. (குறுக்கீடு) வேண்டாம். (குறுக்கீடு) வேண்டாம். (குறுக்கீடு) துரைமுருகன், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. ப. ரங்கநாதன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எ. எஸ். மஹேஸ்வரி.

திருமதி எ.எஸ். மஹேஸ்வரி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி எ.எஸ். மஹேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

திரு. கே. ஆறுமுகம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

திரு. மு. கார்த்தி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை. திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. அரசன்.

திரு. ப. அரசன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே.வி. முரளிதரன், இருக்கையில் இல்லை. திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

திரு. கோ. இரவிராஜ்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.பி.எம். மைதீன்கான்.

திரு. டி.பி.எம். மைதீன்கான்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

திரு. சோ. இராசேந்திரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

திரு. மே.ப. காமராஜ்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

***திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம்.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.558,17,87,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.3,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.

(ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

(இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பிற்பகல் 12-05

(இ) கோரிக்கை எண் 18 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2005–2006 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 18—மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடிந்துவிட்டது எல்லாம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,457,50,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.194,53,92,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 176, திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மகப்பேறு மருத்துவமனை ஏதும் இல்லாத ஊராட்சி ஒன்றியங்களில் மகப்பேறு மருத்துவமனைகள் துவக்கவேண்டியதன் அவசியம் உடனடியாக குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 562, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 847, திரு. டி.கே. இராஜா.

திரு. டி.கே. இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனை, வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அடுத்த பெரிய அரசு பொது மருத்துவமனை. இங்கு தினசரி 2,000 புறநோயாளிகளும், நூற்றுக்கணக்கில் உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். எனவே, திருப்பத்தூர் அரசு மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:-

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1217, டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருத்தாசலம் வட்டம், முகாசப்படூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:-

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1505, திருமதி காசாம்பு பூமாலை.

திருமதி காசாம்பு பூமாலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கராபுரம் தொகுதியில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் பொதுச் சுகாதார நிலையங்கள் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:-

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1732, திரு. அ.இரா. மலையப்பசாமி.

திரு. அ.இரா. மலையப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஊராட்சி ஒன்றியம், நன்செய் இடையாறு ஊராட்சி, நன்செய் இடையாறில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:-

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1853, திரு. கி. பாரிமோகன்.

திரு. கி. பாரிமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி ஒன்றியம், புழுதிக்கரை ஊராட்சி, துரிஞ்சிப்பட்டியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த, ஒன்றியத்திற்கு ஒரு மருத்துவமனை தரம் உயர்த்தல் திட்டத்தின்கீழ் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:-

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2101, திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குத் தனியாக மருத்துவமனை ஏற்படுத்தி அவர்களுக்கு சிகிச்சை அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:-

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2450, திரு. ஆர். கிருஷ்ணன்.

திரு. ஆர். கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அந்தியூர் தொகுதி, சிந்தக்கவுண்டன்பாளையத்தைச் சுற்றி பல கிராமங்கள் உள்ளன. சிந்தக்கவுண்டன்பாளையத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:-

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 384, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், குந்தா தாலுகா, கீழ்குந்தா பேரூராட்சிக்கு உட்பட்ட மஞ்சூர் அரசு மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவப் பிரிவு, குழந்தை நலப் பிரிவு உடனடியாக ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:-

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1149, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1609, திரு. சு. சிவராஜ்.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கோவிலூர் தாலுகா மருத்துவமனையில் கூடுதல் கட்டட வசதி மற்றும் கூடுதல் படுக்கை வசதிகள் செய்து தருவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:-

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 753, திரு. கே. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1453, திரு. கே.சி. கருணாகரன்.

திரு. கே.சி. கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிரனத்தம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க, போதிய நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:-

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2062, திரு. வி. கணேசன்.

திரு. வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:-

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2416, திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை பொது மருத்துவமனைக்கான புதிய கட்டடப் பணிகள் விரைவில் முடிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:–

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 49, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 446, திரு. டி. மணி.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், கொல்லங்கோடு வருவாய் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:–

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 703, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் அரசு மருத்துவக் கல்லூரிக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மெஷின் வழங்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:–

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1915, திரு. கே.வி. முரளிதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 247, திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2177, திரு. கே. ஆறுமுகம்.

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கற்பட்டு தொகுதியில் உள்ள காட்டாங்கொளத்தூர், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியங்களில் மகப்பேறு மருத்துவமனைகள் தனியாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:–

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 927, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

***திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், அரூரில் உள்ள அரசு மருத்துவமனையை 100 படுக்கைகள் வசதியுடன் தரம் உயர்த்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:–

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 978, திரு. சோ. இராசேந்திரன்.

திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தூத்துக்குடி மாவட்டம், கீழ் ஈரால் மற்றும் வில்லிசேரி ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:–

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1020, திரு. எம். ராம்குமார்.

திரு. எம். ராம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் தொகுதிக்குட்பட்ட கபிஸ்தலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:-

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1404, திரு. எஸ். நடராஜன்.

திரு. எஸ். நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்ட மருத்துவமனையை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாகத் தரம் உயர்த்தியதால் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித்தர வேண்டியதன் அவசியம் குறித்தும், நாட்ராம்பள்ளியில் தனி அரசு மருத்துவமனை துவக்க வேண்டியது குறித்தும்" விவாதிக்க, நான் கீழககண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:-

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1960, திரு. துரை. கி. சரவணன்.

திரு. துரை. கி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதி, காட்டுமன்னார்குடி தாலுகா, திருமுட்டம் சிறப்பு ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:-

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1990, திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2009, திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேட்டவலம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 35 படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:-

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 623, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாம்பரம், சானடோரியம் தொழுநோய் மருத்துவமனையை அகற்றிவிட்டு பேருந்து நிலையம் அமைக்க இருப்பதைத் தடுக்க வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:-

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2323, திரு. மு. கார்த்தி.

திரு. மு. கார்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தைத் தற்போது இயங்கி வரும் இடத்திற்குப் பதிலாக வேறு இடத்தில் மாற்றிக் கட்டும்பட்சத்தில்

தற்போது இயங்கி வருகின்ற மாவட்ட ஆட்சியர் வளாகப் பகுதி முழுவதையும் அரசு தலைமை மருத்துவமனை விரிவாக்கத் திட்டத்திற்குப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2499, திரு. கோ. இரவிராஜ்.

திரு. கோ. இரவிராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, பேரம்பாக்கத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2070, திரு. டி.பி.எம். மைதீன்கான்.

திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெல்லை மாவட்டம், நெல்லை மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலத்தில் உள்ள கண்டியப்பேரி மருத்துவமனையை பாளையங்கோட்டையில் இயங்கி வரும் அரசு பொது மருத்துவமனையோடு இணைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 461, திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை கிழக்கு தொகுதியில் ஆறு படுக்கைகள் வசதி கொண்ட சித்த மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1628, திரு. மே.ப. காமராஜ்.

திரு. மே.ப. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம் மேச்சேரி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 653, திருமதி எ. எஸ். மஹேஸ்வரி.

திருமதி எ.எஸ். மஹேஸ்வரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை அரசு மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு, சிறுநீரக அறுவை சிகிச்சைப் பிரிவுகளை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1429, திரு. க. பாரமலை.

***திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் நெடுஞ்சாலையில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதால் உடன் மருத்துவ வசதி வழங்கி உயிர் காக்கும் முயற்சியாக திருப்புவனம் சமூக மருத்துவ மையத்தில் Trauma Care மையம் அமைத்துக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:–

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 599, திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி மருத்துவமனை ஒரு மாவட்ட மருத்துவமனை என்பதால் C.T. Scan வசதி செய்து தருவதன் அவசியம் குறித்தும், உசிலம்பட்டி மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:–

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 903, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி தாலுகா மருத்துவமனையில் எக்ஸ்–ரே கதிர் இயந்திரம் பழுதடைந்த நிலையில் உள்ளது. புதிய எக்ஸ்–ரே கதிர் இயந்திரம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:–

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1087, திரு. கா. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு மருத்துவமனைகளில் உள்ள அவசர சிகிச்சைப் பிரிவுகள் விரைந்து செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:–

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1039, திரு. எஸ். தாமோதரன்.

திரு. எஸ். தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி யூனியன்–எம்.புதுப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக விரிவாக்கம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:–

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1968, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அருப்புக்கோட்டை நகரில் உள்ள அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவிற்கு ஒரு கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:–

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1983, திரு. எஸ்.ஏ.எம். உசேன்.

திரு. எஸ்.ஏ.எம். உசேன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவல்லிக்கேணி தொகுதியில் உள்ள இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையை விரிவுபடுத்தி புதிய கட்டடங்களைக் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2020, திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1670, திரு. டி.என். சிவசுப்பிரமணியன்.

***திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் மாவட்டத்தில் உள்ள தலைமை அரசு மருத்துவமனையில் சிறப்புப் பிரிவுகள் இல்லை. சிறப்புப் பிரிவுகள் அமைக்க, தற்போதுள்ள தலைமை அரசு மருத்துவமனையில் இடமும் இல்லை. எனவே, சிறப்புப் பிரிவுகளுடன் அரசு மருத்துவமனையை வேறு ஒரு இடத்திற்கு மாற்றியமைப்பது பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 453, செல்வி க. பாலபாரதி.

செல்வி க. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மற்றும் தலைக்காயப் பிரிவு அரங்குகள் கட்டப்படுதல் குறித்தும், செவிலியர்களுக்கான ஓய்வறை ஒன்றினைக் கட்டவேண்டியது குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1123, திரு. அ. அசோகன்.

திரு. அ. அசோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டத்தில் உள்ள அரசு தலைமை மருத்துவமனை மற்றும் அனைத்து மருத்துவமனைகளுக்கும் போதிய அளவு மருத்துவர்கள், செவிலியர்கள் உடனடியாக நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1469, திரு. ஆ. ராஜகோபால்.

திரு. ஆ. ராஜகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி அரசு மருத்துவமனையில் நிரப்பப்படாமல் காலியாகவுள்ள மருத்துவர்கள் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1978, திரு. இ. புகழேந்தி.

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைக்குப் போதிய மருத்துவர்களை நியமனம் செய்வது குறித்தும், மருந்துகளை வழங்குவது குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 76, திரு. ப. அரசன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனைக்கு, கண் மருத்துவர், பல் மருத்துவர் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,457,50,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.194,53,92,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவரவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். டாக்டர் வள்ளல் பெருமான்.

@ 501 முதல் 579 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

***டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை சார்பாக நடைபெறுகின்ற இந்த மானியக் கோரிக்கையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கருத்துகளை இங்கே எடுத்து வைப்பதற்கு வாய்ப்புத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மருத்துவமனையில் நோயாளிகள் சேர்ந்து வைத்தியம் பார்க்கும்போது செவிலியர்கள், அதாவது நர்சுகள், மிக முக்கியப் பணியாற்றுகின்றார்கள். அவர்களைப் பற்றி ஒரு சில கருத்துகளை நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகின்றேன். இங்கே World Health Organization அடிப்படையிலே 1:5 ratio சார்பில் செவிலியர்கள் இருக்க வேண்டும். ஆனால், இன்றைக்குள்ள தற்கால நிலைமை, 1:60 என்ற ratio-விலே செவிலியர்கள் பணி செய்கின்றார்கள். இன்றைக்கு வளர்ந்து வரும் ஜனத்தொகை அடிப்படையில், செவிலியர்களுடைய எண்ணிக்கையை உயர்த்தவேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கின்றேன். குறிப்பாக, நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள்தான் இந்த nurse course படிக்கின்றார்கள். வசதி படைத்தவர்கள் யாரும் படிப்பது கிடையாது. ஆகவே, ஒருவிதத்திலே அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்கும், அதே நேரத்திலே மருத்துவமனைகளிலே சேர்ந்து treatment எடுத்துக்கொள்கின்ற நோயாளிகளுக்குப் பணி செய்வதற்கும் ஒரு வாய்ப்பாக இருக்கும். இங்கே nurse course–லே Diploma in Nursing, B.Sc., Degree Course in Nursing என இரண்டு வகையான படிப்புகள் இருக்கின்றன. Diploma படிப்பதற்கு 3 ஆண்டுகள் ஆகின்றன. B.Sc., Nursing Course படிப்பதற்கு 4 ஆண்டுகள் ஆகின்றன. இந்த இரண்டிற்கும் கல்வித் தகுதியானது +2–தான். அதாவது, entering point +2–தான். அதேபோல் சம்பளத்தைப் பொறுத்த அளவிலே அதிக வித்தியாசம் இல்லை. ஆகவே, இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் வெளிநாட்டிலே nurse–களுக்கு நல்ல வேலைவாய்ப்புகள் இருக்கின்றன. குறிப்பாக, தற்சமயம் அமெரிக்காவிலே ஒன்றரை இலட்சம் nurse–களுக்கு வேலைவாய்ப்புகள் இருக்கின்றன. அதைப்போல, மலேசியா நாட்டிலேயும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான வேலைவாய்ப்பு இருக்கின்றது. வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்கு nurse–கள் செல்லவேண்டுமென்றால் degree படித்திருக்க வேண்டும். அதனால் நம்முடைய தமிழக அரசு degree படிப்பிற்கு மாணவர்களைச் சேர்க்கும்போது குறைவான எண்ணிக்கையிலும், diploma படிப்பதற்கு அதிக அளவிலும் எடுக்கின்றார்கள். ஆகவே, இந்த Diploma course–ஐ எடுத்துவிட்டு அனைவரும் degree course படிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல, nursing படித்தவர்கள் வேலை கிடைத்திட 5 முதல் 8 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். 8 ஆண்டுகளுக்குப் பிறகு consolidated pay–லே ரூ.2,500 என்ற அடிப்படையில் சம்பளத்தில் சேர்க்கப்படுகின்றார்கள். அவர்கள் மீண்டும் 3 ஆண்டுகள் வேலை செய்தால்தான் permanent–ஆக அங்கீகாரம் அளிக்கின்றது இந்த அரசு. ஆகவே, ஒரு nurse course முடித்தவர்கள் மொத்தம் 8 ஆண்டு service–ஐ இழக்கின்றார்கள். ஆகவே, நான் கேட்டுக் கொள்வதெல்லாம், nursing படிக்கும் மாணவர்களுடைய எண்ணிக்கையை உயர்த்தவேண்டும். அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும் nurse கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்று இந்த அரிய சந்தர்ப்பத்திலே நான் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசி முடித்துவிடுங்கள்.

பிற்பகல் 12–15

டாக்டர் பி. வள்ளல் பெருமான்: இன்றைக்கு இந்திய நாட்டில் Health Tourism ரொம்பவும் வளர்ச்சி அடைந்திருக்கின்றது என மாண்புமிகு மத்திய சுற்றுலாத் துறையின் அமைச்சராக இருக்கின்ற ரேணுகா சௌத்ரிகூட சொல்லியிருக்கின்றார்கள். இந்தியாவில், குறிப்பாக மும்பையில் Diagnosis, Consultation and Treatment–க்காக West Asia–விலேயிருந்து அதிக நோயாளிகள் வருகின்றார்கள். அதேபோல், சென்னைக்கும் South Asia–வில் இருந்து அதிக நோயாளிகள் வந்து வைத்தியம் பார்க்கின்றார்கள். அந்த அளவுக்கு இன்றைக்கு இந்தியா மருத்துவத்தில் நவீன வசதிகளைப் பெற்று வருகிறது. ஒரு காலத்திலே பேரறிஞர் அண்ணா அவர்களும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் வெளிநாட்டிற்குச் சென்று வைத்தியம் பார்த்தார்கள். ஆனால், இன்றைக்கு வெளிநாட்டவர்கள் இந்தியாவிற்கு வந்து வைத்தியம் பார்க்கின்ற அளவிற்கு நாம் உயர்ந்து இருக்கின்றோம் என்பதை நினைக்கும்போது அது பெருமையாக இருக்கின்றது. அதைப்போல, இருதயம், Kidney, Orthopaedics, diabetes, paediatric problems and cosmetic surgery போன்ற் அனைத்துத் துறைகளிலும் இன்று நாம் நவீன வசதிகளைப் பெற்று இருக்கின்றோம்.

இன்றைக்கு மருத்துவமனைகளில், குறிப்பாக தனியார் மருத்துவமனைகளில் ஸ்டார் ஓட்டல் அளவிலே மருத்துவமனைகளை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். தனியார் துறையிலே குறிப்பாக வசதி படைத்தவர்கள்தான் அங்கே வைத்தியம் பார்க்க முடிகிறது. இதற்குக் காரணம், அரசு மருத்துவமனைகளில் இன்னும் அடிப்படை வசதிகள்

செய்து கொடுக்கப்படாமல் இருக்கின்றது. அது Primary Health Centre ஆக இருந்தாலும் சரி, அல்லது மாவட்ட அளவிலும் சரி, மற்றும் பெரிய மருத்துவமனைகளிலும் அடிப்படை வசதிகளில் குறைபாடுகள் நிறைய இருக்கின்றன.

கடந்த ஆட்சியில் டாக்டர் கலைஞர் அவர்கள் அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும் C.T. Scan என்ற machine கொடுக்கவேண்டுமென்று உத்தரவு வழங்கினார்கள். ஆனால் C.T. Scan ஒரு சில மாவட்டங்களில் இன்றைக்கு அதற்குரிய மருத்துவர்கள் இல்லாத காரணத்தினால் சரியாகச் செயல்படவில்லை. அதில் இந்த அரசு தனிக் கவனம் செலுத்தி, அந்தக் குறையைப் போக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், டாக்டர் கலைஞர் அவர்கள் M.R.I. Scan சென்னையிலும், மதுரை மருத்துவமனையிலும் கொண்டு வரவேண்டுமென்று அதற்குக் கருத்துரு ஏற்படுத்தி நிதியை ஒதுக்கீடு செய்தார்கள். Tender-ம் வைத்தார்கள். பிறகு ஆட்சி மாற்றம் வந்தது. தற்சமயம் அந்த இரண்டு மருத்துவமனைகளில் மட்டும்தான் இருக்கின்றன. இன்றைக்கு இந்த அரசு வந்தபிறகு இதுபோன்ற நவீன தொழில்நுட்ப வசதிகள் மருத்துவமனைகளிலே வைக்கப்பட்டு இருக்கின்றனவா, ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றனவா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

Doctors–மருத்துவர்களை எடுத்துக்கொண்டால், இன்றைக்கு அவர்களுடைய working conditions தரம் உயர்த்தப்பட வேண்டும். ஆரம்ப சுகாதார நிலையம், நகரப் பகுதிகளில் மருத்துவக் கல்லூரிகளில் பணி செய்கின்ற மருத்துவர்களுக்கு முறையான சம்பளம் கொடுப்பதில்லை. மருத்துவக் கல்லூரியில் பணி செய்கின்ற மருத்துவர்களுக்கு அதாவது, Training and Teaching profession–லே இருக்கின்ற மருத்துவர்களுக்கு U.G.C.–University Grants Commission அடிப்படையிலே சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். அவர்களுக்குத் தரம் பிரித்து சம்பளத்தை உயர்த்திக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்குப் பதவி உயர்விலும் முன்னுரிமை கொடுத்தால், நிச்சயமாக அவர்கள் முழு நேரம் பணி செய்வார்கள்.

இன்றைக்கு, கிராமங்களுக்கு மருத்துவர்கள் செல்வதில் பல்வேறு கஷ்டங்கள் இருக்கின்றன. இது சம்பந்தமாகப் பல்வேறு பிரச்சினைகளை நாம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். அவர்களுக்கு உரிய அந்தத் தரத்தை உயர்த்திக் கொடுத்தால் நல்லது. அதாவது சம்பளத்தையும் உயர்த்திக் கொடுக்கவேண்டும். Promotion-ம் கொடுக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் பணி செய்வதற்கு வசதியாக இருக்கும்.

மருத்துவப் பட்ட மேற்படிப்பு படிக்கின்றவர்களுக்குரிய, குறிப்பாக 63 course-களுக்கு மேல் Medical Council of India-வினால் அங்கீகாரம் செய்யப்பெறாமல் இருக்கிறது. காரணம், தஞ்சை, திருநெல்வேலி, செங்கல்பட்டு, கோவை போன்ற மருத்துவக் கல்லூரிகளிலே போதிய Teaching staff மற்றும் அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தினால், இந்தப் பட்ட மேற்படிப்பு, அதாவது, M.D., M.S., Anatomy, Micro-Biology மற்றும் P.G. Diplomo Course போன்றவை எல்லாம் இன்றைக்கு அங்கீகாரம் செய்யப்படாமல் இருக்கின்றன. அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டும் என்று இந்த அரிய சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Medical College-ல் படிக்கின்ற மாணவர்களுக்கு Library-ல் Internet, E.Mail, Tele-medicine போன்ற வசதிகளைச் செய்து கொடுத்தால் அவர்கள் thesis செய்வதற்கும், அறிக்கைகள் தயாரிப்பதற்கும், மேலும் பல்வேறு நவீன வசதிகளை-இன்றைக்கு மருத்துவ உலகம் வளர்ச்சி பெற்று இருக்கிறது. அவற்றையெல்லாம்-உடனுக்குடன் தெரிந்து, அவர்கள் தங்களுடைய கல்வி ஆற்றலை மேம்படுத்த வசதியாக இருக்கும். அதேபோல், இன்றைக்கு Medical College-ல் admission-ஐ எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டில் அரசு மருத்துவக் கல்லூரியிலே 1,445 மாணவர்கள்தான் ஓர் ஆண்டுக்கு சேர்க்கப்படுகின்றார்கள் என்ற தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பக்கத்திலே இருக்கிற கேரளாவில் 3,000 மாணவர்களும், கர்நாடகாவில் 3,500 மாணவர்களும் இன்றைக்கு ஒவ்வொரு ஆண்டும் சேர்க்கப்படுகின்றார்கள். எனவே, வளர்ந்து வரும் ஜனத்தொகை அடிப்படையிலே, நவீன வசதிகளுக்கு ஏற்ப மாணவர்களுடைய சேர்க்கையின் எண்ணிக்கையை இங்கே அதிகப்படுத்த வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12–20

இன்றைக்கு உலக அளவில் மருத்துவத் துறையில் பல்வேறு முன்னேற்றங்களும், நவீன தொழில்நுட்ப அபிவிருத்திகளும் ஏற்பட்டு வருகின்றன. இம்முன்னேற்றங்களை டாக்டர்களும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்வு நடத்தப்படும் என்று சுகாதாரத் துறையின் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. அன்புமணி அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். ஒவ்வோராண்டும், 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்வு நடத்தப்படும் என்று சொல்கின்றார்கள். நானும் ஒரு மருத்துவர் என்ற முறையிலே

இன்றைக்கு இதை நாங்கள் ஏற்றுக்கொள்வதற்கு இயலாதவர்களாக இருக்கின்றோம். காரணம், மருத்துவப் பட்டம் படித்தவர்களுக்கு வேலை கிடைப்பது என்பது அரிதாக இருக்கின்றது. மேலும் அதற்காகக் காத்திருக்க வேண்டி உள்ளது. அப்படி வேலை கிடைத்தாலும், அல்லது தனியாக, சொந்தமாக மருத்துவமனை வைத்து நடத்தினாலும், அவர்களுக்குப் போதிய வருவாயும் சரியாகக் கிடைப்பது கிடையாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசு வேலைக்கு வந்தவர்களோ, அல்லது சுயமாகத் தொழில் நடத்துகின்றவர்களோ, அவர்கள் மீண்டும் ஒரு தேர்வு எழுதினால், அது நன்றாக இருக்காது. எனவே, அரசாங்கத்தின்மூலமாக Seminars, Conferences போன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து, அவர்களுக்குப் பயிற்சி அளிக்கலாம். அவற்றில் அவர்கள் கலந்துகொள்வதற்கு T.A., D.A. போன்ற பல்வேறு உதவிகளை அவர்களுக்குச் செய்ய வேண்டும். Foreign Countries—வெளிநாடுகளிலே நடக்கின்ற Conferences, அல்லது உள்நாட்டிலே நடக்கின்ற Conferences--களுக்குச் செல்வதற்கு அவர்களுக்கு N.O.C. கொடுத்தாலே போதுமானதாகும். அதற்கும் மேலாக, Medical Bulletin— மருத்துவச் செய்தி மலர்கள்—மூலமாகவும் அவர்களுக்குத் தெரிவித்தால் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், தமிழ்நாட்டிலே இருக்கின்ற அனைத்து மருத்துவர்களின் சார்பிலேயும் இந்தத் திட்டத்தை நாங்கள் ஆதரிக்கவில்லை என்பதை இந்த மாமன்றத்தின்மூலமாக நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையங்களிலே பணி செய்கின்ற மருத்துவர்கள் குறைந்தபட்சம் 3 மணி நேரம்தான் பணி செய்கின்றார்கள். அதற்குப் பிறகு கிராமங்களில் இருக்கின்ற நோயாளிகளுக்கு alternative treatment கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. நகரங்களிலே அப்படியல்ல. குறிப்பிட்ட நேரத்திற்குப்பிறகு அரசு மருத்துவமனைகளில் டாக்டர்கள் இல்லை என்றால், private மருத்துவமனைகளுக்குச் செல்கின்றார்கள். ஆகவே, பணி செய்கின்ற நேரத்தை அரசு நிர்ணயம் செய்து, அவர்கள் கட்டாயம் அந்த Primary Health Centre-களிலே பணி செய்ய வேண்டுமென்று அரசு உத்தரவு வழங்க நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல ஒவ்வொரு Primary Health Centre-க்கும் ambulance இருக்க வேண்டும். பிரசவ கேஸ்கள், அவசரப் பிரிவு கேஸ்கள் எல்லாம் நகரத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், வாகன வசதிகள் இருக்க வேண்டும். ஆகவே, அத்தகைய வாகன வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஒவ்வொரு Primary Health Centre–இலேயும் வெறிநாய்க் கடிக்கான Vaccine–கள் போட வேண்டுமென்றால், மாதக் கணக்கிலே காத்து இருக்க வேண்டியதிருக்கின்றது. அதுவும், மாவட்டத் தலைநகரங்களில் இருக்கின்ற மருத்துவமனைகளிலேதான் கிடைக்கின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது 200–லிருந்து 500 நோயாளிகள் வரை காத்திருக்க வேண்டியது இருக்கின்றது. ஆகவே, இந்த வெறிநாய்க் கடி மருந்தானது, ஒவ்வொரு Primary Health Centre–இலேயும், எப்பொழுதெல்லாம் பாதிக்கப்பட்டவர்கள் சென்று treatment எடுக்க வேண்டுமென்று நினைக்கின்றார்களோ, அப்போதெல்லாம் கிடைப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'Prevention is better than cure' என்று மருத்துவத் துறையிலே சொல்வார்கள். ஆகவே, வியாதி வருமுன் நாம் அதைக் காப்பதற்கு உண்டான அனைத்து வசதிகளையும் ஒவ்வொரு மருத்துவமனையிலும் செய்ய வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மருத்துவமனைகளிலே பாதுகாக்கப்பட்ட தண்ணீர், சுத்தமான கக்கூஸ், occupational hazards–தொழில் சம்பந்தமான வியாதிகள் வராமல் இருக்க, அதாவது Nurses, Ward Boys, Sanitary Workers போன்றவர்களுக்கு இலவசமாக, free vaccine–கள் கொடுக்க வேண்டும். மேலும் அவர்கள் அணிந்துகொள்வதற்கு நல்ல தரமான கையுறைகள் கொடுக்க வேண்டும்.

AIDS நோயாளிகள் மற்றும் இதர தொற்று நோயாளிகளையெல்லாம் கவனிக்கக்கூடிய தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்ற நிலை இருக்கின்றது. அவற்றைப் போக்குகின்ற வகையிலே அவர்களுக்கு preventive aspect–லே நல்ல வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இன்றைக்கு இருக்கின்ற (மணியடிக்கப்பெற்றது) சூழ்நிலையிலே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் இரண்டு மணித்துளிகளிலே உரையை முடியுங்கள்.

டாக்டர் பி. வள்ளல் பெருமான்: 5 நிமிடங்கள் கொடுங்கள். ஏழைகள், வசதி இல்லாதவர்கள்தான் அரசு மருத்துவமனைகளிலே வைத்தியம் பார்த்துக்கொள்கின்றார்கள். அவர்கள் வியாதி முற்றி, முடியாமல் இறந்துவிட்டால், இறந்தவரின் உடலை அவர்களுடைய உறவினர்கள் நோயாளியின் ஊருக்கு எடுத்துச் செல்வதற்குக்கூட வசதி வாய்ப்பில்லாமல்

பல நோயாளிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அமரர் ஊர்தியை அரசே இலவசமாக ஏற்பாடு செய்து, இறந்தவரின் உடலை எடுத்துச் செல்வதற்கு உதவ வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக, தமிழகத்தில், The Transplantation of Human Organs Act, 1994 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. மனித உறுப்புகளை வியாபாரம் செய்வதைத் தடுக்கவும், மனித உறுப்புகளை மருத்துவ ரீதியாக உபயோகிப்பதற்காகவும் இச்சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால், இது எதற்காகக் கொண்டு வரப்பட்டது என்றால், முக்கியமாக ஏழ்மையிலே இருக்கின்ற மக்கள், தங்களுடைய Kidney-யை வியாபாரத்திற்குக் கொடுக்கின்ற ஓர் அவல நிலையைப் போக்குவதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால், இந்தச் சட்டம் முழுமையாக இன்றைக்கு நிறைவேற்றப்படுகிறதா என்பதே கேள்விக்குறியாக இருக்கிறது. காரணம், இன்றைக்கும் அந்த Kidney வியாபாரம் தொடர்ந்து மறைமுகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அரசு அதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை இந்த அரிய சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12–25

இன்றைக்கு ஆண்டு ஒன்றுக்கு சென்னை நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலே 400–லிருந்து 500 வரை fatal accidents நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த fatal accidents மூலமாகப் பாதிக்கப்படுகின்ற மக்களுடைய–அதாவது மூளைச் சாவு, Coma, Cadaver போன்றவர்களுடைய–Kidney போன்ற human organs–ஐ எடுத்து transplantation–க்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால் அரசு அதை முறையாகப் பயன்படுத்திக்கொள்கிறதா என்பதே கேள்விக்குறியாக இருக்கிறது. தற்சமயம் டெல்லி, பெங்களூர் போன்ற ஊர்களிலிருந்து...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு மணித்துளிக்குள் முடித்துக்கொள்ளுங்கள்.

டாக்டர் பி. வள்ளல் பெருமான்: 2 மணித்துளிகளில் முடித்துக்கொள்கிறேன். தற்சமயம் டெல்லி, பெங்களூரிலிருந்து சென்னைக்கு Kidney transplantation–க்கு வருகின்றது. ஆனால், இன்றைக்கு இங்கிருக்கின்ற அரசு மருத்துவமனையிலே ஆண்டு ஒன்றுக்கு 15, 20 Kidney Operation–கள்தான் நடைபெறுகின்றன. அதற்கு என்ன காரணம்? அரசு மருத்துவமனையிலே ஏழை, எளிய மக்கள்தான் மருத்துவ வசதி

பெறுவதற்காக வருகின்றார்கள். ஆனால் private ஆஸ்பத்திரிகளான அப்பல்லோ, Ramachandra Medical College போன்றவற்றில் இன்றைக்கு 150–லிருந்து 500, 600 kidney transplantations நடக்கின்றன. இது எப்படி நடக்கின்றது? அரசு மருத்துவமனைக்கு ஏழைகள்தான் வருகின்றார்கள். ஏழைகள் Private Nursing Home–க்குச் சென்று வைத்தியம் பார்க்க முடியாது. அங்கு ஆப்பரேஷன் செய்வதென்றால் குறைந்தபட்சம் 2 இலட்சம் ரூபாய் செலவாகின்றது. அதைக் கருத்தில் கொண்டு, accident மூலமாக brain death என்கிற மரணம் அடைகின்ற, அதாவது, brain-stem death மூலமாகப் பாதிக்கப்படுகின்ற, coma stage-ல் இருக்கின்ற அந்த நோயாளிகளிடமிருந்து kidney-யை ஆப்பரேஷன் செய்து, அரசு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அரசு மருத்துவமனையிலே ஒரு Nephrology Unitதான் இருக்கிறது. ஆகவே இன்றைக்கு ஸ்டான்லி மருத்துவமனையை எடுத்துக்கொண்டாலும், அல்லது கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை எடுத்துக்கொண்டாலும் அல்லது இராயப்பேட்டையை எடுத்துக்கொண்டாலும், kidney operation நடைபெறுவது கிடையாது. சென்னை பொது மருத்துவமனையிலே ஒரேயொரு யூனிட்தான் இருக்கிறது. ஆனால் 3 Urology Units இருக்கின்றன. ஆகவே, அந்த ஒரு Nephrology யூனிட்டை 4 யூனிட்டாக மாற்றினால் நிச்சயம் குறைந்தபட்சம் தினமும் ஒரு ஆப்பரேஷன்–kidney transplantation–ஆவது நடத்தினால் மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து என்னுடைய....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வள்ளல் பெருமான், முடித்துக்கொள்ளுங்கள்.

டாக்டர் பி. வள்ளல் பெருமான்: ஒரேயொரு நிமிடம். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது Post-Operative Care Kidney Operation மருந்துகள் இலவசமாகக் கொடுத்தார்கள். அந்த மருந்து தொடர்ந்து கொடுக்கப்பட வேண்டும். அதில் நடைமுறைச் சிக்கல்கள் பல இருக்கின்றன. ஒவ்வொரு முறையும் மருந்து வாங்கச் செல்லும்போது, C.M. office–க்குப் போய் G.O. copy வாங்கி வந்தால்தான் கொடுப்பேன் என்று சொல்கின்றார்கள். அந்த நடைமுறையையும் எளிமைப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மொத்தத்திலே health system-ஐ revamping, rewinding and overhauling செய்தால்தான் தமிழ்நாட்டில் இருக்கின்ற மருத்துவமனைகள் நல்ல முறையிலே செயல்படும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடித்துவிடுங்கள். (குறுக்கீடுகள்) திரு. அருள். (குறுக்கீடுகள்) தொகுதிப் பிரச்சினை பற்றித் தனியாகப் பேசலாம். (குறுக்கீடுகள்) வாக்கியத்தை முடியுங்கள்.

டாக்டர் பி. வள்ளல் பெருமான்: என்னுடைய காட்டுமன்னார்குடி சட்டமன்றத் தொகுதி, கடலூர் மாவட்டத்தில் மிகவும் ஒதுக்குப்புறமாக இருக்கிறது. காட்டுமன்னார்குடி, தாலுகாவின் தலைநகரமாகும். அங்கே ஒரு மருத்துவமனை இருக்கிறது. அந்த மருத்துவமனையைத் தாலுகா headquarters ஆஸ்பத்திரியாகத் தரம் உயர்த்த வேண்டும். இரவு நேரங்களில் அங்கே ஒரு மருத்துவர் இருந்தால் நன்றாக இருக்கும். இரவிலே மருத்துவர் தங்க வசதியும் கிடையாது. அங்கே 40 Beds Hospital இருந்தாலும், போதிய மருத்துவ வசதிகள் இல்லை. அவசர கேஸ்களுக்கு மருத்துவம் பார்க்க வர வேண்டும் என்றால், 25 கிலோ மீட்டரில் உள்ள சிதம்பரத்திற்கு வர வேண்டியிருக்கிறது. ஆகவே அதை தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். (குறுக்கீடுகள்) திரு. அருள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடுகள்) 18, 19 மணித்துளிகள் ஆகிவிட்டன. (குறுக்கீடுகள்) சரி, வாக்கியத்தை முடியுங்கள்.

டாக்டர் பி. வள்ளல் பெருமான்: 2 நிமிடங்களிலே முடித்து விடுகிறேன். 2 நிமிடங்கள்தான். என்னுடைய தொகுதியில் குமராட்சியிலே ஒரு Primary Health Centre இருக்கிறது. 2004–லிருந்து அங்கு ஒரு மருத்துவர்கூட பணி செய்யவில்லை. வல்லம்படுகையிலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து மருத்துவர் வாரத்திற்கு 2 முறை வருகிறார்கள். அங்கு சொந்தக் கட்டடமும் கட்டப்படவில்லை. ஆகவே, குமாராட்சியில் இருக்கிற Primary Health Centre-க்கு ஒரு permanent கட்டடம், அதைப்போல மருத்துவரும் நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினைத் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி, விடைபெறுகின்றேன். வணக்கம்.

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அருள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளையும், பல்வேறு குறைகளையும் இங்கே கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது, முதலாவதாக மருத்துவக் கல்லூரியைப் பற்றி ஒரு குறையைக் கூறினார்கள். இங்கே இருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரியினுடைய மாணவர்களினுடைய எண்ணிக்கை 1,445 ஆக இருக்கிறது. பக்கத்து மாநிலமாக இருக்கக்கூடிய கேரளாவிலே அதிகமாக இருக்கிறது என்று இங்கே ஒரு குற்றச்சாட்டைக் கூறினார்கள். இந்தியாவைப் பொறுத்தளவிலே எடுத்துக் கொண்டால், அதிகமாக இருக்கக்கூடிய மாநிலம் இன்றையதினம் தமிழகம்தான். அரசு மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தளவிலே முதன்மை மாநிலமாக வந்துகொண்டிருக்கிறோம். இன்றையதினம் 12 மருத்துவக் கல்லூரிகளும், வருகின்ற ஆண்டு, தேனி, வேலூர் மருத்துவக் கல்லூரிகளும், பெருந்துறை கல்லூரியையும் சேர்த்தால், 15 மருத்துவக் கல்லூரிகள் தமிழ்நாட்டிலே இருக்கின்றன. ஒட்டுமொத்தமாக எடுத்தால் இன்றையதினம் மஹாராஷ்டிரத்தில் மட்டும்தான் 14 அரசுக் கல்லூரிகள் இருக்கின்றன. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடனே, நெல்லையிலே இருக்கக்கூடிய அந்த மருத்துவக் கல்லூரியிலே, 100–ஆக இருந்த மருத்துவ மாணவருடைய சேர்க்கை 150 ஆகவும், அதேபோல் கோவையில் இருந்த மருத்துவக் கல்லூரியினுடைய மாணவருடைய சேர்க்கை, அங்கே 110 ஆக இருந்ததை 150 ஆகவும் எண்ணிக்கையை உயர்த்தி, இன்றையதினம் 1,445 மாணவர்களைச் சேர்ப்பதற்கு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், இங்கே மாண்புமிகு உறுப்பினர் செவிலியர்களைப் பற்றிக் கூறினார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றவுடனே, மதுரையிலே செவிலியர்—அதாவது, நீங்கள் கூறியதுபோல்–B.Sc., Nursing College ஒன்று புதியதாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றவுடனே தொடங்கி, இன்றையதினம் இரண்டாவது ஆண்டு மாணவ, மாணவியர்கள் அங்கே சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல், அவர் இங்கே கூறும்பொழுது Kidney Transplantation பற்றிக் கூறினார்கள் (குறுக்கீடு) பதிலுரை இல்லை. எல்லாம் முடிந்தபிறகுதான். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வள்ளல் பெருமான் சொன்னதற்குப் பதில் சொல்கிறார்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் பேசும்பொழுது–முடித்து விடுகிறேன். கொஞ்ச நேரத்தில் முடித்துவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் பேசும்பொழுது, Kidney Transplantation பற்றிப் பேசினார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடனே இதுபோன்ற சிறுநீரக அறுவை சிகிச்சைக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற எண்ணத்திலே, இதுவரையிலும், சென்னையிலே மட்டும் அந்த கமிட்டி இயங்கிக்கொண்டிருந்தது. தற்சமயம் கோவையிலும், மதுரையிலும் இயங்கிக் கொண்டிருக்கிறது. வெளி மாநிலங்களிலிருந்து இங்கே வருபவர்கள் kidney-யைக் கொடுப்பதாக இருந்தாலும்கூட அவர் அந்த மாநிலத்தினுடைய, அங்கு 'இருக்கக்கூடிய அரசிலே இருக்கக்கூடிய சுகாதாரத் துறைமூலமாக ஒப்புதலை வாங்கி வரவேண்டும் என்ற ஒரு கட்டாயத்தையும், விதியையும் இப்பொழுது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு விதித்திருக்கிறது என்பதை நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல், மருத்துவர்களுடைய பணியைப் பற்றிக் கூறினார்கள். உங்களுக்கே நன்றாகத் தெரியும். ஆரம்ப சுகாதாரத்தினுடைய மருத்துவர்களுடைய பணியைப் பற்றி நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு சாதனைகளைச் செய்துள்ளது. குறிப்பாக செவிலியர்களைப் பற்றிப் பேசினார்கள். செவிலியர்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்தளவில், இந்த அரசு பொறுப்பேற்றவுடனே கிட்டத்தட்ட 2,866 செவிலியர்களை நியமித்து இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல், நாய்க் கடி மருந்தைப் பற்றிப் பேசினார்கள். நாய்க் கடி மருந்து என்பது இதுவரையிலும் இல்லாத அளவிற்கு, கடந்த ஆண்டு மட்டும்–10 கோடி ரூபாய்க்கு இந்த மருந்துகள் வாங்கப்பட்டு—15 கோடி ரூபாய்க்கு வாங்கப்பட்டிருக்கின்றன. 8 கோடி ரூபாய்க்கு, மாவட்டத்தில் இருக்கக்கூடிய அத்தனை மருத்துவமனைகளிலும், அதேபோல் 3 கோடி ரூபாய்க்கு, இருக்கக்கூடிய P.H.C.–யிலும், அதற்கு அதிகமாக 4 கோடி

ரூபாய் அளவிலே Medical College-க்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவரையிலும் இல்லாத அளவுக்கு 15 கோடி ரூபாய்க்கு நாய்க் கடி மருந்து வாங்கப்பட்டிருக்கிறது என்பதைப் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அருள்.

திரு. பி.எஸ். அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்ற வள்ளுவரின் குறளுக்கு ஏற்ப இன்றைக்கு மக்கள் நல்வாழ்வுத் துறையை தமிழ் மக்களின் ஆரோக்கியமான, சுகாதாரமான வாழ்க்கைக்குத் துணை நிற்கும் மகத்தான துறையாக மாற்றி சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கும் அன்புத் தாயை வணங்கி, எனது பேச்சைத் துவங்குகிறேன். தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும், குறிப்பாக கிராமப்புறங்களில் பரந்து, விரிந்து மக்கள் பணியாற்றும் 8,682 சுகாதார துணை நிலையங்கள் உள்ளன. அவற்றில் 6,052 துணை நிலையங்களுக்குக் கட்டட வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, ரூபாய் 86.25 கோடி செலவில் சுமார் 746 சுகாதார துணை மையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ப. இராஜரெத்தினம்) தலைமை]

பிற்பகல் 12–35

அதேபோன்று 104 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. அப்படி நிலை உயர்த்தப்பட்டுள்ள 104 மருத்துவமனைகளில் எனது தொகுதியைச் சேர்ந்த புதுசத்திரம் ஆரம்ப சுகாதார நிலையமும் ஒன்றாகும். இந்த ஆரம்ப சுகாதார நிலையம், 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக நிலை உயர்த்தப்பட்டதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் எனது புவனகிரி தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.

அதேபோன்று, தனியார் மருத்துவமனைகளுக்குச் செல்ல முடியாத ஏழையெளிய மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, நிலை உயர்த்தப்பட்ட மருத்துவமனைகளில், அரசு பொது மருத்துவமனைகளில்,

இன்றைக்கு M.R.I., C.T. Scan, E.C.G, E.E.G, Ultra Sound மற்றும் X-Ray போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ள அரசுதான் எங்கள் அம்மாவின் அரசு என்பதைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு நாட்டினுடைய மனித வள மேம்பாட்டிற்கு முதல் காரணம் ஆரோக்கியமான நோயற்ற வாழ்வே. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற வாழ்வியல் சிந்தனையோடு இன்றைக்கு அரசு மருத்துவமனைக்கு மக்கள் சென்றாலும், மக்களைத் தேடிச் சென்று மருத்துவ வசதிகளை அளித்து வருகின்ற அரசுதான் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு. சென்ற ஆண்டு வரை 9 கோடியே 34 இலட்சம் செலவில் மக்களின் இருப்பிடங்களுக்கே சென்று தரமான மருத்துவ சேவையை அளிக்கும் வகையில் 571 சிறப்பு சுகாதார முகாம்கள் நடத்தி, அதன்மூலம் 11.38 இலட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர். காது கேளாதோருக்குக் காது கேட்கும் கருவியும், கண் பார்வை குன்றியோருக்கு மூக்குக் கண்ணாடியும் வழங்கப்பட்டுள்ளன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

'நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி
சின்னஞ்சிறு கைகளை நம்பி ஒரு சரித்திரம் இருக்குது தம்பி'

என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பாடல் வரிக்கேற்ப பள்ளியிலே பயிலும் மாணவ, மாணவியரின் உடல்நிலையை, ஆரோக்கியமான வாழ்வைக் கருத்தில் கொண்டு, தமிழகம் முழுவதும் பள்ளிகளிலே நடத்தப்பட்ட மருத்துவ முகாம்களிலே 2003–2004 ஆம் ஆண்டிலே மட்டும், சுமார் 56.65 இலட்சம் மாணவ, மாணவிகள் பயனடைவதற்குக் காரணமாக விளங்கிய அறிவியல் தமிழை அறிமுகப்படுத்திய எங்களின் அன்னையைப் பாராட்ட, வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு"

என்ற குறளுக்கேற்ப, செய்ய முற்பட்ட செயலும், அதனை இடையூறு நீக்கி செய்யப் பயன்படும் சாதனங்களும், செய்யத்தக்க காலமும், எவ்வாறு செய்வது என்ற உத்தியும் ஆகிய நான்கு கூறுகளையும் நன்கு தெரிந்து, அதிலே தேர்ச்சியும், திறமையும் உடையவரே நல்ல அமைச்சராவார் என்பதற்கிணங்க, சாலைகளில் ஏற்படும் உயிரிழப்பை எண்ணி, அவற்றைக் குறைக்க வேண்டுமென்ற தொலைநோக்குச் சிந்தனையோடு, மனித நேயப் பண்போடு, தேசிய நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் பயணிகளின்

நலனைக் கருத்தில் கொண்டு தமிழகம் முழுவதும் 73 விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளை ஏற்படுத்தி, அதன்மூலம், விபத்தில் சிக்கி உயிருக்குப் போராடும் விபத்தில் சிக்கியோருக்கும், 'நாம் பிழைப்போம்' என்ற நம்பிக்கையை ஏற்படுத்திக் கொடுத்த நாளைய பாரதத்தின் நம்பிக்கை நட்சத்திரமான எங்களின் அன்னையே, உங்களைப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

'கருவினில் வளரும் மழலையின் உயிரில் தைரியம் வளர்ப்பாள் எங்கள் தமிழ் அன்னை' என்பதற்கிணங்க 1,000 மகப்பேறுக்கு இறப்பு விகிதம் 1.3 சதவிகிதம் என்பதை உறுதியுடன் குறைக்கும் நோக்கத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு மருத்துவமனைகள் என்ற அடிப்படையில், 24 மணி நேர ஒட்டுமொத்த மகப்பேறு அறுவை சிகிச்சை மற்றும் 24 மணி நேர ஒட்டுமொத்த அவசர கால பிறந்த குழந்தை கவனிப்பு வசதியையும் 90 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏற்படுத்தியதோடு, 51 அரசு மருத்துவமனைகளில் இந்த 24 மணி நேர மகப்பேறு மையம் செயல்படுத்தப்பட உள்ளது என்பதையும் அறிந்து, தமிழகத்தின் தாய்மார்கள் இன்றைக்குப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

'இந்தியா கிராமங்களில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறது' என்ற தேசத் தந்தை காந்தியின் வார்த்தைக்கு வலுச் சேர்க்கும் விதமாகவும், 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற காஞ்சித் தலைவன், அறிவுலக ஆசான் பேரறிஞர் அண்ணாவின் கனவை நனவாக்குகின்ற வகையிலே, இன்றைக்கு கிராமப்புறங்களிலே ஏழைகளின் வாழ்வு வளம் பெற வேண்டும் என்பதற்காக 403 சுகாதார துணை நிலையங்களுக்கு 80.48 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடங்களும், தொலைதூரப் பழங்குடியினர் பகுதியில் அமைந்துள்ள 50 சுகாதார துணை நிலையங்களுக்கும், 25 தொடக்க சுகாதார மையங்களுக்கும் இன்றியமையாத, அத்தியாவசியமான மருத்துவ சாதனங்களும் வழங்கப்படும் என்ற அறிவிப்பு ஏழையெளிய மக்களுக்கு மாபெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. 2003–2004 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பக்கம் 56-இல், பத்தாவது வரியில், 'உலக வங்கியின் நிதியுதவியுடன் ரூபாய் 650 கோடி செலவில் மருத்துவ அமைப்புகள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்த ஒப்புதல் கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்' என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக,

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப அம்மா அவர்களின் கடுமையான

முயற்சியால், தான் எடுத்துக்கொண்ட இலட்சியத்தை அடைய வேண்டும் என்ற தணியாத தாகத்தால், தளராத மனோபலத்தால், இன்றைக்குத் தமிழக சுகாதாரப் பணிகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூபாய் 597.15 கோடியை உலக வங்கி நிதியுதவியாக வழங்கிட ஒப்புதல் அளித்துள்ளது என்றால், அதற்குக் காரணம் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையும், அயராத உழைப்பும் அல்லவா?

பிற்பகல் 12–40

தமிழகம் முழுவதுமுள்ள அரசு மருத்துவமனைகளின் தரம் இன்று பார்ப்போர் வியக்கும்வண்ணம் உள்ளது. அரசு மருத்துவமனை என்றாலே விழி பிதுங்கிய நிலையில் இருந்த வெளிநோயாளிகள், சிகிச்சை பெறும் உள்நோயாளிகளின் மனதில் தன்னம்பிக்கை ஒளிவீச ஆரம்பித்துள்ளது. வறுமைக் கோட்டுக்குக்கீழே உள்ள அனைவருக்கும், நடுத்தர வருமானம் உள்ளோருக்கும், பொதுவாக சிகிச்சைக்கு வருகின்றவர்களின் நோயின் தன்மையறிந்து, அதற்கேற்றவாறு மருத்துவ வசதியும், மருந்து, மாத்திரைகளும் தரமானதாக இன்றைக்கு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆட்சியின்போது மாவட்டத் தலைமையிட அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெறும் நோயாளிகளிடம் பணம் கையூட்டுப் பெறுகின்ற கீழ்த்தரமான நிலையே நீடித்து வந்தது. மருந்தாளுநர்கள், செவிலியர்கள் மற்றும் பணியாளர்கள் போன்றோரும் மனித நேயத்தை, மக்கள் சேவையைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, தான்தோன்றித்தனமாக நடந்து கொண்டனர் என்பது உண்மை. எங்களது கடலூர் மாவட்டத் தலைமை அரசு பொது மருத்துவமனை தொடர்பாகப் பல புகார்கள் வரப்பெற்று, அன்றைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் மூன்று முறை கடலூருக்கு நேரில் வந்து மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்டும் நிலைமை சீர்செய்யப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆனால், இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் மருத்துவமனைகளின் தரம் உயர்த்தப்பட்டு, சிறப்பான மருத்துவ சேவையை மக்கள் பெற்றுப் பயனடைந்து வருகின்றார்கள். உதாரணத்திற்கு, எங்களது கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ககன்தீப்சிங் பேடி அவர்களின் துணைவியாரே சென்ற ஆண்டு கடலூர் அரசு பொது மருத்துவமனையில் மகப்பேறுக்காக அனுமதிக்கப்பட்டு, அழகான பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அருள், பழைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

***திரு. ஆர்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய கருத்தைச் சொல்வதிலே எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் அவரே சொல்கிறார், நான் மூன்று முறை கடலூர் மருத்துவமனைக்குப் போய்ப் பார்த்தேன், ஆனால் ஒரு குறையும் போக்கப்படவில்லை என்று சொல்கிறார். எந்த அளவுக்கு அங்கே குறைகள் போக்கப்பட்டன என்பது அந்த நகரத்து மக்களுக்குத் தெரியும். C.T. Scan ஒன்று புதிதாகப் பொருத்தப்பட்டது. கண் மருத்துவமனை ஒன்று புதிதாக உருவாக்கப்பட்டது. குழந்தைகளுக்கு என்று மருத்துவம் செய்வதற்கு ஒரு பிரிவு தொடங்கப்பட்டது. இன்னும் சொல்லப் போனால், அங்கே குழந்தைகள் பிறப்பதற்குக் கட்டணம் வசூலிக்கப்பட்டது, ஆண் குழந்தையா, பெண் குழந்தையா என்று தெரிந்துகொள்ள. அதைக்கூட தடை செய்வதற்கு சில பேர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் உண்மைகளைத் தெரிந்து பேசுவது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி.எஸ். அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அளவுக்கு இன்று மக்கள் நம்பிக்கையைப் பெற்ற துறையாக மக்கள் நல்வாழ்வுத் துறை விளங்கிக் கொண்டிருக்கிறதென்றால், அதற்குக் காரணம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆரோக்கியமான வழிகாட்டுதலே காரணம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த அவையிலே கூறுவதில் பெருமைப்படுகின்றேன். இன்றைக்கு மருத்துவத் துறைக்கும், மருத்துவ சேவைக்கும் களங்கம் ஏற்படுத்துகின்ற வகையிலே, போலி மருத்துவர்கள் ஆங்காங்கே முளைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அடையாளம் கண்டு இந்த அரசு நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறேன்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

என்பதற்கிணங்க, அரசுக்குப் புதிது, புதிதாக வருமானம் வரும் வழிகளை உண்டாக்கி, அவைகளைச் சிந்தாமல், சிதறாமல், சிதையாமல் சேர்த்து, பல்வேறு திட்டங்களுக்கு உரிய முறையில் பிரித்துக் கொடுத்து, திட்டங்களை நிறைவேற்றும் தகுதி பெற்றவரே ஆட்சிக் கலையில் தேர்ச்சி பெற்று, ஆளத் தகுதியானவர் என்பதற்கிணங்க, மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு 2003–2004 ஆம் ஆண்டு ரூ.1380.48 கோடியும், 2004–2005 ஆம் ஆண்டு ரூபாய் 1387.77 கோடியும், 2005–2006 ஆம் ஆண்டு ரூபாய் 1652.24 கோடியாகவும் உயர்த்திக் கொடுத்து, பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதைப்போல் "மக்களால் நாம், மக்களுக்காக நாம்" என்ற இலட்சிய

நோக்கத்தோடு பீடுநடை போடும் எங்களின் அரிமாத் தலைவியே, தங்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். மருத்துவ வசதிகள் கொண்ட தலைநகரமாக சென்னையை உருவாக்கிட வேண்டுமென்ற சீரிய சிந்தனையின் விளைவாக ஆசியாவிலேயே மிகப் பெரிய மருத்துவமனை என்ற பெருமைக்குரிய வகையில் 104.47 கோடி ரூபாய் செலவில் சென்னை பொது மருத்துவமனை வளாகத்தில் 1,650 படுக்கைகள் வசதி கொண்ட இரு கோபுரக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருப்பதன்மூலம், உலக நாடுகளின் மத்தியிலே சென்னையை, தமிழகத்தைத் தலைநிமிர வைத்த எங்களின் தங்கத் தாரகையே, உங்களைப் பாராட்டி, வணங்கி மகிழ்கின்றேன். பசிப்பிணியில் வாடும் மக்களின் நிலையைப் பார்த்து, வறுமையே வெளியேறு என்று சிலர் விரட்டிப் பார்த்தார்கள். வறுமை என்ன வெள்ளையனா? இல்லை, நம்மை ஆளவந்த அன்னியனா, வெள்ளையனே வெளியேறு என்றதும் வெளியேற. அதுவோ இந்த மண்ணின் மைந்தன் என மார்தட்டி நின்றது. மார்தட்டி நின்ற வறுமை என்ற மண்ணின் மைந்தனின் இடுப்பெலும்பை அடித்து நொறுக்கி, பல கோடி ரூபாய் செலவிலே வறுமை ஒழிப்புத் திட்டங்களை வரிசையாக அறிமுகப்படுத்தி, ஏழை, எளிய விவசாயத் தொழிலாளத் தோழர்களின் பசிப்பிணி போக்கிய நவீன மணிமேகலையான எங்களின் தமிழ்த் தாயே, தமிழகம் அனைத்துத் துறைகளிலும் முன்னேற வேண்டுமானால், மனித சமுதாயம் அமைதியாகவும், சுதந்திரமாகவும், இயல்பான வாழ்க்கை வாழ வேண்டுமானால் பொது அமைதியும், நிலையான ஸ்திரத் தன்மையும் நாட்டுக்கு அவசியம். அப்படிப்பட்ட ஸ்திரத் தன்மை இல்லாமல் பொது அமைதிக்குக் குந்தகம் விளைவித்த கடந்த கால ஆட்சியின் வரலாற்றின் பக்கங்களைத் திருப்பிப் பார்த்தால், 1989 ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க. ஆட்சியின்போது, மக்கள் சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் மோதிக் கொண்டார்கள்.

பிற்பகல் 12–45

போடி, தேனி, தேவாரம் போன்ற தென் மாவட்டப் பகுதிகளில் சாதிக் கலவரத்தால் ரத்த ஆறு ஓடியது. தமிழகம் ஒரு மோசமான சூழலில் சிக்கித் தவித்தது. ஆனால், அன்றைக்கும், சாதி மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு, ஆட்சி, அதிகாரம் இல்லாவிட்டாலும், தமிழ் மக்கள்மீது கொண்ட பற்றின் காரணமாக, பாசத்தின் காரணமாக, தென் மாவட்டங்களுக்கு நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறிய தலைவிதான் எங்களது புரட்சித் தலைவி அவர்கள்.

தமிழகத்திலே தீவிரவாதம் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்பட்டிருக்கிறது. விடுதலைப் புலிகள் மற்றும் தமிழ்த் தீவிரவாதிகள்,

மதத் தீவிரவாதிகளின் வேட்டைக்காடாக இருந்த தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றிக் காட்டியவர்தான் நமது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள்.

1996 முதல் 2001 ஏப்ரல் வரை, கடந்த தி.மு.க. ஆட்சியின்போது நடைபெற்ற மதக் கலவரத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 68 நபர்கள். அதேபோன்று, சாதி மோதல் காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 234 நபர்கள். தி.மு.க. ஆட்சியில் 194 முறை துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் மட்டும் நடைபெற்றுள்ளன. ஆனால், இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியில் இன்றைய நிலவரப்படி மதக் கலவரத்தில் இறந்தோரின் எண்ணிக்கை வெறும் 4 மட்டுமே. சாதிக் கலவரத்தில் இறந்தோரின் எண்ணிக்கை 19 பேர் மட்டுமே. இப்போது இத்தகைய சாதிக் கலவரங்கள், மதக் கலவரங்கள் கட்டுப்படுத்தப்பட்டதோடு, அங்கொன்றும், இங்கொன்றுமாக சில சந்தர்ப்பங்களில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றுள்ளது. காட்டுக் கொள்ளையன் வீரப்பன் சுட்டு வீழ்த்தப்பட்டான். இவையெல்லாம் தமிழகத்திலே சட்டம்-ஒழுங்கு எப்படியெல்லாம் நிலைநிறுத்தப்பட்டு, பொது அமைதி பாதுகாக்கப்பட்டது என்பதற்குச் சான்றுகளாகும்.

ஆளுகிறவன் தனக்கு ஒதுக்கப்பட்ட நன்னெறிகளில் இருந்து பிறழாது நின்று, தவறான காரியங்கள் தன் நாட்டில் நடைபெறாமல், நாளும் விழிப்புடன் இருந்து, வீரம் குன்றாமலும், மானம் பறிபோகாமலும், மக்களைக் காத்து ஆட்சி புரிதல் வேண்டும் என்ற பொருளுக்கேற்ப மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,

"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை"

என்பதற்கிணங்க, தனது ஆட்சியில் வாழ்வோர் யாராயினும், ஒரு குற்றம் செய்தால், வேண்டியவர், வேண்டாதவர் என்ற பாகுபாடு இல்லாமல், சிறிதும் பரிவு காட்டாமல், ஏற்ற தண்டனையை வழங்க வேண்டும், இரக்கம் காட்டக்கூடாது என்ற பொருளுக்கு ஏற்றாற்போல், நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்ற தமிழ்ப் புலவர் நக்கீரனின் சொல்லோவியத்தை நினைவுகூறும் வகையில், கொலைக் குற்றம் சாட்டப்பட்ட மடாதிபதிகளைக்கூட, எதைப் பற்றியும் கவலைப்படாமல் கைது செய்து சிறையில் அடைத்த துணிச்சல் வேறு எவருக்கும் வராது. ஆனால், வள்ளுவனுக்குக் கோட்டம் கட்டுவார், வள்ளுவனுக்குக் குமரியிலே சிலை வைப்பார், வள்ளுவனின் குறளுக்குக் குறளோவியம்

தீட்டுவார், வள்ளுவனுக்கு அய்யன் என்றெல்லாம் பட்டம் சூட்டுவார், தனக்குத் தானே, வாழும் வள்ளுவன் என்று பட்டம் சூட்டிக்கொள்வார். ஆனால், வள்ளுவரின் குறள் நெறிப்படி மட்டும் வாழ மாட்டார்.

உலகையே ஒரு நிமிடத்தில் உறைய வைத்து, கடல் மணலில் மண் வீடு கட்டி மகிழ்ந்த எங்களின் மழலையர்களை, அவர்தம் தாய், தந்தையரை, உற்றார், உறவினரை மரண வீட்டுக்கு அனுப்பி வைத்த சுனாமி என்ற ஆழிப் பேரலைகளின் தாக்குதலுக்கு ஆளாகி, கடல் அலையின் கொடுங்கரங்களுக்குச் சின்னாபின்னமாகி, முகம் சிதைந்த கடலோர மாவட்டங்களில் எங்களது கடலூர் மாவட்டமும் ஒன்று. எங்கள் மாவட்டமான கடலூர் மாவட்டத்தில் சுனாமியால் ஏற்பட்ட மொத்த உயிரிழப்பு 620. அதிலே மாண்புமிகு அம்மா அவர்கள் போட்டியிட நினைத்த எனது புவனகிரி தொகுதியில் மட்டும் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 420. சுனாமி பேரலை அடங்கி ஓய்வதற்குள், ஒரு நிமிடம்கூட தாமதிக்காமல், உடன் பறந்து வந்து, பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு 'அஞ்சாதே, நான் என்றும் உன்னோடு' என்ற பைபிளின் வாசகத்திற்கு ஏற்றாற்போல் அழுத கண்களின் கண்ணீரைத் துடைத்து, அழுது, அழுது அலுத்துப்போன உள்ளங்களை அரவணைத்து, நிவாரண உதவிகளை உடனுக்குடன் வழங்கியதோடு மட்டும் நின்றுவிடாமல், எங்களது பகுதிக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை–5 அமைச்சர் பெருமக்களையும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களையும்— அனுப்பிவைத்து, கலங்கி நின்ற மக்களின் கண்ணீரைப் போக்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது புவனகிரி தொகுதி மக்களின் சார்பாக எனது நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"நான் ஆணையிட்டால், அது நடந்துவிட்டால்
ஏழைகள் வேதனைப் படமாட்டார்"

என்ற புரட்சித் தலைவரின் பாடல் வரிகளுக்கேற்ப, அம்மா அவர்களே, நிவாரணப் பணிகளுக்கான ஆணைகளை நீங்கள் இட்டீர்கள். எங்களது மாவட்ட நிர்வாகம் அரச கட்டளையை ஏற்று, இரவு, பகலாக, பாதிக்கப்பட்ட கடலோர கிராமங்களிலே முகாமிட்டு, சுறுசுறுப்பான முறையிலே பணிகளை மேற்கொண்டார்கள். அவருக்கும், கடலூர் மாவட்ட நிர்வாகத்திற்கும் இந்த நேரத்திலே நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். சுனாமி...

பிற்பகல் 12–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடித்துவிடுங்கள், முடித்துவிடுங்கள்.

திரு. பி.எஸ். அருள்: சுனாமி தாக்குதலின்போது எங்களது மாவட்ட ஆட்சித் தலைவர் குடும்பத்தோடு மகாபலிபுரம் அருகே இருந்துள்ளார். சுனாமி தாக்குதலுக்கு அவரது குடும்பமும் பாதிப்புக்குள்ளானது. மாவட்ட ஆட்சியரின் மனைவி மார்பளவு தண்ணீரில் தத்தளித்து, உணவு விடுதியின் ஜன்னல் கம்பியைப் பிடித்து மேலே ஏறி உயிர் பிழைத்ததோடு, தன்னோடு உயிருக்குப் போராடிய மூன்று பெண்களையும் காப்பாற்றியுள்ளார் என்பதை அறியும்போது, 'அரசன் எவ்வழியோ, குடியும் அவ்வழியே' என்பதற்கிணங்க, ஒரு நல்ல ஆளுகையின்கீழ் ஒரு மனித நேயம் மிக்க தலைமையின்கீழ் பணிபுரிந்த காரணத்தினால்தான், அந்த அதிகாரியும், அவர்தம் மனைவியும் மனித நேயப் பண்போடு நடந்துகொள்ள வேண்டுமென்ற உந்துதல் ஏற்பட்டுள்ளதாகவே நான் கருதுகின்றேன். கடந்த 15–3–2005 அன்று இம்மாமன்றத்தில் பேசிய பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அருள், முடித்துவிடுங்கள், (குறுக்கீடு) இன்னும் ஒரு மணித்துளியில் முடித்துவிடுங்கள்.

திரு. பி.எஸ். அருள்: பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள், மதுக் கடைகளுக்குப் பூட்டுப் போடும் போராட்டம் நடத்த, அவரது கட்சியைச் சேர்ந்த மகளிர் பிரிவினர் அறிவித்தார்கள் என்பதையும், எங்கேயும் போராட்டம் நடத்தப்படவில்லை, ஆனால் அவர்கள்மீது வழக்குப் போடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்கள். நான் அவர்களுக்குப் பணிவோடு தெரிவிப்பது என்னவென்றால், உங்களுடைய ஆதரவுக் கட்சிதான் பாண்டிச்சேரியிலே ஆளுகிறது. அங்கேயும் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்தான் எம்.பி.-ஆக உள்ளார். எனவே, அங்கே சென்று மதுக் கடைகளுக்கு முதலில் பூட்டுப் போடுங்கள், போராட்டம் நடத்துங்கள், அதற்குப் பிறகு இங்கு வந்து போராடலாம். அதேபோல, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எங்கேயும் போராடவில்லை என்று சொன்னார். எல்லா இடங்களிலும் போராட்டம் நடந்தது. ஆனால் பூட்டுப் போடுவதற்குச் செல்வதற்கு முன்னாலேயே கைது செய்து

விட்டார்கள் என்றுதான் சொன்னேனே தவிர, போராட்டம் இல்லை என்று சொல்லவில்லை. பாண்டிச்சேரியிலும் மதுக் கடைகளை மூடவேண்டும் என்பதுதான் எங்களுடைய நோக்கம். எல்லா இடங்களிலேயும் மூடவேண்டும். அதை மறுக்கவில்லை நாங்கள்.

திரு. பி.எஸ். அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் பேசும்போது, சிறைக் கைதிகளுக்கு Video Conferencing மூலம் remand கொடுக்கப்படுகிறது. அதன் காரணமாக, கைதிகளை அவர்களது உறவினர்களால் பார்க்க முடியவில்லை என்ற கருத்துபடப் பேசினார். ஆனால், ஒரு சில கைதிகளை சிறையிலிருந்து கோர்ட்டுக்குக் கொண்டு செல்லும்போது, காவல் துறையினரிடம் எப்படி நடந்து கொள்கிறார்கள்? காவல் துறையினரின் மனம் புண்படும்படிப் பேசுகிறார்கள், தகாத வார்த்தைகளால் திட்டுவது, காவலர்களிடம் விவாதம் செய்வது போன்றவையோடு மட்டுமல்லாமல், பேருந்து நிலையங்களில் பொது மக்கள் முன்னிலையிலேயே காவலர்களை அவமானப்படுத்துவது, தன்னை ஒரு hero போல காட்டிக்கொண்டு காவலர்களை நெட்டித் தள்ளுவதும், மேலும் சில நேரங்களில் காவலர்களை ஏமாற்றிவிட்டுத் தப்பி ஓடுவது போன்ற இழிவான செயல்களில் ஈடுபடுகின்ற பல சிறைக் கைதிகளுக்கு இதுபோன்று Video Conferencing மூலம் remand நீட்டிக்கச் செய்கின்ற முறையைக் கொண்டுவந்த மாண்புமிகு அம்மா அவர்களை மனதாரப் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியினுடைய பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களிடத்திலே நான் மனுவாக எழுதித் தந்துவிடுகிறேன் என்று கூறி, மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு அனுமதி தந்த தங்களுக்கு எனது நன்றியைக் கூறி, அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என்.ஆர். ரங்கராஜன்.

திரு. என்.ஆர். ரங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது மக்களுக்கு நலம் பயக்கும் நல்ல கருத்துகளை இந்த மாமன்றத்திலே எடுத்துரைக்க மகத்தான வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை முதற்கண் சமர்ப்பித்துக்கொள்கிறேன். மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்காக கடந்த ஆண்டு 1317.83 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்த நிலையிலே, இந்த ஆண்டு 1552.24 கோடி ரூபாயாக அதிகரித்திருப்பது வரவேற்கத்தக்கது என்றாலும்கூட, ஆரோக்கியமான தமிழகத்திற்கு அடித்தளம் இடுகின்ற

துறை எனும் அடிப்படையிலே, இன்னமும் அதிகப்படியான நிதியை ஒதுக்கியிருக்கலாம் என்ற என்னுடைய தாழ்மையான கருத்தை இந்த நேரத்திலே பதிவு செய்ய விழைகிறேன்.

மக்கள் தொகைப் பெருக்கத்தோடு போட்டி போட்டுக்கொண்டு நோய்களும், நோயாளிகளின் எண்ணிக்கையும் பெருகிக் கொண்டு வருவதை இந்த அரசு உணரவேண்டும். இந்த அவையிலே புள்ளிவிவரங்களை மட்டுமே நான் அள்ளி வந்து பேசவில்லை. மக்களுடைய எண்ண ஓட்டங்களையும், நான் கண்ணெதிரே கண்டவற்றையும், கேட்டவற்றையும் இவ்வரசினுடைய மேலான கவனத்திற்கும், உடனடி நடவடிக்கைக்கும் கொண்டுவர விரும்புகிறேன். அந்த வகையிலே நான் முதலிலே எடுத்துக்கொள்ள விரும்புவதெல்லாம், நமது கிராமங்களிலே இருக்கக்கூடிய Union Dispensary என்று சொல்லக்கூடிய கிராம மருந்தகங்களைப் பற்றி நான் ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். இந்த Union Dispensary–ஐப் பொறுத்த வரையிலே, மருந்துகளைப் பொறுத்த வரையிலே, கிட்டத்தட்ட 40 ஆயிரம் ரூபாய் வருடத்திற்குக் கொடுக்கின்றீர்கள். அது வரவேற்கத்தக்கது. அதே சமயத்திலே பல இடங்களிலே அதற்கு முறையான கட்டடங்கள் இல்லை. கட்டடங்கள் எல்லாம் பழுதடைந்து, உடைந்து கிடக்கின்றன. உதாரணத்திற்கு வேண்டுமானால், நீங்கள் விசாரிக்க வேண்டுமானால், பட்டுக்கோட்டை தொகுதியில் இருக்கக்கூடிய வெண்டாக்கோட்டை என்ற கிராமத்திலே, பஞ்சாயத்து போர்டு அலுவலகத்திலே அந்தக் கிராம மருந்தகம் நடந்துகொண்டிருக்கின்றது.

பிற்பகல் 12–55

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருந்தகங்கள் எல்லாம் ஊரகத் துறையின்கீழ் இயங்கி வருவதால், அந்தத் துறையினுடைய செயலாளரும், அந்தத் துறையினுடைய இயக்குநரும், அதை சுகாதாரத் துறையிலே எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு கருத்துருவை அனுப்பியிருக்கிறார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, வருகின்ற நிதியாண்டில், என்னுடைய துறையின் நிதிநிலைமைக்கு ஏற்ப, அந்த ஊரகத் துறையில் இருக்கக்கூடிய மருந்தகங்களையும், அங்கிருக்கக்கூடிய மருத்துவமனைகளையும் குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணை பெற்று அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என்.ஆர். ரங்கராஜன்: அதே கருத்தைத்தான் நான் வலியுறுத்துகின்றேன். தயவுசெய்து அதை எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, இன்று ஒவ்வொரு கிராமத்திலும் துணை சுகாதார நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் எல்லாம் பல இடங்களிலே சிறப்பாகக் கட்டப்பட்டிருக்கின்றன. அங்கு ப்யிற்சி பெற்ற செவிலியர்களும் பல ஊர்களிலே இருக்கிறார்கள். ஆனாலும்கூட, சில கிராமங்களில் அந்தச் செவிலியர்கள் அரசு உத்தரவின்படி அங்கேயே தங்கியிருப்பது கிடையாது. அதுபோன்ற நிலைமைகள் உள்ள இடங்களை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, அதுபோன்ற இடங்களிலே உள்ளவர்கள்மீது நடவடிக்கை எடுத்து, அவர்கள் அங்கேயே தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்ற என்னுடைய கருத்தினை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதைப்போலவே, P.H.C. என்று சொல்லக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் பல இடங்களிலே கட்டடங்கள் பழுதடைந்து இருக்கின்றன. மருத்துவர்களைப் பொறுத்த வரையிலே, நீங்கள் நிறையப் பேரை நியமிப்பதாகக் கூறி இருக்கின்றீர்கள். ஆனால், அந்தக் கட்டடங்களையெல்லாம் பழுதுபார்ப்பதற்கு நிதியை ஒதுக்கீடு செய்து, நிச்சயமாக இந்த வருடத்திலே முழுவதுமாக நீங்கள் பழுதடைந்த கட்டடங்களையெல்லாம் பழுதுபார்த்துக் கொடுக்கவேண்டுமென்ற ஒரு கோரிக்கையையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதைப்போலவே, மாவட்டத் தலைநகரங்களிலே இருக்கக்கூடிய மாவட்டத் தலைமை மருத்துவமனைகளையெல்லாம் பல இடங்களில் நான் சென்று பார்த்தபோது, நோயாளிகள், கட்டில்கள், படுக்கைகள் இல்லாமல் தரையிலே படுத்திருக்கக்கூடிய ஒரு நிலைமையைப் பார்த்தேன். படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்தும்போது மருத்துவர்களின் எண்ணிக்கையையும், செவிலியர்களின் எண்ணிக்கையையும் உயர்த்தவேண்டும். இப்போது மருத்துவர்களைப் பொறுத்த வரையில், நிறைய உயர்த்தியிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது; வரவேற்கத்தக்கது. அதே சமயத்திலே, para-medical staff என்று சொல்லக்கூடிய நர்சுகள், சுகாதாரப் பணியாளர்கள், இவர்கள் நீண்ட நாட்களாக நியமிக்கப்படாமல் இருக்கின்றார்கள். அவர்களை நியமிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கோரிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறும்போது, மாவட்டத்தில் இருக்கக்கூடிய மருத்துவமனையினுடைய தரத்தை உயர்த்தவேண்டும் என்றும், அங்கே இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் கட்டில்கள் இல்லையென்ற ஒரு குறையையும் கூறினார்கள். இன்றையதினம் மக்கள் நல்வாழ்வுத் துறையினுடைய மானியக் கோரிக்கை இருந்தாலும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்று காலையிலே இந்தத் துறைக்கு இதுவரையிலும் இல்லாத அளவிற்கு, மாவட்டங்களிலே இருக்கக்கூடிய 270 மருத்துவமனைகளினுடைய அடிப்படை வசதிகளையெல்லாம் உயர்த்தவேண்டுமென்ற நல்ல எண்ணத்திலே உலக வங்கியினுடைய நிதியைப் பெற்று, ரூ.597.15 கோடி நிதியை ஒதுக்கி, அதற்கான அடிக்கல் நாட்டு விழாவும் இன்றையதினம் காலையில் நடந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலிலே 5 மாவட்டங்களிலே தேர்வு செய்து, அடுத்த ஆண்டு அத்தனை மாவட்டங்களிலே இருக்கக்கூடிய மருத்துவமனைகளினுடைய அடிப்படை வசதிகளை எடுத்துக்கொண்டால், ஒரு மாவட்டத்திலே இந்தத் திட்டம் நிறைவேறும்போது, அந்த மாவட்ட மருத்துவமனை என்ற திட்டங்கள், தாலுகா மருத்துவமனை என்கிற திட்டங்களை எல்லாம் மாற்றியமைத்து, அதாவது district grade, மாவட்டத்தினுடைய தலைமை மருத்துவமனையை 500 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை, Grade-I ஆகவும், அதேபோல், 300 என்றும், 200 என்றும், 100 என்றும், 50 என்றும், 30 என்றும், அந்த அடிப்படையிலே உலக வங்கியினுடைய நிதியைப் பெற்று, அதற்கான ஒரு அடிக்கல் நாட்டு விழா மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இன்றையதினம் காலையிலே நடந்திருக்கிறது. ஆகவே, தமிழகத்திலே இதுவரையிலும் இல்லாத அளவிற்கு, எந்த அரசும் செய்யாத சாதனையை, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. என்.ஆர். ரங்கராஜன்: அதேபோன்று, அரசு மருத்துவமனைகளைப் பொறுத்த வரையிலே, மக்களுடைய நோய்களைக் குணமாக்கவேண்டிய அந்த இடத்திலே, சுகாதாரக் கேடுகள் பல இருக்கக்கூடிய காரணத்தினால், நோய்களைப் பரப்பக்கூடிய சூழலும் இருக்கின்றது. இதற்கு சுகாதாரப் பிரிவு காரணம் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நேரத்தில், அரசு மருத்துவமனைகளில் சுகாதாரப் பணியாளர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லாததால் மருத்துவமனைகளை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் படிப்படியாகப் பராமரிப்பதிலே பெருத்த சிக்கல்

இருக்கக்கூடிய நேரத்திலே, outsourcing செய்யப்படலாம் எனக் கேள்விப்பட்டு, அதற்குப் பதிலாக அரசே, மருத்துவமனை நிர்வாகமே நேரடியாக, தொகுப்பு ஊதிய அடிப்படையிலே சுகாதாரப் பணியாளர்களை நியமித்துக்கொள்வது ஒரு நல்ல முறையாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தினை உங்களுக்கு முன்னால் பதிவு செய்ய விழைகின்றேன்.

பிற்பகல் 1–00

அதேபோல, அரசு மருத்துவமனைகளைப் பொறுத்த வரையிலே, பல இடங்களிலே பழுதடைந்த கழிப்பறைகள், கட்டடங்கள், மின் சாதனங்கள் ஆகியவை உடனுக்குடன் பழுதுபார்க்கப்பட்டு, பராமரிக்கப்படுவது கிடையாது. விளக்குகள் இருக்கும், எரியாது. மின் விசிறிகள் இயங்குவது கிடையாது. இதுபோன்று கவனிப்பாரற்றுப் பல இடங்களில் இருக்கின்றன. ஆனால், மருத்துவமனை நிர்வாகங்களைப் பொறுத்த வரையிலே, அவர்கள் இதற்குப் பொறுப்பேற்க மறுத்து, பொதுப் பணித் துறையைக் குற்றம் கூறுகின்றனர். ஆகவே, அரசு மருத்துவமனையைப் பொறுத்த வரையிலே சுகாதாரப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளைச் செய்வதற்குப் பிரத்தியேகமாக ஒரு Corporation, T.N.M.S.C. என்பது போன்ற ஒரு Corporation அமைக்கப்படுவதன் வாயிலாக இதுபோன்ற பிரச்சினைகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்துகளை இந்த நேரத்திலே கூற விழைகின்றேன்.

முன்பெல்லாம் நாய்க் கடி, பாம்புக் கடி போன்ற மருந்துகளுக்கு அரசு மருத்துவமனைகளில் தட்டுப்பாடு இருந்தது உண்மை. ஆனால், தட்டுப்பாடு இப்போது குறைக்கப்பட்டிருக்கின்றது. மருந்துகள் தாராளமாகக் கிடைக்கின்றன. இது பாராட்டக்கூடிய நல்லதொரு அம்சம்.

அதுபோலவே, சென்னை மற்றும் மதுரை தலைமை மருத்துவமனைகளில் மட்டும் இருதய அறுவை சிகிச்சைகள் இன்று செய்யப்படுகின்றன. ஆனால், தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய நோயாளிகள் எல்லாம், ஒன்று, சென்னைக்கு வர வேண்டும், இல்லாவிட்டால் மதுரைக்குச் செல்ல வேண்டும். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கும்போது, அவர்களெல்லாம் Heart Surgery-க்கு வர வேண்டுமென்று சொன்னால், இங்கே waiting list–ல் வைத்துவிடுகிறார்கள். நீண்ட நாட்களாகின்றன. மூன்று மாதங்கள், ஆறு மாதங்கள் ஆகும் என்று time சொல்கிறார்கள். எனவே, முக்கியமாக இருக்கக்கூடிய தஞ்சை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம் போன்ற மாநகராட்சிப் பகுதிகளிலே இதுபோன்ற இருதய அறுவை சிகிச்சைகள், Kidney மாற்று சிகிச்சைகள்

போன்றவற்றையெல்லாம் செய்வதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்தையும் இந்த நேரத்திலே நான் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரங்கராஜன், பேசி முடித்துவிடுங்கள்.

திரு. என்.ஆர். ரங்கராஜன்: ஒரே ஒரு நிமிடம், முடித்துவிடுகிறேன். அதைப்போலவே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே, என்னுடைய சொந்த மாவட்டம் என்பதால் இரண்டு, மூன்று கோரிக்கைகளை மட்டும் கொடுத்து விடுகின்றேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே, தஞ்சை மக்களுக்குப் பெருமை சேர்க்கக்கூடிய நிலையிலே இருப்பது தஞ்சை மருத்துவக் கல்லூரி. கடந்த மாதம் கடும் சுனாமி தாக்குதலின்போது 450 நோயாளிகள் ஒரே நாளில் அங்கே அனுமதிக்கப்பட்டார்கள். விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு இல்லாத காரணத்தினால், அவர்களை Auditorium, வராண்டா போன்ற இடங்களில் தங்க வைத்ததை நான் கண்கூடாகப் பார்த்தேன். இருந்தாலும்கூட, 24 மணி நேரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு அங்கு மிகச் சிறப்பாக, மருத்துவர்கள் அன்று சிகிச்சை செய்து கொடுத்தார்கள். எனவே, நல்ல மருத்துவர்கள் நம்மிடம் இருக்கும்போது, அதற்கான கட்டுமான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். இதை மரியாதைக்குரிய நமது அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே, தஞ்சையில் இருக்கக்கூடிய R.M.H., ராஜா மிராசுதாரர் மருத்துவமனை என்று சொல்லக்கூடிய மருத்துவமனையில் O.P. மற்றும் Ortho ஆகிய Department-களை இன்றைக்கு தஞ்சாவூர் Medical College-க்கு மாற்றியிருக்கிறார்கள் எல்லாவற்றையும். ஆனால், அதற்கான கட்டமைப்பு வசதிகள் ஏதும் கொடுக்கப்படவில்லை. எனவே, அதற்கான கட்டட வசதிகளைக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தஞ்சை மருத்துவக் கல்லூரியிலே விபத்து தலைக்காயப் பிரிவிலே M.Ch. என்று சொல்லக்கூடிய Magistrar Chirurgiae என்று சொல்லக்கூடிய ஒரு படிப்பைத் தொடங்கினால், அதன்மூலம் மாணவர்களுக்குக் கல்வி கற்கவும் நல்ல வாய்ப்புக் கிடைக்கும், அந்த department-ம் நிச்சயமாக அதன்மூலம் வளரும் என்ற கோரிக்கையையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மருத்துவக் கல்லூரியைப் பொறுத்த வரையிலே, திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களுக்கு அது ஒரு Referring Centre-ஆக இருக்கின்றது. அங்கு நோயாளிகளைப் பார்க்கச் சென்றால், எந்த நோயாளிகள் எங்கு இருக்கின்றார்கள் என்று கண்டுபிடிப்பது மிகவும் சிரமம். எனவே, தஞ்சை மருத்துவக் கல்லூரியிலே ஒரு Information Centre-ஐ அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மருத்துவ நிர்வாகம் அனைத்தையும் நவீன காலத்திற்கேற்றாற்போல computerise செய்ய வேண்டும். அதற்கு 50 இலட்சம் ரூபாய்கூட ஒதுக்கியிருப்பதாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே தெரிவித்திருக்கிறீர்கள். அந்த நிதியை இன்னும் அதிகரித்து computerise செய்ய வேண்டுமென்ற என்னுடைய கருத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியான பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் மதுக்கூரில் இருக்கக்கூடிய P.H.C.—ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித்தர வேண்டுமென்ற கோரிக்கையைக் கடந்த மூன்று ஆண்டுகளாக நான் வைத்துக்கொண்டிருக்கிறேன். அதை இந்த வருடம் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, பட்டுக்கோட்டை நகரில் இருக்கக்கூடிய அரசு மருத்துவமனையில் நீண்ட நாட்களுக்கு முன்பு இருதய சிகிச்சைப் பிரிவு திறக்கப்பட்டது. மிகப் பெரிய building கட்டியிருக்கிறீர்கள். நல்ல facility எல்லாம் இருக்கின்றது. ஆனால், இன்னும் Cardiologist இல்லை. அதேபோல, E.N.T. கிடையாது. அந்த இரண்டும் அவசியமாக பட்டுக்கோட்டையில் தேவைப்படுகிற விஷயம். எனவே, அந்த இரண்டு டாக்டர்களை நியமிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–05

பட்டுக்கோட்டை மருத்துவமனையைப் பொறுத்த வரையிலே, அந்தப் பக்கம் E.C.R. போகிறது. 15 கிலோ மீட்டருக்குப் புதியதாக E.C.R. சாலைகள் எல்லாம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். மிகப் பெரிய போக்குவரத்து நடக்கக் கூடிய இடமாக மாறப்போகின்றது. எனவே, பட்டுக்கோட்டை

மருத்துவமனையில் ஒரு emergency and accident ward—Trauma என்று சொல்லக்கூடிய அந்த ward அமைப்பதற்கான நடவடிக்கையையும் எடுத்து, செய்துகொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடம். சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன். அதேபோல, தஞ்சை மருத்துவக் கல்லூரியில் scan எடுத்துக் கொடுக்கிறார்கள். இரண்டு scans இருக்கின்றன. ஒரு scan, accident ஆகிறவர்கள், வெட்டுக்காயத்துடன் வருகின்றவர்களுக்கு எல்லாம் இலவசமாக எடுத்துக் கொடுத்துவிடுகிறார்கள். ஆனால் in-patient–ஆக இருக்கக்கூடிய, மூளைக் கட்டி வந்தவர்கள், T.B. இருக்கிறவர்கள் in-patient–ஆக இருக்கும்போது அவர்களுக்கு அங்கே போய் scan எடுக்கச் சொல்லி அனுப்பும்போது, T.N.M.S.C. மூலமாக எடுக்க வேண்டியிருக்கிறது. In-patient–ஆக இருப்பவர்களுக்கு 350 ரூபாயும், out-patient–ஆக இருப்பவர்களுக்கு 500 ரூபாயும் வசூலிக்கப்படுகிறது. அதை ஏழையெளிய மக்களால் கொடுக்க முடியவில்லை என்றே ஒரு புகாராகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்த வரையில், எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்து கொண்டு வருகிறீர்கள். தயவுசெய்து இதையும் இலவசமாக ஆக்க வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, கும்பகோணம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் scan வசதி இருக்கிறது. Radiologists பல இடங்களில் போடப்படவில்லை. அதன் காரணமாக, Private–க்குப் போகவேண்டிய ஒரு கட்டாயத்திற்கு மக்கள் தள்ளப்படுகிறார்கள். எனவே, ஒரு Radiologist–ஐ immediate–ஆக நீங்கள் நியமிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மருத்துவர்களுடைய நியமனம் குறித்து பல்வேறு கருத்துகளை, அவருடைய தொகுதி மற்றும் கும்பகோணத்தினுடைய மருத்துவமனைகளைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். இன்றையதினம் தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மருத்துவர்களை நியமிப்பதிலே இதுவரையிலும் இல்லாத, எந்த அரசும் செய்யாத சாதனையைச் செய்து கொண்டு வருகிறார்கள். இன்றையதினம் அதற்கான தேர்வுகள், அதாவது, ஆங்காங்கே இருக்கக்கூடிய அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய மருத்துவர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டுமென்கின்ற நல்ல எண்ணத்திலே தேர்வுகள் முடிந்து கொண்டிருக்கின்றன. இன்னும் இரண்டு, மூன்று நாட்களுக்குள்ளாக ஆங்காங்கே இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் மருத்துவர்களின் பணியிடம் கண்டிப்பாக

நிரப்பப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரங்கராஜன், முடித்துவிடுங்கள்.

திரு. என்.ஆர். ரங்கராஜன்: முடித்துவிடுகிறேன். T.V.-ல் எல்லோரும் பார்த்து கொண்டிருக்கிறார்கள். கடைசி bench-ல் இருப்பதால் பேசவில்லை என்று நினைத்துவிடுவார்கள். ஆகவே எனக்கு extra-வாக ஐந்து நிமிடங்கள் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை.

திரு. என்.ஆர். ரங்கராஜன்: வேலூர் நகரைப் பொறுத்த வரையில், 80 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வந்த 'பட் லேண்ட்' என்ற மருத்துவமனையை அரசு மருத்துவப் பள்ளி வளாகம் உள்ள அடுக்கம்பாறைக்கு மாற்றிவிட்ட காரணத்தினால், மக்கள் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மருத்துவமனைக்குப் போக வழியின்றி கர்ப்பிணிகள், ஏழையெளிய மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்று கூறுகிறார்கள்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்று சொல்ல வேண்டும். வேலூர் மருத்துவமனையைப் பொறுத்த வரையில், இன்றையதினம் தமிழகத்திலே இதுவரையிலும் இல்லாத அளவுக்கு மருத்துவக் கல்லூரியினுடைய எண்ணிக்கை, இந்தியாவிலேயே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிலே தமிழகத்தை முதல் மாநிலமாக ஆக்குவேன் என்ற ஒரு கொள்கை அடிப்படையிலே, இன்றையதினம் சுகாதாரத் துறையை எடுத்துக்கொண்டால், ஒட்டுமொத்தமாக இந்தியாவில் இருக்கக்கூடிய அரசு மருத்துவமனைகளை எடுத்துக்கொண்டால், நாம் இன்றையதினம் மற்ற மாநிலங்களையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இதுவரையிலும் இல்லாத அளவுக்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடனே கன்னியாகுமரியிலும், தேனியிலும், வேலூரிலும் மருத்துவக் கல்லூரிகள் வரவேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்திலே கிட்டத்தட்ட 241.40 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி, அதற்கான ஆய்வுகள் எல்லாம் முடியப் பெற்றிருக்கின்றன. மகாராஷ்டிராவிலே இப்போது 14 மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. வருகின்ற ஆண்டிலே தமிழகத்திலே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசிலே சுகாதாரத் துறை

[திரு. ந. தளவாய் சுந்தரம்] [2005 மார்ச் 21

இந்தியாவிலே முதன் மாநிலமாக விளங்குவதற்கு 15 மருத்துவக் கல்லூரிகளை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெற்றுத் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் கோவிந்தசாமி. (குறுக்கீடு) அவர் பட்டுக்கோட்டையையெல்லாம் தாண்டிவிட்டார். (குறுக்கீடு) ரங்கராஜன், பேச்சை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே இதே கேள்வியை மாமன்ற உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்றால், அதற்கான விளக்கத்தை ஏற்கெனவே இந்த அவையிலே கூறியிருக்கிறேன். ஒரு மாணவருக்கு 8 O.P. வர வேண்டும். அப்படி என்றால் உங்களுக்கு நன்றாகத் தெரியும்—உங்களுடைய அந்த மருத்துவக் கல்லூரியை—படிப்படியாக அந்த மருத்துவமனையை அந்த மருத்துவக் கல்லூரிக்கு மாற்றிக் கொண்டிருக்கிறோம்—நேற்றையதினம்கூட, அங்கே மருத்துவர்கள்—நான்கு மருத்துவர்கள் பணியாற்றி வருகிறார்கள். இதுபோன்ற பிரச்சினை கன்னியாகுமரியில் இருந்தது. இதுபோன்ற பிரச்சினை தேனியிலும் இருந்தது. அத்தனை மக்களுடைய பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. அந்தக் குறிப்பிட்ட மருத்துவமனையைப் பொறுத்தளவிலே மருத்துவர் நியமிக்கப்பட்டு, மருத்துவப் பணிகள் நன்றாக நடந்து வருகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரங்கநாஜன், பேச்சை முடியுங்கள்.

திரு. என்.ஆர். ரங்கராஜன்: முடித்துவிடுகிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், கும்பகோணத்தில் இருக்கக்கூடிய மருத்துவமனை தலைமை மருத்துவமனையாக 1996–ல் மாற்றப்பட்டது. ஆனால் இதுவரையில் அதற்கான கூடுதல் பணி நியமனங்கள் எதுவும் நியமிக்கப்படவில்லை. அதை இந்த நிதியாண்டிலாவது அவசியம் எடுத்துக்கொண்டு, நியமிக்க வேண்டும் என்ற கருத்தையும் இறுதியாகத் தெரிவித்துக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றி கூறி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

2005 மார்ச் 21]

பிற்பகல் 1–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஆர். கோவிந்தசாமி. (மணியடிக்கப்பெற்றது) டாக்டர் என்று சொல்லலாமா, மருத்துவர் என்று சொல்ல வேண்டுமா?

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மருத்துவர், ஐயா. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எங்களது தமிழ்க்குடிதாங்கி மருத்துவர் ஐயா அவர்களுக்கும், ஏழையெளிய மக்கள் பயன்பெறும் வகையில் தமிழக மருத்துவக் கல்லூரிகளில் சென்ற ஆண்டு 150 இடங்களை அதிகப்படுத்தியதோடு அல்லாமல், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொகுதியைச் சேர்ந்த தேனி மாவட்டத்திற்கும், வேலூருக்கும் மருத்துவக் கல்லூரிகளுக்கு அங்கிகாரம் அளித்த மாண்புமிகு மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்—மாண்புமிகு மக்களவைத் தலைவர் சோம்நாத் சாட்டர்ஜி அவர்களால் Mobile Medical Encyclopaedia, அதாவது, நடமாடும் மருத்துவக் கலைக் களஞ்சியம் எனப் பாராட்டப்பெற்ற மாண்புமிகு சின்ன ஐயா ச.இரா. அன்புமணி அவர்களுக்கும் தமிழக மக்களின் சார்பாக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலக சுகாதார நிறுவனம்—World Health Organisation, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கு வருவாய்க் கணக்குத் தலைப்புச் செலவினங்களில் குறைந்தது 5 சதவிகிதமாவது செலவு செய்ய வேண்டும் என்பது நியதி. ஆனால் தமிழக அரசு இத்துறைகளுக்கு கடந்த 3 ஆண்டுகளில், வருவாய்க் கணக்குச் செலவினங்களில் முறையே 5.2, 4.9, 5.2 சதவிகித அளவிலேயே நிதி ஒதுக்கியுள்ளது. இதைச் சற்று அதிகப்படுத்த வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005, பக்கம் 34–ல், 'மாநிலத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 1,415 என்றும், துணை சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 8,682' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மொத்த எண்ணிக்கையில் அரசு சொந்தக் கட்டடங்களில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன என்பதையும், வாடகைக் கட்டடங்களுக்கு வாடகைத் தொகையாக ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு செலவு பிடிக்கும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையில் கூறினால் போதும். இப்போது வேண்டாம்.

மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள், வட்டத் தலைமை மருத்துவமனைகள் ஆகியவற்றில் உள்ள அறுவை சிகிச்சை அரங்குகளுக்கு, Operation Theatres-க்கு air-condition செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே, அனைத்து மருத்துவமனைகளுக்கும் மின் உற்பத்தி இயந்திரம், Generators வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வட்டாரத் தலைமை மருத்துவமனைகள், Taluk Headquarters Hospitals போன்ற மருத்துவமனைகளில் C.T. Scan, M.R.I. Scan போன்ற வசதிகளைச் செய்து ஏழை மக்களுக்கு உதவ வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஐந்து நட்சத்திர அந்தஸ்து கொண்ட மருத்துவமனைகளை ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் நிறுவி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மக்களுக்கு உதவிட அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிறப்பு விகிதம், சிசு இறப்பு விகிதம், பேறுகால இறப்பு விகிதம் சம்பந்தமாக மானியக் கோரிக்கையில், பக்கம் 64–ல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. '2002–ல் உயிருடன் பிறந்த குழந்தைகளில், குழந்தை இறப்பு விகிதம்–Infant Mortality Rate, 1000–க்கு 51 ஆக இருந்தது. இது 2002–2003 ஆம் ஆண்டுக்குரிய மாதிரிப் பதிவு ஆய்வின்படி 1000–க்கு 44 ஆகக் குறைந்துள்ளது. இதேபோன்று, இதே கால அளவில் மொத்த பிறப்பு விகிதம்—Birth Rate, 1000–க்கு 19.3 என்ற அளவில் இருந்து 18.5 என்ற அளவுக்குக் குறைந்துள்ளது. பேறுகால இறப்பு விகிதம், Maternal Mortality Rate, உயிருடன் பிறந்த 1000 குழந்தைகளுக்கு 1.4 என்ற அளவில் உள்ளது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த சுகாதாரக் குறியீட்டு அளவுகள் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது அவ்வளவு திருப்திகரமாக இல்லை என்பதுதான் உண்மை.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள்? ஏதாவது காரணம் இருக்க வேண்டும், அவரிடம் ஏதேனும் ஆதாரம் இருக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவரை நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தியாவிலேயே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, நீங்கள் கூறியதுபோல், Sample Registration System என்ற மத்திய அரசினுடைய அடிப்படையில் பார்த்தால், நாம் இன்றையதினம் இரண்டாவது இடத்தில் இருக்கிறோம். கடந்த முறை இதே மானியக் கோரிக்கையின்போது நீங்கள் இதே குற்றச்சாட்டைக் கூறினீர்கள். ஏதாவது

ஆதாரம் இருந்தால் தாங்கள் அதை இந்த மாமன்றத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002–2003 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், பக்கம் 19, பத்தி 53–ல் "அரசு, தனியார் பங்கேற்போடு உலகத் தரம் வாய்ந்த இந்திய முறை மருத்துவமனை ஒன்றினை அமைத்திட அரசு கருதியுள்ளது" என அறிவிக்கப்பட்டுள்ளது. "இந்த வகையில், இந்தத் திட்டம் இந்தியாவிலேயே முதன்மையானதாகும்" என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆண்டுகள் இரண்டு கடந்தும், இத்திட்டம் செயலாக்கம் பெறவில்லை. மாறாக, 2004–2005 கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில், பக்கம் 3–ல், "சென்னை அரும்பாக்கத்தில், உலகத் தரம்வாய்ந்த இந்திய மருத்துவமனை ஒன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை இறுதியாக அமைச்சர் தெரிவித்தால் போதும் என்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து, டிட்கோவினுடைய ஆலோசனையைப் பெற்று, வருகின்ற ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, கண்டிப்பாக அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள். அதில் அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டால், நேரமெல்லாம் சரியாகச் சென்றுவிடும். ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இறுதியாகப் பதில் கூறினால், கண்டிப்பாக நாங்கள் உட்கார்ந்து கேட்கின்றோம். அடுத்து, வறுமைக் கோட்டிற்குக்கீழேயுள்ள மூத்த குடிமக்கள் சிறப்பான மருத்துவ வசதியைப் பெறவேண்டும் என்பதற்காக, அவர்கள் வசதிமிகு அரசு மருத்துவமனைகளில், super speciality சிகிச்சை பெற வசதியாக மூத்த குடிமக்களுக்கு நல வாழ்வு அட்டைகள்–health cards வழங்கப்படும் என்று, நிதிநிலை அறிக்கை, 2002–2003 ஆம் ஆண்டில், பத்தி 60–ல் அறிவிக்கப்பட்டிருந்தது. இத்திட்டம் எவ்வகையில் செயலாக்கம்

பெற்றுள்ளது என்பதையும், எத்தனை மூத்த குடிமக்கள் நலவாழ்வு அட்டைகளைப் பெற்றுப் பயனடைந்துள்ளார்கள் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இறுதியாகத் தெரிவிக்க வேண்டும்.

மருத்துவர் தேர்வுப் பணி மற்றும் பணி நியமனம். இந்த அரசு பொறுப்பேற்ற 2001 ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாகச் செய்யப்படவில்லை. 2002 ஆம் ஆண்டு 1500–க்கும் மேற்பட்ட மருத்துவர்கள், வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நியமனம் செய்யப்பட்டு, பிறகு சிறப்புத் தேர்வு நடத்தி, பணி நிரந்தரம் செய்யப்பட்டது. தற்போது, 1500–க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் அரசுப் பணிகளில் நியமனம் செய்யப்படுவார்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புச் செய்ததையொட்டி, ஒப்பந்த அடிப்படையில் மாதம் 8,000 ரூபாய் தொகுப்பூதியம் என்ற அடிப்படையில் நியமிக்கப்படுகின்றார்கள். 'பணி ஒன்றே, பணித் தகுதியும் ஒன்றே' என்ற நிலையில் 8,000 ரூபாய் சம்பளத்தில் நியமனம் செய்யப்பட்டது தருமம் அல்ல. பின்னால் இவர்களைப் பணியில் முறைப்படுத்துவதிலும், பணி முதுநிலை வரிசை தயாரிப்பதிலும் பல சிக்கல்கள் ஏற்படும். தேர்வாணையம் மூலம் தேர்வு நடத்தி, இவர்களைப் பணி நியமனம் செய்வதில், அரசுக்குச் சங்கடம் ஏதேனும் இருந்தால்...

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மருத்துவக் கல்லூரிகளினுடைய எண்ணிக்கையை அதிகமாக்கி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடனே, மூன்று மருத்துவக் கல்லூரிகளினுடைய எண்ணிக்கைக்காக, மருத்துவர்கள், பேராசிரியர்கள் போன்றவர்களையெல்லாம் கட்டாயம் நியமிக்க வேண்டுமென்று M.C.I.–யிலிருந்து அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கும்போது, மருத்துவர்களையும் மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுப்ப வேண்டும். மருத்துவர்களையும் தேர்வு செய்ய வேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்திலேதான், ஏழைகள், கிராம மக்களுடைய நலனைக் கருதி, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2,322 மருத்துவர்களைத் தேர்வு செய்ய வேண்டுமென்று ஓர் உத்தரவையும் இட்டு, அந்த உத்தரவின்படி, Tamil Nadu Public Service Commission மூலமாகத்தான் தேர்வு செய்ய வேண்டுமென்றும், அதற்கு இடைப்பட்ட காலத்திலே, மூன்று மாதங்கள் இடைப்பட்ட காலத்திலே, அங்கே மருத்துவர்கள் தேவைப்படுகிறது. அங்குள்ள மருத்துவமனைகளில் மருத்துவர்கள் தேவை என்ற பொது மக்களுடைய கோரிக்கையை ஏற்று, குறைந்தது 6 மாதங்கள் என்பதை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர்

புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தத் துறைக்கு உத்தரவிட்டு, மூன்று மாதத்திற்குள்ளாக, Tamil Nadu Public Service Commission மூலமாகத் தேர்வு செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள மருத்துவமனைகளில் அவசர சிகிச்சையை மேம்படுத்தும் திட்டம்–Strengthening of emergency facilities in the hospitals located on National Highways, under the Scheme, 'Assistance for capacity building' என்ற தலைப்பின்கீழ், ஓமலூரில் ரூபாய் 1 கோடி செலவிலும், விழுப்புரத்தில் ரூ.1 கோடியே 43 இலட்சம் செலவிலும், செங்கல்பட்டில் ரூ.1 கோடியே 50 இலட்சம் செலவிலும் கட்டடங்கள் கட்டப்பட இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–20

அதைப்போலவே, தேசிய புற்று நோய்த் தடுப்பு (National Cancer Control Programme) திட்டத்தின்மூலம் காஞ்சிபுரம், பேரறிஞர் அண்ணா புற்று நோய் மையத்திற்கு 2 கோடியே 88 இலட்சம் ஒதுக்கியுள்ளதாகத் தெரிகிறது. செங்கல்பட்டிலுள்ள School of Nursing—செவிலியர் பயிற்சிப் பள்ளியைக் கல்லூரியாக மாற்றுவதற்கு ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் மத்திய அரசு ஒதுக்கியுள்ளதாகத் தெரிகின்றது. Anti-Retroviral Therapy Institute for HIV infected AIDS patients, அதற்கு மதுரை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், தாம்பரம் காசநோய் மருத்துவமனையிலும், சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், அதற்குண்டான புதிய தனிக் கட்டடங்கள் கட்டப்படவிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அதைப்போலவே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு மணித்துளிகளில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். நான் ஒரு மருத்துவன் என்பதால் எனக்கு ஐந்து நிமிடங்கள் அதிகமாகத் தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மருத்துவமனைக் கழிவுகள் மேலாண்மைக்கு, Hospital Waste Management —'Assistance for capacity buildings' திட்டத்தின் மூலம் ஒரு கோடியே 50 இலட்சமும், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவுமனைக்கு, ஒரு கோடியே 43 இலட்சமும், தாம்பரம் அரசு மருத்துவமனைக்கு

ஒதுக்கியுள்ளதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. இதுபோன்று முக்கியமான செய்திகளைக் கூறும்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு மத்திய சுகாதார அமைச்சர் அவர்களை அடிக்கடித் தொடர்புகொண்டு தமிழகத்திற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் பெற்றுக்கொள்ளலாம் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

பெருமைக்குரிய சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் அனைத்து மருத்துவக் கல்லூரிகளும் சென்னைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இருக்கும்பொழுது M.D., M.S., M.Ch., போன்ற பட்டய மேற்படிப்புகளுக்கு எல்லாம் அங்கீகாரம் செய்யப்பட்டிருந்தன. ஆனால், எம்ஜிஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்ட பின்னர், மேற்கண்ட பட்டயப் படிப்புகள் எல்லாம் அங்கீகாரத்தை இழந்துள்ளன. அதைப்போலவே, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் 13 M.S. பட்டயப் படிப்புகளுக்கு மேல், K.M.C.-ல் M.S. Ortho. போன்ற மேற்படிப்புகளும் அங்கீகாரத்தை இழந்துள்ளன. இதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே கூறும்பொழுது, M.D., M.S. போன்ற படிப்புகள் மருத்துவக் கல்லூரிகளில் அங்கீகாரம் ரத்துச் செய்யப்பட்டது என்ற கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடனே, இருக்கக்கூடிய அத்தனை மருத்துவக் கல்லூரிகளிலும் Post Graduate-ல் இருக்கக்கூடிய M.D., M.S., போன்ற மேற்படிப்புகளுக்குரிய அத்தனை படிப்பிற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்த 5 கல்லூரிகள் மட்டுமல்லாமல், இருக்கக்கூடிய மற்ற கல்லூரிகளுக்கும் நிதியை ஒதுக்கி, இன்றையதினம் அதற்கான ஆய்வு நடைபெற்று வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் போலவே Dip. N.B. என்ற Course உள்ளது. Diploma in National Board Examinations என்ற பட்டய மேற்படிப்பு. அது மற்ற மாநிலங்களில் இருப்பதைப்போல தமிழகத்தில் வராததற்குக் காரணம் Ministry of Health, Medical Council of India and National Board, அவர்கள் தரம் நிர்ணயம் செய்து தமிழ்நாட்டிற்கு அனுமதி தரத் தயாராக இருக்கிறார்கள். M.S., M.D., போன்ற மேற்படிப்புகள் இல்லாத கோயம்புத்தூர், செங்கல்பட்டு, கீழ்ப்பாக்கம் போன்ற கல்லூரிகளில்

Dip. N.B. போன்ற பட்டய மேற்படிப்பு ஆரம்பித்தால் அதிக மருத்துவர்களை உருவாக்குவதற்கும், அதுபோலவே, நோயாளிகள் பயன்பெறுவதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான கருத்தை இங்கே கூறி வருகின்றார் Dip. N.B. பற்றி. நீங்கள் ஒரு மருத்துவராக இருந்திருக்கிறீர்கள். எந்தவொரு கல்லூரியிலே M.D., M.S., இருக்கிறதோ, அங்கே இருக்கக்கூடிய அந்த ratio, பேராசிரியர் மற்றும் அங்கேயிருக்கின்ற ஆசிரியர்களுடைய அடிப்படையிலேதான் Dip. N.B. Course ஆரம்பிக்க முடியும். கடந்த 4 வருடங்களுக்கு முன்னாலேகூட ஒரு மாணவன் இதுகுறித்து நீதிமன்றத்திலே வழக்கிற்குச் சென்று, இதுபோன்ற Dip. N.B. Course-ஐ மருத்துவக் கல்லூரிகளிலே ஆரம்பிக்கக்கூடாது ஏற்கெனவே இருக்கக்கூடிய அந்த மருத்துவக் கல்லூரிகளினுடைய பேராசிரியர், அங்கே இருக்கக்கூடிய M.S., படிக்கின்ற மாணவர்களுக்கு 1:2 என்ற ratio இருக்கிறது. ஆகவே, அரசைப் பொறுத்த வரையிலே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்த வரையிலே, இருக்கக்கூடிய மருத்துவமனைக் கல்லூரிகளிலே எந்த course-ஆக இருந்தாலும் அந்த course-ஐ நடத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால், தயவுசெய்து நீங்கள், Medical Council of India-வினுடைய சட்டங்களைப் புரிந்துகொண்டு இந்த மாமன்றத்திலே பேசவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Teacher ratio என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், டி.வி.எஸ். சுந்தரம் கம்பெனியிலும், மற்றும் பாரத் ஸ்கேனிலும் Dip. N.B. course-கள் இருக்கின்றன. அதற்குண்டான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

அதுபோலவே, பொது மக்களுக்குத் தொல்லையைக் கொடுத்துக் கொண்டு, பல வியாதிகளை உருவாக்கக்கூடிய குரங்குகள், நாய்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த அரசு ஒரு சரணாலயம் ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும் என்று ஒரு யோசனையைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, எனது விருத்தாசலம் தொகுதியில் உள்ள (குறுக்கீடு) நாய்கள், ஏனென்றால் தொந்தரவு நிறைய இருக்கிறது. ஒன்றும் தாங்க முடியவில்லை. எனது விருத்தாசலம் தொகுதியில் 2 ஆயிரம்

குடும்பத்தினர் பாதிக்கப்படக்கூடிய அளவிற்கு மூடிக் கிடக்கின்ற உலகப் புகழ் பெற்ற பீங்கான் தொழிற்சாலையை அரசு உடனடியாகத் திறப்பதற்கு வழிவகை செய்யவேண்டும். விருத்தாசலம் மணிமுத்தாற்றின் குறுக்கே, 4 மாதங்களுக்கு முன்னால் இடிந்த பாலத்தைக் கட்டுவதற்கு உலகத் தரம் வாய்ந்த தகுதியான நிறுவனங்கள் மூலம், தரமான பாலத்தைக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். 1957 ஆம் ஆண்டு நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்கு வீடு, நிலம் ஆகியவற்றைக் கொடுத்து தியாகம் செய்த கிராம மக்கள் விஜயமாநகரம், புதுக்கோரப்பேட்டை, தெற்கு வெள்ளூர் ஆகிய இடங்களில்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர், இது டாக்டருக்கு சம்பந்தம் இல்லாதது.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: ஒரே நிமிடம். முடித்து விடுகிறேன். குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். விருத்தாசலத்திலுள்ள ஒரு அரசு கிளை அச்சகம் கணினிமயமாக்கப்படாத நிலையில், கையால் அச்சுக் கோர்த்து அச்சடிக்கும் நிலையில் உள்ளது. அதை கணினிமயமாக்கி, தரம் உயர்த்த வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

இறுதியாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தியாகச் செம்மல் மாண்புமிகு கோ.க. மணி அவர்களுடைய அனுமதியோடு ஆங்கிலத்தில் 2 வார்த்தைகள் பேச அனுமதி கேட்கின்றேன். (சிரிப்பு) (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு வார்த்தைக்கு 100 ரூபாய் fine போட்ட மாதிரி தெரிந்தது. (சிரிப்பு)

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: இங்கே முதலிலேயே அனுமதி கேட்டதனாலே போடமாட்டார்கள் என்று நினைக்கிறேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த ஆங்கிலம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

7. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை வினாக்கள்–விடைகள் நேரம் ஒத்திவைப்பு குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணிநேரம் வினாக்கள்–விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ, நாளை 22–3–2005 செவ்வாய்க்கிழமை அன்று தளர்த்தி, அந்த நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (22–3–2005) வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

மானியக் கோரிக்கைமீதான விவாதம் மாலையிலும் தொடரும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இறுதியிலே விவாதத்திற்குத் தன் பதிலை அளிப்பார்கள்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–28 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4-30

பிற்பகல் 4–30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

5. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(இ) கோரிக்கை எண் 18 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைமீதான விவாதம் தொடர்கிறது. திரு. டி. மணி.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மருத்துவத் துறை சம்பந்தமான இந்த மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு பேரவைத் தலைவர் அவர்களுக்கு முதலில் நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

நம்முடைய மருத்துவத் துறை என்பதை ஒரு சேவைத் துறையாக எடுத்துக்கொண்டு அதன்பால் உறுதியான ஒரு நடவடிக்கைக்கு நாம் செல்ல வேண்டும். இரண்டாவது, நம்முடைய பொதுத் துறை நிறுவனம் என்ற முறையில், அரசுத் துறை என்ற முறையில் நம்முடைய துறைக்குத்தான் முன்னுரிமை கிடைக்கின்ற வகையிலே எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் அரசினுடைய துறை என்ற அடிப்படையில் நம்முடைய மருத்துவத் துறைக்கு முன்னுரிமை கிடைத்து அது முதலிடம் பெறுகின்ற வகையிலே காரியங்கள் எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

குறிப்பாக, இந்த M.R.I. Scan என்று சொல்கின்ற மிக விலை உயர்ந்த ஒரு Scan இருக்கிறது. அது மாவட்ட மைய மருத்துவமனைகளில் உண்டா என்று கேட்டால், அது எல்லா இடத்திலும் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. எனவே, எல்லா மாவட்ட மருத்துவ மையங்களிலும், மருத்துவமனைகளிலும் அது கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். அதுபோன்று இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக அறுவை சிகிச்சை முடிந்தபின், அதற்குரிய மருந்துகள் சரிவர இல்லை என்ற பொதுவான ஒரு புகார் உள்ளது. அதற்குப் பற்றாக்குறை இருக்குமேயானால், அதை நாம் நிவர்த்தி செய்ய வேண்டும். அதேபோன்று...

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் M.R.I. Scan பற்றி இங்கே கூறினார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வருகின்ற நிதியாண்டிலே நிதிநிலைக்கேற்ப மருத்துவக் கல்லூரியில் இருக்கக்கூடிய—படிப்படியாக, ஏற்கெனவே இருக்கக்கூடிய இரண்டு மருத்துவக் கல்லூரிகள் போக, மற்ற அனைத்து மருத்துவக்

கல்லூரிகளிலும் படிப்படியாகக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்துள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, மருந்துகளைப் பொறுத்த வரையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அத்தனை மருந்துகளும் கிடைக்கும் வகையிலே நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அதுபோன்று குறைகள் ஏதாவது இருந்தால் தயவுசெய்து என்னிடம் நேரடியாகக் கூறலாம்.

திரு. கே.சி. கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, திருச்சி உள்ளிட்ட குமரி மாவட்டத்தில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. கருணாகரன், நீங்கள் பேசுகிறீர்களா மணிக்குப் பதிலாக? (குறுக்கீடு) அவர் பேசட்டும். உட்காருங்கள். கடைசியில் அமைச்சர் சொல்லும்போது ஏதாவது பிரச்சினை இருந்தால் கேளுங்கள். திரு. மணி.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். நன்றி. இருந்தாலும், நம்முடைய மருத்துவமனைகளில் போதுமான டாக்டர்கள் இல்லை என்ற ஒரு பஞ்சம் இருந்து கொண்டிருக்கிறது. இப்போது நாகர்கோவிலை எடுத்துக்கொண்டால், முன்னாளில் இருக்கக்கூடிய மாவட்ட மருத்துவமனை. அந்த மாவட்ட மருத்துவமனையை இப்போது வேறு ஒரு பகுதிக்கு மாற்றியுள்ளதாகச் செய்திகள் இருக்கின்றன. ஆனால், அந்த மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பழைய மாவட்ட மருத்துவமனை என்பதை உறுதிப்படுத்தினால் மட்டும்தான் நம்முடைய மருத்துவக் கல்லூரியிலே நெருக்கடி வராமல் பார்த்துக்கொள்ள முடியும். அந்த வகையிலே காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, நம்முடைய மாநிலத்தினுடைய எல்லா மாவட்ட மையங்களிலும், மதுரை, கோவை, தஞ்சாவூர், நெல்லை, குமரி போன்ற எல்லா மாவட்ட மையங்களிலும், மாவட்ட மருத்துவமனைகள் சரிவர இயங்குமேயானால் சாதாரண ஏழைகள், வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருக்கிற சாதாரணத் தொழிலாளியிலிருந்து, நடுத்தரப் பகுதி மக்கள் வரையிலும் பெரிய அளவிலே பயன் பெறுவதற்கான வாய்ப்பைப் பெற முடியும். அந்த வகையிலே நம்முடைய எதிர்கால நடவடிக்கைகள் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே ஒரு கேள்விக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது, ஆயுர்வேதம் சம்பந்தமான வைத்திய

முறையை கன்னியாகுமரி மாவட்டத்திலே அறிமுகப்படுத்த வேண்டும்; ஆயுர்வேத மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி என்பது சிரமமான விஷயமாக இருந்தாலும், மருத்துவமனையை நாம் உருவாக்குவோமேயானால், பக்க விளைவுகள் இல்லாமல், வயதானவர்கள் பெறுகின்ற எல்லா சிகிச்சை முறைகளும், அந்த சம்பிரதாயத்திலே இருக்கிறது. அந்த வகையிலே அதற்கான ஏற்பாடுகளைச் செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும்.

மருத்துவமனைகளில் போதுமான டாக்டர்கள் இல்லை என்று ஏற்கெனவே நான் சொன்னேன். அதேபோல செவிலியர்கள்–nurses. இப்போது ஒப்பந்த அடிப்படையிலே நியமனம் செய்யப்படுவதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒப்பந்த அடிப்படையில் என்று மருத்துவத்தை நாம் இப்படிப் பங்கு போட்டோமேயானால், கூறு போட்டோமேயானால், சரிவர மக்களுக்கு அவர்களுடைய பங்களிப்பு போய்ச் சேராது. முதலில் அவர்களை நியமிக்கின்றபோது இரண்டு ஆண்டுகள் என்று சொன்னார்கள். இரண்டு ஆண்டுகள் முடிந்து, இப்போது மூன்றாண்டுகள் ஆன பின்னாலும், அவர்களை நிரந்தரமாக்குகின்ற பணியை எடுத்துக்கொள்ளவில்லை. எனவேதான் செவிலியர்கள் சம்பந்தப்பட்ட இந்தப் பிரச்சினையில் ஒப்பந்த அடிப்படை என்பது மாற்றப்பட்டு, நிரந்தரமாக அவர்களைப் பணியில் அமர்த்த வேண்டிய ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 4–35

அடுத்து, இருதய அறுவை சிகிச்சை, அதுபோல சிறுநீரக அறுவை சிகிச்சை முடிந்தபின் மருந்துகள் பற்றாக்குறை என்று பொதுவான கருத்து இருக்கின்றது. அதற்கு ஒரு நல்ல முடிவை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

அதுபோன்றுதான் நம்முடைய குழந்தைகள் மருத்துவமனையிலே இருதய அறுவை சிகிச்சை என்பது நம்முடைய மாநிலத்திலே ஒன்றுதான் இருக்கின்றது என்று நினைக்கின்றேன். அந்த அடிப்படையில் அங்கு போதுமான ஏற்பாடுகள் முழுமையாக இருக்கின்றனவா என்று கேட்டால், இல்லை. சில பற்றாக்குறைகள் இருக்கின்றன. அவற்றைத் தவிர்த்தாக வேண்டும். தனியார் கல்லூரிகள்தான் அல்லது தனியார் மருத்துவமனைகள்தான் அதிலே சிறந்த இடத்தைப் பிடித்துக்கொள்கின்றன. எனவே, அதற்கும் ஒரு மாறுதலை ஏற்படுத்த வேண்டும்.

குழந்தைகள் அறுவை சிகிச்சைக்கு Nitric Oxide Delivery System–க்கு ஒரு இயந்திரம். அந்த இயந்திரத்தினுடைய விலை என்னவோ பத்தரை இலட்சம் ரூபாய்தான். நம்முடைய இந்தத் துறை, அரசு நினைக்குமேயானால் பத்தரை இலட்சம் ரூபாய் ஒன்றும் பிரச்சினைக்குரிய விஷயமல்ல. அந்த வகையிலே அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, நம்முடைய அரசு மருத்துவமனைகளில் உள்ள இயந்திரங்களைப் பழுதுபார்த்தல். Scan, மற்ற இயந்திரங்கள் பழுதுபட்டுப் போனால், அதையும் ஒரு contract system-இலே தனியாரிடம் ஒப்படைக்கின்ற ஒரு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அது தவிர்க்கப்பட வேண்டும். ஏனென்று சொன்னால், அதிலே இலாபக் கண்ணோட்டம்தான் வருமே தவிர, sincerity இருக்காது. எனவே, நம்முடைய அரசாங்க ஊழியர்களை வைத்துக்கொண்டு, நாம் அவற்றைச் சரி செய்தோமானால், அதிலே ஒரு sincerity இருக்கும். அவர்களுக்கு இலாபக் கண்ணோட்டம் வராது. அந்த அடிப்படையிலே நடவடிக்கை மேற்கொள்வது நன்றாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து.

அதுபோன்றுதான் ஓமியோபதி. ஏனென்றால், அதிலே எந்தவிதமான பக்க விளைவுகளும் இல்லை என்று சொல்லக்கூடிய இன்னொரு மருத்துவ முறை அது. மிகச் சிறப்பான முறையிலே நம்முடைய மாநிலத்திலே நடைபெற்று வருகின்றது. ஆனால் அதற்கு ஒரு தனி இயக்குநர் வேண்டும். அந்த இயக்குநர் நியமிக்கப்படுகின்றபோது ஒரு சிறந்த மருத்துவர் அதிலே நியமிக்கப்படுவதாக இருந்தால் கொஞ்சம் சிறப்பாக இருக்கும். அந்த வகையிலே காரியங்களை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய ஆரம்ப சுகாதார நிலையங்கள். பல ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சிப் பாதையிலே நாம் சென்று கொண்டிருக்கிறோம். இருந்தாலும்கூட, கொல்லங்கோடு என்று என்னுடைய தொகுதியில் வருகின்ற ஒரு பெரிய கிராமம். அந்தப் பெரிய கிராமத்திலே கிட்டத்தட்ட 40 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள்தொகை உள்ளது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே பேசினோம், அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு, மாண்புமிகு அமைச்சர் வரையிலும் அந்த இடத்தை எல்லாம் பார்வையிட்டார்கள். இருந்தாலும்கூட, இதுவரையிலும் வரவில்லை.

எனவே, கொல்லங்கோட்டிலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை உருவாக்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, அந்தத் தொகுதியிலே இருக்கக்கூடிய ஒரு பஞ்சாயத்து, கடையாலுமூடு சிறப்புப் பேரூராட்சி. அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய பெருவாரியான மலைவாழ் மக்கள் குடியிருக்கின்ற பகுதி. அங்கே இப்போது பத்துகாணி என்ற இடத்திலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கின்றது. நேற்றைக்கு அங்கே இருக்கக்கூடிய பொறுப்பு வாய்ந்தவர்கள் தகவலைச் சொன்னார்கள். குடிக்கத் தண்ணீர், ஒரு drop கூட கிடைக்கவில்லை. அதற்குப் பின் மாவட்ட ஆட்சித் தலைவருடன் காலையிலே தொலைபேசியிலே பேசி, எப்படியாவது குடிப்பதற்கான தண்ணீரைத் தருவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்கின்ற அந்தக் கருத்தையும் நான் இங்கே வலியுறுத்த விரும்புகின்றேன்.

அதுபோல, நாகர்கோவிலிலே ஒரு காசநோய் மருத்துவமனை. அது இப்போது இருக்கிறதா, இல்லையா என்று எனக்கு ஒரு சந்தேகம். ஏனென்றால், ஒரு காலத்திலே இந்த மாநிலத்திலே, நம்முடைய மாவட்டத்திலே, இந்த வட்டாரத்திலே வரக்கூடிய காசநோயாளிகளைக் கவனிக்கின்ற, மிகச் சிறப்பாக நடந்து வந்த காசநோய் மருத்துவமனையிலே, அன்றைக்கெல்லாம் நோயாளிகளுக்கு நேந்திரம் பழத்தை உணவாகக் கொடுத்து வந்தார்கள். ஆனால் இப்போது சாதாரண பச்சைப் பழம் இருக்கிறதில்லையா–பச்சைப் பழம் என்று சொல்லுவோம் நாங்கள்–அந்தப் பழத்தைக் கொடுக்கிறார்கள். அதிலே எந்தவிதமான உயிரூட்டமும் இருக்காது. எனவே, அந்த உணவு முறையிலே சில மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதை நான் நம்முடைய மாண்புமிகு அமைச்சருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

அதுபோன்று குழித்துறையிலே இருக்கிற அரசு மருத்துவமனை. ஏற்கெனவே தாலுகாவினுடைய மைய மருத்துவமனை என்று ஏற்பாடு செய்து, சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கிட்டத்தட்ட 1 கோடி ரூபாய் வழங்கப்பட்டு, அந்த மருத்துவமனைக்குள்ளே கட்டடங்களைக் கட்டுவதற்காகச் செலவிட்டிருக்கின்றோம். Operation theatre வரையிலும் அதற்குள்ளே செயல்படுகின்றன. ஆனால், இப்போது குழந்தைகள் பகுதியிலே அங்கே மருத்துவர்கள் இல்லை. அப்படி ஒரு பஞ்சம் இருக்கின்றது. C.T. Scan என்பது தவிர்க்க முடியாதது. ஒரு தாலுகா மைய மருத்துவமனை என்ற முறையிலே அதை நீங்கள் பார்க்க வேண்டும். அந்த அடிப்படையிலே

நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். மாண்புமிகு அமைச்சரவர்கள் பல காரியங்களை அங்கே செய்திருக்கின்றார்கள். என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) அதே நேரத்தில், இடப் பற்றாக்குறை. பக்கத்திலே ஒரு 25 சென்ட்...

பிற்பகல் 4–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி, இரண்டு மணித்துளிகளில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. டி. மணி: முடித்துக்கொள்கின்றேன். 25 சென்ட் நிலம் தனியாரிடத்திலே இருக்கிறது. அது வெறுமனேதான் இருக்கிறது. அரசினுடைய கொள்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி, அந்த மாற்றத்தின் அடிப்படையில் அந்த இடத்தை நில ஆர்ஜிதம் செய்வதற்கு அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

அதேபோல டாக்டர்களை நியமனம் செய்கின்றபோது, ஏற்கெனவே பல பிரச்சினைகள் அதற்குள்ளே இருக்கின்றன. அவர்களில் படிப்பை முடித்து நிறைய டாக்டர்கள் வெளியிலே இருக்கின்றார்கள். அவர்களை நியமனம் செய்வதில் என்ன பிரச்சினை என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. அந்த வகையிலே, படிப்பை முடித்து இருக்கின்ற டாக்டர்களை முன்னுரிமை அடிப்படையிலே நியமனம் செய்கின்றபோது, அவர்களை Employment Exchange மூலமாகவா அல்லது அரசினுடைய துறையாக நாம் செயல்படுத்தி வருகின்ற ஒரு துறை இருக்கின்றதே, அதன்மூலமாக எடுத்துக்கொள்வதா என்பதை அரசு தீர்மானிக்க வேண்டும். அந்த வகையிலே நம்முடைய மருத்துவத் துறை என்பது, டாக்டர்கள், நர்சுகள் பற்றாக்குறையைப் போக்கிக்கொள்ள வேண்டும்.

உயிர் காக்கும் மருந்துகள். தாலுகா headquarters மருத்துவமனைக்கு, நம்முடைய மாவட்ட மருத்துவமனையில் இருக்கக்கூடிய உயிர் காக்கும் மருந்துகள் தேவை. இப்பொழுது பாம்புக் கடிக்கு மருந்து என்று சொன்னால், அந்த injection–ஐப் போடுவதற்குத் தனிப் பயிற்சி வேண்டுமென்று நம்முடைய டாக்டர்கள் சொல்கின்றார்கள். அதற்கான ஒரு டாக்டரையும் நம்முடைய மாவட்ட மருத்துவமனையிலும் சரி, நம்முடைய தாலுகா மருத்துவமனையிலும் சரி, அந்த மருத்துவர்களை நாம் அளிப்பதன் மூலமாக பாம்புக் கடியாக இருந்தாலும் சரி, இப்போது நாய்க் கடிக்குகூட விசேஷமான மருந்துகள் வெளியிலே கிடைக்கின்றன. ஒரு வெறிநாய் கடித்துவிட்டால் இரண்டு injection தான். ஆனால்

1,200 ரூபாய், 1,500 ரூபாய் விலை. நம்முடைய அரசு மருத்துவமனையில் என்ன நடக்கிறது என்றால், பழைய கால சம்பிரதாயப்படி, வயிற்றில் தொப்புளைச் சுற்றி 4 பக்கங்களிலும் 7 injections என்று சொல்லுகின்ற ஒரு நிலை இருக்கின்றது. அந்த நிலையை மாற்றி, நவீன மருந்துகளைப் பயன்படுத்துவதற்காக இந்தச் சந்தர்ப்பத்தை இந்த அரசு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அந்த வகையிலே நம்முடைய தாலுகா, அதுபோன்று நம்முடைய மாவட்ட மருத்துவமனைகள் வருகின்ற இடங்களில் இந்த சம்பிரதாயம் வேண்டும்.

இன்னொன்றை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, மதுரையிலே இருக்கின்ற இராஜாஜி மருத்துவமனை. 15, 20 வருடங்களுக்கு முன்னாலே இருந்ததைக் கேட்டோம் என்று சொன்னால், இராஜாஜி மருத்துவமனைக்கு இருந்த சிறப்பு அன்றைக்கு ஒருவிதமாக இருந்தது. ஆனால் இப்போது அந்த இராஜாஜி மருத்துவமனை உண்டா, இல்லையா என்ற ஒரு கேள்விக்குறி வருகின்ற நிலையிலே நாம் இருக்கின்றோம். எனவே இவற்றையெல்லாம் கவனத்திலே எடுத்துக்கொண்டு, இந்தத் துறை இப்போது செலவழிப்பதற்காக சுமார் 1,700 கோடி ரூபாயை எய்தியிருக்கிறார்கள். இதை 2,000 கோடி ரூபாயாக நீங்கள் உயர்த்தினாலும் இது தகும். அந்த அடிப்படையிலே இந்தத் துறை, மனிதர்களுடைய உயிரைப் பாதுகாக்கின்ற ஒரு துறை என்ற முறையிலே, அந்த வகையிலே நிதி நெருக்கடி என்பது இல்லை. இருந்தாலும்கூட, அந்த நிதியைத் தந்து துறையை வளர்ச்சிப் பாதையிலே எடுத்துச் செல்ல வேண்டுமென்று கேட்டு, உரையை முடித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்ட கோரிக்கைகளை வைத்தார்கள். அந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் பார்க்கும்போது, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய தலைமை மருத்துவமனையைப் பற்றி ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே தலைமை மருத்துவமனையாக, மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பத்மநாபபுரம், தக்கலை மருத்துவமனையைத் தலைமை மருத்துவமனையாக ஆக்கிவிட்டார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று ஆயுர்வேதம் பற்றி இங்கே கூறினார்கள். உங்களுக்கே நன்றாகத் தெரியும். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆயுர்வேதம், ஓமியோபதி எல்லாம் என்ன நிலையில் இருக்கின்றது. அரசின் சார்பாக மற்ற மாவட்டங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கன்னியாகுமரி மாவட்டத்தில் வருகின்ற நிதியாண்டில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று அரசு ஆயுர்வேத கல்லூரி ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, நிதிநிலைமைக்கேற்ப அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று மருத்துவர்கள் appointments-ஐப் பற்றி நீங்கள் கூறினீர்கள். அவர்களை வேலையில் அமர்த்துவதைப் பற்றிக் கேட்டீர்கள். தற்சமயம் தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக இருக்கக்கூடிய மருத்துவர் காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை 2,322. அவர்கள் அனைவரையும் Tamil Nadu Public Service Commission மூலமாகத்தான் எடுக்க வேண்டுமென்று இருந்தது. பல்வேறு மருத்துவக் கல்லூரிகள் புதிதாகத் தொடங்கியதன் அடிப்படையிலே ஆங்காங்கே மருத்துவர்கள் தேவைப்படுவதால், உடனடியாக அந்த மருத்துவர்களை அந்த மருத்துவக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்துவிட்டு, ஒப்பந்த அடிப்படையிலே Medical Consultant என்ற முறையிலே அவர்களுக்குக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு அந்த வேலையை அளித்து, அவர்கள் Tamil Nadu Public Service Commission மூலம் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் பணியிலே அமர்த்தப்படுவார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல் நாய்க் கடி மருந்தைப் பற்றிச் சொன்னீர்கள். தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைய சூழ்நிலையில் கிட்டத்தட்ட 15 கோடி ரூபாய்க்கு நிதியை ஒதுக்கி, அந்த நிதியின்மூலம் இப்போது பல்வேறு மாவட்டங்களிலே நாய்க் கடி மருந்துகள் கிடைக்கின்றன. அதை இதற்கு முன்னாலே கூறிய சட்டமன்ற உறுப்பினர்கூட ஆங்காங்குள்ள இடங்களிலே எவ்வளவு தட்டுப்பாடு இருந்ததோ அவ்வளவையும் நீக்கியிருக்கிறது என்று இந்த அரசைப் பாராட்டியிருக்கிறார்கள். நீங்கள் கூறியதுபோல, இப்போது வாங்கக்கூடிய அந்த நாய்க் கடி மருந்து—Tissue Culture Vaccination—இதற்கு முன்னால் விலங்குகளிலிருந்து அந்த மருந்துகள் தயாரிக்கப்பட்டன. தற்சமயம் மனிதனுடைய tissue—விலிருந்து எடுத்து, அப்படி எடுக்கும்போது side effect எதுவுமே இருக்காத முறையிலே அந்த

மருந்துகள் இப்போது மக்கள் மத்தியிலே கொடுக்கப்படுகின்றன. எந்த இடத்திலும் இப்போது நாய்க் கடி மருந்து தட்டுப்பாடு இருக்காது என்பதை நான் இந்த நேரத்திலே மாமன்றத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 4–45

அதேபோல, கொல்லங்கோட்டிலே P.H.C. – அரசு ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். வருகின்ற நிதியாண்டிலே நிதிநிலைக்கேற்ப உங்களுடைய கொல்லங்கோடு பகுதிக்கு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

மதுரை இராஜாஜி மருத்துவமனையும், மருத்துவக் கல்லூரி பற்றியும் இங்கே கூறினார்கள். மதுரையைப் பொறுத்த வரையிலே, இங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் நன்றாகத் தெரியும். மதுரையிலே இருக்கக்கூடிய, தென் மாவட்டங்களிலே இருக்கக்கூடிய மருத்துவமனைகளிலே இன்றையதினம் தலைசிறந்த மருத்துவமனையாக அது விளங்கிக்கொண்டிருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய மருத்துவர்களால், அங்கு வரக்கூடிய நோயாளிகளுக்கும் நல்ல முறையிலே சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதை இந்த மாமன்றத்திலே நான் பெருமையாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குகிற நேரத்திலே, தலைமை மருத்துவமனையாக பத்மநாபபுரம் மருத்துவமனை அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதுவல்ல பிரச்சினை. அதாவது, நாகர்கோவில் கோட்டாரிலே ஏற்கெனவே தலைமை மருத்துவமனையாக இருந்த மருத்துவமனையை மூடிவிட்டு, இப்போது எல்லாப் புறநோயாளிகளையும் கல்லூரி மருத்துவமனைக்கு வருவதற்கு direct பண்ணப்படுவதன் காரணமாக, இந்த Medical College மருத்துவமனையிலே பெரிய நெருக்கடி ஏற்படுகிறது. அதுமட்டுமல்ல. அது town–உடைய ஒரு ஓரத்திலே இருப்பதனாலே, மாவட்டத்திலிருந்து வருகிற மக்களுக்கு அதிலே பிரச்சினை இருக்கிறது. ஆகவே, ஏற்கெனவே

இருந்த கோட்டார் மருத்துவமனை மீண்டும் செயல்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதனுடைய கருத்து.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டாரிலே மருத்துவமனை தற்சமயம் இயங்கிக்கொண்டிருக்கிறது. தேனி, கன்னியாகுமரி, வேலூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கியவுடனே, அந்த மருத்துவக் கல்லூரிகளுக்காக அங்கே இருக்கக்கூடிய மருத்துவர்கள் மட்டுமல்ல, அங்கே இருக்கக்கூடிய நோயாளிகளும், அதாவது அங்கே இருக்கக்கூடிய மாணவர்களுடைய படிப்பினுடைய எண்ணத்தைக் கருத்தில் கொண்டு, அங்கு இருக்கக்கூடிய அத்தனை மாணவர்களுடைய வருகை ஆண்டு ஒன்றிற்கு 100 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். வேலூரிலும் சரி, கன்னியாகுமரியிலும் சரி, தேனியிலும் சரி, அந்த மருத்துவமனை இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே நோயாளிகளும் இருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) என்ன?

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) அமைச்சர் பேசும்போது கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். ஞானசேகரன், உட்காருங்கள். திரு. பழனிசாமி பேசுகிறார். (குறுக்கீடு) அதற்காகக் கொடுக்க முடியாது. உட்காருங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக சில கருத்துகளைப் பதிவு செய்ய நான் முன்வருகின்றேன். கொள்கைக் குறிப்பிலே சென்னையிலே உலகத் தரம் வாய்ந்த, ரூ.104 கோடியிலே புதிய கட்டடம் ஒன்று கட்டி மருத்துவமனை திறப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மருத்துவர்களையும், செவிலியர்களையும் நாம் நியமிக்க இருக்கிறோம். அதே நேரத்திலே MNC என்ற இந்த வெளிப்புறத்தினரை அதிலே அமர்த்துவதாக அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது, திட்டமிட்டிருக்கிறது என்கின்ற ஒரு நிலை இங்கே தெரிவிக்கப்படுகிறது. ஆகவே அப்படிப்பட்ட வெளிப்புற நோயாளிகளை தனியாரிடத்திலே விடுவது என்பது இவ்வளவு பெரிய,

இந்தியாவிலே ஒரு தரம் வாய்ந்த மருத்துவமனையைக் கட்டி, தனியாரிடத்திலே ஒப்படைப்பது என்பது சரியல்ல.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஏதோ ஒரு தவறான கருத்தை இங்கே கூறிக்கொண்டிருக்கிறார். இதுபோன்ற கருத்துருக்கள் ஏதும் அரசிடம் சற்றேனும் இல்லை.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொன்னதற்கு உண்மையிலேயே நன்றி. அதேபோன்றுதான், இன்றையதினம் எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், பணி ஒப்பந்த அடிப்படையில் சில பேர்களை நியமிப்பதாகவும், அதற்கான முறைகளை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். மருத்துவர்களைப் பொறுத்தமட்டில் நான் ஒன்றைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். பெரும் பகுதி தமிழ்நாட்டிலே இருக்கிற மருத்துவர்கள், அது மாவட்ட மருத்துவமனையாக இருந்தாலும் சரி, அல்லது மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும் சரி, இல்லை வட்ட மருத்துவமனையாக இருந்தாலும், காலை நேரங்களில் மருத்துவர்கள் வருவதும், மாலை நேரங்களிலே வராத போக்கும் இருக்கிறது. இதற்காக என்ன உத்தரவு நம்முடைய அரசு அறிவித்திருக்கிறது என்பதை இங்கே விளக்க வேண்டும் என்று கேட்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். மாலை நேரத்திலே அவர்கள் பணி புரிய வேண்டும் என்கிற ஒரு நிலையை நம்முடைய அரசு கொண்டுவர வேண்டும்.

பிற்பகல் 4–50

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: ஏற்கெனவே அந்த உத்தரவு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே மருத்துவர்களுடைய நிலையைப் பற்றி விளக்கினார்கள். இன்னும் 2 நாட்களுக்குள்ளாக அனைத்து மாவட்டங்களுடைய மருத்துவமனைகளுடைய மருத்துவர்கள் ஒப்பந்த அடிப்படையிலே போடப்படவிருக்கிறார்கள். அப்படிப் போடும்போது மட்டுமல்லாமல் வருகின்ற இந்த Service Commission எழுதும்போது அவர்களுக்கு ஒவ்வொரு மருத்துவமனையிலும் அதற்கான போர்டுகளும் வைத்து அதற்கான நடவடிக்கைகளும் கண்டிப்பாக எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சின்னச் சின்ன விஷயங்களை எல்லாம்–எதிர், எதிரேதானே இருக்கிறீர்கள்–பேசி முடித்துக்கொள்ள வேண்டியதுதானே ?

திரு. ஜி. பழனிசாமி: நான் தெரிந்துகொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மருத்துவர்களும், செவிலியர்களும் பார்த்தோம் என்றால், ஒட்டுமொத்தமாக-- தமிழ்நாட்டிலே நான் ஏதோ பொத்தாம் பொதுவிலே சொல்ல விரும்பவில்லை--தமிழ்நாட்டிலே அனைத்து மருத்துவக் கல்லூரிகளையும், மாவட்ட மருத்துவமனைகளையும் நேரடியாகச் சென்று பார்த்திருக்கின்றேன். அரசினுடைய கமிட்டியின் சார்பாகச் சென்று பார்த்திருக்கின்றேன். குறைந்தபட்சம் 30 சதவிகிதம் இன்றைக்கு அரசு மருத்துவர்களும், செவிலியர்களும் பணியில் நிரப்ப முடியாத ஒரு போக்கும் இருக்கிறது. ஏன் என்று சொன்னால்–அமைச்சர் அவர்கள் மறுக்கலாம். யதார்த்த நிலையைச் சொல்கின்றேன். அவர்களை எல்லாம் நீங்கள் உடனடியாக நிரப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதேபோன்று, இன்றைக்கு எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், மருத்துவமனைகளிலே உள்ள பல்வேறு ஊழியர்களுடைய அந்தச் செயல்பாடு என்பது குறைவாக இருக்கின்றது. இதை எப்படிக் கண்காணிப்பதென்றால்–ஏதோ நீங்களோ, நாங்களோ கண்காணிக்க முடியாது–இதற்காக வேண்டி ஒரு Vigilance Committee-யை அமைக்கலாம். எந்த நேரத்திலே யார் பணியாற்றுகிறார்கள், யார் பணிபுரியவில்லை, எப்படிப்பட்ட நிலையிலே அவர்கள் பணியாற்றுகிறார்கள் என்பதற்கான ஒரு Vigilance Committee–யைக்கூட அமைப்பது என்பது உண்மையிலேயே நல்லதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதையும் அரசு நியமிக்கலாம்.

பிறகு மருத்துவர்கள் பணி முன்னுரிமை இல்லை என்று இன்றைக்குப் பல மருத்துவர்கள் சொல்கிறார்கள். நேர்மையாக நாங்கள் அரசு மருத்துவமனைகளிலே பணியாற்றுகிறோம். ஒரு தேசக் கடமையோடு, மக்களுடைய கடமையோடு பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். ஆனால் பதவி உயர்வு செய்கிறபோது வேறு, குறுக்கு வழியிலே யாரோ வந்து விடுகிறார்கள். எங்களைப் பொறுத்தமட்டிலே அப்படி வர முடியவில்லை. எனவே ஒரு seniority அடிப்படையிலே அல்லது service அடிப்படையிலே எங்களை எல்லாம் பணியமர்த்த வேண்டும் என்கிற ஒரு குறைபாடு இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இருக்கின்ற மூத்த, அனுபவமிக்க மருத்துவர்களிடத்திலே இருக்கின்றது. அதையும் அரசு கவனத்திலே கொள்ள வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: இந்த அரசைப் பொறுத்த வரையிலே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, இருக்கக்கூடிய மருத்துவர்களுடைய இடமாற்றமாக இருந்தாலும் சரி,

அவர்களுடைய promotion-ஆக இருந்தாலும் சரி, seniority அடிப்படையிலேதான் போடப்படுகிறது. சிலர் நீதிமன்றம் சென்று கொண்டிருக்கிறார்கள். அப்படி இருந்தும் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வந்தால் அதற்கும் அரசு அப்பீல் செய்து கொண்டிருக்கிறது. அதுபோன்ற குறைகள் யாராவது உங்களிடம் கூறியிருந்தால் நேரடியாக என்னிடம் கொடுக்கலாம்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பட்டியல் என்னிடம் கையிலே இருக்கிறது. பெயரைச் சொல்ல, இடத்தைச் சொல்ல நான் விரும்பவில்லை. அமைச்சர் எழுதிக் கேட்டதனாலே அவரிடம் கையிலே கொடுக்கின்றேன். அந்தக் காரணத்திற்காகத்தான் அவர்கள் கோர்ட்டுக்குப் போய் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்கவில்லை என்பதற்காக நீதிமன்றங்களுக்குப் போயிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை எல்லாம் சரி செய்ய வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதேபோன்று நவீனமான மருத்துவக் கருவிகள் இன்றைக்குத் தமிழ்நாட்டிலே நிறைய வழங்கப்பட்டிருக்கின்றன; இல்லை என்று சொல்ல முடியாது. நிறைய கருவிகள், அரசாங்க மருத்துவமனைகளுக்கு நல்ல கருவிகள் எல்லாம், நவீன நோய்களைக் கண்டறிவதற்காக இன்றைக்கு வழங்கி இருக்கிறது. ஆனால் செயல்பாடு இல்லாமல் இருக்கிறது. எந்த ஒரு செயல்பாடும் இல்லாமல், கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு அரசாங்கத்தினுடைய பணத்தைச் செலவழித்து வாங்கப்பட்டிருக்கின்ற நவீன கருவிகள் இன்றைக்குச் செயல்படாமல் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், திருத்துறைப்பூண்டியிலே ஒரு வருடமாகக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், அங்கே பார்த்தீர்கள் என்றால், ஒரு புதிய X-Ray machine 300 mm உள்ளது. அதை நிறுவி ஒரு வருட காலம் ஆகிறது. இன்றைய வரையிலே என்ன சொல்கிறார்கள் என்றால், TNMSC உத்தரவு வரவில்லை என்று சொல்லி நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இதுமாதிரி பல மருத்துவமனைகளிலே அந்த உத்தரவு வந்து இதுவரையிலே வழங்கப்படாமல், எதற்காக வாங்கப்பட்டது, எதற்காகப் பொருத்தப்பட்டது, யாருக்காக அது செயல்படாமல் பல ஆண்டு காலமாக இருக்கிறது, அப்படிப்பட்டவற்றையெல்லாம் மருத்துவ அதிகாரிகள் கண்டறிந்து, செயல்பட வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இன்றைக்குப் பல புதிய, புதிய நோய்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதுபோல தமிழ்நாட்டிலே பார்த்தீர்கள் என்றால், Leptospirosis என்கின்ற ஒரு நோய் இன்றைக்கு வந்திருக்கிறது. அந்த நோயைப் பொறுத்தவரையிலே, இன்றைக்கு ஜனங்களிடத்திலே ஒரு விழிப்புணர்வே இல்லை. எய்ட்ஸ் பற்றித் தெரிகிறது, புற்றுநோயைப் பற்றித் தெரிகிறது, பல நோய்களைப் பற்றித் தெரிகிறது; இந்த நோயைப் பற்றிய ஒரு விழிப்புணர்வு தமிழக அரசு சார்பாக இதுவரையிலே வரவில்லை. இதற்கு உரிய முறையிலே மக்களிடம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோன்றுதான் இன்றைக்கு சின்ன, சின்ன விஷயங்கள். மருத்துவமனைகளைப் பார்த்தோம் என்று சொன்னால், சின்னப் பணிகளிலேகூட அரசாங்க அதிகாரிகள் கவனக் குறைவாக இருக்கின்றார்கள். அதை அமைச்சர் கவனத்திற்கு நான் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சாதாரணமாகப் பார்த்தோம் என்று சொன்னால், சில இடங்களிலே மருத்துவமனைகளிலே, தாலுகா மருத்துவமனைகளிலே, மாவட்ட மருத்துவமனைகளிலே, மருத்துவக் கல்லூரிகளிலே பார்த்தோம் என்று சொன்னால் மருத்துவ வேன்கள் நிறைய இருக்கின்றன. வண்டி, வாகனங்கள் இருக்கின்றன. அதுபோன்று பிண ஊர்திகள் இருக்கின்றன. Driver கிடையாது. டிரைவர் இல்லாமல் புது வண்டிகள் கொண்டுபோய் அங்கே நிறுத்தப்பட்டிருக்கின்றன. கேட்டால் அமைச்சர் சொல்வார்கள், நாங்கள் இத்தனை வண்டியை வாங்கிக் கொடுத்திருக்கின்றோம், அதெல்லாம் பயன்பட்டுக்கொண்டிருக்கிறது என்று சொல்வார்கள். அங்கே பார்த்தால் டிரைவரே கிடையாது. அதனாலே, சாதாரண மக்கள், ஏழை, எளியவர்கள் யாராவது ஒருவர் இறந்து போனால், பிரேதத்தை எடுத்துச் செல்வதற்குத் தனியார் வாகனத்தைப் பயன்படுத்தவேண்டிய அவசியம் இன்றைய தினத்திலே இருக்கின்றது. அவர்கள் கேட்கின்ற ரூபாயை அந்த ஏழை, எளியவர்கள் கொடுத்து அந்தப் பிரேதத்தைத் தன்னுடைய ஊருக்கு எடுத்துச் செல்கின்ற நிலையைப் பார்த்தீர்களேயானால், ரொம்பப் பரிதாபமான நிலைமை கிராமப்புறங்களிலே இருக்கிறது. ஆகையினால் நம்முடைய அரசாங்கம்கூட இன்னொன்று செய்யலாம், அவற்றிற்கெல்லாம் டிரைவர்கள் நியமித்து, அந்த டீசலுக்குரிய பணத்தை மட்டுமே பெற்றுக்கொண்டு, அந்தப் பிண ஊர்திகளைப் பயன்படுத்துவது மிக சௌகரியமாக இருக்கும். அதையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 4–55

அதேபோன்று பல ஆண்டு காலமாகப் பார்த்தோம் என்று சொன்னால், British ஆட்சிக் காலத்திலேயே இருக்கிறது இந்தப் பிரேதப் பரிசோதனை என்பது. இப்பொழுது பார்த்தீர்களேயானால், நவீனமாகியிருக்கிறது. இங்கே நமக்குக்கூட ஏற்கெனவே போட்டிருந்த light போதவில்லை என்பதற்காக, நான்கு பக்கத்திலேயிருந்து நல்ல ஒளி, light போடப்பட்டுள்ளது. கண் தெரியாதவர்களுக்குக்கூட தெரியும்போல இருக்கிறது சட்டமன்றத்திலே. அதேபோன்று மருத்துவமனையிலே 12 மணிக்கு சில operations செய்யவேண்டியிருக்கிறது. அப்படியெல்லாம் அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. மருத்துவப் பரிசோதனை என்று சொன்னால், பிரேதப் பரிசோதனை என்று சொன்னால், காலை 9 மணிக்கு மேலேதான் பண்ணவேண்டும். மாலையிலே 2 மணிக்குட்பட்டுத்தான் பண்ணவேண்டும் என்கின்ற ஒரு உத்தரவெல்லாம் இருக்கின்றது. இதெல்லாம் சாதாரண சின்ன விஷயங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: இதற்கு மட்டும் விளக்கம் கொடுத்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறும்பொழுது, பிரேதப் பரிசோதனையைப் பற்றி இங்கே கூறுகிறார்கள். Forensic சட்டத்தின் பிரகாரம்—இங்கே கூறுகிறார்கள், light இருக்கிறது, light-ஐ வைத்து நீங்கள் பிரேதப் பரிசோதனை செய்யலாம் என்று கூறுகிறார்கள். ஆனால்—இறந்தவர்கள் எப்படி இறந்தார் என்று பார்க்கும்பொழுது, இங்கே இருக்கக்கூடிய இந்த light-னுடைய அந்த வெளிச்சத்தின் காரணமாக அங்கே இருக்கக்கூடிய chemical அந்த இடத்திலே மாறிவிடுமோ என்ற ஒரு ஐயப்பாடு உள்ளது. அதேபோல அந்தச் சட்டத்திலே இடமில்லையானாலும், இதுபோன்ற சூழ்நிலையிலேதான் இந்தச் சட்டத்தை மாற்றமுடியாமல் இருக்கின்றது. இது தமிழ்நாட்டில் மட்டுமல்ல. ஒட்டுமொத்தமாக இந்தியாவில் Medical Jurisprudence–ல் இது இருக்கிறது. ஆகவே, இதை மாற்றுவது அவ்வளவு எளிதல்ல. அரசு மாற்றவேண்டுமென்று நீங்கள் கூறினீர்கள். இது ஒட்டுமொத்தமாக இந்தியாவினுடைய சட்டம். ஆகவே இந்த Forensic சட்டம் மாறும்பொழுதுதான் இதுவும் மாறும்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைவிட ஒரு மோசமான நிலைமை என்னவென்றால், இந்தியாவிலே பார்த்தோமேயானால், இந்தியாவிலே இரண்டாவது இடத்தில் தமிழ்நாட்டிலேதான் விபத்துகள் அதிகமாக நடக்கின்றன. இப்பொழுது அரசாங்கக் கொள்கை குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது–1993 ஆம் ஆண்டு வரையிலும்—2003 ஆம் ஆண்டு வரையிலும்

பார்த்தோமேயானால், 47,362 விபத்துகள் நடந்திருக்கின்றன. இதிலே, இறந்தவர்கள் எண்ணிக்கையைப் பார்த்தீர்களேயானால், 9,174; காயமடைந்தவர்கள் 9,335. காயமடைந்தவர், கை, கால் இழந்தவர்களைப் பார்த்தோம் என்று சொன்னால், அதிகமாக தாலுகா மருத்துவமனை, வட்டார மருத்துவமனைகளுக்குத்தான் சாதாரணபட்டவர்களைக் கொண்டு செல்லவேண்டியிருக்கிறது. அதேமாதிரி, 1994–2004 ஆண்டுகளில் பார்த்தோம் என்று சொன்னால், 47,000 விபத்துகள் நடந்திருக்கின்றன தமிழ்நாட்டிலே. அந்த விபத்துகளிலே மரணம் அடைந்தவர்களை மட்டும் எடுத்தோமேயானால், 8,779 பேர்கள் இறந்துபோய் இருக்கின்றார்கள். காயமடைந்தவர்களுடைய எண்ணிக்கையைப் பார்த்தோமேயானால், 7,344 பேர்கள் காயமடைந்து, கை, கால்களை இழந்தவர்கள் இருக்கின்றார்கள். இப்பொழுது அதிகபட்சமான விபத்துகள் தமிழ்நாட்டிலே நடக்கின்றன. இவற்றையெல்லாம் பார்த்தோமேயானால் வாகன விபத்துகள் நடக்கின்றன. சென்னை போன்ற இடங்களில் உள்ள பெரிய மருத்துவமனைகள் அல்லது மாவட்ட மருத்துவமனைகள் அல்லது மருத்துவக் கல்லூரிகளிலேதான் கொண்டு போய், அவர்களது நோய்களைப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆனால், ஏழைகளுக்காக இருக்கின்ற மருத்துவமனை நம்முடைய அரசு மருத்துவமனை. வசதி படைத்தவர்கள் என்று சொன்னால் பெரிய மருத்துவமனைகளுக்குப் போகலாம். அப்படி ஏழைகள் பார்க்கின்ற மருத்துவமனைகளிலே பல்வேறு குறைபாடுகளும், அங்கு போதிய நவீன கருவிகள் இல்லாத போக்கும் இருக்கின்றன. அப்பொழுது மாவட்ட மருத்துவமனை, தாலுகா மருத்துவமனைகளுக்கு உரிய, அந்த மருத்துவ வசதிக்கான முறைகளை, எலும்பு முறிவு டாக்டர்களை, Civil Surgeon டாக்டர்களை அங்கே எல்லாம் நியமிக்கவேண்டும். இரண்டு நாளைக்கு முன்னாலே, மாவட்ட ஆட்சித் தலைவருடைய அலுவலகங்களிலே சில மருத்துவர்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். நான்கூடக் கேள்விப்பட்டேன். அதைப் பார்த்தோம் என்று சொன்னால், மாவட்ட மருத்துவமனையிலே இருக்கக்கூடிய டாக்டர்களை, மயக்க மருந்து கொடுக்கின்ற டாக்டரை, ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அதேபோன்று, இப்படிப் பல பேரை மாற்றி, மாற்றி அனுப்பியிருக்கின்றார்கள். G.H.-க்குப் போக வேண்டிய டாக்டர்களை எல்லாம் கொண்டு போய், கிராமப்புறத்திலே போட்டு என்ன செய்யப் போகிறோம்?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: இந்தத் தேர்வைப் பொறுத்தவரையிலே, உடனடியாகத் தேர்வு நடந்து முடிந்திருக்கிறது. இந்தத் தேர்விலே, நீங்கள் கூறியதுபோல் மயக்க மருந்து கொடுக்கும் டாக்டர்களை, தேவையான இடத்திற்குத்தான் அனுப்பியிருக்கிறோம்.

(குறுக்கீடு) நிரந்தரம் பண்ணமுடியாது. (குறுக்கீடு) நிரந்தரம் பண்ண முடியாது. அதனால் இவர்களை ஒப்பந்த அடிப்படையிலே Service Commission மூலமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். இடைப்பட்ட காலத்திலே—மருத்துவமனைகளிலே, மருத்துவர்களிலே முன்னுரிமை கண்டிப்பாக உண்டு. மருத்துவமனைகளிலே மருத்துவர்கள் தேவை என்ற அடிப்படையிலே போடப்படுகிறது. நீங்கள் கூறியதுபோல், அதுபோன்ற மருத்துவர்கள் போடப்பட்டிருந்தாலும்கூட, அதற்கும் நாளையதினம் ஒரு மறு counselling வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

பிற்பகல் 5–00

திரு. ஜி. பழனிசாமி: அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. உண்மையிலேயே அதுபோன்று, யாரிடத்திலே, எந்த மருத்துவமனையிலே, எந்த மருத்துவர்கள் தேவை என்று கண்டறிந்து அங்கே அவர்களுக்கு postings கொடுத்தால்தான் பணிபுரிவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். Contract basis–ல் போடுவதால் அரசாங்கம் நிச்சயமாகத் தோல்வி காணத்தான் போகிறது. அவர்கள் இப்போதே, இருக்கக்கூடிய மருத்துவர்கள் பல பேர் சரியாகப் பணிபுரியாத நிலைமைகள் இருக்கின்றன. ஏதோ மேற்படிப்புக்கு மட்டுமே இங்கே வந்து படிக்கிறார்கள். ஒரு நாள் பார்த்தால், இரண்டு மாதங்கள், மூன்று மாதங்கள் நிரந்தரமாக leave போட்டுவிட்டு, தன்னுடைய மருத்துவமனையிலே, தான் வைத்திருக்கின்ற clinic–லே இருந்து பணியாற்றக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அப்படிப்பட்டவர்களை நிரந்தரமாகப் பணி நீக்கம் செய்துவிட்டு, புதியவர்களை அந்த இடத்திலே நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி எடுத்தால், இதுபோன்ற பற்றாக்குறையை ஓரளவுக்கு நீக்க முடியும். அதனால், அந்த contract basis என்பது இல்லாமல், அவர்கள் அச்சத்தோடு தன்னுடைய கடமையைச் செய்ய வேண்டுமென்று சொன்னால், அவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குத் தமிழ்நாட்டில் எல்லாத் தொழில்களுமே ரொம்ப நஷ்டத்திலே இயங்குகின்றன. எந்தத் தொழிலுமே நஷ்டத்தில் இயங்குகிறது. ஆனால், மருத்துவத் தொழில் மட்டும்தான் இலாபகரமாக இயங்குகிறது. தனியாரிடத்திலே பார்த்தோம் என்றால், தனியார் மருத்துவமனைகளைப் பார்த்தோம் என்று சொன்னால், இலாபகரமாக இருக்கிற ஒரே தொழில் இன்றைக்கு மருத்துவத் தொழில்தான். வசதி படைத்தவர்களால் செய்ய முடிகிறது. ஏழைகள் அங்கே போக முடியுமா?

இன்னும் ஒன்றை நீங்கள் கவனிக்க வேண்டும். கிராமங்களிலிருந்து நகரத்தை நோக்கி வருகிறார்கள். ஆயிரக்கணக்கான நோயாளிகள் நகரத்தை நோக்கி வருகிறார்கள். முடியாமல், பணம், காசு இல்லாமல் கஷ்டத்திலே வருகிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று சொன்னால், கிராமப்புறங்களிலே, தாலுகா மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்கள் இல்லாத காரணத்தினாலும், போதிய உபகரணங்கள் இல்லாததாலும், அதற்குரிய மருந்துகளை வழங்காத காரணத்தினாலும், அவர்கள் சென்னை போன்ற நகரங்களுக்கு வந்து வைத்தியம் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இவற்றையெல்லாம் நீங்கள் கவனத்திலே கொண்டு, மாவட்ட தாலுகா மருத்துவமனைகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, நம்முடைய அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, இன்றைக்குப் பார்த்தோம் என்றால், தமிழ்நாட்டில் புற்றுநோயாளருடைய எண்ணிக்கை கூடிக்கொண்டே இருக்கிறது. என்ன காரணத்தினால் அது கூடிக்கொண்டிருக்கிறது என்று கண்டறிய வேண்டும். ஏற்கெனவே, செம்மலை அவர்கள் அமைச்சராக இருந்தபோது என்னுடைய தொகுதியிலே ஒரு இடத்திலே மேல்பெருமலை என்ற ஒரு கிராமத்திற்கு நான் ஒரு மருத்துவ team அனுப்ப வேண்டுமென்று சொன்னேன். அவர் தஞ்சை மருத்துவக் கல்லூரி, சென்னையில் இருக்கின்ற மருத்துவர்களை அனுப்பினார். ஒரு கிராமத்தை மட்டும் ஆய்வு செய்தார்கள். இரண்டு நாட்கள் ஆய்வு செய்தார்கள். அங்கேயிருக்கக்கூடிய 750 மக்கள் தொகையில், கிட்டத்தட்ட 120 பேருக்கு புற்றுநோய் இருந்தது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் 7 பேருக்கு இருந்தது. ஆறு பேர் மரணம் அடைந்தார்கள். இதை ஏன் சொல்கிறேன் என்றால், செம்மலை அவர்கள் அமைச்சராக இருந்தபோது அவர்களால் அனுப்பப்பட்டது. இதில் பார்த்தீர்கள் என்றால், இந்த வைத்தியத்திற்கு, தஞ்சையிலேகூட பிரிவு தொடங்கியிருப்பதாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: புற்றுநோயைக் கண்டறிவதற்கு தஞ்சையிலே ஒரு பிரிவு தொடங்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறீர்கள். அங்கே கண்டறிவதற்குத் தொடங்கப்பட்டது மட்டுமல்ல, பொதுவாக இதற்கென சென்னை அடையாறில் இருப்பது போன்ற ஒரு மருத்துவமனையை, தென் மாவட்டங்களில் இருக்கின்ற மக்களுக்கு வாழ்வளிப்பதற்கு, புற்றுநோயைக் கண்டறிந்து, அதற்கான சிகிச்சை அளிப்பதற்கான

முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். பெரும் பகுதி பார்த்தீர்கள் என்றால், பாண்டிச்சேரிக்குத்தான் அனுப்புகிறார்கள். பாண்டிச்சேரிக்கு அனுப்பினால், என்ன ஆகிறதென்றால், அங்கே எண்ணிக்கை கூடக்கூட அவர்கள் வாரக் கணக்கிலே, மாதக் கணக்கிலே ஒரு card–ஐக் கொடுத்து அனுப்பிவிடுகிறார்கள். ஏழையெளியவர்கள் போய் வைத்தியம் பார்க்க முடியவில்லை. அப்படியொரு மோசமான நிலையிலேயிருந்து இந்த மக்களை நீங்கள் பாதுகாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு மருத்துவர்கள் சொல்கிற காரணம் என்னவென்று சொன்னால், அவர்கள் விவசாயக் கூலித் தொழிலாளர்கள், பீடி குடிப்பது மூலமாகவும், புகையிலையை அவர்கள் போடுவது மூலமாகவும், குடிக்கிற தண்ணீர் சுத்தம் இல்லாத தண்ணீராக இருக்கிற காரணத்தினாலும், இப்படிப்பட்ட நோய் அவர்களைப் பாதிக்கிறது என்று சொல்லப்படுகிறது. இவற்றையெல்லாம் கண்டறிந்து அதற்குரிய நடவடிக்கைகளை நீங்கள் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு இதை நான் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, இன்றைக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களிலே இருக்கின்ற செவிலியர்கள், மருத்துவர்களுடைய சம்பளத்தைப் பார்த்தோம் என்று சொன்னால், அவர்களுக்கு 1.50 இலட்சம் ரூபாய், 2 இலட்சம் ரூபாயாகும். ஆனால், அவர்களுக்கு மருந்து கொடுப்பது 10 ஆயிரம் ரூபாய்க்குத்தான் ஒரு ஆண்டுக்குக் கொடுக்கிறோம். இரண்டு இலட்சம் ரூபாய் ஒரு மருத்துவருக்கும், செவியர்களுக்கும் நாம் சம்பளம் கொடுக்கிறபோது அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய்க்கு மட்டும் மருந்து கொடுப்பது எப்படிப் போதுமானதாக இருக்கும்? ஆக, அதிகமான மருந்துகளைக் கொடுத்து கிராமப்புறங்களிலே இருக்கின்ற மக்களுக்குச் சேவை செய்வதற்கான முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு மருத்துவமனைகளில் படுக்கை வசதிகள் பெரும் பகுதி இல்லை. அங்கே bed வசதிகளே இல்லாத ஒரு நிலைமையிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார். இங்கேகூட மருந்து எல்லாம் இருக்கிறது, 15 கோடி ரூபாய்க்கு நாய்க் கடி, பாம்புக் கடி கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார். கொடுத்திருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், மருத்துவமனைகளிலே அந்த மருந்துகள் கிடையாது. நாங்கள் Estimates Committee–லே போகிறபோது, நாங்கள் போகிற அன்றைக்கு முதல் நாள்தான் வாங்கி வந்து வைக்கிறார்கள். Fan ஓடுவது கிடையாது. அங்கே bed கிடையாது.

அன்றைக்குத்தான் துணியே விரிக்கப்படுகிறது. எங்கேயோ இன்னொரு மருத்துவமனையிலிருந்து வாங்கி வந்து, அங்கே ஒரு பச்சைத் துணியை விரித்துவிடுகிறார்கள். இதெல்லாம் நடைமுறையிலே இருக்கிறது. ஏதோ குற்றச்சாட்டுக்காகச் சொல்லவில்லை. மேலும் பழைய காலத்தில் செய்யப்பட்ட மின்சார இணைப்புகள் அத்தனையும் துண்டிக்கப்பட்டிருக்கிறது. ஒரு செவிலியர்கூட வெந்நீர் வைப்பதற்காக (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன். அவர் வெந்நீர் வைப்பதற்காக plug–ஐச் செருகும்போது shock அடித்து இறந்துபோய் விடுகிறார். இப்படிப்பட்ட மோசமான நிலைமை தமிழ்நாட்டில் இருக்கிற மருத்துவமனைகளில் உள்ளது. நான் எல்லா மருத்துவமனையையும் சொல்லவில்லை. அப்படிப்பட்ட மருத்துவமனைகளை நீங்கள் சீர் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–0.5

அதேபோன்று, திருத்துறைப்பூண்டி மருத்துவமனை. அமைச்சர் அவர்கள் விட்டுவிட்டார்கள். ஏன் என்று தெரியவில்லை. எனக்கு உண்மையிலேயே ஏமாற்றமாக இருக்கிறது. ஏன் என்றால், எதிர்க்கட்சி என்று விட்டுவிட்டார்களா என்று தெரியவில்லை. இதைப் பல தடவை நான் முதலமைச்சரிடத்திலேயும் சொல்லியிருக்கிறேன், இங்கேயும் சொல்லியிருக்கிறேன். கொள்கை விளக்கக் குறிப்பிலேயும் பார்த்தேன். ஏற்கெனவே மன்னார்குடிக்கு 80 இலட்சம் ரூபாய் வந்து இருக்கிறது, கட்டடம் கட்டுவதற்கு. இது மாதிரி நாகை, திருவாரூர், சீர்காழி—அதுவும் எதிர்க்கட்சிதான். அவை வந்திருக்கிற காரணங்கள் எனக்குத் தெரியும். அதற்கெல்லாம்கூட இங்கே அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஏன் கொடுத்தீர்கள் என்று கேட்கவில்லை. அதைப்போல திருத்துறைப்பூண்டி மருத்துவமனைக்கும் செய்ய வேண்டும்.

அண்ணன் ஆற்காட்டார், அமைச்சராக இருக்கும்போது—கோயில் இடம்தான். எந்த இடத்தை எடுத்துக்கொண்டாலும் கோயில் இடம்தான். அந்த இடத்தில் பள்ளிக்கூடம் கட்டினாலும் கோயில் இடம்தான், மருத்துவமனை கட்டினாலும் கோயில் இடம்தான். எதை எடுத்தாலும் கோயில் இடம்தான். எதையும் கட்ட முடிவதில்லை. அவர் இப்போதுதான்—ஆற்காட்டார் அமைச்சராக இருக்கிறபோது—அந்த இடத்தை முன் அனுமதி பெற்று 66 இலட்சம் ரூபாய் கொடுத்தார், ஒரு O.P. கட்டுவதற்கு. அதிலேதான் இன்றைக்கு மருத்துவமனை இயங்கிக்கொண்டு இருக்கிறது. O.P.–யில் 1,500 மக்கள் வருகிறார்கள். மருத்துவமனையே கிடையாது. அதே மருத்துவமனைக்கு என்ன காரணத்தினாலே அவர் கொடுத்தார் என்று கேட்டால், பிறந்த

குழந்தையைப் பன்றி தூக்கிப் போய்விட்டது. அவ்வளவு மோசமான, பாதுகாப்பு இல்லாத நிலைமை. உண்மையிலேயே கொடுமையாக இருக்கிறது. உங்களைத் தயவுகூர்ந்து கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அந்தத் திருத்துறைப்பூண்டி தாலுகா மருத்துவமனையை எடுத்துவிடுங்கள் அல்லது கலைத்துவிடுங்கள். (மணியடிக்கப்பெற்றது) அல்லது வேறு ஊருக்குக் கொண்டு போய்விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடியுங்கள். இன்னொருவர் பேச வேண்டும்.

திரு. ஜி. பழனிசாமி: இன்னொரு ஊருக்குக் கொண்டு போய்விடுங்கள். அங்கே துயரமான நிகழ்ச்சியாக இருக்கிறது. அதை நான் தொடர்ந்து சொல்லிக்கொண்டு இருக்கிறேன். இந்தத் தடவையும் பார்த்தேன், கொள்கை விளக்கக் குறிப்பில் பார்த்தேன். அதிகாரிகள் என்ன நினைக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதிகாரிகள் ஏன் அந்த மருத்துவமனையிலே கவனம் செலுத்தவில்லை என்பது எனக்குப் புரியாத புதிராக இருக்கிறது. ஆகவே அந்த மருத்துவமனையை நீங்கள் புதிய மருத்துவமனையாகக் கட்டுவதற்கான முயற்சிகளை, இந்த நடப்பு நிதியாண்டில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெக. வீரபாண்டியன். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறும்போது தன்னுடைய திருத்துறைப்பூண்டி மருத்துவமனை நிலைமையைப் பற்றிக் கூறினார்கள். அதேபோல புற்றுநோயைப் பார்க்கும்போது தமிழகத்திலே இருக்கக்கூடிய பல்வேறு மாவட்டங்களின் நலன் கருதி, இராயப்பேட்டை, சென்னை மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, தஞ்சாவூர், திருநெல்வேலி, இராஜாஜி, கோயம்புத்தூர், காஞ்சிபுரம், சேலம் ஆகிய மருத்துவமனைகளில் எல்லாம், இன்றையதினம் அந்த நோய்க்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதனை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் திருத்துறைப்பூண்டி மருத்துவமனை பற்றி இங்கே கோபமாக—அதுவும் ஏதோ நான் எதிர்க்கட்சியாக இருக்கிறேன், ஆகையால் எனக்குச் செய்யவில்லை என்று கூறினார்கள். அரசைப் பொறுத்த வரையில், உலக வங்கியினுடைய நிதி பெற்று இன்றையதினம்

பல்வேறு மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்படுகின்றன. அதிலே உங்களுடைய மருத்துவமனையும் இடம் பெறுகிறது. இருந்தபோதிலும், வருகின்ற நிதியாண்டிலே நிதி நிலைமைக்கேற்ப மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்குக் கண்டிப்பாக உங்களுடைய கோரிக்கையை எடுத்துச் சென்று, அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. நம்முடைய நிதி அமைச்சரும், பொதுப் பணித் துறை அமைச்சரும் இருப்பதால் நான் கேட்டுக்கொள்கிறேன்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. மற்றவற்றையெல்லாம் பிறகு கேளுங்கள். திரு. ஜெக. வீரபாண்டியன் (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி: நான் சொல்கிறேன். அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலங்களை ஒரு அரசாங்கம் இன்னொரு துறைக்கு ஒதுக்குவதற்கு இந்தச் சட்டமன்றத்திலே ஒரு சட்டமுன்வடிவு கொண்டு வந்து, பள்ளிக்கூடம் கட்டுவதற்கோ, அல்லது மருத்துவமனை கட்டுவதற்கோ நீங்கள் அனுமதி வாங்கவேண்டும். நீங்கள், என்ன கூறுகிறீர்கள் என்றால், அந்தத் துறையிலிருந்து பணம் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். அந்தத் துறைக்குப் பணம் கொடுக்க முடியாது. ஆற்காட்டார்தான் ஒரு கோடி ரூபாய்க்கு முன் அனுமதி கொடுத்தார். இப்போது அமைச்சர் என்ன சொல்கிறார் என்றால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேச்சை முடித்துவிடுங்கள். திரு. ஜெக. வீரபாண்டியன். (குறுக்கீடு) ஜெக. வீரபாண்டியனா அல்லது அரசனா?

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மன்னார்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் உடல் அழகைப் பார்க்கிறபோது அங்கு மருத்துவமனை தேவையில்லை என்று கருதுகிறேன். அதைத் திருத்துறைப்பூண்டிக்குத் தருவாரா என்பதை அமைச்சரிடத்திலே கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாரைச் சொல்கிறீர்கள்? சிவபுண்ணியத்தையா, பழனிசாமியையா? யாரைச் சொல்கிறீர்கள்? இல்லை, மருத்துவமனை கொடுப்பதெல்லாம், அழகுப் போட்டி வைத்து எல்லாம் கொடுக்க முடியாது. (சிரிப்பு) திரு. ஜெக. வீரபாண்டியன்.

***திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையில் என்னைப் பேசப் பணித்தமைக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–10

இந்தத் துறையில் பல்வேறு உறுப்பினர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று—டாக்டர்கள் பற்றாக்குறை எல்லாப் பகுதிகளிலும் இருக்கிறது—அதை ஓரளவுக்கு நிவர்த்தி செய்கின்ற முகத்தான் 2322 புதிய மருத்துவ அதிகாரிகளை நியமிக்க அனுமதி அளித்துள்ளதையும், அதேபோல 2005–2006 ஆம் ஆண்டில் 35 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய முறை மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளுக்கு அனுமதி அளிக்க இருப்பதையும், அதேபோல, பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, செவிலியர்களின் எண்ணிக்கையையும் உயர்த்துகின்ற வகையிலே, கல்விக் கூடங்களின் எண்ணிக்கையையும், இடங்களின் எண்ணிக்கையையும் உயர்த்தியதையும், அதுமட்டுமல்லாமல், சுனாமியின்போது தங்கள் குழந்தைகளை, வாரிசுகளை இழந்துவிட்டவர்கள்—பெற்றோர்களுக்கு—கருத்தடை செய்து கொண்ட ஆண்கள் மற்றும் பெண்கள், அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப, கருத்தடை நீக்க அறுவை சிகிச்சையை, அவர்கள் விரும்புகிறவகையில், தனியார் மருத்துவமனைகளிலும், அரசு மருத்துவமனைகளிலும் செய்து கொள்வதற்கு, நபர் ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பது உட்பட பல நல்ல செய்திகளை இந்த கொள்கைக் குறிப்பில் குறிப்பிட்டிருப்பதை அறிந்து நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக இவற்றை மகிழ்வோடு வரவேற்கிறேன். 25 ஆயிரம் ரூபாய் தொகை என்பது மிக முக்கியமாகக் கருதப்படவில்லை. வாரிசுகளை, குழந்தைகளை இழந்துவிட்டவர்களுடைய, பெற்றோர்களுடைய சோகம் என்பது இந்த அரசால் சரியாகப் புரிந்துகொள்ளப்பட்டிருப்பதை அறிந்து நான் அந்தப் பகுதியைச் சார்ந்தவன் என்ற முறையில் மிகுந்த நன்றிப் பெருக்கோடு இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

அதுமட்டுமல்லாமல், பல்வேறு நல்ல செய்திகள் இடம் பெற்றிருந்தாலும்கூட, எனது சில கோரிக்கைகளை உங்கள் மத்தியிலே நான் வைக்க விரும்புகிறேன். இருதய மாற்று அறுவை சிகிச்சையின்போதும், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையின்போதும், அந்தச் செலவிலே 25 ஆயிரம் ரூபாயை முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்தும், பிரதமர் நிவாரண நிதியிலிருந்தும் கொடுக்கிறார்கள். அதைப்போல, ஏழைத் தாய்மார்கள், வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்கின்றவர்கள், அல்லது

நடுத்தர மக்கள் மகப்பேறின்போது, Caesarian செய்து, அறுவை சிகிச்சையின்மூலம் குழந்தை பெறுகின்றபோது அவர்களுடைய சுமையைக் குறைக்கின்ற வகையிலே 5 ஆயிரம் ரூபாய் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து கொடுக்குமாறு தங்கள்மூலமாகவும், நமது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மூலமாகவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். காரணம், நகராட்சியிலுள்ள மருத்துவமனையாக இருந்தாலும்கூட 25 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. ஏழைக் குடும்பத்தினரால் அதைச் சரி செய்ய முடியவில்லை. குழந்தை பிறந்த பிறகுகூட, Caesarian operation செய்து கொண்ட பிறகுகூட, 6 மாதத்திற்கு அவர்கள் வேறு வேலைக்குச் செல்ல முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், அவர்களுடைய குடும்பச் சுமையைக் குறைக்கின்ற வகையில் 5 ஆயிரம் ரூபாய் நிதியை முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து கொடுத்தால் ஏழை மக்கள் மிகவும் பயன் பெறுவார்கள் என்பதை இந்த அரிய சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல blood bank-ஐப் பொறுத்த வரையில், மருத்துவக் கல்லூரி இயக்குநருடைய கட்டுப்பாட்டில் 22 blood banks இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ரத்த வங்கி, மாவட்டத்திற்கு இரண்டு என்ற எண்ணிக்கையில் இருந்தால்தான் ஓரளவுக்கு சரியான நேரத்திலே சிகிச்சைக்குப் பலன் அளிக்க முடியும் என்பதை நான் அனுபவ ரீதியாக உணர்ந்து கொண்டிருக்கிறேன். மயிலாடுதுறையில்கூட blood bank இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும்கூட, அது முழுமையான நிலையிலே இயங்குவது இல்லை. தனியார் blood bank தொடங்கினால், அரசு விதிகளைத் தளர்த்தி, அதைப் பரவலாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு குருதி வங்கியைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டில் அரசு சார்பாக இயங்கக்கூடிய 85 வங்கிகளும், தனியார் குருதி வங்கிகள் 131–ம், மத்திய அரசின் குருதி வங்கிகள் 6–ம், அரசுக் காப்பீட்டுக் கழகம் மூலமாக 2–ம், மொத்தம் 224 blood banks இருக்கின்றன. மத்திய அரசினுடைய சட்டப்படி, தனியார் குருதி வங்கிகள் ஆரம்பிக்க வேண்டுமானால் Trust மூலமாகத்தான் ஆரம்பிக்க முடியும். அதற்கு 100 square metre இடமும், 6 அறைகள் கொண்ட இடமும், குறைந்தது 25 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள machineries-ம் வாங்க வேண்டும் என்று ஒரு சட்டம் இருக்கிறது. மத்திய அரசும், மாநில அரசு Inspector–ம் சேர்ந்து, joint–ஆகத்தான் அதற்கான licence

கொடுக்கப்படுகிறது. ஆகவே இதைத் தளர்த்தவும் மத்திய அரசாங்கத்தால்தான் முடியும். Trust மூலமாகத்தான் தனியார் இப்போது அந்த ரத்த வங்கியைத் தொடங்க முடியும் என்பது புதிய சட்டம் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5–15

திரு. ஜெக. வீரபாண்டியன்: அதேபோல, சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலே பல்வேறு முகாம்களை இந்த அரசு நடத்திக் கொண்டிருக்கிறது. தமிழகக் கடற்கரையோரம் முழுவதும் பாதிக்கப்பட்டாலும்கூட, எங்கள் நாகை மாவட்டத்திலே கொள்ளிடக்கரை முதல் கோடியக்கரை வரை உள்ள பகுதிகளில் மக்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதிலே மன நலம் குன்றியவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். சுனாமியினால் மனத் தளர்ச்சி ஏற்பட்டு, மன நலம் குன்றியவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். இவர்களுக்கு சிகிச்சை அளிக்க போதிய வாய்ப்பு நாகை மாவட்ட மருத்துவமனையிலோ அல்லது மயிலாடுதுறை மருத்துவமனையிலோ இல்லை. மன நலம் குன்றியவர்களை திருச்சிக்கு அல்லது தஞ்சைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய கஷ்டம் இருக்கிறது. மன நலம் குன்றியவர்களை தஞ்சைக்கு பேருந்துகள் வழியாக அழைத்துச் செல்வது கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் 3 மாதங்களுக்காவது மன நல மருத்துவர்களை நாகை மாவட்ட மருத்துவமனை, மயிலாடுதுறை மருத்துவமனை, சீர்காழி மருத்துவமனை ஆகியவற்றில் முகாமிடச் சொன்னால், சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் அந்தப் பகுதி மக்களுக்கு மன நலம் குறித்த சிகிச்சை அளிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவரும் தொலைபேசிமூலம் நேரடியாகப் பேசியிருந்தார். அதற்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து, சென்னையிலிருந்து தனியாக மருத்துவர்களை அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜெக. வீரபாண்டியன்: தலைவர் அவர்களே, என் தொகுதி மக்களின் சார்பாக மிகுந்த மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், சுனாமியால் எங்கள் மாவட்டம் பாதிக்கப்பட்டிருந்தாலும், மாவட்ட மருத்துவமனைக்கு—நாகை மாவட்ட மருத்துவமனைக்குப் போதுமான வசதிகளை, சுனாமியைக் கருத்திலே கொண்டு பல்வேறு உதவிகளையும், முன்னேற்றங்களையும் செய்யவிருக்கிறோம். ஆனால், சுனாமி போன்ற இப்படிப்பட்ட இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படுகின்றபோது, பாதித்த மக்கள் உடனடியாக மயிலாடுதுறை, சீர்காழி போன்ற மருத்துவமனைகளுக்குத்தான் அதிகமாக வருகிறார்கள்.

நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் அவர்கள் பேசும்போதுகூட, கிட்டத்தட்ட 700 பேரை தஞ்சையிலே ஒரே நாளில் admission போட்டோம் என்று சொன்னார்கள். அதேமாதிரி, மயிலாடுதுறையிலே கிட்டத்துட்ட 400 பேரை, சுனாமியால் பாதிக்கப்பட்ட அன்று நாங்கள் admit செய்திருக்கிறோம். சீர்காழியிலும் அதேபோன்ற கஷ்டங்கள் இருந்தன. ஆகையினால் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்த வேண்டிய கட்டாயம் நமக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது.

எங்களது மருத்துவமனையைப் பொறுத்த வரைக்கும், போதுமான வசதி இல்லை. வெள்ளைக்காரன் காலத்திலே கட்டப்பட்ட கட்டடங்கள் இன்றைக்கும் அப்படியே இருக்கின்றன. ஏறத்தாழ நாள் ஒன்றுக்கு 10 குழந்தைகள். சராசரியாக ஒரு மாதத்திற்கு... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் இரண்டு மணித்துளிகளிலே உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. ஜெக. வீரபாண்டியன்: சரி. என்னுடைய தொகுதிப் பிரச்சினையோடு உரையை முடித்துக்கொள்கிறேன். 300 குழந்தைகள் பிறக்கின்றன. 250 கருத்தடை Operation-கள் நடக்கின்றன. ஆனால், போதுமான அளவுக்கு Operation theatre-கள் கிடையாது. ஆகையினால், வருங்காலத்திலே மகப்பேறு உள்ளிட்ட சிகிச்சைகளை மேம்படுத்துகிற வகையிலே, இணைந்த ஒரு அறுவை சிகிச்சை அரங்கத்தை, ஒரு intensive care unit–டோடு செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கேயுள்ள ஐ.சி. யூனிட்டும் சரியாகச் செயல்படுவதில்லை. 3 டாக்டர்கள் அவசியம் தேவைப்படுகிறார்கள். ஆனால், ஒரு M.D. தான் இருக்கிறார். அதேபோல மயக்க மருந்து தருகிற டாக்டர்களுக்கும் பற்றாக்குறை. ஒரேயொரு டாக்டர்தான் இருக்கிறார். அது போதவில்லை. எனவே, மேலும் ஒரு டாக்டர் அவசியம் தேவைப்படுகிறது.

அதேபோல, அண்ணன் பழனிசாமி அவர்கள் சொல்லியதைப்போல, எங்களுடைய மருத்துவமனை ஒரு தாலுகா headquarters–லிலுள்ள மருத்துவமனை. ஆனால், முழுவதும் இருண்டு காணப்படுகிறது. மின் விளக்குகள் எதுவும் சரியாக எரிவது கிடையாது. அதேபோல 150 bed–களை condemn செய்திருக்கிறார்கள். ஆகையினால், புதிதாக 200 படுக்கை வசதிகளை முதலில் உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மணல்மேடு மருத்துவமனையில் டாக்டர்கள் தங்குவதற்கு– அது ஒரு தனிப்பட்ட பேரூராட்சி, ஒரேயொரு டாக்டர்தான் இருக்கிறார். மேலும் ஒரு பெண் டாக்டரை நியமிக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. டாக்டர்கள் தங்குவதற்கு–ஒரு quarters இருந்தால் அங்கே தங்கி அவர்கள் பணியாற்றுவார்கள்.

அதேபோல, அங்கே மருந்தாளுநர் கிடையாது. ஒரு மருந்தாளுநரையும், சுகாதாரப் பணியாளர்களையும் நியமிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, மயிலாடுதுறையில் ஒரு மாதத்திற்கு சராசரியாக 75 கண் Operation-கள் நடக்கின்றன. 20 bed வசதியோடுகூடிய கண் Operation theatre ஒன்று கட்டித் தரும்படி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

எனது மயிலாடுதுறை தொகுதியிலேயுள்ள அரசு மருத்துவமனைக்கு, மாவட்ட மருத்துவமனைக்கு இணையாக மக்கள் வந்து போகிறார்கள். ஆனால், C.T. Scan வசதி கிடையாது. குடந்தையும் ஒரு வட்டார மருத்துவமனைதான். ஆனால், அங்கே C.T. Scan வசதி இருக்கிறது. எனவே, மயிலாடுதுறைக்கு ஒரு C.T. Scan வசதி தேவை என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நமது அறந்தாங்கி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், மணல்மேல்குடியிலே bed வசதியோடுகூடிய ஒரு மருத்துவமனை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். சீர்காழி சட்டமன்ற உறுப்பினர்கூட ஒரு கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறார்கள். தேசிய நெடுஞ்சாலை வழியாக வருகின்ற காரணத்தினால், விபத்து சிறப்புப் பகுதியை சீர்காழி மருத்துவமனையிலே மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அளவிற்கு என்னைப் பேசப் பணித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்) திரு. லா. சந்தானம். (குறுக்கீடுகள்) திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது உசிலம்பட்டி தொகுதியிலே இருக்கின்ற மருத்துவமனை ஒரு மாவட்ட மருத்துவமனை. அந்த மருத்துவமனைக்கு, மாவட்ட மருத்துவமனைக்குரிய அந்தஸ்துள்ள C.T.scan போன்றவை வழங்கப்படவில்லை. அதோடுகூட, அது போதுமான படுக்கை வசதிகள் இல்லாமல் ஒரு குறுகிய இடத்திலே இருந்து கொண்டிருக்கிறது. அதிலே பழமையான கட்டடங்கள் இருக்கின்றன. அவற்றை இடித்துவிட்டு ஒரு நல்ல கட்டட வசதியைச் செய்து கொடுத்து, படுக்கை வசதியைச் செய்து கொடுத்து—மகப்பேறு அறுவை சிகிச்சைக்கு நிறையப் பேர் வருகிறார்கள். அவர்களுக்கு 10 படுக்கைகள்தான் அங்கே இருக்கின்றன. எனவே அதையும் சீரமைத்து, அந்தக் கட்டடத்தை இடித்துவிட்டு— புதிதாகக் கட்டடம் அமைத்துத்தர வேண்டும் என்றும், ஏற்கெனவே சென்ற ஆண்டு நான் கோரிக்கை வைக்கின்றபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உலக வங்கியிடமிருந்து நிதியைப் பெறுகின்றபோது அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, உசிலம்பட்டி மருத்துவமனையைப் பெரிதாக படுக்கை வசதிகளோடு செய்து தருவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். அதை வருகின்ற காலத்திலேயாவது செய்து தருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன். அப்படிச் செய்து தருகின்றபோது ஒரு குறிப்பிட்ட தொகையை, 10 இலட்சம் ரூபாயை என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்துகூட வழங்குவதற்குத் தயாராக இருக்கிறேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், முதல்வர் அவர்களும் ஆவன செய்வார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அமைச்சர் பதில் சொல்லட்டும் (குறுக்கீடுகள்) பதில் சொல்லி முடிக்கட்டும். முடித்தவுடனே உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: நான் பதிலுரையில் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரக்கத்தின் வடிவாக, இனிமையின் இசையாக, கருணையின் ஜீவனாக, பெருநீதி வழங்கும் அன்புள்ளமாக, பெற்ற தாயினும் சிறந்த பேருள்ளமாக, ஆலயம்தோறும் அன்னமிட்ட அற்புதத் தாயே! சுனாமியின் தாக்கம்

காண மற்றவர் போல் பினாமியாய் ஆள் அனுப்பாமல், சுழன்றாய் தாயே! சக்கரமாய் சுழன்றாய், பம்பரமாய் சுழன்றாய் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) சுனாமியின் சீற்றத்தைவிட வேகமாய் சுழன்றாய் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) கடல் நீர் அலையினால் அனைத்தையும் இழந்த மக்கள் துயர் துடைக்க போர்க்கால அடிப்படையிலே திட்டங்களைத் தீட்டிய கருணையே, உயிர் மூச்சே! தமிழர்களின் பார்வையிலே இலட்சியத் தாய், இந்தியர்களின் பார்வையிலே அன்புத் தாய், உலகின் பார்வையில் நீங்கள் தங்கத் தாரகை. எங்கள் தாய். உறுதியில் நீங்கள் வைரம், சாதனையில் நீங்கள் சரித்திரம், சுனாமியில் நீங்கள் காக்கும் கரங்கள். ஆற்றுக்கு நீரால் பெருமை, மலருக்கு மணம் பெருமை, யாழுக்கு இசை பெருமை, அம்மா, உங்களால் தமிழருக்குப் பெருமை! (மேசையைத் தட்டும் ஒலி)

மாந்தர் போற்றும் மாதரசியே! தமிழக மக்களின் பாரத மாதாவே! நாளைய பாரதமே! நாங்கள் தினம் உச்சரிக்கும் சுப்ரபாதமே! ஆறுகோடி தமிழர்களின் நிகழ்காலமே! நூறு கோடி இந்தியர்களின் எதிர்காலமே! துன்பத்தை வெற்றிப் படிகளாக்கும் நம்பிக்கை நட்சத்திரமே! அம்மா, என்றும் நல்லவர்கள் எல்லோரும் உங்கள் பின்னாலே, நீங்கள் நினைப்பதெல்லாம் நடக்கும் அம்மா உங்கள் கண்ணு முன்னாலே! (மேசையைத் தட்டும் ஒலி) பெற்ற அன்னையிலும் மேலாக, என்னைப் பரிந்து காக்கின்ற, என்றென்றும் ஆசீர்வதிக்கின்ற, வழக்கறிஞராக இருந்த என்னை நாடாளுமன்ற உறுப்பினராக்கி, சட்டமன்ற உறுப்பினராக்கி இன்றையதினம் அமைச்சராக்கி இருக்கின்ற தாயே! மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதம் பணிந்து என்னுடைய உரையைத் துவக்குகின்றேன்.

பிற்பகல் 5–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சுகாதாரத் துறையினுடைய மானியக் கோரிக்கை இருந்தாலும், இந்த தினத்தை இந்தத் துறை மறக்க முடியாது. தமிழக மக்கள் மறக்க முடியாது. ஏன்? இந்திய மக்களே மறக்க முடியாது. அந்த அளவிற்கு, தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1995 ஆம் ஆண்டு கொண்டு வந்த அந்தத் திட்டத்தை தங்களுடைய திருக்கரங்களால் இன்றையதினம்— தமிழக மக்களுடைய ஏழை, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய மக்கள் இங்கே கூறிய, சட்டமன்ற உறுப்பினர் கூறிய அத்தனை கோரிக்கைகளையும் ஒரே—அதாவது, சொல்லப் போனால், அந்தக் கோரிக்கையை எப்படி நிறைவேற்றுவோம் என்ற ஒரு கேள்விக்குறி இருக்கக்கூடிய நிலையிலே இங்கே கூறிய மாண்புமிகு உறுப்பினர்

சந்தானம் அவர்களும், மற்ற உறுப்பினர்களும், நீண்ட நாட்களாக ஒரு கோரிக்கை வைத்திருந்தார்கள்—அத்தனை கோரிக்கைகளையும், ஒரே தலைவி, எங்களுடைய ஒப்பற்ற தலைவி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம் உலக வங்கியினுடைய நிதியைப் பெற்று, 597.15 கோடி ரூபாயை இங்கே இருக்கக்கூடிய மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள், தாலுகா மருத்துவமனைகள் மற்றும் அத்தனை மருத்துவமனைகளுக்கும் வழங்கி, அதனுடைய தொடக்க விழாவை இன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாநிலத்தில் உள்ள 270 மருத்துவமனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உலக வங்கியினுடைய நிதியின் ஆதாரத்திலே 29 மாவட்ட மருத்துவமனைகளும், 155 வட்ட மருத்துவமனைகளும், 80 வட்டம் சாரா மருத்துவமனைகளும்—264 மாவட்ட, வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளும்—அதற்கும் மேலாக, சிவகங்கை மாவட்டத்திலே இருக்கக்கூடிய ஆறு தாய்—சேய் நல மருத்துவமனைகளை எடுத்து, ஒட்டுமொத்தமாக 270 மருத்துவமனைகளினுடைய அடிப்படை வசதிகள், கட்டடங்கள், அங்கு இருக்கக்கூடிய மருத்துவமனைகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளும், அதுபோன்று அங்கு இருக்கக்கூடிய கழிவுப் பொருட்களை வெளியேற்றுவது, வாகனங்கள் வாங்குவது போன்ற அத்தனைக்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். இந்த உலக வங்கியின் திட்டத்தின் அடிப்படையிலே பார்க்கும்பொழுது, மாவட்ட மருத்துவமனைகள் வருங்காலங்களிலே 500 படுக்கையாக Grade–1 ஆகவும், அதேபோல், அதற்கு அடுத்தாற்போல் 300 என்றும், 200 என்றும், 100 என்றும், 50 என்றும், 30 என்றும் அந்த மக்களினுடைய அடிப்படை வசதிகளையும் பூர்த்தி செய்யும் வண்ணம் இருக்கும் என்பதை இந்த மாமன்றத்திலே நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல், முதல் கட்டமாக இருக்கக்கூடிய அந்த 5 மாவட்டங்களை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்ந்தெடுத்து, அந்தத் தேர்வின் அடிப்படையிலே இன்றையதினம் தருமபுரி, கிருஷ்ணகிரி, தேனி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை ஆகிய 5 மாவட்டங்களினுடைய மருத்துவமனைகளினுடைய தரத்தை உயர்த்துவதற்காக உலக வங்கியினுடைய நிதியைப் பெற்று, கூடிய விரைவிலே அத்தனை மருத்துவமனைகளும் தரம் உயர்த்தப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக்

[திரு. ந. தளவாய் சுந்தரம்] [2005 மார்ச் 21

கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தத் திட்டத்தின்மூலமாக இருக்கக்கூடிய 385 வட்டார மருத்துவமனைகளிலே மருத்துவ வசதி மற்றும் Cell Phone வசதிகளுடன்கூடிய ambulance ஒன்று கொடுக்கப்படுகிறது. அதேபோல், அமரர் ஊர்தி இல்லாத சுகாதார மாவட்டங்களுக்கு, ஒவ்வொரு சுகாதார மாவட்டம் ஒன்றிற்கு 34 வாகனங்கள் வழங்கப்படுகின்றன. அதேபோல், குறிப்பாக, இங்கே பழங்குடியினர் பகுதியிலே இருக்கக்கூடிய, பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளிலே வெளிப்புற மருத்துவ சேவையை மேம்படுத்த 12 ஆய்வகங்கள் கொண்ட நடமாடும் மருத்துவ ஊர்திகள் மற்றும் 25 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு Generators வழங்கப்படுகின்றன. பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளிலுள்ள 50 துணை சுகாதார நிலையக் கட்டடங்களைப் புதுப்பித்து, தேவையான உபகரணங்கள் மற்றும் மரச் சாமான்கள் வழங்கப்படுகின்றன. ஆங்காங்கே இருக்கக்கூடிய மக்களுடைய நோய்களைக் கண்டறிதல், Cancer, Blood Pressure, அதுபோக அங்கு இருக்கக்கூடிய நீரிழிவு நோய்களை எல்லாம் கண்டறிவதற்காக இந்தத் திட்டத்தின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை நான் இந்த மாமன்றத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மருத்துவக் கல்லூரி இயக்கம்—இந்தியாவிலேயே மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, இந்த மருத்துவக் கல்லூரியினுடைய தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நல்ல எண்ணத்திலே, இதுவரையிலும் எந்த அரசும் செய்யாத சாதனையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதியை ஒதுக்கி, தேனி, கன்னியாகுமரி, வேலூர், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மருத்துவக் கல்லூரிகளுக்கு, ஒன்றல்ல, இரண்டல்ல, ரூ. 241.40 கோடி நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதியின்மூலமாக மருத்துவக் கல்லூரியினுடைய எண்ணிக்கை அதிகமாகிறது. நான் காலையிலே கூறியதுபோல், நம் இந்தியாவிலேயே, இந்தத் துறையில் மட்டுமல்ல, தமிழகம்தான் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகும் என்பதற்கு இதையே ஒரு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம் என்பதை நான் இந்த மாமன்றத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல், சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை எடுத்துக்கொண்டால் அந்த மருத்துவக் கல்லூரியில் பயிலக்கூடிய மாணவர்களுடைய திறன், அங்கே இருக்கக்கூடிய ஆசிரியர்களுடைய திறமை, அந்த மருத்துவக் கல்லூரியினுடைய Administration, அங்கு வரக்கூடிய நோயாளிகளினுடைய தன்மையெல்லாம் கண்டறிந்து,

2005 மார்ச் 21] [திரு. ந. தளவாய் சுந்தரம்]

அதனுடைய தரத்திற்காக இன்று தரச் சான்றிதழ் பெற்றிருக்கிறது. சென்னை மருத்துவக் கல்லூரி ஒட்டுமொத்தமாக இந்தியாவிலேயே எந்த மருத்துவக் கல்லூரியும் பெறாத பெருமையை, அரசு மருத்துவக் கல்லூரி I.S.O. 9001: 2000 என்பதை இன்றையதினம் பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், வருகின்ற புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கு—தேனி, கன்னியாகுமரி, வேலூர், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மருத்துவக் கல்லூரிகளுக்கு—இதுவரையிலும் இல்லாத அளவுக்கு பேராசிரியர்கள் எண்ணிக்கை 110 ஆகவும், உதவிப் பேராசிரியர்கள் எண்ணிக்கை 299 ஆகவும், இதுவரையிலும் எந்த அரசும் செய்யாத சாதனையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செய்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5–30

அதேபோல், சென்னை ஸ்டேன்லி மருத்துவக் கல்லூரியிலே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சைக்காக, இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, தமிழகத்திலே, அதுவும் முன்னோடியாக இருக்கக்கூடிய மாநிலம் என்ற ஓர் அடிப்படையிலே, ரூபாய் 5 கோடியை ஒதுக்கி அந்த மருத்துவக் கல்லூரியினுடைய தரத்தையும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பல்வேறு மாமன்ற உறுப்பினர்கள் கூறினார்கள். 12 புதிய செவிலியர் பயிற்சிப் பள்ளிகளில் 600 மாணவ, மாணவிகள், மற்றும் ஏற்கெனவே இருந்த 9 செவிலியர் பயிற்சிப் பள்ளிகளில் கூடுதலாக 450 மாணவ, மாணவிகளைச் சேர்க்கவும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துணை நிற்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மருத்துவக் கல்லூரி, சென்னை, மதுரை மருத்துவக் கல்லூரியில் இருக்கக்கூடிய செவிலியருடைய பயிற்சிக் கல்லூரியிலே 25 மாணவ, மாணவிகளைக் கூடுதலாகச் சேர்ப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதையும் இந்த மாமன்றத்திலே நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுவரையிலும் இல்லாத அளவிற்கு அரசு மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்திருக்கின்ற மருத்துவமனையிலே, உயிரைக் காக்கக்கூடிய ambulance ஒன்றை, கிட்டத்தட்ட 25 இலட்சம் ரூபாய் செலவிலே, சென்னையில் இருந்து ஆரம்பித்து, படிப்படியாக ஒவ்வொரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் கூடிய விரைவிலே—இப்போது சென்னையில் இருக்கக்கூடிய சென்னை, அரசு பொது மருத்துவமனையிலும், கீழ்ப்பாக்கம் பொது மருத்துவமனையிலும், படிப்படியாக ஒவ்வொரு மருத்துவமனையிலும் இந்த ambulance வசதி, life saving ambulance—அதாவது அந்த ambulance—ஐ எடுத்துக்கொண்டால், அதிலே உயிரைக் காக்கக்கூடிய அத்தனை கருவிகளும் பொருத்தப்பட்டு, அவர்கள் எங்கிருந்தாலும் அவர்களை எளிய முறையிலே, குறைந்த செலவிலே அழைத்து வருவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மருத்துவக் கல்லூரியைப் பொறுத்த வரையிலே–நமது மாநிலத்திற்கு புதிய மருத்துவக் கல்லூரிகளாக, வருகின்ற ஆண்டிலே தேனி, வேலூர் ஆகிய இடங்களில் இரு மருத்துவக் கல்லூரிகளையும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெற்றுத் தந்திருக்கிறார்கள் என்பதை நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்திலே எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவிற்கும், இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கும், ஆண்டிப்பட்டியிலே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 8–12–2004–லே புதிய மருத்துவக் கல்லூரியும், புதிய மருத்துவமனையும் தொடங்க வேண்டுமென்ற எண்ணத்திலே புதிய மருத்துவமனையைத் தொடங்கி வைத்தார்கள். ஆனால் நாட்டிலே சில தலைவர்கள் மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு என்ன அடிப்படை வசதிகள் தேவை என்பதை உணராமல், மருத்துவக் கல்லூரி என்பதை அவர்கள் உணராமல், மருத்துவக் கல்லூரி என்பதற்கு அடிப்படை வசதிகள் தேவையில்லாமல், மருத்துவக் கல்லூரியே இல்லாமல் மருத்துவமனையா என்ற கேள்வியைக் கேட்டார்கள். அவர்களுக்கு ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். Medical Council of India–வினுடைய சட்டத்தைத் தயவுசெய்து பாருங்கள். ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்றால். ஒரு மருத்துவமனை அங்கே தேவை என்பதை இந்த மாமன்றத்திலே நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் சார்பாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு பொறுப்பேற்றவுடனே ஏழு மண்டலங்களில், நோய்களைக் கண்டறியும் மையங்களுக்கு 21 கோடி ரூபாய் செலவிலே—விழுப்புரம், விருதுநகர், நாமக்கல், புதுக்கோட்டை, திருப்பூர், திருவண்ணாமலை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலே, இதுவரையிலும் இல்லாத அளவிற்கு, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, அங்கு இருக்கக்கூடிய மக்களுடைய நோய்களைக் கண்டறிவதற்காக, கட்டடங்களைக் கட்டி, உபகரணங்களை வாங்கி, அதற்கான மருத்துவர்களை, கூடிய விரைவிலே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு நியமிக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாமன்ற உறுப்பினர்கள் கூறும்போது, விபத்துக்களைப் பற்றியெல்லாம் கூறினார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, சாலைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்காக ரூபாய் 3.38 கோடி நிதியை ஒதுக்கி, கிருஷ்ணகிரி, கோவில்பட்டி, திண்டிவனம், ஆம்பூர், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களிலே இந்த விபத்துக் காப்பு மையத்தை ஆரம்பித்து அதற்கும் இன்றையதினம்—நிதி மட்டுமல்லாமல், கட்டடங்களும் கட்டப்பட்டு, அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டு, தற்சமயம் திண்டிவனத்திலே அந்த மருத்துவமனை இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கும் மேலாக, இன்றையதினம் நாம் சுகாதாரத் துறையை எடுத்துக்கொண்டால்—இருக்கக்கூடிய மருத்துவர்களுடைய எண்ணிக்கையை எடுத்துக்கொண்டாலும் சரி—மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மருத்துவர்களை நியமனம் செய்ய வேண்டும் என்று மருத்துவத் துறைக்கு உத்தரவை அளித்தது மட்டுமல்லாமல், அவர்கள் இன்றையதினம் வேலையிலே சேரும் நிலையில் இருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்றவுடனே, இருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரிகளுக்கும், கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய மருத்துவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிலே கொண்டு, இதுவரையிலும் கிட்டத்தட்ட 3,917 மருத்துவர்களை நியமித்திருக்கிறார்கள் என்பதை நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் கிராம சுகாதார செவிலியர்களைப் பொறுத்த வரையில், 586 கிராம சுகாதார செவிலியர்களும், அதேபோல் பல் மருத்துவர்கள்—காலியாகவுள்ள 15 பல் மருத்துவர் இடங்களுக்கும் மருத்துவர்களை நியமனம் செய்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், செவிலியர்களை எடுத்துக்கொண்டால், கிட்டத்தட்ட 2,866 செவிலியர்கள் இன்றைய தினம் ஒப்பந்த அடிப்படையிலே பணி நியமனம் செய்யப்பட்டு, அதிலே 809 பேர் நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5–35

இங்கே பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து முறை சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். காலையில் அவரிடம் கேட்கும்போதுகூட, நான் உங்களிடம் ஆதாரம் ஏதாவது இருக்கிறதா என்று கேட்டேன். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கோவிந்தசாமி அவர்களுக்கு ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். Sample Registration System Bulletin என்ற அறிக்கையின் அடிப்படையில்தான், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பிறப்பு விகிதம், இறப்பு விகிதம், சிசு மரண விகிதம், பேறுகால இறப்பு விகிதம் என்பதை மத்திய அரசினுடைய அந்த Bulletin மூலமாகத்தான் மாநில அரசு போட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, தாங்கள் ஒவ்வோர் ஆண்டும் பேசும்பொழுது, மற்ற மாநிலங்களில் எல்லாம் அப்படி இருக்கிறது, இங்கே எப்படி இருக்கிறது என்று பேசுகிறீர்கள். ஆனால் இந்த Bulletin-ஐப் பார்த்தால் தமிழகம் இரண்டாவது இடத்தில் இருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பிறப்பினுடைய விகிதம்—பிறப்பு விகிதம் 1991–ல் 19.2 ஆக இருந்தது. 2002–ல் 18.5 ஆகவும், 2003–ல் 17.8 ஆகவும் உள்ளது. அதேபோல் இறப்பு விகிதம் 1999–ல் 8 ஆக இருந்தது. 2002–ல் 7.7 ஆகவும், 2003–ல் 6.98 ஆகவும் உள்ளது. சிசு மரண விகிதம் ஏற்கெனவே 51 ஆக இருந்தது இப்போது 44 ஆகக் குறைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறநோயாளிகளைப் பொறுத்த வ்ரையில், கிராமப் பகுதிகளில் இன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு பொறுப்பேற்றவுடனே 104 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டது மட்டுமல்லாமல், அங்கு இருக்கக்கூடிய புறநோயாளிகளினுடைய எண்ணிக்கை, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலே 2000–லே 79 ஆக

இருந்தது, இப்போது 118 ஆக உயர்ந்திருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறப்பு முகாம்கள் என்ற ஒரு திட்டத்தை இந்தியாவிலே நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆங்காங்கே கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய மக்களுடைய நலனைக் கருதி அவர்களுக்கு என்ன நோய் வந்திருக்கிறது, அவர்கள் எப்படி பாதிக்கப்படுவார்கள் என்பதை எல்லாம் உணர்ந்து, 2001–ல் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. அந்தச் சிறப்பு முகாமிலே 2001–2002–லே 2 இலட்சத்து 54 ஆயிரத்து 648 பேரும், 2002–2003–ல் 7 இலட்சத்து 98 ஆயிரத்து 442 பேரும், 2003–2004–ல் 8 இலட்சத்து 13 ஆயிரத்து 250 பேரும் பயனடைந்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இங்கே கேட்கும்போதுகூட, மலையும், மலைசார்ந்த இடங்களுக்கும் அரசால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்ற கேள்வியைக் கேட்டார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு பொறுப்பேற்றவுடனே, இதுவரையிலும் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழகத்திலே முதன்முதலாக கிராமப் பகுதியிலே, குறிப்பாக மலையும், மலை சார்ந்த பகுதிகளிலே இருக்கக்கூடிய மக்களுடைய நலன் கருதி 45 நடமாடும் மருத்துவக் குழுக்கள் இயங்கி வருகின்றன என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 45–க்கும் நோயாளிகள் ஊர்தியும், அதேபோல் அங்கே இருக்கக்கூடிய மருத்துவர்களுக்கும் ஆண்டு ஒன்றுக்கு 2.2 இலட்சம் ரூபாய்க்கு மருந்துகள் ஒதுக்கப்படுகின்றன என்பதை நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல உலக வங்கியினுடைய நிதி ஆதாரத்தைப் பெற்று, ரூபாய் 45 கோடி செலவில் நோய் தீவிரக் கண்காணிப்பு என்ற ஒரு திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றையதினம், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழகத்திலே அந்தத் திட்டம் தொடங்கப்படுகிறது என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். போலியோ சொட்டு மருந்தை எடுத்துக் கொண்டால், 5 வயதுக்குள்ளே ஆண்டுதோறும் 75 இலட்சம் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதும், அதேபோல இங்கே இருக்கக்கூடிய மக்களுடைய அத்தனை தேவைகளையும் பூர்த்தி செய்யும் வண்ணம் இந்த அரசால் நடவடிக்கை

எடுக்கப்படுகிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 10–9–2003 அன்று ஊட்டியில் நடைபெற்ற பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மாநாட்டில், சிறு குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல், பெண் குழந்தைகளுக்கு நோய் எல்லாம் வருகிறது என்பதையும், அந்தச் சிறு குழந்தைகள் பிறக்கும்போதே அவர்களுக்குப் பிறவியிலேயே ஊனம் வருகிறது என்பதையும் அறிய வேண்டும் என்பதற்காக ஒரு திட்டத்தைத் தீட்டி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொதுச் சுகாதாரத் துறைக்கு ஒரு உத்தரவிட்டார்கள். அந்த உத்தரவின் அடிப்படையிலே பார்க்கும்போது, ஆண்டொன்றுக்கு தமிழ்நாட்டில் பிறக்கக்கூடிய குழந்தைகளின் எண்ணிக்கையையும், அதேபோல ஆண்டு ஒன்றுக்கு என்று கணக்கெடுத்தால், அந்த மக்களுடைய குழந்தைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் நோயைக் கண்டுபிடிக்க முடியுமா என்ற அச்சத்தின் காரணமாக, ஒரு நிமிடத்திலிருந்து ஆண்டு ஒன்றுக்கு எத்தனை குழந்தைகள் பிறக்கும் என்ற எண்ணத்தில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கும்போது, ஒரு நிமிடத்திற்கு தமிழ்நாட்டிலே 2 குழந்தைகள் பிறக்கின்றன. அதேபோல ஒரு மணிக்கூறுக்குள் எடுத்துக் கொண்டால், கிட்டத்தட்ட 135 குழந்தைகள் பிறக்கின்றன. அது ஒரு நாளிலே எடுத்துக் கொண்டால் 3,250 குழந்தைகள் பிறக்கின்றன. ஒரு வாரத்திலே பிறக்கக்கூடிய குழந்தைகளை எடுத்துக் கொண்டால் 22,200 குழந்தைகள் பிறக்கின்றன. ஒரு மாதத்திலே எடுத்துக்கொண்டால் 98,700 குழந்தைகள் பிறக்கின்றன. ஒரு வருடத்திற்கு எடுத்துக் கொண்டால் 11 இலட்சத்து 84 ஆயிரம் குழந்தைகள் பிறக்கின்றன. இந்தக் குழந்தைகளினுடைய எண்ணிக்கை அடிப்படையில் பார்க்கும்போது, அந்தக் குழந்தைகளுக்கு என்ன நோய் வருகிறது என்பதைத்தான் கண்டுபிடிக்க வேண்டும் என்பதுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எண்ணம். ஏனென்றால் மனிதனுக்கு நோய் என்ற அடிப்படை யார் மூலமாக வருகிறது என்று ஆய்ந்து பார்க்கிறபோது, குழந்தைகளுக்கு நோய் வரும்போது, அந்தக் குழந்தைகளுக்கு நோய் எவ்வாறு செல்கிறது என்பதைப் பார்க்கும்போது, அந்தக் குழந்தைகள் மூலமாக எளிதிலே பரவுகிறது என்பதை அறிந்துதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், குழந்தைகள், அதாவது பிறவியிலேயே ஊனமாகப் பிறந்த குழந்தைகள், அன்னப்பிளவு ஏற்படும் குழந்தைகளுக்கு, அவர்களின் அறுவை

சிகிச்சைக்காக ரூபாய் 25,000 நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5–40

தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய ரத்த வங்கிகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசினார்கள். அவர்களுக்கு ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசு மருத்துவமனைகளிலே இயங்கி வரக்கூடிய அத்தனை ரத்த வங்கிகளில், 85 ரத்த வங்கிகள் இயங்கிக்கொண்டு வருகின்றன. தனியார் மூலமாக 135 ரத்த வங்கிகள் இயங்கிக்கொண்டு வருகின்றன. மத்திய அரசு சார்பாக இயங்கி வரக்கூடிய ரத்த வங்கிகளுடைய எண்ணிக்கை 6. அரசுக் காப்பீட்டுக் கழகம் மூலமாக இயங்கி வரக்கூடிய குருதி வங்கிகளுடைய எண்ணிக்கை 2. ஒட்டுமொத்தமாக 224 ரத்த வங்கிகள் நமது தமிழ்நாட்டிலே இயங்கிக் கொண்டு வருகின்றன. ஆண்டு ஒன்றுக்கு நமது மக்களுக்கு 5 இலட்சம் குருதிப் பைகள் தேவைப்படுகின்றன. நமது நாட்டிலே, தமிழ்நாட்டிலே கிட்டத்தட்ட 3,79,186 குருதி யூனிட்டுகள் கிடைக்கின்றன. மற்றவையெல்லாம் நோயாளிகள், தங்களுடைய உறவினர்கள் மூலமாகப் பெற்றுக்கொண்டு வருகிறார்கள். இதுவரையிலே நமது மாநிலத்திலே இருக்கக்கூடிய ரத்த வங்கிகள் மத்திய அரசிலே விதிக்கக்கூடிய சட்டங்களுக்கு உட்பட்டு, அதுவும் குறிப்பாக, அரசிலே இருக்கக்கூடிய, அரசு மருத்துவமனைகளிலே இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய குருதி வங்கிகளுக்குச் சீரிய முறையிலே, செம்மையான முறையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்களுக்கு licence-ம் மத்திய அரசு மூலமாக அவர்கள் நேரடியாக வந்து அதை ஆய்வு செய்து, இங்கே இருக்கக்கூடிய அத்தனை வங்கிகளும் இப்போது licence பெற்று சீரிய முறையிலே, செம்மையான முறையிலே இயங்கி வருகின்றன என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றையதினம் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருந்தபோது தமிழ்நாட்டிலே இதுபோன்ற நோய்கள் பரவுகின்றன என்பதை அறிந்து, 1993 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் எனத் திருத்தியமைக்கப்பட்டது. இந்தச் சங்கத்தினுடைய நோக்கமே—மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எந்த நோய் வந்தாலும் அதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திலேதான். இதுபோன்ற

சங்கங்களை எல்லாம் ஆரம்பித்து, அதற்கும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆய்விலே கர்ப்பிணித் தாய்மார்களுக்கு HIV நிலவரம்: 2003 ஆம் ஆண்டு 0.75 சதவிகிதமாக இருந்தது, 2004 ஆம் ஆண்டு 0.65 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. பால்வினை நோய்க்கு மருத்துவ சிகிச்சை பெற்று வருபவர்களிடம் நடத்தப்படும் பரிசோதனையைப் பார்த்தால், 2003 ஆம் ஆண்டு 9.20 சதவிகிதத்திலே இருந்தது, 2004 ஆம் ஆண்டு 8.4 சதவிகிதமாகக் குறைந்துள்ளது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெண் பாலியல் தொழிலாளர்களிடம் நடத்தப்பட்ட பரிசோதனையிலே 8.80 சதவிகிதமாக இருந்தது, 4.0 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது. ஊசி மூலம் போதை மருந்துகளைச் செலுத்திக்கொள்பவர்களுடைய HIV நிலவரம் 39.92 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுபவர்களுடைய HIV நிலவரம் மட்டும் 4.40 சதவிகிதத்திலேயிருந்து 6.8 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. இதற்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையிலே HIV, AIDS நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, அரசின் சார்பாக ஆண்டு ஒன்றுக்கு 2 கோடி ரூபாய்க்கு மருந்துகள் வழங்கப்படுகின்றன என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் Anti-Retroviral Therapy என்ற மாத்திரை சென்னையிலும், மதுரையிலும், நாமக்கல்லிலும், அதுபோல் தாம்பரத்தில் இருக்கக்கூடிய மருத்துவமனையிலும் இலவசமாக வழங்கப்படுகிறது என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தின் மூலமாக தமிழகத்திலே இருக்கக்கூடிய துணை சுகாதார நிலையங்கள், அங்கிருக்கக்கூடிய பெண்கள், கர்ப்பிணிமார்கள் ஆகியோருக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற எண்ணத்திலே 426 கோடி ரூபாய் நிதியுடன் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா

அவர்களுடைய அரசு 2005–2006 ஆம் ஆண்டிலிருந்து 5 வருடங்களுக்குச் செயல்படுத்தும் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, இந்த அடிப்படையிலே பார்க்கும்போது, தாய்மார்களுடைய இறப்பு விகிதம் மற்றும் நோய்வாய்ப்படுதலைக் குறைத்தல், சிசு இறப்பு விகிதம் மற்றும் நோய்வாய்ப்படுதலைக் குறைத்தல், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு நோய் ஏற்படாமல் குறைத்தல், பலவீனத்தைக் குறைத்து உடல் நலத்தை மேம்படுத்துதல், இனப் பெருக்க உறுப்பு நோய்கள் மற்றும் பால்வினை நோய்களைத் தடுத்தல், மேலும் பல்வேறு கர்ப்பிணித் தாய்மார்களுடைய நலத்தை மேம்படுத்துதல், சுகாதார நிலையங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மக்கள் நடத்தை முறையிலே மாற்றங்களை ஏற்படுத்தும் வகையிலே கல்வி அளித்தல், நலத் திட்டங்கள் குறித்து தகவல் அளிக்கும் முறையைக் கையாளுதல், மருத்துவக் கல்வி நிறுவனங்களைப் பலப்படுத்துதல் ஆகிய திட்டங்கள் அடங்கும்.

பிற்பகல் 5–45

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்–Tamil Nadu Medical Services Corporation: இதுவரையிலும் எந்த அரசும் செய்யாத சாதனையை, மற்ற மாநிலத்தினுடைய அரசுகள் எல்லாம் பாராட்டும் அளவிற்கு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1-7-1994-லே தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் என்ற ஒரு கழகத்தை நிறுவி, தமிழ்நாடு இந்தியாவிற்கே ஒரு எடுத்துக்காட்டாக அமையும் வகையிலே, மற்ற மாநிலங்களிலுள்ள அத்தனை அமைச்சர்களும், குறிப்பிட்டுச் சொல்லப் போனால், இராஜஸ்தான், காஷ்மீர், குஜராத் மற்றும் பல்வேறு மாநிலங்களிலிருந்து சுகாதாரத் துறை அமைச்சர்கள் நேரடியாக விஜயம் செய்து, பாராட்டிச் சென்றிருக்கிறார்கள், அரசை மட்டுமல்ல; அம்மா அவர்களையும் பாராட்டிச் சென்றிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நிறுவனம் மருந்துகளைக் கொள்முதல் செய்வதிலும், அதேபோல அவர்களுக்கு மருந்துகளை supply செய்வதிலும், I.S.O. 9001 : 2000 என்ற சான்றிதழைப் பெற்றிருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலே இருக்கக்கூடிய அரசு, இந்தத் துறையைப் பொறுத்த வரையிலே, மருத்துவப் பணிகள் கழகத்தை–Medical Services Corporation துறையைப் பொறுத்த வரையில், மருந்துகள் வாங்குவதிலே, எந்த நேரத்திலும், எந்தக் காலத்திலும், எப்பொழுதும் ஊழல் கிடையாது என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச்

சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே மாண்புமிகு முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் அன்றையதினம் சட்டமன்றத்திலே பேசிவிட்டு, வெளியிலே ஒரு அறிக்கை விட்டார்கள். சட்டமன்றத்திலே பேசும்போது, அன்றையதினம் நான் அவருக்குப் பதில் அளித்தேன். Tamil Nadu Medical Services Corporation–லே இருக்கக்கூடிய குடோன்களில் மருந்து இருக்கிறதா, அரசு மருத்துவமனையிலே மருந்து இருக்கிறதா என்று நான் கேட்டேன். அரசு மருத்துவமனையைப் பொறுத்த வரையில், கண்டிப்பாக அத்தனை மருந்துகளும் இருக்கின்றன என்று சொன்னேன். இல்லை, இல்லை, நான் Internet–ஐப் பார்த்தேன். Internet–லே அங்கே cipher என்றிருக்கிறது என்று சொன்னார். இன்றைக்கும் நீங்கள் Internet–ஐப் பாருங்கள். அந்த இடத்திலே cipher என்றுதான் போடப்பட்டிருக்கும். இந்த Internet–னுடைய முறை, கிட்டத்தட்ட தமிழகத்திலே 24 இடங்களிலே குடோன்கள் இருக்கின்றன, மருந்துக் கிட்டங்கி இருக்கிறது. அந்தக் கிட்டங்கியின்மூலமாக மருந்துகள் அங்கே இருக்கின்றனவா, இல்லையா என்று அவர்கள் இங்கேயிருக்கக்கூடிய சென்னையிலுள்ள அலுவலகத்திற்குச் சொல்வார்கள். இந்த Internet–ஐ Tamil Nadu Medical Services Corporation operate பண்ணவில்லை. இதை manage செய்வது, National Informatics Centre-மத்திய அரசுதான் இதை operate செய்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், உங்களுடைய அறிக்கையைப் பார்த்து நான் ஆச்சரியப்படவில்லை. அரசிலே வேலை பார்க்கக்கூடிய அரசு மருத்துவர்களே ஆச்சரியப்பட்டார்கள். இப்படிப்பட்ட... (குறுக்கீடு)

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு ஒரேயொரு விளக்கம் மட்டும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நான் ஏதோ இங்கே சொன்னது தவறு; அதை operate செய்வதே மத்திய அரசாங்கம் என்று சொன்னார்கள். ஒரு சில மருந்துகளைத் தவிர, மற்ற மருந்துகள் எல்லாம் அந்த Internet–லே வருகிறது. Tamil Nadu Medical Services Corporation–லே அந்த மருந்துகள் இருக்கின்றன என்ற விவரங்கள் வருகின்றன. சில மருந்துகள் இல்லையென்பதைத்தான் நான் குறிப்பிட்டேன். அப்படியென்றால், அந்த மருந்துகள் எல்லாம் இருக்கின்றன என்பதை மத்திய அரசாங்கம்தான் control செய்கிறதா? அல்லது இங்கேயிருக்கக்கூடிய Tamil Nadu Medical Services Corporation control செய்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் வெளியிலே விட்ட அறிக்கை; மருந்துகள் கிடைக்கவில்லை, மருந்திலே ஊழல் நடத்தியுள்ளார்கள், நான்

Internet–ஐப் பார்த்தேன். அதை மூடிவிட்டார்கள் என்று சொன்னீர்கள். Internet–ஐ மூடிவிட்டார்கள் என்று கூறியது தவறு என்பதுதான். அரசைப் பொறுத்த வரையிலே, இந்த Corporation–ஐப் பொறுத்த வரையிலே ஏனென்றால், இந்த Corporation–உடைய நோக்கமே, இதிலே தவறு நடக்கக்கூடாது; ஏழையெளிய மக்களுக்காக வாங்கக்கூடிய மருந்துகளிலே, நோய்களுக்கான மருந்துகளிலே எந்தவிதமான ஊழலும் நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிறுவனத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு மேலாகவும் நீங்கள் கேள்வி கேட்டால், அதற்கும் பதில் சொல்ல நான் தயாராக இருக்கிறேன். நீங்கள் அன்றையதினம் சுகாதாரத் துறை அமைச்சராக இருந்தபோதுகூட, இரண்டு கம்ப்யூட்டர்கள் வாங்கியதில்கூட ஒரு தவறு ஏற்பட்டதாகவும், அதிலே நீங்கள் அன்றையதினம் இருக்கக்கூடியவர்களைக் கேள்வி கேட்கும்போது, ஏதோ அங்கேயிருக்கக்கூடிய அதிகாரிகள் தவறு செய்துவிட்டார்கள், நான் அதைத் திருத்திக்கொள்கிறேன் என்று நீங்களே இந்த மாமன்றத்திலே பேசியிருக்கிறீர்கள். ஆகவே, Tamil Nadu Medical Services Corporation–ஐப் பொறுத்த வரையிலே, மருந்துகள் வாங்குவதிலே– வெளியிலே அறிக்கை மட்டும் விட்டால் போதாது; இன்றும் நான் சொல்கிறேன்–ஊழலே கிடையாது என்பதை ஆணித்தரமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாய்க் கடி மருந்தைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடனே, இன்றையதினம் எந்த அரசும் செய்யாத நடவடிக்கையை, கிட்டத்தட்ட 15 கோடி ரூபாய்க்கு இந்த மருந்து வாங்கப்பட்டிருக்கிறது. இருக்கக்கூடிய அத்தனை மருத்துவமனைகளிலும், அது அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவமனையாக இருந்தாலும் சரி, தாலுகா மருத்துவமனையாக இருந்தாலும் சரி, அதேபோல மாவட்ட மருத்துவமனையாக இருந்தாலும் சரி, அத்தனை மருத்துவமனைகளுக்கும், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை: இந்தத் துறையின் சார்பாக சித்த மருத்துவம்—மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்ற உடனே, அங்கே இருக்கக்கூடிய மருத்துவர்களையெல்லாம் உடனடியாக நியமிக்க வேண்டுமென்ற ஒரு எண்ணத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா

அவர்கள்—சித்த மருத்துவத்திற்காக ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர்கள் எண்ணிக்கை 827; —காலியாக இருக்கக்கூடியவர்களுடைய எண்ணிக்கை தற்சமயம் 22 ஆக இருக்கிறது. அதையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிரப்பவேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5-50

அதேபோல், 2002-2003-லிருந்து சித்தா, யுனானி, ஆயுர்வேதா, ஓமியோபதி ஆகிய பிரிவுகளை குறிப்பாக, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலே நிர்வகிக்கவேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, 2002-2003-லே P.H.C.-லே இருக்கக்கூடிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை 50 ஆகவும், தாலுகா மருத்துவமனைகளை 2 ஆகவும், Non-Taluk மருத்துவமனைகளை 37 ஆகவும், அதேபோல், 2003-2004-லே P.H.C.-லே, அதாவது, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் 25 ஆகவும், 2004-2005-லே அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 20 ஆகவும், ஆயுர்வேதா என்ற பிரிவை 10 ஆகவும், யுனானி பிரிவை 5 ஆகவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றையதினம் உத்தரவிட்டு அதற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை: தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறையில் இதுவரையில் இல்லாத அளவிற்கு 2,646 வாகனங்கள் உள்ளன. அந்த வாகனங்களைப் பார்க்கும்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசால் சீரிய முறையிலே, செம்மையான முறையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு, இங்கே மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல், அத்தனை வாகனங்களும் இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஏதாவது வாகனங்கள் இயங்காவிட்டால்கூட இப்போது அவர்களுக்குத் தொலைபேசி வசதி கொடுத்து, அதற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை நான் இந்த மாமன்றத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மக்களுடைய நலன் கருதி, அம்மா அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று—பல்வேறு அறிவிப்புகளை மாண்புமிகு புரட்சித்

தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று—என்னுடைய அறிவிப்புகளை வாசிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை, தண்டையார்பேட்டையிலுள்ள அரசினர் புறநகர் மருத்துவமனைக்காக ரூ.1.00 இலட்சம் மொத்தச் செலவிலே இ.பி.ஏ.பி.எக்ஸ். (EPABX) தொலைபேசி board வாங்கப்படும்.

சென்னை, தண்டையார்பேட்டையிலுள்ள அரசினர் புறநகர் மருத்துவமனைக்கு ரூ.4.00 இலட்சம் மொத்தச் செலவிலே 40 கிலோவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி இயந்திரம் வாங்கப்படும்.

சென்னை, தண்டையார்பேட்டையிலுள்ள அரசினர் புறநகர் மருத்துவமனையிலே ரூ.1.50 இலட்சம் மொத்தச் செலவிலே அறுவை சிகிச்சைக்குப்பின் கவனிப்பு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு மேம்படுத்தப்படும்.

மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்வி இயக்ககம் இடையே, கணினிமயமாக்கப்பட்ட கட்டமைப்பு முறை ரூ.50.00 இலட்சம் மொத்தச் செலவிலே உருவாக்கப்படும்.

கோயம்புத்தூர், சேலம், சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக, 3 மருத்துவக் கல்லூரிகளுக்கு ரூ.5.00 கோடி மொத்தச் செலவில் சாதனங்களும், அறை கலன்களும் வழங்கப்படும்.

100 மாணவர்கள், 150 மாணவியர்கள் தங்குவதற்கு ஏற்ப, திருச்சி விசுவநாதம் மருத்துவக் கல்லூரியிலே ரூ.306.00 இலட்சம் மொத்தச் செலவிலே மாணவர் இல்லங்கள் கட்டப்படும்.

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியிலே உடற்கூறியல் துறைக்கு ரூ.1.91 இலட்சம் மொத்தச் செலவிலே கட்டடங்கள் கட்டப்படும்.

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியிலே உயிரி வேதியியல் துறையிலே ரூ.3.00 இலட்சம் மொத்தச் செலவிலே படியடுக்கு வகை கருத்தரங்குக் கூடம் கட்டப்படும்.

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியிலே மருந்தாக்கியல் துறைக்கு ரூ.13.00 இலட்சம் மொத்தச் செலவிலே கட்டுமானப் பணிகள் செய்யப்படும்.

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியிலே ரூ.7.80 இலட்சம் மொத்தச் செலவிலே நூலகக் கட்டடங்கள் கட்டப்படும்.

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி நுண் உயிரியல் துறைக்கு ரூ.12.00 இலட்சம் மொத்தச் செலவிலே கட்டுமானப் பணிகள் செய்யப்படும்.

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியிலே நோய் குறியியல் துறைக்கு ரூ.7.7 இலட்சம் மொத்தச் செலவிலே சிறு கட்டுமானப் பணிகள் செய்யப்படும்.

தாம்பரம் அரசினர் நெஞ்சக மருத்துவமனையிலே ரூ.4.20 இலட்சம் மொத்தச் செலவிலே பிணவறைக் கட்டடம் கட்டப்படும்.

தஞ்சாவூர் அரசினர் இராஜா மிராசுதார் மருத்துவமனையிலே ரூ.29.27 இலட்சம் மொத்தச் செலவிலே புறநோயாளி கட்டடத் தொகுதியிலே ஒரு பகுதி கட்டப்படும்.

தஞ்சாவூர் அரசினர் இராஜா மிராசுதார் மருத்துவமனையில் ரூ.23.60 இலட்சம் மொத்தச் செலவிலே நோய் நுண்மம் நீக்கும் மைய தளவாடம் வழங்குதல் மற்றும் கட்டடம் கட்டப்படும்.

சேலம் மாவட்டம், மேட்டூர் அணையிலுள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் மொத்தம் ரூ.43.00 இலட்சம் செலவிலே புறநோயாளி பிரிவுக் கட்டடம் கட்டப்படும்.

வாலாஜா, மணப்பாறை, கோவில்பட்டி, கிருஷ்ணகிரி ஆகிய இடங்களிலே, புதிதாக ஏற்படுத்தப்பட்ட மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் மொத்தம் ரூ.48.00 இலட்சம் செலவிலே குளிர்சாதன வசதியுடன் பிணவறைப் பிரிவு கட்டப்படும்.

சுகாதாரப் பணி இணை இயக்குநர் அலுவலகங்கள் 29, ஒவ்வொன்றிற்கும் ரூ.75,000 செலவிலே ஒரு கணினி, தடையற்ற மின் சக்தி வழங்கும் சாதனம், பிரிண்டர், மோடெம், அறை கலன்கள், இணையதள வசதிகளுடன் துணைப் பாகங்கள் ஆகியவை ரூ.29.00 இலட்சம் மொத்தச் செலவிலே வழங்கப்படும்.

எடப்பாடி, தாராபுரம், கடலாடி, கொடுமுடி, அறந்தாங்கி ஆகிய 5 இடங்களிலுள்ள அரசினர் வட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலே மொத்தம் ரூ.1.5 கோடி செலவிலே புறநோயாளிப் பிரிவு கட்டப்படும்.

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியிலும், மதுரை மாவட்டம், வாடிப்பட்டியிலுமுள்ள இரு அரசினர் மருத்துவமனைகளிலே மொத்தம் ரூ.42 இலட்சம் செலவில் மகப்பேறு அறையுடன் 12 படுக்கைகள் கொண்ட மகப்பேறு பிரிவுக் கட்டடம் கட்டப்படும்.

பிற்பகல் 5-55

விருதுநகர் மாவட்டம், சிவகாசி அரசினர் மருத்துவமனையிலே மொத்தம் ரூ.30.17 இலட்சம் செலவிலே தீக்காய சிகிச்சைக்காக 12 படுக்கைகள் கொண்ட பிரிவு கட்டப்படும்.

தரங்கம்பாடி, திருச்செங்கோடு ஆகிய அரசினர் வட்டத் தலைமையிட இரு மருத்துவமனைகளில், மொத்தம் ரூ.50.40 இலட்சம் செலவிலே சீர்வளி வசதியுடன் அறுவை சிகிச்சைக் கூடம் கட்டப்படும்.

தாம்பரம் மற்றும் மானாமதுரை, அரசினர் வட்ட மருத்துவமனைகள் இரண்டிலே விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்கான பணிக்காக மொத்தம் ரூ.190.66 இலட்சம் செலவில் 10 படுக்கைகள் கொண்ட பிரிவுடன்கூடிய கட்டடம் கட்டப்படும்.

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி அரசினர் மருத்துவமனையிலே மொத்தம் ரூ.11.20 இலட்சம் செலவிலே எக்ஸ்ரே கதிர் தொகுதி கட்டடம் கட்டுதல் மற்றும் 300 எம்.ஏ. எக்ஸ்ரே கதிர் பிரிவு சாதனம் வழங்கப்படும்.

தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி அரசினர் வட்டத் தலைமையிட மருத்துவமனையில் மொத்தம் ரூ80.00 இலட்சம் செலவிலே 48 படுக்கைகள் கொண்ட பிரிவு கட்டப்படும்.

நாகப்பட்டினம் மாவட்டம், வைத்தீசுவரன்கோயில் மற்றும் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி அரசினர் வட்டம் சாரா இரு மருத்துவமனைகளிலும் ரூ.63.00 இலட்சம் செலவில் புறநோயாளி பிரிவுக் கட்டடம் கட்டப்படும்.

துவரங்குறிச்சி மற்றும் வள்ளியூர் அரசினர் வட்டம் சாரா இரு மருத்துவமனைகளில் மொத்தம் ரூ.30.60 இலட்சம் செலவிலே 12 படுக்கைகள் கொண்ட பிரிவு கட்டுவதன் மூலமாக அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்.

ஆம்பூர் அரசினர் மருத்துவமனையிலே மொத்தம் ரூ.22.17 இலட்சம் செலவிலே மகப்பேறு அறையுடன் 12 படுக்கைகள் கொண்ட மகப்பேறு பிரிவு கட்டுவதன் மூலம் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்.

மாத்தூர் மற்றும் வாடிப்பட்டி வட்டம் சாரா இரு மருத்துவமனைகளில் மொத்தம் ரூ.25.00 இலட்சம் செலவிலே மின் உற்பத்தி இயந்திரங்களுக்காகக் கட்டடங்கள் கட்டி 40 கே.வி.ஏ. மின் உற்பத்தி இயந்திரத்தை நிறுவுவதன் மூலம் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்.

வட்டம் சாரா 13 மருத்துவமனைகளுக்கு மொத்தம் ரூ.0.81 இலட்சம் செலவிலே தொலைபேசி வசதி அளிக்கப்படும்.

பொறையாறு அரசு மருத்துவமனையிலே மொத்தம் ரூ.32.08 இலட்சம் செலவிலே 10 படுக்கைகள் கொண்ட பிரிவு, நோயாளி ஊர்திக் கொட்டகை, மருத்துவர் அறை ஆகியவை கட்டப்படும்.

கடலாடி, சாத்தான்குளம், வேதாரண்யம், கன்னியாகுமரி ஆகிய 4 வட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் மொத்தம் ரூ.25.76 இலட்சம் செலவிலே பல் சிகிச்சை மையம் ஏற்படுத்தப்படும்.

சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அலுவலகத்திற்கு மொத்தம் ரூ.7.25 இலட்சம் செலவிலே ஒரு சர்வர், 10 NODES கூடிய தடையற்ற மின் வழங்கும் சாதனம், ஒரு லேசர் பிரிண்டர் மற்றும் அறை கலன்கள், துணைப் பாகங்கள், இணையதள வசதி ஆகியவற்றை அளிப்பதன்மூலம் அலுவலக நிர்வாகம் மேம்படுத்தப்படும்.

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அலுவலகத்திலுள்ள இரு பழைய மின்தூக்கிகளுக்குப் பதிலாக மொத்தம் ரூ.49.33 இலட்சம் செலவிலே புதிய மின்தூக்கிகள் அமைக்கப்படும்.

பழங்குடியினர் பகுதிகளிலே உள்ள 50 துணை சுகாதார நிலையங்களுக்கும் மற்றும் 25 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் மொத்தம் ரூ.30 இலட்சம் செலவிலே இன்றியமையாத மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்.

1,000 துணை சுகாதார மையங்களுக்கு, தலா ரூ.10,000 வீதத்தில் பிரசவ மேசைகள் வழங்கப்படும்.

500 துணை சுகாதார நிலையங்களுக்கு, தலா ரூ.6,000 செலவிலே மின் இணைப்பு ஏற்படுத்தப்படும்.

200 துணை சுகாதார நிலையங்களுக்கு குடிநீர் வசதி மற்றும் கைப் பம்புகள், தலா ரூ.20,000 செலவிலே ஏற்படுத்தப்படும்.

பிரசவித்த பாலூட்டும் தாய்மார்களுக்கு ரூ.13 இலட்சம் மொத்தச் செலவிலே வைட்டமின்-ஏ திரவப்பதம் வழங்கப்படும்.

மாநில சுகாதாரப் புலனாய்வு மையத்தினை மொத்தம் ரூ.7.50 இலட்சம் செலவில் வலிமைப்படுத்தி புள்ளிவிவரப் பதிவுக்கு வகைசெய்யப்படும்.

ஓசூர், விலங்கின, மனித இன நோய்ப் பரப்பிகள் கட்டுப்பாட்டு நிலையத்திலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலும் லெப்டோஸ் பைரோசிஸ் நுண்ணுயிரி ஆய்வகம் மொத்தம் ரூ.6.54 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

ஓசூர், விலங்கின, மனித இன நோய்ப் பரப்பிகள் கட்டுப்பாட்டு நிலையத்திலே மொத்தம் ரூ. 7 இலட்சம் செலவிலே ரிக்கெட்ஸியல் தொற்று ஆய்வகம் அமைக்கப்படும்.

பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையப் பிரிவிற்கு 4 கணினிகளும் மற்றும் 1 நகல் எடுக்கும் கருவியும், மொத்தம் ரூ.3.20 இலட்சம் செலவிலே வழங்கி உள்ளக வலை பின்னலை ஏற்படுத்தப்படும்.

மாவட்ட சுகாதார துணை இயக்குநர் அலுவலகங்களுக்கு மொத்தம் ரூ.10 இலட்சம் செலவிலே 10 நகல் எடுக்கும் கருவிகள் வாங்கப்படும்.

அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு இரு துளை லேப்ரோஸ்கோப் கருவிகள் மொத்தம் ரூ.50 இலட்சம் செலவிலே வழங்கப்படும்.

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்கக வளாகத்தினுள் தற்போதுள்ள மோட்டார் வண்டிகள் கொட்டகை உள்ள இடத்திலே மருந்துக் கட்டுப்பாடு இயக்ககத்திற்காக மொத்தம் ரூ.26.00 இலட்சம் செலவிலே கட்டடம் மற்றும் மாநாட்டுக் கட்டடம், நூலகம் மற்றும் பதிவேட்டு அறை, மின்தூக்கி வசதியுடன் மருத்துவப் பொருள் அறை கட்டப்படும்.

மருந்துக் கட்டுப்பாடு இயக்ககத்தில் ஏற்கெனவே உள்ள மின்தூக்கி கிணற்றில் மொத்தம் ரூ.10 இலட்சம் செலவிலே மின்தூக்கி அமைக்கப்படும்.

5 மருந்துக் கட்டுப்பாடு மண்டல அலுவலகங்கள் ஒவ்வொன்றின் பயனுக்காக ரூ.60,000 வீதத்தில் போட்டோ காப்பியர் சாதனம் வழங்கப்படும்.

மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டு நிருவாகத்தின் பயனுக்காக மொத்தம் ரூ.1 இலட்சம் மதிப்பிலே புத்தகங்கள் வாங்கப்படும்.

பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரிக்கும், அனைத்து மாவட்ட சித்த மருத்துவ அதிகாரிகளுக்கும் 32 கணினிகள், மற்றும் 4 இடங்களில் தொலைபேசிகளும், இணையதள வசதிகளும், மொத்தம் ரூ.18.40 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையிலுள்ள மருத்துவக் கல்லூரிகளின் வசதிகள் ரூ.2.208 கோடி மொத்தச் செலவில் தரம் உயர்த்தப்படும்.

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையிலே மருந்துப் பொருள் சோதனை ஆய்வுக் கூடத்திற்குத் தேவையான ஊழியர்கள் ரூ.1.95 இலட்சம் மொத்தச் செலவிலே நியமிக்கப்படும்.

35 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய முறைகள் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் மொத்தம் ரூ.1.19 கோடி செலவிலே தொடங்கப்படும்.

சென்னை வட்டாரப் பணிமனைக்கு மாநில சுகாதார இயக்ககக் கட்டடத் தொகுதியிலே பழுதுபார்ப்புக் கொட்டகை மொத்தம் ரூ.15 இலட்சம் செலவிலே கட்டப்படும்.

பிற்பகல் 6–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கற்பக விருட்சமாக, கருணையினுடைய முழுவடிவமாக, ஏழைகளின் நம்பிக்கையே, ஏற்றமிகு தங்கத் தாரகையே, தமிழகம் தழைத்தோங்க, தன்னலம் பாராது, அல்லும், பகலும் செயலாற்றும் சிங்கநிகர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, மூன்று தமிழ் கண்ட இலக்கியத்தில், நான்காம் தமிழாக அறிவியல் சாதனைகளால் போதனை வழங்கும் தர்மத் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திரமே. அம்மா என்னும் சொல்லுக்கு அர்த்தமாக, கருணை, இரக்கம், அன்பு கொண்டு, கழகத்தைக் கட்டிக் காக்கும் ஒப்பற்ற உயிரெழுத்தே, உயிர்களைக் காக்கும் மெய்யெழுத்தே, மாவட்டந்தோறும் அரசு மருத்துவமனைகளை நவீனமயமாக்கி, ஏழைகளுக்கு எட்டாத வசதிகளை, கழகத்தின் 'இதயம் காப்போம்' திட்டத்தின்மூலம் தந்து; பல்லாயிரம் உயிர்களைக் காத்த கருணைத் தாயே, மகத்தில் பிறந்து மகத்துவம் புரிந்து, மருத்துவத் தாயாக, தமிழர் மனதிலே ஆளுகின்ற எங்கள் இதய தெய்வமே,

சுனாமி பணிகளிலேயே பெரிய பணி, தொற்றுநோய் பரவாமல் தடுத்த பெரும் பணி என உலகச் சுகாதார நிறுவனமே அம்மா அவர்களைப் பாராட்டுகிறது. அம்மா, சுகாதாரத் துறை சார்பில் தங்களைப் பணிந்து என் உரையை நிறைவு செய்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாமன்ற உறுப்பினர்களெல்லாம் அவர்கள் பேசும்போது, பல்வேறு கோரிக்கைகளை இங்கே கொடுத்திருக்கிறார்கள். அத்தனை கோரிக்கைகளையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைக் கூறி, இங்கே மாமன்ற வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்த அத்தனை மாமன்ற உறுப்பினர்களும் தங்களது வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன இது சுண்டல் வாங்குகிற மாதிரி ஆளாளுக்கு கையைத் தூக்குகிறீர்கள்? திருமதி யசோதா, சொல்லுங்கள்.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கை நிறைவு பெறுகின்ற நிலையில், என்னுடைய தொகுதியில், குன்றத்தூரிலே ஒரு பிரசவ மருத்துவமனை இருந்து, மாவட்டம் மாறிய காரணத்தினால், முழுமையாக அது பூவிருந்தவல்லிக்கு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. அங்கே கட்டடம் மட்டும் இருக்கின்றது. இரண்டு ஆயாக்கள் இருக்கின்றார்கள். மருந்தும் கிடையாது. பூட்டிக் கிடக்கிறது. அது உடனடியாகத் திறக்கப்பட்டு, பிரசவத்திற்கு வருகின்ற மகளிருக்குப் பயன்படக்கூடிய வகையில், அதற்கான வழிவகைகளைக் கண்டறிய வேண்டுமென்று உங்கள்மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. விவாதம் முடிவுற்றது. தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளையெல்லாம் தனித் தனியாக எழுதிக் கொடுங்கள். இல்லையென்றால், இன்னொரு சுற்று விவாதம் நடைபெறுகிற மாதிரி ஆகிவிடும். தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளைத் தனித்தனியாக எழுதிக் கொடுங்கள்.

திருமதி டி. யசோதா: தலைவர் அவர்களே, நான் காலையிலே எழுதிக் கொடுத்திருக்கிறேன். முன்பும் எழுதிக் கொடுத்திருக்கிறேன். பதில் வரும் என்று நினைத்தேன். வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் நிச்சயமாகக் கவனிப்பார்.

திரு. கே.சி. கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 18 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன். (குறுக்கீடு) திரு. கே.சி. கருணாகரன், சொல்லுங்கள். ஏற்கெனவே அனுமதி கேட்டார். திரு. கருணாகரன், கேளுங்கள்.

திரு. கே.சி. கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நான்காண்டுகளில் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வந்திருக்கக்கூடிய, மாவட்ட பெரிய மருத்துவமனைகளுக்கான M.R.I. Scan வசதி சம்பந்தமாகத் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. தயவுசெய்து, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட இறுதி வாக்குறுதிகளைத் தயவுசெய்து பார்த்து, கோயம்புத்தூர் மாவட்டம் உள்ளிட்ட...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் கவனிப்பார், எழுதிக் கொடுங்கள். (குறுக்கீடு) என்ன, துரைமுருகன்? சொல்லுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (குறுக்கீடு) ஒரேயொரு நிமிடம். முடித்துவிடுகிறேன். அவரது கோரிக்கைக்குச் சொல்லிவிடுகிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, வருகின்ற நிதியாண்டில் கண்டிப்பாக இதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளிலே, பெரும்பாலும் வயற்புறங்களிலே பாம்புகள் அதிகமாகிவிட்டன. பாம்புகளை அடிக்கக்கூடாது என்று ஒரு சட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன இது? திடீரென்று பயத்தைக் கிளப்புகிற மாதிரி, பீதியைக் கிளப்புகிறீர்கள். (சிரிப்பு)

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, பாம்புகளை அடிக்கக்கூடாது என்று சட்டம். அடித்தால் பரமசிவனுக்குக் கோபம் வரும் என்று விட்டுவிடுகிறோம். ஆகையினாலே, இப்போது இரவு நேரங்களிலே 'current' கொடுப்பதனாலே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடிக்கக்கூடாது என்று G.O.–வா போட்டிருக்கிறார்கள்? அடிக்கலாம். அடியுங்கள்.

திரு. துரைமுருகன்: இல்லை, இல்லை. அடிக்கக்கூடாது. முன்பெல்லாம் யாரையாவது விட்டு பிடித்துவிடுவார்கள். இப்பொழுது பிடிக்கக்கூடாது. சட்டப்படி, இப்போது பாம்பைப் பிடிக்கக்கூடாது. அதனால், அது போனாலும், அது போகட்டும் என்று விட்டுவிடவேண்டும். ஆனால், அந்தப் பாம்பு என்ன பண்ணுகிறது என்றால், கடித்து விடுகிறது. முன்பெல்லாம், Union Office–லே, Primary Health Centre–லே, அங்கே, இங்கே என்று எங்கு பார்த்தாலும், பாம்புக் கடிக்கு மருந்து இருக்கும். ஆனால், அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது மறுபடியும் எல்லா இடங்களிலேயும் பாம்புக் கடிக்கு மருந்து இருக்கிறது என்கிறார். ஆனால், அன்றைக்கு ஒரு நாள், வேலூர் ஆஸ்பத்திரியில் பாம்புக் கடிக்காக வந்தவன் செத்துப் போய்விட்டான். (குறுக்கீடு) என்னையா? நீங்கள் கடித்துவிட்டால் பாம்பு கடித்த மாதிரி எனக்கு. ஆகையினாலே, பாம்புக் கடி மருந்துகள் எல்லா இடங்களிலேயும் தாராளமாகக் கிடைப்பதற்கு வேண்டிய வழிவகைகளை அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 6–05

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: ஏற்கெனவே இதுசம்பந்தமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன்படி, கண்டிப்பாக இதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன ஞானசேகரன்? சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்போது நாய்க் கடிக்காக 1.5 கோடி ரூபாய்க்கு மருந்துகள் வாங்கப்பட்டதாகத் தெரிவித்தார்கள். அது கடித்துவிட்ட பிறகு ஆண்டுக்கு 1.5 கோடி ரூபாயைச் செலவு செய்வதைவிட, கடிக்கின்ற நாய்களை அழிப்பதற்கு, அதைத் தடை செய்வதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 18 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன். திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

திரு. டி.கே. இராஜா: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஆர். கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

திருமதி காசாம்பு பூமாலை: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

திரு. அ.இரா. மலையப்பசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை. திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். கிருஷ்ணன்.

திரு. ஆர். கிருஷ்ணன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

திரு. சு. சிவராஜ்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

திரு. கே.சி. கருணாகரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி. கணேசன்.

திரு. வி. கணேசன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

திரு. டி. மணி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

திரு. கே. ஆறுமுகம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

திரு. சோ. இராசேந்திரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எம். ராம்குமார்.

திரு. எம். ராம்குமார்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

திரு. எஸ். நடராஜன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. துரை. கி. சரவணன்.

திரு. துரை. கி. சரவணன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம்.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

திரு. மு. கார்த்தி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

திரு. கோ. இரவிராஜ்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி.பி.எம். மைதீன்கான், இருக்கையில் இல்லை. திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை. திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

திருமதி எ. எஸ். மஹேஸ்வரி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி எ. எஸ். மஹேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. பாரமலை.

திரு. க. பாரமலை: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். தாமோதரன்.

திரு. எஸ். தாமோதரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். தாமோதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை. திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.ஏ.எம். உசேன்.

திரு. எஸ்.ஏ.எம். உசேன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஏ.எம். உசேன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.என். சிவசுப்பிரமணியன்.

***திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி.என். சிவசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி க. பாலபாரதி.

செல்வி க. பாலபாரதி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. அசோகன்.

திரு. அ. அசோகன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. அசோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

***திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. புகழேந்தி.

திரு. இ. புகழேந்தி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இ. புகழேந்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,457,50,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.194,53,92,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (22–3–2005) செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 6–07 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

63. 2003–2004 ஆம் ஆண்டிற்கான கரூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

64. 2003–2004 ஆம் ஆண்டிற்கான நீலகிரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

65. 2003–2004 ஆம் ஆண்டிற்கான இராமநாதபுரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

84. மானியக் கோரிக்கை எண் 18 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

85. மானியக் கோரிக்கை எண் 18 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பிற்கு வெளியிடப்பட்ட பிழைத் திருத்தங்கள். (தமிழ்)

86. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

87. 2–3–2005 ஆம் நாளன்று பேரவைமுன் வைக்கப்பெற்ற 2005–2006 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட வெளியீடு எண் 52 – விரிவான மானியக் கோரிக்கை – பொதுக் கடன் – திருப்பிச் செலுத்துதல்–க்குத் திருத்தங்கள்.

இணைப்பு

(402 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 18

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2005-2006

226642

அத்தியாயம் - 1

முன்னுரை

தமிழ்நாட்டின் சுகாதாரக் குறியீடுகள், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலேயே முதன்மை இடத்தை எட்டத் தொடங்கியுள்ளன. இந்தப் பொதுச் சுகாதாரத்தின் வேகமான வளர்ச்சி நாட்டின் பிற பகுதிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

தமிழ்நாட்டின் மக்கள் நல்வாழ்வுத் துறை, குறிப்பிடத்தக்க பொதுச் சுகாதாரக் கண்காணிப்பு ஏற்பாட்டு முறையில் முன்னோடியாக உள்ளது. அது, தாய்–சேய் நலனைப் பெரிதும் வலியுறுத்துகிறது. மகப்பேறின்போது இறந்துவிடுகிற தாய்மார்களின் எண்ணிக்கையைக் குறைக்கின்ற நோக்கத்துடனும், இயன்ற வரையில் அவற்றைத் தடுக்கவும், மாநிலத்தில், மகப்பேறின்போது மரணமடைகிற அத்தகைய அனைத்து தாய்மார்கள் பற்றிய நுணுக்கமான விவரங்களை அரசு கொண்டுள்ளது. உடனடி மகப்பேறு கவனிப்பு, இரத்த வங்கி, உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வசதிகள் செய்து கொடுத்தல் ஆகியவை குறித்து கவனம் செலுத்துகிற அரசின் கொள்கையால் பேறுகால தாய்மார்கள் இறப்பு விகிதம் நாட்டிலேயே மிகவும் குறைவாக உள்ளது. பேறுகால இறப்புகள் 2001-லிருந்து 2004 வரை 25 சதவிகிதம் குறைந்துள்ளது. உயிருடன் பிறக்கும் 1,000 குழந்தைகளுக்கு சிசு மரண விகிதம் 2000-ல் 51 என்ற நிலையில் இருந்து 2002-ல் 44 எனக் குறைந்துள்ளது. இதனால் இம்மாநிலம் நாட்டிலேயே மிகக் குறைந்த சிசு மரண விகிதத்தைக் கொண்ட மாநிலங்களில் ஒன்றாக உள்ளது. இம்மாநிலத்தில் மருத்துவமனைகளில் மற்றும் பயிற்சி பெற்ற பணியாளர்கள் மூலமாகவும் குழந்தை பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை 99.6 சதவிகிதம் ஆகும். ஊரகப்

D
V21l;31'POS'
POS.74.2

பகுதிகளில் மகப்பேறு பணிகளை எளிதில் பெறும் வசதி குறிப்பிடத்தக்க
அளவுக்கு அதிகரித்துள்ளது. மகப்பேறுக்குப் பின் அளிக்கப்படும் மருத்துவ
சிகிச்சையை மேம்படுத்துவதற்காக, நாட்டிலேயே முதல் தடவையாக
மகப்பேறின்போது அரசு மருத்துவமனைகளில் தாய்மாருக்கு உதவியாக
பெண் ஒருவரை நியமிக்கும் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியது.
ஊரகப் பகுதிகளில் தரமான மருத்துவ சிகிச்சையை அளிப்பதற்காக
நவீன ஆய்வுக்கூட வசதிகளுடன் அல்ட்ராசோனோகிராம்,
கையடக்கமான இ.சி.ஜி. மற்றும் நுண்கதிர் சாதனம் ஆகியவற்றுடன் 30
படுக்கை வசதியும் கொண்டதாக 104 ஆரம்ப சுகாதார நிலையங்களை
அரசு தரம் உயர்த்தியுள்ளது. இவ்வாறு ஊரகப் பகுதியிலுள்ள ஏழை,
எளிய மக்கள் மருத்துவ சிகிச்சை வசதியைப் பெறுவதற்கு வழிவகை
செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் சுகாதாரத் திட்டத்திற்கு உலக வங்கி ஒப்புதல்
அளித்துள்ளது. சுகாதாரப் பணிகளின் பயன்பாடு, தொற்று நோய்
அல்லாத நோய்கள் உட்பட முக்கியமான சுகாதாரப் பிரச்சினைகளைத்
தீர்ப்பதற்கான திறம்பட்ட நடவடிக்கைகளின் மேம்பாடு, பொதுச்
சுகாதாரக் கவனிப்பு ஏற்பாட்டு முறையின் மேம்படுத்தப்பட்ட நிர்வாகம்,
அரசுத் துறை மருத்துவமனைகளின் பணிகளைத் திறம்பட்ட முறையில்
அதிகரித்தல் ஆகியவற்றுக்கு இத்திட்டம் வகை செய்யும்.
இத்திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.597.15 கோடியாகும்.
இத்திட்டம், 2005 ஆம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு
செயல்படுத்தப்படவிருக்கிறது.

பெண்களின் ஒட்டுமொத்த சுகாதார உரிமைகள், குழந்தை
பெற்றுக்கொள்ளும் உரிமைகள் ஆகியவை உட்பட பெண்களின் உரிமைகள்
குறித்த மாநிலக் கொள்கைமீது பேறுசார் குழந்தை நலத் திட்டம்
நிலை II மிகுந்த கவனம் செலுத்துகிறது. இத்திட்டத்திற்கு உலக வங்கி,
மொத்தம் ரூ.426 கோடி நிதியொதுக்கீட்டிற்கு அனுமதி அளித்துள்ளது.
இந்த உரிமைகளை உறுதி செய்வது குறித்து கவனம் செலுத்தும்.
இத்திட்டம் 2005 ஆம் ஆண்டிலிருந்து 5 ஆண்டு கால அளவிற்கு
செயல்படுத்தப்படவிருக்கிறது. 2005–2006 மற்றும் 2006–2007 ஆம்
ஆண்டுகளில் இத்திட்டத்தை மேற்கொள்வதற்காக, மத்திய அரசு, ரூ.148
கோடியை ஏற்கெனவே ஒதுக்கீடு செய்துள்ளது. பேறுசார் மற்றும் குழந்தை
நலத் திட்டத்தின் இரண்டாம் நிலை, பெண்கள், குழந்தைகள் மற்றும்
வளரிளம் பருவத்தினர் போன்ற தொகுதியினர்மீது முக்கியக் கவனம்

செலுத்தும். அது, ஏற்கெனவே தெரிவு செய்யப்பட்ட 62 உடனடி மகப்பேறு
கவனிப்பு மற்றும் பிறந்த குழந்தை கவனிப்பு மையங்களுடன் (CEMONC
Centres) மேலும் 17 வட்ட மருத்துவமனைகள் புதிய மையங்களாகத் தெரிவு
செய்யப்படவுள்ளன. இந்த உடனடி மகப்பேறு கவனிப்பு மற்றும் பிறந்த
குழந்தை கவனிப்பு மையங்களில், விபத்துக்குள்ளான நோயாளிகளுக்கு
சிகிச்சை அளிக்கப்படவுள்ளது. பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்ட
நடவடிக்கைகளுடன், ஹெச்ஐவி. / எய்ட்ஸ் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள்
இணைக்கப்படும். துணை மருத்துவப் பணியாளர்களுக்கு இந்திய முறை
மருத்துவத்தில் பயிற்சி அளிக்கப்படும். அங்கன்வாடி பணியாளர்கள்
மற்றும் பயிற்சி பெற்ற வளரிளம் பெண்களுடன், அனைத்து கிராமச்
சுகாதார செவிலியருக்கும் இந்திய முறை மருத்துவச் சாதனங்கள் அடங்கிய
சிறு பெட்டிகள் வழங்கப்படும்.

தரமான மருத்துவ சிகிச்சை மற்றும் உயர்தரமுள்ள மருத்துவக்
கல்வியை அளிப்பதற்காக சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு
பொது மருத்துவமனைக்குத் தர நிர்ணயம் மற்றும் சான்றளிக்கும்
பன்னாட்டு நிறுவனம் ஐ.எஸ்.ஓ. 9001:2000 சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது.

மருத்துவப் பணிகளை மேம்படுத்துவதற்காக, தேனி, கன்னியாகுமரி
மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்க
அரசு முடிவெடுத்துள்ளது. மருத்துவப் பணிகளுக்கான செவிலியரின்
தேவை அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டு, 11 புதிய செவிலியர்
பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன.

அரசு, குறிப்பாக கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழை, எளிய மக்களுக்கு
நல்ல தரமான மருத்துவ சிகிச்சை வசதியை அளிக்கிற பொறுப்பை
ஏற்றுக் கொண்டுள்ளது. இக்கடமைப் பொறுப்பை நிறைவேற்றும்
வகையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2,322
மருத்துவ அதிகாரிகளை நியமிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
அனுமதியளித்துள்ளார்கள். தமிழ்நாடு அரசுப் பணியாளர்
தேர்வாணையம் மருத்துவ அதிகாரிகளைத் தெரிவு செய்யும் வரை
தேவையான சுகாதாரப் பணியை உடனடியாக அளிப்பதை உறுதி
செய்வதற்காக, தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகள் பணியில் சேருகிற
வரையில், மருத்துவ அதிகாரிகளின் பணியை ஆற்றுவதற்காக "ஒப்பந்த
அடிப்படையில் மருத்துவ ஆலோசகர்கள்" நியமிக்கப்படுவர்.

[2005 மார்ச் 21

ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும், படிப்படியாக, இந்திய முறை மருத்துவர் ஒருவரை நியமிக்க, தமிழ்நாடு அரசு விழைகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் 35 ஆரம்ப சுகாதார நிலையங்களில், இந்திய முறை மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளுக்கு அனுமதியளிக்க அரசு கருதியுள்ளது.

2004 ஆம் ஆண்டின் இறுதியில், சுனாமி தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளைத் தாக்கி, உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் பெருமளவில் இழப்பை ஏற்படுத்தியதுடன், உயிர் பிழைத்தோருக்குப் பேரதிர்ச்சியை உண்டாக்கியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல் மிக்க தலைமையின்கீழ், விரைவாகவும், இடைவிடாமலும் சுனாமி பேரழிவு நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மக்கள் நல்வாழ்வுத் துறை உட்பட, அரசு உரிய காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகளால் தொற்று நோய் எதுவும் ஏற்படாமல் தடுக்கப்பட்டது. அதை, பன்னாட்டு அமைப்புகள் அனைத்தும் வெகுவாகப் பாராட்டின.

சுனாமியின்போது தங்கள் குழந்தைகளை இழந்து விட்டவர்களில் பெண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்ட அல்லது ஆண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்ட பெற்றோருக்கு அறிவிக்கையிடப்பட்ட அரசு மருத்துவ மனைகளிலும் மற்றும் அவர்களுடைய விருப்பத்திற்கேற்ப தனியார் மருத்துவமனைகளிலும் கருத்தடை நீக்க அறுவை சிகிச்சை செய்துகொள்ளலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். மேற்சொன்ன அறுவை சிகிச்சையைச் செய்கிற தனியார் மருத்துவமனைகளுக்கு நபர் ஒருவருக்கு ரூ.25,000/- வீதம் வழங்கப்படும்.

சுகாதாரத் துறையில் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் மக்கள் அனைவருக்கும் சிறந்த சுகாதார வசதியை அளிப்பதில், தமிழ்நாட்டை இந்நாட்டிலேயே முதல் மாநிலமாக மாற்றும் என்று அரசு முற்றிலும் நம்புகிறது.

மானியக் கோரிக்கை எண் 18-மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை என்பதன்கீழ் 2005–2006 ஆம் ஆண்டுக்கு ரூ.1,652.04 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அது பற்றிய விவரம் வருமாறு:—

2005 மார்ச் 21]

(ரூபாய் கோடியில்)

மானியக் கோரிக்கை	திட்டத்தில் சேராதது	திட்டப் பணிகள்			
		மாநிலத் திட்டம்	மத்திய அரசு பொறுப் பேற்பவை	மத்திய அரசு நிதியுதவி பெறுபவை	மொத்தம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
18–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	961.79	402.60	287.40	–	690.00

(ரூபாய் கோடியில்)

மானியக் கோரிக்கை (1)	திட்டப் பணிகள் மற்றும் திட்டத்தில் சேராதது (7)	கூட்டுக- திருப்பி வசூலிப்பவை (8)	மொத்தம் (9)
18–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	1651.79	0.25	1652.04

மானியக் கோரிக்கை எண் 18—மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை என்பதன்கீழ் 2005-2006 ஆம் ஆண்டில் இயக்ககம் வாரியான நிதிஒதுக்கீடு வருமாறு:—

[2005 மார்ச் 21

(ரூபாய் இலட்சத்தில்)

1.	தலைமைச் செயலகம்	323.78
2.	மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம்	25607.31
3.	மருத்துவக் கல்வி இயக்ககம்	55090.48
4.	பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம்	48792.29
5.	குடும்ப நல இயக்ககம்	6697.91
6.	மருந்துக் கட்டுப்பாடு இயக்ககம்	499.81
7.	இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம்	8074.47
8.	தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை	857.38
9.	பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்ட இயக்ககம்	7396.85
10.	தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டம்	11863.84
	மொத்தம்	**165204.12**

குறிப்பு:

(அ) பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டடப் பணிகள் வகையில் ரூ.144.61 கோடி மானியக் கோரிக்கை எண் 38-ன்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மாநில தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனைகளுக்காக மானியக் கோரிக்கை எண் 31—தொழிலாளர் நலன் மற்றும் வேலை வாய்ப்பு என்பதன்கீழ் ரூ.86.57 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் நோய்க் கட்டுப்பாடு சங்கத்திற்கான நிதி, மருத்துவக் கல்வி இயக்ககத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

2005 மார்ச் 21]

அத்தியாயம் – 2

மருத்துவக் கல்வி

மருத்துவக் கல்வி இயக்ககம் 1966 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வியக்ககத்தின் முதன்மை நோக்கங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

(1) மருத்துவக் கல்வியை மேம்படுத்துதல்.

(2) மருத்துவக் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவமனைகளை நிர்வகித்தல்.

(3) மருத்துவம் மற்றும் செவிலியர் படிப்புகளுக்கான சேர்க்கைக்காக, தேர்வுக் குழுவை சீரிய முறையில் கண்காணித்தல்.

மருத்துவக் கல்லூரிகள்

மாநிலத்தில் தற்போது 12 மருத்துவக் கல்லூரிகளும், 1 பல் மருத்துவக் கல்லூரியும், 2 இயன்முறை மருத்துவக் கல்லூரிகளும் மற்றும் 2 செவிலியர் பயிற்சிக் கல்லூரிகளும் அரசின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. இந்த இயக்ககத்தின்கீழ் இயங்கும் 44 மருத்துவ மனைகளில் உள்ள மொத்தப் படுக்கைகளின் எண்ணிக்கை 21,399. நாளொன்றுக்கு முறையே 19,739 மற்றும் 69,483 அகநோயாளிகளும், புறநோயாளிகளும் சராசரியாக சிகிச்சை பெற்று வருகின்றனர். இம் மாநிலத்தில் அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள்மூலம் மருத்துவக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள இடங்களின் எண்ணிக்கை

அட்டவணை: 1

(அ) பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பில் உள்ள இடங்களின் எண்ணிக்கை.

படிப்பின் பெயர்	மொத்த இடங்கள்
எம்.பி.பி.எஸ்.	1,445
பி.டி.எஸ்.	100
பி.எஸ்.ஸி (செவிலியர்)	50

[2005 மார்ச் 21

படிப்பின் பெயர்	மொத்த இடங்கள்
இயன்முறை மருத்துவம்	50
மருந்தாக்கியல் (இளநிலை)	110
செவிலியர் பட்டயப் படிப்பு	1,745

(ஆ) பட்ட மேற்படிப்பில் உள்ள சிறப்புப் படிப்புகள் மற்றும் அவற்றிற்கான இடங்களின் எண்ணிக்கை.

பாடத் திட்டம்	சிறப்புப் படிப்பு எண்ணிக்கை	மொத்த சேர்க்கை இடங்கள்
பட்ட மேற்படிப்பு	22	434
பட்டய மேற்படிப்பு	15	468
எம்.டி.எஸ்.	9	25
உயர் சிறப்பு மேற்படிப்பு	15	74
மருந்தாக்கியல் (முதுநிலை)	4	12
எம்.எஸ்.ஸி. (செவிலியர்)	4	8

அட்டவணை: 2

தனியார் துறையில் செயல்படும் சுய நிதி மருத்துவக் கல்லூரி மற்றும் துணை மருத்துவக் கல்விநிறுவனங்களின் எண்ணிக்கை.

கல்லூரி/படிப்பு	மொத்தக் கல்லூரிகள்	மொத்த இடங்கள்
ஐ.ஆர்.டி. மருத்துவக் கல்லூரி, பெருந்துறை (ஓரளவு அரசு சார்ந்த கல்லூரி) எம்.பி.பி.எஸ்.	1	60
மருத்துவக் கல்லூரிகள் – எம்.பி.பி.எஸ்.	1	100

2005 மார்ச் 21]

பல் மருத்துவக் கல்லூரிகள் – பி.டி.எஸ்.	7	480
மருந்தாக்கியல் கல்லூரிகள்	31	1650
இயன்முறை மருத்துவம் (இளநிலை)	33	1650
செவிலியர் (பட்டப் படிப்பு)	39	1900
தொழில்வழி சிகிச்சை (பட்டப் படிப்பு)	5	250

மாணவர் தெரிவு முறை:

மருத்துவம்/பல் மருத்துவம்/செவிலியர்/இயன்முறை மருத்துவம்/தொழில் வழி மருத்துவம்/மருந்தாக்கியல் ஆகிய பட்டப் படிப்புகளுக்கு மருத்துவக் கல்வி இயக்குநரின் தலைமையிலான தேர்வுக் குழு ஒவ்வொரு வருடமும் அறிவிக்கப்படும் அரசின்கொள்கைக்கிணங்க ஒற்றைச் சாளர முறையில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறது. பட்ட மேற்படிப்பு, பட்டய மேற்படிப்பு, முதுநிலை பல் மருத்துவம், உயர் சிறப்பு மேற்படிப்பு ஆகிய இடங்களுக்கு பொது நுழைவுத் தேர்வினைத் தொடர்ந்து கலந்தாய்வுமூலம் தேர்வுக் குழுவால் இட ஒதுக்கீட்டினைப் பின்பற்றி மாணவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். பட்டயப் படிப்பு (செவிலியர்) இடங்களுக்கும் மதிப்பெண் (+2 மதிப்பெண்) மற்றும் கலந்தாய்வுமூலம் தேர்வுக் குழுவால் இட ஒதுக்கீடு முறையைப் பின்பற்றி மாணவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி, கன்னியாகுமரி

கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிபள்ளத்தில் 100 மாணவர்களை அனுமதிக்கும் வகையில் ஒரு புதிய மருத்துவக் கல்லூரி துவங்குவதற்கு மத்திய அரசு 2004 ஆம் ஆண்டு சூலைத் திங்களில் ஒப்புதல் வழங்கியது. அதன்படி மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு கல்லூரி 2004–2005 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது. இந்திய மருத்துவக் குழுமத்தின் விதிகளின்படி, மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக் கட்டடங்கள் படிப்படியாகக் கட்ட, அரசு ரூ.45.44 கோடி ஒப்பளித்துள்ளது.

தேனி மருத்துவக் கல்லூரி, தேனி

இந்திய மருத்துவக் குழுமம் 16-12-2004 மற்றும் 17-12-2004 ஆகிய தேதிகளில் தேனி அரசு மருத்துவக் கல்லூரியில் ஆய்வு மேற்கொண்டது. இக்கல்லூரியில் ஓராண்டிற்கு 100 மாணவர்களைச் சேர்க்க மத்திய அரசிடமிருந்து முன் அனுமதிக் கடிதமும் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்திய

[2005 மார்ச் 21

மருத்துவக் குழுமத்தின் விதிகளின்படி, மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக் கட்டடங்களைப் படிப்படியாகக் கட்ட, அரசு ரூ. 46.93 கோடி ஒப்பளித்துள்ளது.

வேலூர் மருத்துவக் கல்லூரி, வேலூர்

இந்திய மருத்துவக் குழுமம் 22-12-2004 மற்றும் 23-12-2004 ஆகிய தேதிகளில் வேலூர் அரசு மருத்துவக் கல்லூரியில் ஆய்வு மேற்கொண்டது. இக்கல்லூரியில் ஓராண்டிற்கு 100 மாணவர்களைச் சேர்க்க மத்திய அரசிடமிருந்து முன் அனுமதிக் கடிதம் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்திய மருத்துவக் குழுமத்தின் விதிகளின்படி, மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக் கட்டடங்களைப் படிப்படியாகக் கட்ட, அரசு ரூ.51.32 கோடி ஒப்பளித்துள்ளது.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் இந்திய மருத்துவக் குழுமம் வழிமுறை காட்டுதலின்படி, கூடுதல் கட்டடங்கள் கட்டுதல், மற்றும் அடிப்படை வசதிகளை விரிவுபடுத்திக் கொள்வதற்காகவும் அரசால் ரூ.15.85 கோடி ஒப்பளிக்கப்பட்டு, 2004–05 ஆம் ஆண்டிற்கு ரூ.5.96 கோடியும், 2005–06 ஆம் ஆண்டிற்கு ரூ.9.89 கோடியும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி, தூத்துக்குடி

தூத்துக்குடி மருத்துவக் கல்லூரியில் இந்திய மருத்துவக் குழுமம் வழிமுறை காட்டுதலின்படி, கூடுதல் கட்டடங்கள் கட்டவும், மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் அரசால் ரூ.27.75 கோடி ஒப்பளிக்கப்பட்டு, 2004–05 ஆம் ஆண்டிற்கு ரூ.3.06 கோடியும், 2005–06 ஆம் ஆண்டிற்கு ரூ.12.44 கோடியும் மற்றும் 2006–07 ஆம் ஆண்டிற்கு ரூ.12.25 கோடியும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

கூடுதல் ஒப்பளிப்பு

கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி, தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிகளுக்கு சாதனங்கள், வாகனங்கள், மரச்சாமான்கள் மற்றும் நூலகத்திற்குப் புத்தகங்கள் வாங்குவதற்கு ரூ.13.45 கோடி, ரூ.5.40 கோடி மற்றும் ரூ.4.48 கோடி, ஆக ரூ.23.33 கோடி 2004–05 ஆம் ஆண்டிற்கு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2005 மார்ச் 21]

வேலூர் மருத்துவக் கல்லூரிக்கு சாதனங்கள், மரச்சாமான்கள், வாகனங்கள் மற்றும் புத்தகங்கள் வாங்குவதற்கு 2004–05 ஆம் ஆண்டிற்கு ரூ.15.39 கோடி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

தேனி மருத்துவக் கல்லூரிக்கு சாதனங்கள், மரச்சாமான்கள், வாகனங்கள் மற்றும் புத்தகங்கள் வாங்க ரூ.15.39 கோடி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

ஐந்து மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவப் படிப்பு சேர்க்கையினை அதிகரித்தல்

கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மற்றும் சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி ஆகிய 5 அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை 150 ஆக உயர்த்தப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இந்திய மருத்துவக் குழு வழிகாட்டுதல்களின்படி, கூடுதல் பணியாளர்கள், மருத்துவ சாதனங்கள் மற்றும் கட்டடங்கள் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது. ரூ.1.00 கோடி செலவில் மருத்துவ சாதனங்கள், மரச்சாமான்கள் வாங்க எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ஒப்பளிக்கப்பட்டுள்ளது. ஐந்து மருத்துவக் கல்லூரிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட ரூ.10.00 கோடி ஹட்கோ நிதி நிறுவனத்திடமிருந்து கடனாகப் பெறப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் மருத்துவ உபகரணங்கள் வாங்க ரூ.1.00 கோடி அரசால் ஒதுக்கப்படுகிறது. இந்திய மருத்துவக் குழுமம், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிகளை ஆய்வு செய்து மாணவர்கள் சேர்க்கைக்கான இடங்களை அதிகரிக்க அனுமதி அளித்து கூடுதல் இடங்களுக்கு மாணவர்கள் சேர்க்கப்பட்டு விட்டனர். இந்திய மருத்துவக் குழுமம், சென்னையிலுள்ள கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மற்றும் சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 2 மற்றும் 3 ஆகிய தேதிகளில் ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் 2004–ல் மருத்துவக் குழுமத்தால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, சுட்டிக்காட்டப்பட்ட குறைகள் களையப்பட்டு, ஆய்வுக்காக விண்ணப்பம் இந்திய மருத்துவக் குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட உள்ளது.

செவிலியர் பயிற்சி

11 புதிய செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் (3 பள்ளிகள் மருத்துவக் கல்லூரிகளிலும், 8 பள்ளிகள் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும்) 50 மாணவியர் சேர்க்கையுடன் தொடங்கி இயங்கி வருகின்றன. ஏற்கெனவே உள்ள 9 செவிலியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவிகள் சேர்க்கையினை 50-லிருந்து 100 ஆக உயர்த்தவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது,

விருதுநகர் அரசு தலைமை மருத்துவமனையில் செவிலியர் பயிற்சிப் பள்ளி தொடங்குதல்

விருதுநகர் அரசு தலைமை மருத்துவமனையில் ஆண்டுதோறும் 50 மாணவ, மாணவிகள் செவிலியர் பட்டயப் படிப்புப் பயிற்சி பெறும் வகையில் புதிய செவிலியர் பயிற்சிப் பள்ளி தொடங்க ரூ 118.80 இலட்சம் செலவில் ஒப்பளிப்பு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

சென்னை அரசு பொது மருத்துவமனையில் கட்டப்படும் இரண்டு அடுக்குக் கட்டடம்

சென்னை அரசு பொது மருத்துவமனையில் 7 மாடிகள் கொண்ட இரட்டை அடுக்குக் கட்டடங்கள் ரூ.104.47 கோடி செலவில் ஹட்கோ நிறுவனத்தின் கடன் உதவியுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இது விரைவில் திறக்கப்படவுள்ளது.

அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் கை அறுவை ஒட்டுறுப்பு ஆராய்ச்சி மற்றும் மறுவாழ்வு நிலையம் மற்றும் புறநோயாளிகள் பிரிவுக்கான கட்டுமானப் பணிகள்

அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் உள்ள கை அறுவை ஒட்டுறுப்பு ஆராய்ச்சி மற்றும் மறுவாழ்வு நிலையம் ரூ.10.00கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது. மேலும் ரூ.6.50 கோடி செலவில் வெளிநோயாளிகள் சிகிச்சைப் பகுதிக்கான கட்டடம் கட்டும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம்

தற்போது கீழ்க்காணும் மருத்துவமனைகளில் புற்றுநோய் சிகிச்சை அளிக்கும் பொருட்டு மத்திய அரசு உதவியுடன் கோபால்ட் தெரபி கருவி நிறுவப்பட்டு புற்றுநோய் கொண்ட நோயாளிக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது:

1. அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை
2. அரசு மகளிர் நோயியல் நிலையம் மற்றும் தாய்-சேய் நல மருத்துவமனை, சென்னை
3. அரசு பொது மருத்துவமனை, சென்னை
4. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை
5. அரசு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்
6. அரசு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி
7. அரசு இராசாசி மருத்துவமனை, மதுரை
8. அரசு கோயம்புத்தூர் மருத்துவமனை, கோயம்புத்தூர்
9. அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை, காஞ்சிபுரம்.

சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கோபால்ட் தெரபி கருவி நிறுவிட மத்திய அரசு ரூ.2.00 கோடி நிதி உதவி அளித்துள்ளது.

மார்பகப் புற்றுநோயைக் கண்டறிவதற்கான சாதனம் (Mammography Units)

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றிற்கு 2003–2004 ஆம் ஆண்டு மார்பகப் புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதற்கான சாதனம் வழங்கப்பட்டது. இச்சாதனம் ஏற்கெனவே அங்கு நிறுவப்பட்டு நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மனநல மருத்துவம்

சென்னை, அரசு மனநலக் காப்பகம் வலுப்படுத்தப்பட்டு நடைமுறை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது. ரூ1.05 கோடி செலவில் நிர்வாகப் பிரிவிற்கான புதிய கட்டடம் கட்டும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. மத்திய அரசின் மானிய உதவியைக் கொண்டு ஒவ்வொன்றும் ரூ.8.00 இலட்சம் செலவில் போதைப் பழக்கத்திலிருந்து விடுவிக்கும் மூன்று மையங்கள் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே இதுபோன்ற 8 நிலையங்கள் இயங்கி வருகின்றன.

இரத்த சேமிப்பு வங்கி

[2005 மார்ச் 21

மருத்துவக் கல்லூரி இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கும் 22 அரசு மருத்துவமனைகளில் உள்ள இரத்த சேமிப்பு வங்கிகள் அரசு உரிமம் பெற்று செயல்பட்டு வருகின்றன.

கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் பகுதி

சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் உள்ள குடல் இரத்தக் கசிவு சிகிச்சை மையம் (G.I. Bleed Centre) மற்றும் இரைப்பை மற்றும் குடல் நோய் சிகிச்சைத் துறை, மகளிர் நோயியல் நிலையம் மற்றும் தாய்-சேய் நல மருத்துவமனை, அரசினர் கஸ்தூரிபா காந்தி தாய்-சேய் நல மருத்துவமனை ஆகியவற்றில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் பகுதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மருத்துவக் கல்வித் துறையின் கீழ் வரும் கீழ்க்கண்ட மருத்துவமனைகளில் நோயாளர்களுக்கான கட்டண சிகிச்சைப் பகுதி ஏற்படுத்துவது குறித்துப் பரிசீலனையில் உள்ளது:

1. அரசு மருத்துவமனை, இராயப்பேட்டை
2. அண்ணல் காந்தி நினைவு அரசு மருத்துவமனை, திருச்சி
3. அரசு இராசாசி மருத்துவமனை, மதுரை
4. அரசு ஸ்டான்லி மருத்துவமனை (ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை துறை).

கிங் நோய்த் தடுப்புமருந்து நிலையம்

கிண்டியிலுள்ள கிங் நோய்த் தடுப்பு மருந்து நிலையம், நாட்டிலுள்ள தலைசிறந்த ஆய்வுக்கூடங்களில் ஒன்றாகும். இந்த நிலையத்தில் தடுப்பு ஊசி மருந்துகள் மற்றும் ஊநீர் (SERUM) தயாரிக்கப்படுகின்றன. இது ஒரு கற்பிக்கும் மற்றும் ஆராய்ச்சி நிலையமாகவும் திகழ்கிறது. இந்நிறுவனத்தின் நோய் நுண்ம நச்சாய்வுப் பிரிவு, இந்திய அரசாலும், உலக சுகாதார நிறுவனத்தாலும், தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கான தேசிய இளம்பிள்ளை வாத நோய்த் தடுப்பு ஆய்வகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. உலக சுகாதார நிறுவனம் 2003 ஆம் ஆண்டில்

2005 மார்ச் 21]

இரண்டு விஞ்ஞான ஆராய்ச்சி மாணவர்களுக்குத் தட்டம்மைக்கான பயிற்சியை அளித்துள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் மூன்று மில்லியன் டோஸஸ் இரண ஜன்னி நோய்த் தடுப்பு மருந்து உற்பத்தி செய்ய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு, உற்பத்தி இலக்கு அடையப்படும். 2005–2006 ஆம் ஆண்டில் இணையதளத்தில் மருத்துவத் தகவல் மையம் அமைப்பதற்கு உரிய திட்டம் உள்ளது. மேலும் உலக சுகாதார அமைப்பின் உதவியுடன் தட்டம்மை ஆய்வுக்கான தேசிய ஆய்வகம் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் 1988 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நிறுவப்பட்டது. மருத்துவ அறிவியல் ஆராய்ச்சி, மருத்துவ மற்றும் மருத்துவம் சாரா மேற்படிப்புக்கான கல்வித் தரத்தை உன்னத நிலைக்கு உயர்த்துவது இதன் நோக்கமாகும். தற்போது இம்மருத்துவப் பல்கலைக்கழகத்தின்கீழ் 209 கல்வி நிறுவனங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பல்கலைக்கழகத்தின்கீழ் குருதி ஏற்றும் மருத்துவத் துறை, பாடத் திட்ட மேம்பாட்டுத் துறை, கொள்ளை நோயியல் துறை, சோதனை மருத்துவத் துறை ஆகியவை இயங்கி வருகின்றன.

தொலைத் தொடர்பு நுண் மின் நூலகம்

27–1–2005 அன்று தொலைத் தொடர்பு மின்னணு நூலகம் என்ற ஒரு பிரிவினை இந்திய மற்றும் மாநில அரசாங்கத்தின் நிதியுதவியுடன் துவங்கியது. தேவையான நூல்கள் மற்றும் இதழ்கள் மின்னணு வடிவமாக்கப்பட்டு, உபயோகிப்பவர்கள் எளிதாகவும், விரைவாகவும் தங்களுக்கு வேண்டியவற்றைப் பிரதி எடுத்துக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகம் வினாத்தாள் வங்கி என்ற வெப் பக்கம்/தளம் ஒன்றை இந்தியாவிலேயே முதன்முதலாகத் துவங்கியுள்ளது. இதன்மூலம் வேண்டுபவர்கள் இப்பல்கலைக் கழகத்தின் அனைத்து முடிந்த 'வினாத்தாள்களையும் ஆண்டுவாரியாக, சிறப்புப் பாடப்பிரிவு வாரியாகப் பிரதி எடுத்துக் கொள்ளலாம். இப்பல்கலைக்கழகத்திலுள்ள நூலகத்தின் பயன்பாட்டிற்கு என்று தனி ஒரு கட்டடம் அமைப்பது குறித்து ஒரு திட்டம் உள்ளது.

இப்பல்கலைக்கழகத்திற்கும் அமெரிக்காவின் வாசிங்டன் பல்கலைக் [2005 மார்ச் 21
கழகத்திற்கும் இடையில் ஆகஸ்ட் 19, 2004-ல் எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் முகாம்களில் மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரின் கூட்டு நடவடிக்கைக்காக ஒரு குறிப்பு உடன்படிக்கை (Memorandum of Understanding) கையெழுத்தாகியுள்ளது.

2005–2006 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

(1) சென்னை, தண்டையார்பேட்டையிலுள்ள அரசினர் புறநகர் மருத்துவமனைக்காக ரூ.1.00 இலட்சம் மொத்தச் செலவில் இ.பி.ஏ.பி.எக்ஸ். (EPABX) தொலைபேசி போர்டு வாங்குதல்.

(2) சென்னை, தண்டையார்பேட்டையிலுள்ள அரசினர் புறநகர் மருத்துவமனைக்கு ரூ.4.00 இலட்சம் மொத்தச் செலவில் 40 கிலோவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி இயந்திரம் வாங்குதல்.

(3) சென்னை, தண்டையார்பேட்டையிலுள்ள அரசினர் புறநகர் மருத்துவமனையில் ரூ.1.50 இலட்சம் மொத்தச் செலவில் அறுவைச் சிகிச்சைக்குப் பின் கவனிப்பு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவை மேம்படுத்துதல்.

(4) மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்வி இயக்ககம் இடையே கணினிமயமாக்கப்பட்ட கட்டமைப்பு முறையை ரூ. 50.00 இலட்சம் மொத்தச் செலவில் உருவாக்குதல்.

(5) கோயம்புத்தூர், சேலம், சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக 3 மருத்துவக் கல்லூரிகளுக்கு ரூ.500.00 இலட்சம் மொத்தச் செலவில் சாதனங்களும், அறைகலன்களும் வழங்குதல்.

(6) 100 மாணவர், 150 மாணவியர் தங்குவதற்கு ஏற்ப திருச்சி கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரியில் ரூ.306.00 இலட்சம் மொத்தச் செலவில் மாணவர் இல்லங்கள் கட்டுதல்.

2005 மார்ச் 21]

(7) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் உடற்கூறியல் (Physiology) துறைக்கு ரூ.1.91 இலட்சம் மொத்தச் செலவில் கட்டடங்கள் கட்டுதல்.

(8) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் உயிரி வேதியியல் துறையில் ரூ.3.00 இலட்சம் மொத்தச் செலவில் படியடுக்கு வகை கருத்தரங்குக் கூடம் கட்டுதல்.

(9) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் மருந்தாக்கியல் துறைக்கு ரூ.13.00 இலட்சம் மொத்தச் செலவில் கட்டுமானப் பணிகள் செய்தல்.

(10) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிக்கு ரூ.7.80 இலட்சம் மொத்தச் செலவில் நூலகக் கட்டடங்கள் கட்டுதல்.

(11) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி நுண் உயிரியல் துறைக்கு ரூ.12.00 இலட்சம் மொத்தச் செலவில் கட்டுமானப் பணிகள் செய்தல்.

(12) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் நோய்க் குறியியல் துறைக்கு ரூ.7.75 இலட்சம் மொத்தச் செலவில் சிறு கட்டுமானப் பணிகள் செய்தல்.

(13) தாம்பரம் அரசினர் நெஞ்சக மருத்துவமனையில் ரூ.4.20 இலட்சம் மொத்தச் செலவில் பிணவறைக் கட்டடம் கட்டுதல்.

(14) தஞ்சாவூர் அரசினர் இராஜா மிராசுதார் மருத்துவமனையில் ரூ.29.27 இலட்சம் மொத்தச் செலவில் புறநோயாளி கட்டடத் தொகுதியில் ஒரு பகுதியைக் கட்டுதல்.

(15) தஞ்சாவூர் அரசினர் இராஜா மிராசுதார் மருத்துவமனையில் ரூ.23.60 இலட்சம் மொத்தச் செலவில் நோய் நுண்மம் நீக்கும் மையத் தளவாடம் வழங்குதல் மற்றும் கட்டடம் கட்டுதல்.

[2005 மார்ச் 21

அத்தியாயம் – 3

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், மருத்துவ சேவை குறித்த அனைத்துத் திட்டங்களையும் திட்டமிட்டு 29 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், 155 வட்டத் தலைமை மருத்துவமனைகள், 80 வட்டம் சாரா மருத்துவமனைகள், 12 மருந்தகங்கள், 11 நடமாடும் மருத்துவப் பிரிவுகள், 7 தாய்-சேய் நல மருத்துவமனைகள், 2 காசநோய் மருத்துவமனைகள் மற்றும் 2 காசநோய் மையங்கள், 7 தொழுநோய் மருத்துவமனைகள் வாயிலாக மருத்துவ சேவைப் பணிகளை பொது மக்களுக்கு வழங்கும் பொறுப்பு வகிக்கிறார். இவை தவிர அவர் மனித உள்ளுறுப்புகளை மாற்றுவதை முறைப்படுத்தும் சட்டம், பிறப்பிற்கு முன் கருவின் தன்மையறியும் தொழில்நுட்பம் குறித்த சட்டம், தனியார் மருத்துவமனைகளை அங்கீகரிக்கும் சட்டம் முதலிய பல்வேறு திட்டங்களின் செயலாக்கத்தைக் கவனித்து வருகிறார்.

இம்மாநிலம் 30 வருவாய் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அதில் சென்னை மாவட்டம் நீங்கலாக 29 மாவட்டங்களில் இத்துறையின் வாயிலாக மருத்துவ சேவைப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. நிர்வாக வசதிக்காக இந்த 29 மாவட்டங்களும் 42 நலப் பிரிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு நலப் பிரிவு மாவட்டங்களிலுள்ள மருத்துவ நிறுவனங்கள் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் மற்றும் குடும்ப நல இணை இயக்குநர்கள் மற்றும் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் மற்றும் குடும்ப நல துணை இயக்குநர்களின் மேற்பார்வையின்கீழ் செயல்பட்டு வருகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மருத்துவப் பணிகள் துணை இயக்குநர், (காசநோய்) காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தைக் கவனித்து வருகிறார். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மருத்துவப் பணிகள் துணை இயக்குநர் (தொழுநோய்), தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தைக் கவனித்து வருகிறார். தொழுநோய் களப் பணியாளர்களைப் பொதுச் சுகாதாரப் பணியில் ஈடுபடுத்தவும், சுகாதார ஆய்வாளர்களை தொழுநோய் தடுப்புப் பணியில் ஈடுபடுத்தவும், தொழுநோய்த் திட்டம் ஏற்கெனவே பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனைகள் மூலமாக விரிவான மற்றும் கீழ்க்கண்ட முக்கிய சிறப்பு சிகிச்சைகள், அதாவது மருத்துவம், அறுவை சிகிச்சை, மகப்பேறு சிகிச்சை, காது, மூக்கு,

2005 மார்ச் 21]

தொண்டை சிகிச்சை, பால்வினை நோய் சிகிச்சை, எலும்பு முறிவு அறுவை சிகிச்சை, மயக்க மருத்துவம், குழந்தை நலம், பல்நோய் சிகிச்சை, மனநல சிகிச்சை, நோயியல் ஆய்வக பணி, தொழுநோய் சிகிச்சை, காசநோய் சிகிச்சை, நீரிழிவு நோய் சிகிச்சை, இதய நோய் சிகிச்சை, சிறுநீரக நோய் சிகிச்சை அளிக்கப்பட்டு சேவைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

முதுநிலை குடிமை மருத்துவர் நிலையில் சிறப்பு மருத்துவ வல்லுநர்கள் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் உள்ளனர். விபத்துக்குள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிக்க விபத்து மற்றும் அவசர சிகிச்சை வசதிகள் உள்ளன. மகப்பேறு, குழந்தைநலம் மற்றும் குடும்ப நலப் பணிகள் சிறப்பாக நிறைவேற்றப்படுகின்றன.

கண்பார்வை இழப்பைத் தடுத்தல், மலைவாழ் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டம் போன்ற பிற மருத்துவ நலத் திட்டங்கள், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறையின் வாயிலாக ஒருங்கிணைக்கப்பட்டு செயலாக்கப்பட்டு வருகின்றன.

அறுவை அரங்குகளுக்கு குளிர்சாதன வசதி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கொள்கை முடிவின்படி 2001 ஆம் ஆண்டிலிருந்து மாவட்ட மருத்துவமனைகளில் 89 அறுவை அரங்குகளிலும், வட்ட மருத்துவமனைகளில் 10 அறுவை அரங்குகளிலும் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளில் 25 அறுவை அரங்குகளிலும், குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ளது. இத்துடன் சேர்த்து, 265 அறுவை அரங்குகளில் குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ளது.

அரசு மருத்துவமனைகளுக்கு மின்னாக்கி (ஜெனரேட்டர்) வசதி

அரசு எடுத்துள்ள கொள்கை முடிவின்படி மாவட்ட, வட்ட, வட்டம் சாரா மருத்துவமனைகளில் படிப்படியாக மின்னாக்கி வசதிகள் செய்யப்படவேண்டும் என்கிற அடிப்படையில் 2001 ஆம் ஆண்டிலிருந்து 9 மாவட்ட மருத்துவமனைகளில் 75 கே.வி.ஏ. மின்னாக்கி மற்றும் 2 வட்டம் சாரா மருத்துவமனைகளில் 40 கே.வி.ஏ. மின்னாக்கி வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

தொலைபேசி வசதி

அரசு மருத்துவமனைகளுக்கு சிறந்த தொலைத்தொடர்பு வசதிகள் அமைப்பதற்காக, தொலைபேசி வசதி படிப்படியாகச் செய்து

தரப்படுகிறது. 2001 ஆம் ஆண்டிலிருந்து 51 மருத்துவமனைகளுக்குத் தொலைபேசி வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

செவிலியர் பயிற்சிப் பள்ளி

கிராமப்புறப் பொது மக்களுக்கு செவிலியர் சேவையை வழங்கும் நோக்கமாகவும், கிராமப்புறங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கு செவிலிப் பணியை வாழ்க்கைத் தொழிலாக மேற்கொள்ள வாய்ப்பளிக்கவும், 8 புதிய செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் 8 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் துவங்கப்பட்டுள்ளன.

1994 ஆம் ஆண்டின் பிறப்பிற்கு முன் கருவின் தன்மையறியும் தொழில் நுட்பம் (பாலினத் தெரிவுசெய்வதைத் தடுத்தல்) சட்டம்

"கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பிற்கு முன் கருவின் தன்மையறியும் சிகிச்சை தொழில்நுட்ப முறைகள் (பாலினத் தெரிவு செய்வதைத் தடுத்தல்) சட்டம் 1994"-ஐ அமலாக்க மாநில, மாவட்ட மற்றும் வட்ட அளவிலும் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சட்டத்தின்படி, இதுவரை 2,680 மையங்கள் பதிவு செய்யப்பட்டு, கருவின் பாலினத்தை அறிந்து சிசுக் கலைப்பு நடைபெறுவதைத் தடுக்க நிலையான கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுவரை பதிவு செய்யப்படாத 93 ஸ்கேன் மையங்கள் கண்டறியப்பட்டு, 70 ஸ்கேன் மையங்கள்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளன. 48 வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இச்சட்டம் குறித்தும், பெண் சிசுக் கலைப்பு ஒழிக்கப்பட வேண்டிய அவசியம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்த, மக்கள் தொடர்பு சாதனங்களில் பெருமளவில் விளம்பரம் செய்யப்படுகிறது.

மாவட்ட மனநல மருத்துவத் திட்டம்

மனநலம் பேணுவது நாம் வாழும் சமூகத்தில் முக்கியமான அம்சமாகும். மாவட்ட மனநலத் திட்டம், குறிப்பாக கிராமப் பகுதிகளில் சிறப்பான மனநல சேவைகள் அளிப்பதன் பொருட்டு திருச்சி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோள், நாம் வாழும் சமூகத்தில் மனநோய்களைக் கண்டறிந்து உரிய மனநல சிகிச்சைகளை அளிப்பதே ஆகும். இத்திட்டத்தின்கீழ் ஒரு மாவட்ட மனநலக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு மாவட்டத்தில் உள்ள பல்வேறு

இடங்களுக்கும் வருகை தந்து மனநோயால் பாதிக்கப்பட்ட நபர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு அருகில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிகிச்சைகள் அளிக்க ஏற்பாடு செய்கிறது. இத்திட்டத்தின்கீழ் உசிலம்பட்டி மற்றும் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனைகளில் 10 படுக்கைகள் கொண்ட பிரிவுகள் மனநல நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக செயல்பட்டு வருகின்றன. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் இதன் கண்காணிப்பு அலுவலராகவும், இயக்குநர், மனநலக் காப்பகம், சென்னை அவர்கள் இத்திட்டத்தின் செயல் அலுவலராகவும் இத்திட்டத்தில் பங்கேற்றுள்ளனர். தற்போது இத்திட்டம் தேனி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில நோயாளர் நிதி உதவி அமைப்பு

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மாநில நோயாளர் நிதி உதவி அமைப்பை ரூ. 15 கோடி சுழற்சி நிதியாக அளித்து அமைத்துள்ளது. இதற்கு நிதி அளிப்பு மாநில மற்றும் மத்திய அரசுகளுக்கிடையே முறையே 2 : 1 என்ற விகிதத்தில் இருக்கும். இந்த அமைப்பிற்கான விவகாரங்கள் செயலர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அவர்களின்கீழ் அமைக்கப்பட்டுள்ள செயற்குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், உறுப்பினர்-செயலராக உள்ளார். தமிழ்நாடு மாநில நோயாளர் நிதி உதவி அமைப்பு மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரணத் திட்டத்தின் வழிமுறைகளைப் பின்பற்றி குறிப்பிட்ட தனியார் மருத்துவமனைகளில் உயிர்காக்கும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் ஏழை நோயாளிகளுக்கு நிதி உதவி அளித்து வருகிறது.

திருத்தி அமைக்கப்பட்ட காசநோய்த் திட்டம்

ஆண்டுக்கு சுமார் எட்டு இலட்சம் நபர்கள் காசநோய்க் கிருமியால் புதிதாகத் தாக்கப்படுகின்றனர். தமிழ்நாட்டில் சுமார் 1.8 இலட்சம் பேர் காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் சுமார் அறுபதாயிரம் பேர் சளியில் கிருமியுள்ளவர்கள்.

தமிழகத்தில் 10 காசநோய் மருத்துவமனைகள் உள்ளன. அதில் 2 மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை இயக்குநர் கட்டுப்பாட்டிலும், 6 மருத்துவக் கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டிலும்,

2 அரசு சாரா நிறுவனங்களிலும் உள்ளன. காசநோயால் [2005 மார்ச் 21
பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்காக 3,654 படுக்கைகள் தமிழகத்தில் உள்ளன.
மற்ற நோயாளிகள் தங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள சிகிச்சை
மையங்களில் நேரடி குறுகிய கால சிகிச்சை மூலம் (டாட்ஸ்) பலனடைந்து
வருகின்றனர். இத்திருத்தியமைக்கப்பட்ட காசநோய்த் திட்டத்தை
ஒருங்கிணைந்து செயல்படுத்த மாநில அளவில் கூடுதல் இயக்குநர்
நிலையில் மாநில காசநோய் அலுவலரும், மாவட்ட நிலையில் துணை
இயக்குநரும் செயல்பட்டு வருகின்றனர்.

உலக வங்கியின் உதவியுடன் இந்திய அரசு மாவட்ட ஆட்சித் தலைவர்
தலைமையின்கீழ் 29 மாவட்ட காசநோய் சங்கங்களுக்கான முழுச்
செலவுகளையும் மற்றும் மருந்துகளுக்கான முழுச் செலவுகளையும் ஏற்று
நடத்துகிறது. இம்மாநிலத்திலுள்ள 29 காசநோய் மையங்கள் மற்றும்
10 காசநோய் மருத்துவமனைகளுக்கான செலவுகளை மாநில அரசு ஏற்று
நடத்துகிறது. இத்திட்டம் 138 காசநோய் அலகுகளாகப் பிரிக்கப்பட்டு
648 நுண்ணோக்கி மையங்களில் சளி பரிசோதனை செய்யப்பட்டு,
11,000 சிகிச்சை மையங்கள் அமைத்து செயல்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், தனியார்
மருத்துவமனைகள், தனியார் மருத்துவர்கள், மைய அரசு சார்ந்த
மருத்துவமனைகளான, இரயில்வே, துறைமுகம் மற்றும் இராணுவ
மருத்துவமனைகள் யாவும் இணைந்து செயல்படுகின்றன. இந்த ஆண்டில்
6.2 இலட்சம் சளி பரிசோதனை செய்யப்பட்டு சுமார் 90,000 நோயாளிகள்
கண்டுபிடிக்கப்பட்டு, இவற்றில் 89 விழுக்காடு அளவிற்கு 2004–2005 ஆம்
ஆண்டில் நோயாளிகள் பூரண குணமடைந்து உள்ளனர்.

இந்திய அரசால் இத்திட்டத்திற்குக் கொடுக்கப்பட்ட இலக்குகளைக்
காட்டிலும் அதிகமாக நோயாளிகளைக் கண்டறிந்து தமிழக அரசு இதில்
முன்னோடியாக விளங்குகின்றது.

தொழுநோய் மறுவாழ்வு சிகிச்சை மையம், தாம்பரம்

இந்தியாவில், மாநில அரசுகளால் நடத்தப்படும் 3 மையங்களில் இதுவும்
ஒன்று. இங்கு 50 படுக்கை வசதிகள் உள்ளன. இந்த மையம் தாம்பரத்தில்
அமைந்துள்ளது. தொழுநோயாளிகளுக்கு, கைகள், கால்கள் மற்றும்
கண்களில் எற்படும் ஊனங்களுக்கு அறுவை சிகிச்சை அளிக்கப்படுகிறது

2005 மார்ச் 21]

இங்கு நான்கு முதுநிலை குடிமை மருத்துவர்கள் (ஆர்த்தோ, பிளாஸ்டிக் சர்ஜரி, பெத்தாலஜி, ஆப்தல்மாலஜி) மற்றும் நான்கு உதவி மருத்துவர்கள், ஆறு செவிலியர்கள், இதர பணியாளர்கள் பணிபுரிகின்றனர். இங்கு அறுவை சிகிச்சை அரங்கம் செயல்பட்டு வருகிறது.

இந்த மையம் மருத்துவம் மற்றும் ஊரக நலத் துறை இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிறது.

2005–2006 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

(1) சேலம் மாவட்டம், மேட்டூர் அணை, மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் புறநோயாளிப் பிரிவு மொத்தம் ரூ.43.00 இலட்சம் செலவில் கட்டுதல்.

(2) வாலாஜா, மணப்பாறை, கோவில்பட்டி, கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் மொத்தம் ரூ.48.00 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதியுடன் பிணவறைப் பிரிவு கட்டுதல்.

(3) சுகாதாரப் பணி இணை இயக்குநர் அலுவலகங்கள் (29) ஒவ்வொன்றிற்கும் ரூ.75,000 ஆக ஒரு கணினி, தடையற்ற மின் சக்தி வழங்கும் சாதனம், பிரின்டர், மோடெம், அறை கலன்கள், இணையதள வசதிகளுடன் துணைப் பாகங்கள் ஆகியவற்றை மொத்தம் ரூ.29.00 இலட்சம் செலவில் வழங்குதல்.

(4) எடப்பாடி, தாராபுரம், கடலாடி, கொடுமுடி, அறந்தாங்கி ஆகிய 5 இடங்களிலுள்ள அரசினர் வட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் மொத்தம் ரூ.150.00 இலட்சம் செலவில் புறநோயாளிப் பிரிவு கட்டுதல்.

(5) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியிலும், மதுரை மாவட்டம், வாடிப்பட்டியிலுள்ள இரு அரசினர் மருத்துவமனைகளில் மொத்தம் ரூ.42.00 இலட்சம் செலவில் மகப்பேறு அறையுடன் 12 படுக்கைகள் கொண்ட மகப்பேறு வார்டு கட்டுதல்.

[2005 மார்ச் 21

(6) விருதுநகர் மாவட்டம், சிவகாசி அரசினர் மருத்துவமனையில் தீக்காய சிகிச்சைக்காக மொத்தம் ரூ.30.17 இலட்சம் செலவில் 12 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல்.

(7) தரங்கம்பாடி, திருச்செங்கோடு ஆகிய அரசினர் வட்டத் தலைமையிட இரு மருத்துவமனைகளில் மொத்தம் ரூ.50.40 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதியுடன் அறுவை சிகிச்சைக் கூடம் கட்டுதல்.

(8) தாம்பரம் மற்றும் மானாமதுரை அரசினர் வட்ட மருத்துவ மனைகள் இரண்டில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பணிக்காக மொத்தம் ரூ.190.66 இலட்சம் செலவில் 10 படுக்கைகளைக் கொண்ட வார்டுடன்கூடிய கட்டடம் கட்டுதல்.

(9) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி அரசினர் மருத்துவமனையில் மொத்தம் ரூ.11.20 இலட்சம் செலவில் நுண் கதிர் பிரிவுக் கட்டடம் கட்டுதல் மற்றும் 300 MA நுண் கதிர் சாதனம் வழங்குதல்.

(10) தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி, அரசினர் வட்டத் தலைமையிட மருத்துவமனையில் மொத்தம் ரூ.80.00 இலட்சம் செலவில் 48 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல்.

(11) நாகப்பட்டினம் மாவட்டம், வைத்தீஸ்வரன் கோயில் மற்றும் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி அரசினர் வட்டம் சாரா இரு மருத்துவமனைகளில் மொத்தம் ரூ.63.00 இலட்சம் செலவில் புறநோயாளிப் பிரிவு கட்டுதல்.

(12) துவரங்குறிச்சி மற்றும் வள்ளியூர் அரசினர் வட்டம் சாரா இரு மருத்துவமனைகளில் மொத்தம் ரூ.30.60 இலட்சம் செலவில் 12 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுவதன்மூலம் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல்.

2005 மார்ச் 21]

(13) ஆம்பூர் அரசினர் மருத்துவமனையில் மொத்தம் ரூ.22.17 இலட்சம் செலவில் மகப்பேறு அறையுடன்கூடிய 12 படுக்கைகள் கொண்ட மகப்பேறு வார்டு கட்டுவதன்மூலம் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல்.

(14) மாத்தூர் மற்றும் வாடிப்பட்டி வட்டம் சாரா இரு மருத்துவமனைகளில் மொத்தம் ரூ.25.00 இலட்சம் செலவில் மின் உற்பத்தி இயந்திரங்களுக்காகக் கட்டடங்கள் கட்டி 40 KVA மின் உற்பத்தி இயந்திரத்தை நிறுவுவதன்மூலம் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல்.

(15) வட்டம் சாராத 13 மருத்துவமனைகளுக்கு மொத்தம் ரூ.0.81 இலட்சம் செலவில் தொலைபேசி வசதி அளித்தல்.

(16) பொறையாறு அரசு மருத்துவமனையில் மொத்தம் ரூ.32.08 இலட்சம் செலவில் 10 படுக்கைகள் கொண்ட வார்டு, நோயாளி ஊர்திக் கொட்டகை, மருத்துவர் அறை ஆகியவற்றைக் கட்டுதல்.

(17) கடலாடி, சாத்தான்குளம், வேதாரண்யம், கன்னியாகுமரி ஆகிய 4 வட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் மொத்தம் ரூ.25.76 இலட்சம் செலவில் பல் சிகிச்சை மையம் ஏற்படுத்தல்.

(18) சென்னை-6, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அலுவலகத்திற்கு மொத்தம் ரூ.7.25 இலட்சம் செலவில் ஒரு சர்வர், 10 NODES கூடிய தடையற்ற மின் வழங்கும் சாதனம், ஒரு லேசர் பிரின்டர், ஒரு டாட்மேட்ரிக்ஸ் பிரின்டர், அறைகலன்கள், துணைப் பாகங்கள், இணையதள வசதி ஆகியவற்றை அளிப்பதன்மூலம் அலுவலக நிருவாகத்தை மேம்படுத்தல்.

(19) சென்னை-6, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அலுவலகத்திலுள்ள இரு பழைய மின்தூக்கிகளுக்குப் பதிலாக மொத்தம் ரூ.49.33 இலட்சம் செலவில் புதிய மின்தூக்கிகள் அமைத்தல்.

[2005 மார்ச் 21

அத்தியாயம் – 4

தமிழ்நாடு மாநில கண் பார்வை இழப்பு தடுப்புச் சங்கம்

தேசிய பார்வை இழப்பு தடுப்புத் திட்டம் செயல்படுத்த, 1996 ஆம் ஆண்டில், சென்னையில் தமிழ்நாடு பார்வை இழப்பு தடுப்புச் சங்கம் நிறுவப்பட்டது. இச்சங்கத்தின் திட்டங்களைச் செயல்படுத்தும் வகையில் தமிழ்நாடு சுகாதாரத் துறைச் செயலர் தலைவராகவும், நிர்வாகச் செயலாளராக திட்ட இயக்குநர் ஒருவரும், மற்றும் துணை இயக்குநர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டம் 30-6-2002 வரையில், முழு அளவில் உலக வங்கி நிதியுடனும், 1-7-2002 முதல், மத்திய அரசு நிதி உதவியுடனும் நடைபெற்று வருகிறது.

தனது 10-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் (2002–2003 முதல் 2006–2007 வரை) கண்புரை நோய் தவிர, குழந்தைகள் மற்றும் வயோதிகர்களுக்கு ஏற்படும் பிற நோய்களைத் தடுக்கவும் மற்றும் கட்டுப்படுத்தவும் திட்டம் தீட்டியுள்ளது.

தமிழ்நாடு மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட கண்புரை அறுவை சிகிச்சை விவரம்:

ஆண்டு	இலக்கு	சாதனை	மத்திய அரசு வழங்கிய தொகை (ரூபாய் இலட்சத்தில்)
2003–04	4,20,000	4,50,654	1,648.28
2004–05	4,40,000	3,57,699 (31–12–04 வரை)	320.00

2005 மார்ச் 21]

பள்ளிக் குழந்தைகள் கண் பரிசோதனைத் திட்டம்

ஆண்டு	இலக்கு	கண் பார்வை பரிசோதிக்கப் பட்ட பள்ளிச் சிறார்களின் எண்ணிக்கை	கண் பார்வை குறைபாடு உள்ள பள்ளிச் சிறார்களின் எண்ணிக்கை	வழங்கப் பட்ட இலவசக் கண்ணாடி களின் எண்ணிக்கை
2003–04	14,85,000	23,46,028	1,11,685	38,550
2004–05	18,00,000	22,34,386 (31–12–04 வரை)	61,868 (31–12–04 வரை)	25,599 (31–12–04 வரை)

கண் தானம்

ஆண்டு	இலக்கு	சேகரித்தது	பொருத்தியது
2003–04	3,600	4,707	2,678
2004–05	4,500	3,943 (31–12–04 வரை)	2,139 (31–12–04 வரை)

2005–2006 ஆம் ஆண்டுகளில் கீழே விவரிக்கப்பட்ட நடவடிக்கைகளைத் தீவிரமாகச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது:

1. கண்புரை அறுவை சிகிச்சையில் 80 சதவிகிதத்திற்கு மேல் விழி உள்ளாடி (ஐஓஎல்) பொருத்துதல்.
2. பள்ளிச் சிறார்களுக்குக் கண் பரிசோதனை செய்து குறைகளைக் களைதல் மற்றும் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசக் கண் கண்ணாடி வழங்குதல்.
3. கருவிழி மாற்று அறுவை சிகிச்சைக்காக கண் தானம் மூலம் கண்களைச் சேகரித்தல்.
4. நவீன முறையில் கண்புரை அறுவை சிகிச்சை செய்யவும், மற்றும் இதர சிறப்பு வழிமுறைகளைப் பின்பற்றவும் கண் மருத்துவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

5. தன்னார்வ நிறுவன மருத்துவமனைகளில் பல்வேறு வகைகளில் [2005 மார்ச் 21
உதவிகளை வழங்கி கண் பாதுகாப்புச் சேவையினை மேம்படுத்த வழிவகுத்தல்.

6. கண்களைச் சேகரிக்கவும், சேகரித்த கண்களினைப் பராமரிக்கும் வகையில், கண் சேமிப்பு வங்கிகளை மேம்படுத்துதல்.

இக்கொள்கையின் அடிப்படையில் கண் மருத்துவப் பட்டப் படிப்புடன் அமைந்திருக்கும் மதுரை, தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிகளில் கண் சேமிப்பு வங்கிகளை நிறுவ தமிழக அரசு முனைந்துள்ளது. மற்ற அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளும், மாவட்ட மருத்துவமனைகளும் கண் தானம் பெறும் வகையில் செயல்படும். சென்னையைப் பொறுத்தவரை எழும்பூரில் மண்டல கண் மருத்துவமனையினுள், சர்வதேச அரிமா சங்க உதவியுடன் அனைத்து வசதிகள் அடங்கிய கண் சேமிப்பு வங்கி செவ்வனே இயங்குகிறது.

2005–2006 ஆம் ஆண்டில் மேலே விவரித்தபடி திட்டம் சிறப்புறச் செயல்பட, மத்திய அரசு நிதியுதவி வழங்க முடிவு செய்துள்ளது. அவை:

1. கண் மருத்துவர் மற்றும் கண் பரிசோதனை உதவியாளர் போன்ற தொழில்நுட்பப் பணியாளர்களுக்கான ஊதியத்தை வழங்கல். இதன் அடிப்படையில் 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.264 இலட்சங்களை மத்திய அரசு வழங்கியுள்ளது.

2. பார்வையிழந்த சிறார்க்குப் பார்வையினை மீட்டுத் தரவும், அவை தவிர ஏனைய கண் நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் தரத்தினை மேம்படுத்தவும், தக்க உபகரணங்களை வழங்குதல். இதன் அடிப்படையில், சென்னை மண்டல கண் மருத்துவமனையில் சிறுவர்க்கான தனி கண் சிகிச்சைப் பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டு, இயங்கி வருகிறது. மேலும் விரிவுபடுத்த நவீன உபகரணங்களும் வழங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. பொருளாதார ஏற்ற, இறக்கங்களைச் சரி செய்யும் பொருட்டு, சரியான கண் கண்ணாடிகளை வழங்கவும், அரசு சாரா நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மானியத் தொகை புரை அறுவை சிகிச்சைகளுக்கு உயர்த்தி அளிக்கப்படும்.

2005 மார்ச் 21]

4. அரசு நிறுவனங்களிலிருந்து கண் பராமரிப்பு சேவையை மக்களுக்கு அதிகப்படுத்த ஊராட்சி அமைப்புகளினை முனைப்படுத்துதல். இக்கொள்கையின்மூலம் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை நிலையத்தில் பணிபுரியும் பணியாளர்களின் உதவியுடன் கண் பராமரிப்பு சேவை வேண்டுவோர் தெரிந்தெடுக்கப்பட்டு, அரசு மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்படுவர். இவ்வாறு அறுவை சிகிச்சை பெறும் நபர் ஒருவருக்கு ரூ.175/– வீதம் செலவை ஈடுகட்ட ஊராட்சிகளுக்கு வழங்கப்படலாம்.

5. அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு, கண் சேமிப்பு வங்கியின் தரத்தை உயர்த்தவும், தேவையான உபகரணங்கள் வாங்கிக்கொள்ளவும், ஒரு முறை செலவினமாக அதிகபட்சம் ரூ.10 இலட்சம் வரை நிதியுதவி வழங்குதல். மேலும் கண் சேமிப்பு வங்கிப் பணியாளர்களுக்கு மதிப்பூதியம், மற்றும் பராமரிப்பு, போக்குவரத்து, எரிபொருள், இதர சில்லரைச் செலவினங்களுக்காக, ஒரு ஜோடி கண்களுக்கு ரூ.1,000/– வீதம் வழங்குதல்.

6. இத்திட்டத்தை வலுப்படுத்தவும், விரிவுபடுத்தவும் ஒரு முறை மானியத் தொகையாக அதிகபட்சம் ரூ.25 இலட்சம் வரை வழங்கி அதனை மத்திய அரசும், தன்னார்வ நிறுவனமும் 1:1 என்ற விகிதத்தில் செலவினைப் பகிர்ந்துகொள்ள வகை செய்தல். இந்த மானியத் தொகையினை, கண் சிகிச்சைக்கான உபகரணங்கள், கண் சிகிச்சைப் பிரிவு மற்றும் அறுவை அரங்கம், அவற்றிற்குத் தேவையான தளவாடங்கள், மற்றும் சிகிச்சையாளருக்கான போக்குவரத்து வாகனம் போன்றவைகளாக வழங்கப்படும்.

வருகிற நிதி ஆண்டிலிருந்து அனைத்து அடிப்படை கண் மருத்துவமனைகளிலும் கண் பரிசோதனை செய்து தகுந்த சிகிச்சை வழங்கப்படும்.

மேற்கண்ட விவரப்படி, திட்டத்தைச் செயல்படுத்தி, 2007 ஆம் ஆண்டில் பார்வை இழப்பு தடுப்பு விகிதத்தை தமிழ்நாடு 0.78 சதவிகிதத்திலிருந்து 0.40 சதவிகிதமாகக் குறைக்கத் திட்டமிட்டுள்ளது. மத்திய அரசு இலக்கான 0.80 சதவிகிதத்தை நாம் ஏற்கெனவே அடைந்துவிட்டோம்.

[2005 மார்ச் 21

அத்தியாயம்–5

பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து

பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இம்மாநிலம் முழுவதிலும் உள்ள 1,415 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 8,682 துணை சுகாதார நிலையங்கள் ஆகியவைகளின் வாயிலாக ஆரம்ப சுகாதாரப் பணிகளை அளித்து வருகிறது. இவற்றில் 25 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 50 துணை சுகாதார நிலையங்கள் மலைவாழ் மக்கள் வாழும் பகுதிகளிலும், 1,436 துணை சுகாதார நிலையங்கள் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளிலும் உள்ளன. தமிழ்நாட்டு மக்களுக்கு நோயற்ற வளமான வாழ்வை அளிப்பதே அரசின் கொள்கையாகும். மேற்குறிப்பிட்ட கொள்கையினை அடைந்திட அரசு பல்வேறு பொதுச் சுகாதாரத் திட்டங்களை உருவாக்கி, ஆரம்ப சுகாதார நலன் அடிப்படையில் செயல்படுத்தி வருகிறது.

ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு

ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் வாயிலாக நோய்த் தடுப்பு, உடல்நல மேம்பாடு, நோய் களைதல் மற்றும் மறுவாழ்வுப் பயிற்சி அளித்தல் போன்ற பணிகள் மக்களுக்கு அளிக்கப்படுகின்றன. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான தொடர் குளிர்சாதனக் கருவிகள், சிறு அறுவை சிகிச்சைகளுக்குத் தேவையான கருவிகள், மகப்பேறு சாதனங்கள் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் கண்புரை நோய் கண்டறியவும், கண்களில் ஏற்படும் சிறு கோளாறுக்கான சிகிச்சை அளிக்க வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களுக்குத் தேவையான மருந்துகள் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தினால் பெறப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

சராசரியாக ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நாள் ஒன்றுக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட புறநோயாளிகளின் எண்ணிக்கை 79 ஆக 2000–2001–ல் இருந்து, 2004–2005–ல் (பிப்ரவரி வரை) 118 ஆக உயர்ந்துள்ளது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் பார்க்கப்பட்ட பிரசவங்கள் 2000–2001–ல் 54,505 என்ற நிலையிலிருந்து 76,447 ஆக 2004–2005–ல் (பிப்ரவரி வரை) உயர்ந்துள்ளது.

2005 மார்ச் 21]

ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துதல்

மாவட்ட மருத்துவமனைகள், வட்டம்/வட்டம் சாரா அரசு மருத்துவமனைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாத ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் 30 படுக்கை வசதி கொண்ட ஒரு மருத்துவ நிலையமாவது அமைத்துக் கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்நிலையங்கள் நவீன கருவிகளான அல்ட்ராசோனோகிராம், இ.சி.ஜி. ஊடுகதிர் இயந்திர சாதனப் பிரிவு, பகுப்பாய்வு செய்ய ஆய்வகம் மற்றும் நோயாளர் ஊர்தி போன்ற வசதிகள் கொண்டதாக இருக்கும். 2001–2002-ல் 21 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 2002–2003-ல் பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 20 ஆரம்ப சுகாதார நிலையங்களும், நபார்டு வங்கி கடனுதவியுடன் 17 ஆரம்ப சுகாதார நிலையங்களும் மேம்படுத்தப்பட்டு உள்ளன. 2003–2004-ல் பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 35 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 2004–2005 ஆம் ஆண்டில் பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 11 ஆரம்ப சுகாதார நிலையங்களின் நிலை உயர்த்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களில் விபத்திற்குரிய அவசர சிகிச்சை வசதி அமைக்கப்படும். கடந்த 4 ஆண்டுகளில் 104 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள்

தற்பொழுது 1,368 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசுக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. 37 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தனியார்/பஞ்சாயத்துக் கட்டடங்களில் செயல்படுகின்றன. மற்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டடக் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொலைபேசி வசதி

ஏற்கெனவே 424 ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொலைபேசி வசதி, உள்ளது. மேலும் 67 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 2003–2004–ல் தொலைபேசி வசதி, பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின்மூலம் அளிக்கப்பட்டது. நடப்பாண்டில் 2004–2005–ல் மேலும் 150 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.4.20 இலட்சம் செலவில் தொலைபேசி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 774 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு, பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின்மூலம் தொலைபேசி வசதி அளிக்கப்பட உள்ளது.

மக்கள் அருகில் அமைக்கப்பட்டுள்ள துணை சுகாதார நிலையங்கள்

மொத்தமுள்ள 8,682 துணை சுகாதார நிலையங்களில் 6,510 துணை சுகாதார நிலையங்கள் அரசுக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. 2001–2002 ஆம் நிதியாண்டில் 100 துணை சுகாதார நிலையங்கள் பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டன. 2002–2003 வரை 287 துணை சுகாதார நிலையங்கள் நாபார்டு திட்டத்தின்மூலமும் கட்டப்பட்டன. மேலும், 21 துணை சுகாதார நிலையங்கள் பேறுசார் மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்தின்மூலம் கட்டப்பட்டன. 2003–2004–ல் 5 துணை சுகாதார நிலையங்கள் பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டத்தின்மூலமும் கட்டடக் கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன.

நாடு தழுவிய தடுப்பூசித் திட்டம்

தடுப்பூசிகளால் தவிர்க்கப்படக்கூடிய நோய்களைத் தடுக்க ஆண்டுதோறும் 100 சதவிகிதம் தடுப்பூசிகள் கொடுக்கப்படுகின்றன. வழக்கமான தடுப்பூசித் திட்டத்துடன் ஒவ்வொரு ஆண்டும் தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம் நடத்தப்படுகிறது.

2004 ஆம் ஆண்டில் நடைபெற்ற 9-வது பல்ஸ்போலியோ முகாமில் ஐந்து வயதிற்கு உட்பட்ட 72 இலட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் குடிசைவாழ் குழந்தைகளுக்கும், விருதுநகர், இராமநாதபுரம், மதுரை மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள குழந்தைகளுக்கும் மஞ்சள் காமாலை நோய்த் தடுப்பு மருந்து அளிக்கும் திட்டம் பரிட்சார்த்த முறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சுமார் 1.70 இலட்சம் குழந்தைகள் இதனால் பயனடைந்தனர்.

எம்எம்.ஆர். மற்றும் ரூபெல்லா தடுப்பூசித் திட்டம் கடலூர், பெரம்பலூர், தேனி, திருவண்ணாமலை மற்றும் வேலூர் ஆகிய 5 மாவட்டங்களிலிருந்து 5 வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிட்சார்த்த முறையில் நடைமுறைப் படுத்தப்பட்டு இரண்டு வயது முதல் 5 வரையுள்ள 24,919 குழந்தைகளுக்கும், மற்றும் 10 வயது முதல் 15 வரையுள்ள 22,390 வளரிளம் பெண்களுக்கும் முறையே வழங்கப்பட்டுள்ளது. இத்தடுப்பூசி பிறவி ஊனத்தைத் தடுக்கும்.

தாய்–சேய் நலப் பணிகள்

பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையின் பணிகளில் தாய்-சேய் நலப் பணிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

கருவுற்ற தாய்மார்களைப் பதிவு செய்தல், கருவுற்ற தாய்மார்களைப் பரிசோதித்தல், இரண ஜன்னி மற்றும் ஏனைய நோய்கள் ஏற்படாவண்ணம் தடுக்க தடுப்பூசி போடுதல், பேறுகாலப் பராமரிப்பு மற்றும் பேறுகாலப் பின் பராமரிப்பு அளித்தல் போன்ற பணிகள் அளிக்கப்படுகின்றன. தற்பொழுது 99.6% பிரசவங்கள் மருத்துவமனை மற்றும் பயிற்சி பெற்ற பணியாளர்கள் மூலம் பாதுகாப்பான முறையில் தமிழ்நாட்டில் நடைபெறுகின்றன.

தாய் மற்றும் சேய் நலவாழ்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான இரும்புச் சத்து மாத்திரைகள், வாய்வழி உப்புக்கரைசல் பொட்டலங்கள், வைட்டமின் ஏ திரவப்பதம் மற்றும் இதர அத்தியாவசிய மருந்துகளைக் கொண்ட பேழைகள் (அ) மற்றும் (ஆ) வழங்கப்படுகின்றன. இவை போக, இதர அத்தியாவசிய பேறுகால சாதனங்களும் ஒவ்வோராண்டும் துணை சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்படுகின்றன. துணை சுகாதார நிலையங்கள் சார்ந்து பிரசவங்கள் நடைபெறுவதை மேம்படுத்தும் பொருட்டு 1,000 துணை சுகாதார நிலையங்களுக்குப் பிரசவ மேசைகள் வழங்கப்படவுள்ளன. 2004–2005 ஆம் ஆண்டில் தாய்-சேய் நலப் பணிகளுக்காக மொத்தம் ரூபாய் 173.64 இலட்சம் துணை சுகாதார நிலையத்திற்கும், ரூபாய் 192.9 இலட்சம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மருந்து, மாத்திரைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

தாய்-சேய் நலப் பணிகள் நகராட்சிகளில் செயல்பட ஏதுவாக தக்க வழிகாட்டுதலுடன், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நான்கில் ஒரு பங்கு மானியமாக மருந்துப் பொருட்கள் போன்றவை வழங்கிட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் மட்டும் ரூபாய் 11.82 இலட்சம் மானியத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

தேசியத் திட்டத்தின்கீழ், கருவுற்ற தாய்மார்கள், சிகிச்சைபெறும் தாய்மார்கள் மற்றும் பள்ளி செல்லா மழலைகளுக்கும் இரும்புச் சத்து மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. முன்பெல்லாம் வளரிளம் பருவப் பெண்களுக்கு வழங்கப்படாமல் இவை விடுபட்டிருந்தன. இந்த வளரிளம் பருவப் பெண்கள்தான் எதிர்காலத் தாய்மார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, 10 வயது முதல் 19 வயது வரை உள்ள இப்பருவத்தினர் அனைவரையும் பாதுகாப்பான தாய்மைக்குத் தயாராகும் வகையில் இரத்த சோகையிலிருந்து காப்பாற்றும் இரும்புச் சத்து மாத்திரைகள் வழங்கும் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் 53 இலட்சம் வளரிளம் பருவப் பெண்களுக்கு இரத்த சோகை வராமல் தடுக்க பெரோஸ் சல்பேட் (பெரியது) மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. தொடர்ந்து

சனிக்கிழமைகளில் இப்பெண்களுக்குத் தொடர் கவனிப்பும் அளிக்கப்படுகிறது.

தேசிய அளவில் வைட்டமின் ஏ பற்றாக்குறையைச் சரிப்படுத்திட 6–36 மாதக் குழந்தைகளுக்கு வைட்டமின் ஏ வழங்கும் திட்டம் உள்ளது. தமிழகத்தில் இத்திட்டம் 6–60 மாதக் குழந்தைகள் அனைவருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தமிழகம் முழுமையிலும் பால்புகட்டும் தாய்மார்கள் அனைவருக்கும் 'வைட்டமின் ஏ' திரவப்பதம் ஒரு தவணை (2 மில்லி) வழங்கிட அரசால் உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால், தாய்ப்பால் ஊடாக, 'வைட்டமின் ஏ' திரவம் பச்சிளங்குழந்தைகளுக்குக் கிடைக்கப்பெற்று அவர்தம் ஊட்டச்சத்து மேம்பட வாய்ப்புள்ளது. தாய்மார்களுக்கு, தாய்ப்பால் மட்டுமே பிறந்த குழந்தைகளுக்குப் புகட்ட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனால் 12 இலட்சம் தாய்மார்கள் பயன்பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான செலவு ரூ.15 இலட்சம்.

இந்திய அரசு ஏற்கெனவே எடுத்துள்ள கொள்கை முடிவுகளின்படி, பேறுகால குழந்தைகள் நலத் திட்ட மருந்து வழங்கும் திட்டத்தில் ஒரு பகுதியாக இந்திய மருத்துவ முறை சார்ந்த மருந்துகளை துணை சுகாதார நிலையங்களில் அறிமுகப்படுத்திட முடிவெடுத்துள்ளது. கிராம சுகாதார செவிலியர்களுக்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட சில வகை இந்திய மருத்துவ முறை மருந்துகள் அடங்கிய பேழைகள் வழங்கப்பட்டுள்ளன. திருவண்ணாமலை மாவட்டத்தில் இரண்டு வட்டாரங்களில் தேர்வு செய்து இரத்த சோகையை வெகுவாகக் குறைத்திடும் வகையில் இந்திய மருத்துவ முறை மருந்துகளைப் பரிட்சார்த்தமாக உபயோகிக்கும் ஒரு முன்னோடித் திட்டம் தற்பொழுது தொடங்கி உள்ளது.

பள்ளிக் குழந்தைகள் நலத் திட்டம்

மாநிலத்தில் இதுவரை செயல்படுத்தப்பட்டு வந்த பள்ளி சுகாதாரத் திட்டம் திருத்தியமைக்கப்பட்டு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒன்று முதல் 12-வது வகுப்பு வரை படிக்கும் மாணவர்கட்கு விரிவான நலப் பாதுகாப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் "பள்ளி சுகாதார நாளாகக்" கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு சனிக்கிழமையும் "மேல் சிகிச்சை நாளாகக்" கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை ஒருங்கிணைக்கவும், உதவி புரியவும் ஒவ்வொரு பள்ளியிலும் இரண்டு ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். சுகாதார வழிகாட்டியாக

உயர் கல்வி பயிலும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். பள்ளி சுகாதார அட்டைகள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன. இந்த அட்டை பள்ளியை விட்டு மாணவர்கள் செல்லும்போது மாற்றுச் சான்றிதழோடு இணைத்து வழங்கப்படும். சுகாதார மதிப்பீட்டுப் பதிவேடுகள், மேல்சிகிச்சைப் பதிவேடுகள், மருந்து இருப்புப் பதிவேடுகள் ஆகியவை அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின்மூலமாக 300 இலட்சம் மதிப்புடைய மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

நிர்ணயிக்கப்பட்ட இலக்கிடான மொத்த 40,308 பள்ளிகளில் 2004–2005-ல் டிசம்பர் 2004 வரை 23,892 பள்ளிகள் மருத்துவக் குழுவினரால் பார்வையிடப்பட்டு, 41.7 இலட்சம் மாணவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. 45,701 மாணவர்கள் மேல்சிகிச்சைக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

பள்ளி மாணவர் நலத் திட்டத்தில் பள்ளி மாணவர்களிடையே கண்டறிந்த நோய்களின் நிலை (டிசம்பர் 2004 வரை)

வ. எண்.	நோய்கள்	சதவிகிதம்
1.	பல் சொத்தை	10.19
2.	வயிற்றுப் பூச்சி	9.52
3.	சுவாசக் கோளாறு	12.35
4.	இரத்த சோகை	3.18
5.	வைட்டமின் (ஏ) குறைபாடு	1.82
6.	சொறி சிரங்கு	1.13
7.	கண் பார்வைக் கோளாறு	0.16
8.	காதில் சீழ் வடிதல்	0.34
9.	தொழுநோய்	0.05
10.	காது கேட்பதில் குறைபாடு	0.04
11.	இதய நோய்	0.04
12.	காசநோய்	0.09
13.	முன்கழுத்துக் கழலை	0.04

தொற்று நோய்க் கட்டுப்பாடு திட்டம்

[2005 மார்ச் 21

தொற்று நோய்க் கட்டுப்பாடு திட்டம் அடிப்படை சுகாதாரப் பணிகளில் முக்கியமான ஒன்றாகும். குறிப்பாக, கொள்ளை நோய் வடிவில் ஏற்படுகின்ற தண்ணீர்மூலம் பரவும் கடும் வயிற்றுப் போக்கு, வாந்தி, பேதி போன்ற நோய்களுக்கு இத்திட்டத்தில் முதலிடம் கொடுக்கப்படுகின்றது. 2004 ஆம் ஆண்டில் 57,425 குடிநீர் நிலையங்களில் கிருமிநாசினி கலக்கப்பட்டது. உடல் நீர் வறட்சியை ஈடு செய்ய வறட்சியைப் போக்கும் வாய்வழி செலுத்தும் உப்புநீர்க் கரைசல் பொட்டலங்களின் உபயோகம் பற்றிய செயல் விளக்கம் பிரபலப்படுத்தப்பட்டுள்ளது.

சுனாமிக்குப் பின் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாநிலங்களில் தமிழகம் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்த மாநிலமாகும். சுனாமியால் பாதிக்கப்பட்ட 2,49,191 நபர்களுக்கு சுவாச நோய், வயிற்றுப் போக்கு, காய்ச்சல், தோல் நோய் போன்ற நோய்களுக்கான மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது.

கீழ்க்கண்ட தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன :

1. சுற்றுச் சூழல் பாதுகாப்பு

(அ) நோய் பரவாமல் இருக்க குடிசை, முகமை மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில், பிளீச்சிங் பவுடர், பினாயில் மற்றும் சுண்ணாம்புத் தூள் தெளிக்கப்பட்டது.

(ஆ) நீர் ஆதாரங்களிலேயே குளோரினேசன் செய்யப்பட்டு, பாதுகாப்பான குடிநீர், லாரிகள் மூலம் வழங்கப்பட்டது.

(இ) ஈ, கொசு மற்றும் கொசு முட்டை, புழுக்கள்மூலம் நோய் பரவாமல் இருக்க பூச்சித் தடுப்பு கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2. தகவல் தொடர்பு கல்வி நடவடிக்கைகள்

துண்டுப் பிரசுரம், விளம்பரத் தோரணங்கள், சினிமா துண்டு விளம்பரங்கள், உள்ளூர் செய்தித்தாள் விளம்பரங்கள் மற்றும் நேரடித் தொடர்புமூலமாக, பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க தகவல் கல்வி வழங்கப்பட்டது.

2005 மார்ச் 21]

3. தடுப்பூசி மற்றும் கடும் கண்காணிப்பு

ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இறப்பிலிருந்தும், நோய்களிலிருந்தும் தடுக்க தட்டம்மை தடுப்பு மருந்து, வைட்டமின் ஏ, போலியோ சொட்டு மருந்து அளிக்கப்பட்டது. வாய்வழி உப்புக் கரைசல் பாதிக்கப்பட்ட எல்லாக் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டது. பாதுகாப்பான உணவு முறைகள் சுகாதாரக் குழுக்களால் மேற்பார்வை இடப்பட்டன.

4. நோய்க் கண்காணிப்பு

தண்ணீர்மூலம், பூச்சிகள்மூலம் நோய் பரவிய மற்றும் பரவாத பகுதிகளைக் கண்டறிய கொள்ளை நோய் கடும் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன. உலக சுகாதார அமைப்பின் உதவியுடன் நோய் கடும் கண்காணிப்புக் குழுக்கள் நாகப்பட்டினம், கடலூர், காஞ்சிபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. நோய் பரவாமல் இருக்க பூச்சிக் கொல்லி மருந்துகள், பிளீச்சிங் பவுடர், குளோரின் மாத்திரைகள், தண்ணீர்த் தொட்டிகள், படுக்கைகள், மெத்தைகள், யுனிசெஃப் உதவியுடன் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வழங்கப்பட்டன.

5. நடமாடும் மருத்துவக் குழு

பாதிக்கப்பட்ட பகுதிகளில், மருத்துவ உதவி செய்வதற்கு 800 மருத்துவ அலுவலர்கள், 1,600 மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் மற்றும் 3,000 களப் பணியாளர்கள் ஈடுபட்டனர். மேலும் 700 ஊர்திகள் இப்பணிக்குப் பயன்படுத்தப்பட்டன.

தொழிற்சாலை மற்றும் நலவியல்

குடிநீரில் மாசு ஏற்படுவதையும், தூய்மைக் கேடு ஏற்படுவதையும் கட்டுப்படுத்த ஏதுவாக சென்னை மற்றும் கோயம்புத்தூரில் நீர்ப் பகுப்பாய்வுக் கூடங்கள் நிறுவப்பட்டு, பாதுகாக்கப்பட்ட குடிநீரில் தூய்மைக் கேட்டைக் கண்டறிய நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இப்பகுப்பாய்வுக் கூடங்கள், தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுகளைப் பரிசோதனை செய்ய மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு உதவிபுரிந்து வருகின்றன. மேலும் தொழிற்சாலைகள் மற்றும் சுற்றுப்புறத் தூய்மைக் கேட்டைக் கட்டுப்படுத்தத் தேவையான கள ஆய்வுகள் மேற்கொள்ள உதவுகின்றன. காற்றின் தரத்தை மதிப்பீடு செய்ய, தொழிற்சாலைகள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களில் ஆய்வுகள்

[2005 மார்ச் 21

மேற்கொள்ளப்படுகின்றன. 2004 ஆம் ஆண்டில் 26,182 நீர் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

உணவுக் கலப்படத் தடுப்புத் திட்டம்

கலப்படம் செய்யப்பட்ட உணவுப் பண்டங்களைக் கண்டறிந்து உணவுக் கலப்படத்தைத் தடுக்கும் நோக்கத்துடன் உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம், 1954 மற்றும் விதி 1955 மூலம், தற்போது 481 உள்ளாட்சி அமைப்புகளில் உணவுக் கலப்பட, தடுப்புச் சட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2004–2005 ஆம் ஆண்டு டிசம்பர் 2004 முடிய 3,067 மாதிரிகள் பகுப்பாய்வுக் கூடங்களில் ஆய்வு செய்யப்பட்டன. அவற்றில் 472 உணவு மாதிரிகள் கலப்படம் எனக் கண்டறியப்பட்டுள்ளன. மேற்படி கலப்படத்தின் சதவிகிதம் 15.39 ஆகும். 84 வழக்குகள் நீதிமன்றங்களில் தொடரப்பட்டு, அதில் 30 வழக்குகள் நிரூபிக்கப்பட்டு, 28 வழக்குகளுக்கு அபராதத்துடன்கூடிய சிறைத் தண்டனையும், 1 வழக்குக்கு அபராதமும், மற்றும் 1 வழக்குக்கு எச்சரிக்கையும் வழங்கப்பட்டுள்ளன. அயோடின் கலந்த உப்பைத் தவிர மற்ற உப்பு விற்பனை 1-1-1995 முதல் தடை விதிக்கப்பட்டிருந்தது. இத்தடை 1-1-2005 முதல் மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. பொது மக்களின் நலன் கருதி பொது இடங்கள் மற்றும் பொது மக்களுக்காக இயக்கும் வாகனங்களில் எச்சில் துப்புதல் மற்றும் புகைபிடித்தல் ஆகியவை தமிழ்நாட்டில் 14–05–2003 முதல் தடை செய்யப்பட்டுள்ளன.

பிறப்பு இறப்பு பதிவு

1969 ஆம் ஆண்டு பிறப்பு இறப்பு பதிவுச் சட்டம் மற்றும் தமிழ்நாடு 2000 ஆம் ஆண்டு பிறப்பு இறப்பு பதிவு விதி ஆகியவற்றின்படி பிறப்பு மற்றும் இறப்புகள் நிகழ்ந்த இடத்திலேயே அவை குறித்த விவரங்கள் பதிவு செய்யப்படுவது கட்டாயமாக்கப்பட்டு, மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டின் பிறப்பு விகிதம் 1,000 மக்கட்தொகைக்கு 18.5 ஆகவும், இறப்பு விகிதம் 7.7 ஆகவும் உள்ளது. உயிருடன் பிறக்கும் 1,000 குழந்தைகளில் சிசு இறப்பு விகிதம் 44.0 ஆக உள்ளது (SRS 2002).

பிறப்பு பதிவு பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த நவம்பர் 14, 2003 முதல் மாநில அளவில் சிறப்பு முகாம் நடத்தப்பட்டு, இதுவரை 10 வயதிற்கு உட்பட்ட 33 இலட்சம் குழந்தைகளுக்கு இலவசமாக பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

2005 மார்ச் 21]

சுனாமி இறப்பு பதிவு

சுனாமியால் ஏற்பட்ட இறப்புகளைப் பதிவு செய்ய இந்திய அரசின் தலைமை பிறப்பு, இறப்பு பதிவாளர் வழங்கிய அறிவுரைப்படி மாவட்ட பிறப்பு இறப்பு பதிவாளர்களான மாவட்ட வருவாய் அலுவலர்க்கு அறிவுறுத்தப்பட்டது.

மலேரியா

மலேரியா நிகழ்வுகள் நகர்ப்புறத்தில் அதிக அளவில் உள்ளன. மொத்த நிகழ்வுகளில் 73.9 சதவிகிதம் நகர்ப்புறங்களிலும், 26.1 சதவிகிதம் கிராமப்புறங்களிலும் காணப்படுகிறது. மலேரியா நோய் நேர்முகக் கண்காணிப்பு மற்றும் மறைமுகக் கண்காணிப்புமூலம் கண்டறியப்பட்டு, தீவிர தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

யானைக்கால் நோய்

தமிழகத்தில் 1957 ஆம் ஆண்டு முதல் தேசிய யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. யானைக்கால் நோய் ஒழிப்பில் அண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தால் ஒட்டுமொத்த டிஇசி சிகிச்சை முறைமூலம் வருடத்திற்கு ஒரு டிஇசி தொகுப்பு வீதம் 5 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து உட்கொண்டால் யானைக்கால் நோயை ஒழிக்க முடியும். 2004 ஆம் ஆண்டில் யானைக்கால் நோய் பரவியுள்ள 13 மாவட்டங்களில் 2.68 கோடி மக்களுக்கு 7-வது சுற்றில் டிஇசி ஒட்டுமொத்த சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

நோய்ப் பரப்பிகள் கட்டுப்பாட்டு மையம் – ஒசூர்

தீவிர பிளேக் நோய் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக ஒசூரிலுள்ள நோய்ப் பரப்பிகள் கட்டுப்பாட்டு மையம் நிறுவப்பட்டு தலைமையகமாகச் செயல்படுகிறது. இங்கு பல்வேறு விதமான பயிற்சிகள், பயிலரங்குகள், கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன.

லெப்டோஸ்பைரோசிஸ் நோய்

திருவள்ளூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள வட்ட/மாவட்டத் தலைமையிடத்து மருத்துவமனைகளில் 7 லெப்டோஸ்பைரோசிஸ் சிகிச்சை நிலையங்கள் துவக்கப்பட்டு தற்போது இயங்கி வருகின்றன. இந்நோயினைத் தடுக்கும் பொருட்டு நோய் கண்டவர்களுக்கு உடனே சிகிச்சை அளிப்பதற்கு, நோய் அறியும் சோதனைக் கருவிகள் மேற்கண்ட சிகிச்சை மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மூளைக் காய்ச்சல் நோய் தடுப்புத் திட்டம்

கடலூர், விழுப்புரம் மற்றும் பெரம்பலூரில் உள்ள மூளைக் காய்ச்சல் நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவும், சென்னையில் தலைமையகத்தில் உள்ள கண்காணிக்கும் பிரிவும் நோய்ப் பரப்பிகள் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. மூளைக் காய்ச்சல் தடுப்பூசி போடும் பணி பெரம்பலூர் மாவட்டப் பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நோய் அதிகம் பாதிக்கும் பகுதிகளில் மூளைக் காய்ச்சல் நோய்ப் பரப்பிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. சந்தேகத்திற்குரிய மூளைக் காய்ச்சல் நிகழ்வுப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்குப் பூச்சிக் கொல்லி மருந்துகள் தெளிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் புகை மருந்து அடிக்கும் பணியும் நடைபெறுகின்றது. 2001 ஆம் ஆண்டில் மூளைக் காய்ச்சல் பாதிப்பிற்குள்ளானோர் எண்ணிக்கை 119 ஆகவும், இறப்பு 18 ஆகவும் இருந்தது. இந்நிலை 2004 ஆம் ஆண்டில் 88 ஆகவும், இறப்பு 9 ஆகவும் குறைந்துள்ளது.

தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம்

1954–55 ஆம் ஆண்டுகளில் மாநில அளவில் தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம் துவங்கப்பட்டது. தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு மகத்தானது. 2001 ஆம் ஆண்டில் 10,000 மக்கட் தொகைக்கு 4.1 என்ற விகிதத்தில் இருந்ததை, 2004 ஆம் ஆண்டில் 10,000 மக்கட்தொகைக்கு 1.4 என்ற விகிதத்தில் குறைத்து சாதனை படைத்துள்ளது.

சிறப்பு மருத்துவ முகாம்

தமிழகம் தொற்று நோய்களை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியும், ஒழித்தும் வந்துள்ளது. எனினும் நாளுக்கு நாள் பெருகி வரும் நோய்களான புற்றுநோய், சர்க்கரை நோய் மற்றும் இருதய நோய் போன்றவைக்கு சிறப்புச் சிகிச்சை பெற கிராமப்புற மக்களுக்குப் போதுமான வசதிகள் அருகில் கிடைப்பதில்லை. ஆகவே கிராமப்புற மக்களுக்கு, குறிப்பாகத் தொலைதூரத்தில் வசிப்போருக்கு இந்த நோய்களுக்கான சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட வேண்டி புற்றுநோய், சர்க்கரை நோய், இரத்த அழுத்தம் மற்றும் இருதய நோய்கள் மற்றும் வயது முதிர்ச்சியினால் ஏற்படும் நோய்கள் ஆகியவற்றிற்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு சிறப்பு மருத்துவ முகாம் என்ற விகிதத்தில் நடத்தப்பட்டு வருகிறது. 2003–2004 ஆம் ஆண்டில் 385 முகாம்கள் நடத்த ரூ.259.39 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்தது. 374 முகாம்கள் நடத்தப்பட்டு, 8,13,259 நபர்கள்

பயன் அடைந்துள்ளனர். 2004–2005–ல் 385 முகாம்கள் நடத்த ரூபாய் 345.27 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் சிகிச்சைத் திட்டம்

2002–2003 மற்றும் 2003–2004 ஆண்டுகளில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாம்களின்போது பரவலாக பல் தொடர்பான பரிசோதனைகளுக்கு அதிகத் தேவை ஏற்பட்டது. ஆனால் பல் பரிசோதனை முகாம்கள் நடத்த விரிவான வசதிகள் தேவைப்பட்டன. எனவே தமிழக அரசு 4 மாவட்டங்களில், அதாவது சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் தேனி மாவட்டங்களைச் சார்ந்த 16 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

2004–2005 ஆம் ஆண்டில் இந்த பல் மருத்துவப் பிரிவுகள் 2 மாவட்டங்களில், அதாவது கன்னியாகுமரி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் 8 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த நோய்க் கண்காணிப்புத் திட்டம்

ஆற்றல் வாய்ந்த பொதுச் சுகாதாரத் திட்டங்களுக்கு நோய்க் கண்காணிப்பு என்பது முதுகெலும்பாக உள்ளது. இது நோய்களைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் சரியான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள உதவுவதுடன், நோய் நிகழ்வுகள் குறித்த முறையான தகவல்களைச் சேகரிக்கவும் உதவுகிறது. தமிழகத்தில் இத்திட்டத்திற்கென ரூ.25.42 கோடி செலவில் திட்டச் செலவு கணக்கிடப்பட்டுள்ளது. இதில், (1) ஒருங்கிணைந்த நோய்க் கண்காணிப்பு அலகுகள் மற்றும் ஆய்வுகளின் உள்ளக அமைப்புகளில் வளர்ச்சி கண்டிடவும், (2) ஆய்வக சாதனங்களுக்காகவும், (3) கணினிவழி தகவல் பரிமாற்றத்திற்கும், (4) பயிற்சி, (5) நோய்க் கண்காணிப்பு அலகுகள், (6) நிர்வாகம் மற்றும் இதர செலவுகளுக்கும் அடங்கும்.

தமிழகத்தில் பிறவி சீர்குலைவு மற்றும் பிறவி ஊனம் பதிவு செய்யும் திட்டம்

இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில் குழந்தைகளிடையே உள்ள பிறவிக் குறைபாடுகளைக் கணக்கெடுக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. 15 வயதிற்கும் குறைவான குழந்தைகளிடையே காணப்படும் பிறவிக் குறைபாடுகளைக் கணக்கெடுக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. கிராம அளவில் பணியாற்றும் பணியாளர்களுக்கு, கண்கூடாகத் தெரியும் பிறவிக் குறைபாடுகளைத் கண்டறிந்து பதிவு செய்வதற்கான பயிற்சிகள் முடிவடைந்துள்ளன.

தமிழ்நாட்டில் அனைத்து கிராமப்புறங்களும் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

கிராமப்புற நீரிழிவு ஆய்வுத் திட்டம்

தமிழகத்தில் நீரிழிவு நோய் மிக முக்கியமானதொரு தொற்றா வகை நோயாக உருவெடுத்துள்ளது. இதன் நோய் விகிதம் 5 முதல் 12 சதவிகிதமாக பல்வேறு ஆய்வுகளின்படி தெரியவருகிறது. இந்த ஆய்வுகள் பெரும்பாலும் நகரம் மற்றும் நகரம் சார்ந்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிறப்பு மருத்துவ முகாம்மூலம் இந்நோய் கிராமப்புறங்களில் 5 சதவிகிதம் உள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே நீரிழிவு நோய்க் கட்டுப்பாடு குறித்த ஒரு முன்னோடித் திட்டம் ரூபாய் 5 இலட்சம் செலவில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது. இதனூடே இந்நோய் குறித்த விழிப்புணர்வும், கண்காணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நடமாடும் மருத்துவக் குழுக்கள்

பிரதம மந்திரியின் கிராம யோசனா திட்டத்தின்மூலம் தமிழ்நாட்டில் 45 நடமாடும் மருத்துவக் குழுக்கள் 26 சுகாதார மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. இந்த 45 நடமாடும் குழுக்களுக்கு ரூ.200.70 இலட்சம் மருந்து மற்றும் எரிபொருளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 2004 டிசம்பர் வரை 7,15,088 நபர்கள் பயன் அடைந்துள்ளனர். மேலும் ஒரு நடமாடும் மருத்துவக் குழு 2004–2005–ல் கோயம்புத்தூர் மாவட்டத்தில் நடத்த ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதாரப் பயிற்சி மற்றும் தொடர் கல்வி

மருத்துவ அலுவலர்களும், களப் பணியாளர்களும் ஒவ்வொரு திட்டங்களிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தினை அறிந்து கொள்ளும் வகையிலும், நிர்வாகத் திறமையை வளர்க்கவும் இத்துறையில் பல்வேறு பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. எழும்பூர், பூவிருந்தவல்லி, மதுரை, விழுப்புரம், சேலம், திருவரங்குளம் மற்றும் காந்திகிராமம் ஆகிய இடங்களில் வட்டாரப் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. புதியதாகப் பணியமர்த்தப்பட்ட உதவி மருத்துவர்களுக்கு 1 மாத காலப் பயிற்சி--பூவிருந்தவல்லி, சென்னை எழும்பூர், மதுரை, காந்திகிராமம், விழுப்புரம் மற்றும் சேலம் ஆகிய பயிற்சி மையங்களில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

மேலும் 1 வார கால மேலாண்மைப் பயிற்சி மற்றும் 21 நாட்கள் அடிப்படைப் பயிற்சி சென்னையிலுள்ள அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிலையத்தில் வழங்கப்படுகிறது.

2005–2006 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

1. மொத்தம் ரூ.30 இலட்சம் செலவில் மலைவாழ்ப் பகுதிகளில் உள்ள 50 துணை சுகாதார நிலையங்களுக்கும் (ம) 25 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் அத்தியாவசிய உபகரணங்கள் வழங்குதல்.

2. 1000 துணை சுகாதார நிலையங்களுக்குத் தலா ரூ.10,000/– வீதத்தில் பிரசவ மேசைகளை வழங்குதல்.

3. 500 துணை சுகாதார நிலையங்களுக்குத் தலா ரூ.6000/– செலவில் மின் இணைப்பு ஏற்படுத்துதல்.

4. 200 துணை சுகாதார நிலையங்களுக்குக் குடிநீர் வசதி மற்றும் கைப் பம்புகளைத் தலா ரூ.20,000/– செலவில் ஏற்படுத்துதல்.

5. மொத்தம் ரூ.13.00 இலட்சம் செலவில் பிரசவித்த பால்புகட்டும் தாய்மார்களுக்கு வைட்டமின் ஏ திரவப்பதம் வழங்குதல்.

6. மொத்தம் ரூ.7.50 இலட்சம் செலவில் மாநில சுகாதாரப் புலனாய்வு மையத்தினை வலிமைப்படுத்தி விவரப் பதிவு செய்பவர் பணியிடங்களை உருவாக்குதல்.

7. மொத்தம் ரூ.6.54 இலட்சம் செலவில் ஓசூர் விலங்கின, மனித இன நோய்ப் பரப்பிகள் கட்டுப்பாட்டு நிலையத்திலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலும் லெப்டோஸ்பைரோசிஸ் நுண்ணுயிரி ஆய்வகம் அமைத்தல்.

8. மொத்தம் ரூ.7.00 இலட்சம் செலவில் ஓசூர் விலங்கின, மனித இன நோய்ப் பரப்பிகள் கட்டுப்பாட்டு நிலையத்தில் ரிக்கெட்ஸியல் தொற்று ஆய்வகம் அமைத்தல்.

9. மொத்தம் ரூ.3.20 இலட்சம் செலவில் இயக்குநரகத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையப் பிரிவிற்கு 4 கணிப்பொறிகள் மற்றும் 1 நகல் எடுக்கும் கருவி வழங்கி உள்ளக வலைப் பின்னலை ஏற்படுத்துதல்.

10. மொத்தம் ரூ.10.00 இலட்சம் செலவில் மாவட்ட சுகாதார துணை இயக்குநர் அலுவலர்களுக்கு 10 நகல் எடுக்கும் கருவிகள் வாங்குதல்.

[2005 மார்ச் 21

அத்தியாயம் – 6

குடும்ப நலத் திட்டம்

தாய்-சேய் நலத்தை மேம்படுத்துவதற்காக, சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினர்களின் முனைப்பான ஒத்துழைப்புடன் மக்கள் திட்டமாக குடும்ப நலத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் குடும்ப நலத் திட்டம் வெற்றி பெற்றதற்குப் பல காரணங்களில் குறிப்பாக நல்ல திடமான சமூக மற்றும் அரசியல் ஈடுபாடும், சிறந்த நிர்வாகத்திறனுமே ஆகும்.

மக்கள்தொகையியல் அளவீடுகள்

2001 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள்தொகை 6.24 கோடியாகும். 1991 முதல் 2001 வரை பத்தாண்டின் வளர்ச்சி விகிதம் 11.72 விழுக்காடாகும். இது நமது நாட்டிலேயே இரண்டாவது குறைந்த மக்கள்தொகை வளர்ச்சி விகிதமாகும். தமிழ்நாடு, இந்தியாவில் ஆறாவது பெரிய மக்கள்தொகை கொண்ட மாநிலமாகும். தமிழக மக்கள்தொகை எண்ணிக்கை நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 6 விழுக்காடு ஆகும். தமிழ்நாட்டின் மக்கள்தொகை 2005 ஆம் ஆண்டில் 6.5 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டின் மைய அரசின் மாதிரி பதிவு முறைப்படி தமிழக மக்கள்தொகையியல் கீழ்க்கண்டவாறு அமைகிறது:

பிறப்பு விகிதம் (மாதிரி பதிவுத் திட்டம் 2002)	18.5/1,000 மக்கள் தொகைக்கு
இறப்பு விகிதம் (மாதிரி பதிவுத் திட்டம் 2002)	7.7/1,000 மக்கள் தொகைக்கு
சிசு மரண விகிதம் (மாதிரி பதிவுத் திட்ட்ம் 2002)	44/1,000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு
மகப்பேறு தாய்மார்கள் இறப்பு விகிதம் (2004)	1.1/1,000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு
இயற்கையான வளர்ச்சி விகிதம் (மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 2001)	1.08 சதவிகிதம்

2005 மார்ச் 21]

இலக்குகள்

2007 ஆம் ஆண்டிற்குள் (பத்தாவது ஐந்தாண்டு திட்டம்) அடைய நிர்ணயிக்கப்பட்ட மக்கள்தொகையியல் இலக்குகள் பின்வருமாறு:

1.	சிசு மரண விகிதம்	30/1,000 உயிருடன் பிறக்கும் குழந்தைகளுக்கு
2.	பிறப்பு விகிதம்	15/1,000 மக்கள் தொகைக்கு
3.	தாய்மார்கள் இறப்பு விகிதம்	<1/1,000 உயிருடன் பிறக்கும் குழந்தைகளுக்கு
4.	மொத்த கருத்தரிப்பு விகிதம்	1.7
5.	தம்பதியர் காப்பு விகிதம்	6.5 சதவிகிதம்
6.	அதிகக் குழந்தைகள் பிறப்பு விகிதம் குறைப்பு	10 சதவிகிதம் ஒரு வருடத்திற்கு
7.	கருத்தடை முறையில்' ஆண்களின் பங்கு	10 சதவிகிதம் ஒரு வருடத்திற்கு

குடும்ப நல மையங்கள்

தமிழ்நாட்டில் தாய்-சேய் மற்றும் குடும்ப நலப் பணிகள் கீழ்க்கண்ட பணி மையங்கள் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

வரிசை எண்	மையங்களின் பெயர்	எண்ணிக்கை
1.	பேறுகால பின் கவனிப்பு மையங்கள்	114
2.	நகர்ப் புற குடும்ப நல மையங்கள்	104
3.	நகர நல்வாழ்வு மையங்கள்	193
4.	கிராமப்புற குடும்ப நல மையங்கள்	382
5.	அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவ நிலையங்கள்	1,365
6.	தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்	27

[2005 மார்ச் 21

நம் மாநிலத்தில் பல்வேறு வகையான நிலையங்களில் 2004–05 ஆம் ஆண்டில் நடைபெற்ற அறுவை சிகிச்சைகளின் விவரம் பின்வருமாறு:

1.	அரசு மருத்துவமனைகள்	62.0%
2.	தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்	6.0%
3.	அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவ மனைகள்	23.1%
4.	உள்ளாட்சி அமைப்பு மருத்துவமனைகள்	3.8%
5.	அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகள்	5.1%

குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் முக்கிய அம்சங்களாகக் கருதப்படும் பகுதிகள்

(1) தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் பிறக்கும் 11.5 இலட்சம் குழந்தைகளில் 18.9 விழுக்காடு (2.17 இலட்சம் பிறப்புகள்) மூன்று மற்றும் உயர்வரிசைப் பிறப்புகளாகும். 2007 ஆம் ஆண்டுக்கான இலக்கை எய்த இந்த வகைப் பிறப்புகள் படிப்படியாகக் குறைக்கப்பட வேண்டும்.

(2) சிசு மரண விகிதம் உயிருடன் பிறக்கும் 1,000 குழந்தைகளுக்கு 44 என்ற எண்ணிக்கையில் உள்ளது. அதில் ஏறக்குறைய 70 சதவிகித சிசுக்கள் பிறந்த ஒரு மாதத்திற்குள் இறந்து விடுகின்றன. இந்த இறப்பைக் கட்டுப்படுத்தினால் சிசு மரணத்தை ஆயிரம் பிறப்புகளுக்கு 30 என்ற இலக்கை 2007–ல் எய்திட முடியும்.

(3) தகுதி வாய்ந்த தம்பதியர்களுக்கு குடும்ப நல சேவைகளை வழங்குவதில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள், மகளிர் மன்றம், தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துப் பிரதிநிதிகள் மற்றும் அரசு சாராத அமைப்புகளின் ஈடுபாட்டைச் செம்மைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

(4) நவீன ஆண் அறுவை சிகிச்சையில் தற்சமயம் தமிழ்நாட்டில் இரண்டு மாநில அளவிலான பயிற்சியாளர்களும், ஒரு மாவட்ட அளவிலான பயிற்சியாளரும் உள்ளனர். மேலும் நமது மாநிலத்தில் 68 பயிற்சி பெற்ற மருத்துவ அலுவலர்கள் உள்ளனர். குடும்ப நலத் திட்டத்தில் ஆண்களின் பங்கை மேம்படுத்தும் பொருட்டு 12 நவீன ஆண் அறுவை சிகிச்சை முகாம்கள் நடைபெறுகின்றன.

2005 மார்ச் 21]

(5) மாவட்ட ஆட்சியர்கள் குடும்ப நலத் திட்ட முன்னேற்றத்தை ஆய்வு செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மாநில மக்கள்தொகை ஆணையம்

குடும்ப நலம் மற்றும் தாய்-சேய் நலத் திட்டப் பணிகளின் செயலாக்கத்தை ஆய்வு செய்து, கண்காணித்து தக்க அறிவுரை வழங்கவும், திட்டமிடப்பட்டுள்ள இலக்குகளை அடையவும் மாண்புமிகு முதலமைச்சரின் சீரிய தலைமையில் “மாநில மக்கள் தொகை ஆணையம்” அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

2005–2006ஆம் ஆண்டுக்கான புதிய திட்டம்

அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு இரு துளை லேப்ரோஸ்கோப் கருவிகள் மொத்தம் ரூ.50.00 இலட்சம் செலவில் வழங்கப்படவுள்ளன.

அத்தியாயம் – 7

மருந்துக் கட்டுப்பாடு நிர்வாகம்

மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தி, விநியோகம், விற்பனை ஆகியவற்றை ஒழுங்குபடுத்த கீழ்க்காணும் சட்ட விதிமுறைகளை அமல்படுத்தும் தலையாய பணியினை மருந்துக் கட்டுப்பாடு நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது:

(1) 1940 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டம் மற்றும் 1945 ஆம் ஆண்டு விதிகள்.

(2) 1995 ஆம் ஆண்டு மருந்துகள் (விலைக் கட்டுப்பாட்டு) ஆணை.

(3) 1954 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் மாயாஜால நிவாரணங்கள் (மறுக்கத்தக்க விளம்பரங்கள்) சட்டம்.

1985 ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கம் தரும் பொருட்கள் சட்டத்தின்படி நடக்க இத்துறையைச் சார்ந்த அலுவலர்கள் அதிகாரம் பெற்றவர்கள் ஆவார்கள்.

ஆங்கில முறை, ஆயுர்வேதம், சித்தா, யுனானி, ஹோமியோபதி மருந்துகள், ஒப்பனைப் பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிக்கவும், விற்பனை செய்யவும் தேவையான உரிமங்கள் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகளை மருந்துக் கட்டுப்பாடு இயக்குநர் மேற்கொள்கிறார். மேலும், மத்திய உரிமம் வழங்கும் குழுமத்துடன் இணைந்து தமிழ்நாட்டில் இரத்த சேமிப்பு வங்கிகளுக்கு உரிமம் வழங்கும் அதிகாரி ஆவார்.

நடமாடும் புலனாய்வுக் குழு மற்றும் சட்டம், புலனாய்வுப் பிரிவுகளின் பணிகள்

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு, நடமாடும் குழு ஒன்று மதுரையில் இயங்கி வருகிறது. போலி மருந்து மற்றும் தரமற்ற மருந்துகள் குறித்து தென்மாவட்டங்கள் மற்றும் சென்னையிலிருந்து வரும் புகார்களை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க இயக்குநர் அலுவலகத்தில் ஒரு புலனாய்வுக் குழுவும் செயல்படுகின்றது. இதுதவிர, சென்னையிலுள்ள புலனாய்வுப் பிரிவு, சட்டம் தொடர்பான பணிகளையும், சிறப்பு ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகிறது.

மருந்து ஆய்வுக் கூடம்

இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ், முழுத் திறன் கொண்ட மருந்து ஆய்வுக் கூடம் இயங்கி வருகிறது. அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், உற்பத்தி நிறுவனங்கள், மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள் ஆகிய இடங்களிலிருந்து (ஊசிமூலம் செலுத்தும் மருந்துத் தயாரிப்பு நீங்கலாக) மருந்து ஆய்வாளர்களால் சோதனைக்காக எடுக்கப்பட்ட மருந்துப் பொருட்கள், இந்த ஆய்வுக் கூடத்தில் ஆய்வு செய்யப்படுகின்றன. கிண்டியிலுள்ள கிங் நிலையத்தில் ஊசிமூலம் செலுத்தும் மருந்துகள் ஆய்வு செய்யப்படுகின்றன.

2004–2005 ஆம் ஆண்டின் சாதனைகள்

இந்த ஆண்டு 90 குற்ற வழக்குகள் உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்கள்மீது தொடரப்பட்டன. தரமற்ற மருந்துகள் தயாரித்ததற்காக 23 வழக்குகள் மருந்து உற்பத்தியாளர்கள்மீது தொடரப்பட்டன. 20 வழக்குகள் போலி மருந்துகள் தயாரித்த உற்பத்தியாளர்கள்மீது பதிவு செய்யப்பட்டன. மேலும், மருந்து வணிகர்கள்மீது மருந்துகள் மற்றும் அழகு சாதனச் சட்டம் மற்றும் விதிகள் மீறலுக்காக 41 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 6 வழக்குகளில் கலப்பட மருந்துகள் (3) வழக்குகள், மருந்துகள் மற்றும் மாயாஜால நிவாரணங்கள் (மறுக்கத்தக்க விளம்பரங்கள்) சட்டத்தின்கீழ் (2) வழக்குகள் மற்றும் தவறான வணிகச் சின்ன மருந்து வழக்கு (1).

01–04–2004 முதல் 31–12–2004 முடிய மொத்தம் 90 குற்ற வழக்குகள் தொடர ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

முக்கிய விதிகள் மீறலுக்காக 01–04–2004 முதல் 31–12–2004 வரை கீழ்க்கண்ட குற்ற வழக்குகள் தொடர ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது:

(1) *பல்வேறு வகையான போலி மருந்துகள் தயாரித்ததற்காக ஐந்து மருந்துத் தயாரிப்பு நிறுவனங்களின்மீது குற்ற வழக்குகளுக்கான ஒப்பளிப்பு ஆணை வழங்கப்பட்டு அவை மாநிலத்தில் உள்ள வெவ்வேறு நீதிமன்றங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

(2) *மருந்துகள் மற்றும் அழகு சாதனச் சட்டம், 1940–பிரிவு 26ஏ–ன்கீழ் தடை செய்யப்பட்ட கூட்டு மருந்துகள் (பிக்ஸட் டோஸ் காம்பினேஷன்) தயாரித்ததற்காக ஒரு முன்னணி மருந்துத் தயாரிப்பு நிறுவனத்தின்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

[2005 மார்ச் 21

(3) கலப்பட மருந்து தயாரித்ததற்காக ஒரு மருந்துத் தயாரிப்பு நிறுவனத்தின்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(4) மருந்துகள் மற்றும் மாயாஜால நிவாரணங்கள் (மறுக்கத்தக்க விளம்பரங்கள்) விதி 1954 மற்றும் சட்டம் 1955-ன்கீழ், இரண்டு நிறுவனங்களின்மீது தவறான விளம்பரங்களுக்காக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2005–2006 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம்

1. குறைந்தபட்சம் 27,600 ஆய்வுகள் விற்பனை நிறுவனங்கள், உற்பத்தி நிலையங்கள்/குருதி வங்கிகள்/அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளன.

2. குறைந்தபட்சம் 4,000 மருந்து மாதிரிகளை அங்காடிகள் மற்றும் உற்பத்தி நிறுவனங்களிலிருந்து எடுத்து அதன் தரத்தினை ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. மருந்து ஆய்வாளர்கள் மற்றும் முதுநிலை மருந்து ஆய்வாளர்களுக்கு ஒரு பயிற்சித் திட்டம் அளிக்கப்படவுள்ளது. இதன்மூலம் நடப்பிலுள்ள தொழில்நுட்பங்களின்மூலம் மருந்துகளின் தரக் கட்டுப்பாட்டினை அறியலாம்.

4. பொது மக்களின் வசதிக்காக தமிழ்நாடு மருந்தாளுநர் குழு உதவியுடன் ஒரு மருந்துகள் பற்றிய தகவல் மையம் அமைக்கப்படவுள்ளது.

2005–2006 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

1. மருத்துவப் பணி இயக்கக வளாகத்தினுள் தற்போதுள்ள மோட்டார் வண்டிகள் கொட்டகை உள்ள இடத்தில் இயக்ககத்திற்காக இணைப்புக் கட்டடம் (மாநாட்டுக் கூடம், நூலகம், மருத்துவப் பொருள் அறை மற்றும் பதிவேட்டு அறை மின்தூக்கி வசதியுடன்) ரூ. 20.00 இலட்சத்தில் கட்டுதல்.

2. ஏற்கெனவே உள்ள மின்தூக்கிக் கிணற்றில் ரூ.16.00 இலட்சத்தில் மின்தூக்கி அமைத்தல்.

3. 5 மண்டல அலுவலகங்கள் ஒவ்வொன்றின் பயனுக்காக ரூ.60,000/- வீதத்தில் போட்டோ காப்பியர் சாதனம் வழங்குதல் ([illegible] நிலை).

4. [illegible] [illegible] கட்டுப்பாடு நிருவாகத்தின் பயனுக்காக ரூ.1.00 இலட்சத்திற்குப் புத்தகங்கள் வாங்குதல்.

2005 மார்ச் 21]

அத்தியாயம் – 8

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி

தமிழ்ப் பண்பாட்டின் ஓர் அங்கமாக விளங்கும் சித்த மருத்துவத்தின் வளர்ச்சியிலும், பெருக்கத்திலும் சிறப்புக் கவனம் செலுத்தி வரும் தமிழக அரசு, திட்டமிட்ட ஒருங்கிணைப்பு, முனைப்பான முயற்சிகளை எடுத்து வருவதன்மூலம், இந்திய மருத்துவ முறைகள் தமது முக்கியத்துவத்தை மீண்டும் அடையப்பெற்றுள்ளன. இந்திய மருத்துவ முறைகளில் ஏற்கெனவே நாம் பெற்ற அனுபவ அடிப்படையில் அடைந்துள்ள சாதனைகள் மேலும் பல மேம்பாட்டுச் செயல்களைத் தொடர்ந்து செயல்படுத்திட உதவியாகவும், ஊக்கப்படுத்துபவையாகவும் உள்ளன. இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையானது, தமிழகம் முழுவதும் பரந்துபட்டு, சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி மற்றும் யோகா மற்றும் இயற்கை மருத்துவம் ஆகிய 5 மருத்துவ முறைகளில் கல்வியைக் கற்பித்தலோடு, மக்களுக்கு சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இந்திய மருத்துவ முறைகள் மீண்டும் நம்பகத்தன்மையைப் பெற சட்டபூர்வத் தகுதியோடு, கல்வி, ஆராய்ச்சி, மருந்துகளின் தரக் கட்டுப்பாடு ஆகியவற்றில் தர மேம்பாடடைந்து, நவீன மருத்துவ முறையின் பயன்பாடுகளையெல்லாம் பரிமாறிக் கொண்டு, சிறப்பான முறைகளில் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதோடு சாதாரண மனிதனுக்குக்கூட எல்லா சுகாதார வசதியும் கிடைக்கப்பெற வேண்டும் என்பதே இத்துறையின் அடிப்படைக் கொள்கையாகும்.

சுகாதாரப் பாதுகாப்பு

ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் ஒரு இந்திய மருத்துவ முறை மருத்துவர் இருக்கும் வகையில் தமிழக அரசு அனைத்து முயற்சிகளையும் படிப்படியாக எடுத்து வருகிறது. இக்கொள்கையின் மூலம் நவீன மருத்துவமும், இந்திய மருத்துவ முறைகளும் ஒரு பகிர்வுப் பங்களிப்புடன் மக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்ய இயலும். இதன்படி, 2002–2003-ல் 50 இடங்களிலும், 2003–2004-ல் 25 இடங்களிலும், 2004–2005-ல் 35 இடங்களிலும், இந்திய மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொடங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில்கூட 35 இடங்களில் இந்திய மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்படவுள்ளன. இதனையும் சேர்த்து 426 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய ம[illegible] மருத்துவர்கள் இருப்பர்.

சென்னை-600 008

கல்வி

[2005 மார்ச் 21

இந்திய மருத்துவம்-ஓமியோபதி முறைகளுக்கான மத்தியக் கழகங்கள், குறைந்தபட்சக் கல்வித் தரத்தை உறுதிப்படுத்துவதற்காகப் பல்வேறு முறைப்படுத்தல் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்திய மருத்துவ முறையில் கல்வி மற்றும் பயிற்சி வசதிகள் இரு வகைகளில் அமைந்துள்ளன. ஒன்று, அரசு தாமாகவே இந்திய முறை மருத்துவக் கல்லூரிகளை நிறுவுவது. தனியார் கல்லூரிகளையும் தேவைப்படும் தர அளவுகளைக் கொண்டுள்ளவரைச் செயல்பட அனுமதிப்பது. இந்திய மருத்துவ முறைப் பட்டப் படிப்பில், அரசுக் கல்லூரிகளில் தற்போது 236 மாணவர்களும், தனியார் கல்லூரிகளில் 790 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பட்ட மேற்படிப்புக் கல்வியானது அரசு மருத்துவக் கல்லூரிகளில் மட்டுமே நடத்தப்படுகிறது. இதில் ஆண்டுக்கு 80 பேர் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

கீழ்க்கண்டவாறு இந்திய மருத்துவ முறைக் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது:

கல்வி நிறுவனங்களின் தன்மை	சித்தா	ஆயுர்வேதா	யுனானி	ஓமியோபதி	யோகா மற்றும் இயற்கை மருத்துவம்	மொத்தம்
பட்டப் படிப்பு :						
அரசுக் கல்லூரி	150	–	26	50	10	236
தனியார் கல்லூரி	90	150	–	400	150	790
பட்ட மேற்படிப்பு :						
அரசுக் கல்லூரி	80	–	–	–	–	80
தனியார் கல்லூரி	–	–	–	–	–	–

மருத்துவ ஆய்வு

இந்திய மருத்துவ முறைகளில் நோய்கள் வரும்முன் தற்காத்துக் கொள்ளக்கூடியதும் நோய்களைத் தீர்ப்பதற்குமான வழிவகைகளில் இம்மருத்துவ முறைகளின் முக்கியத்துவத்தின் அவசியத்தை உணர்ந்து அவை ஆராய்ச்சிகளில் முன்னுரிமைப்படுத்தப்படுகின்றன. எனினும் போதிய வசதிகள் இன்மையால் இத்துறையில் முழு வளர்ச்சியைப் பெற

2005 மார்ச் 21]

முடியவில்லை. எனவே இத்துறை, வளர்ந்த பிற நிறுவனங்களுடன் கூட்டாகச் செயல்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்திய மருத்துவத் துறை சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து பணியாற்ற, கூட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது.

தர நிர்ணயம் செய்தல்

இந்திய மருத்துவ முறை மிகப் பழமை வாய்ந்ததாகும். மைய அரசின் 130.00 இலட்சம் ரூபாய் உதவியுடன் தற்காலத்திற்கேற்ப நவீன முறையில் மாநில மருந்துசெய் நிலையங்கள் நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. டாம்ப்காலுடன் இணைந்துள்ள மருந்துசெய் நிலையம் தற்காலத்திற்கேற்ப நவீனமயமாக்கப்பட்டு வருகிறது. அதேபோல சென்னையிலுள்ள மாநில மருந்துகள் ஆய்வகத்திற்குத் தேவையான கருவிகள் வாங்கப்பட்டு, இந்திய முறை மருந்துகளின் தர நிர்ணயம் செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் இந்திய மருத்துவ முறை மருந்துகளின் தரம் உறுதியளிக்கப்படுகிறது.

மருத்துவ சிகிச்சை

அனைத்து மாவட்ட, வட்ட மருத்துவமனைகள் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளில் இந்திய முறை மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது. 2000–2001 ஆம் ஆண்டில் ரூ.4.11 கோடியாக இருந்த மருந்துகள் செலவினம் 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.8.18 கோடியாக உயர்ந்துள்ளது.

தேசிய சித்த மருத்துவ நிறுவனம்

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையின் நேர்த்தியான சிறந்த மையமாக தேசிய நிறுவனங்கள் செயல்படுத்தப்படும். மாநில மற்றும் மத்திய அரசின் கூட்டு முயற்சியாக தேசிய சித்த மருத்துவ நிறுவனம் சென்னை தாம்பரத்தில் நிறுவப்பட்டுள்ளது. தேசிய சித்த மருத்துவ நிறுவனம் முதுநிலைப் பட்டக் கல்வி வழங்குவதையும், நோயாளிகளுக்கு சித்த மருத்துவ சிகிச்சை அளிப்பதையும் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த முன்னோடி நிறுவனம் ரூ.47.00 கோடி செலவில் சித்த மருத்துவத்தின் அறிவியல் மற்றும் கலை சார்ந்த உண்மைகளை வெளிப்படுத்தவும் சித்த மருத்துவத்தைப் பிரபலமடையச் செய்வதற்கும் உறுதி கொண்டுள்ளது.

டாம்ப்கால்

டாம்ப்கால் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.50.00 இலட்சமாகும். மற்றும் இதன் தற்போதைய செலுத்தப்பட்ட

பங்கு மூலதனம் ரூ.20.75 இலட்சமாகும். 1998–99 ஆம் ஆண்டு முதல் இந்நிறுவனம் தனது ஆதாயப் பங்கை அரசிற்கு அளித்து வருகிறது. இது 2002–2003 ஆம் ஆண்டில் தனது 15 விழுக்காடு ஆதாயப் பங்காக ரூ.3.11 இலட்சத்தையும், 2003–2004 ஆம் ஆண்டு 20 விழுக்காடு ஆதாயப் பங்காக ரூ.4.15 இலட்சம் தொகையையும் அளித்துள்ளது.

டாம்ப்கால் 2001–2002 ஆம் ஆண்டு ரூ.46.19 இலட்சங்களும், 2002–2003 ஆம் ஆண்டு ரூ.93.55 இலட்சங்களும், 2003–2004 ஆம் ஆண்டு ரூ.110.88 இலட்சங்களும் இலாபம் ஈட்டியுள்ளது.

2005–2006 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

1. அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை மற்றும் அனைத்து மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு 32 கணிப்பொறிகள் வாங்குவதோடு, 4 இடங்களில் தொலைபேசி மற்றும் இணையதள வசதி ரூ.18.40 இலட்சம் செலவில் மேற்கொள்ளுதல்.

2. இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி முறை மருத்துவக் கல்லூரிகளின் வசதிகள் ரூ.220.80 இலட்சம் செலவில் மேம்படுத்துதல்.

3. ரூ.1.95 இலட்சம் செலவில் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையுடன் இணைந்த மருந்து ஆய்வகத்திற்குப் பணியாளர் நியமித்தல்.

4. 35 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.119.00 இலட்சம் செலவில் இந்திய மருத்துவ முறைப் பிரிவுகள் ஏற்படுத்துதல்.

அத்தியாயம்–9

தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்

உலக வங்கி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு சுகாதாரத் திட்டத்தின்மூலம் மாநிலத்திலுள்ள நலவாழ்வு முறையை மேம்படுத்தும்பொருட்டு அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள்மூலம் கீழ்க்கண்டவை செயற்படுத்தப்படவுள்ளன:

1. மருத்துவ வசதிகள் கிடைக்கப்பெறாத, குறிப்பாக ஏழை மற்றும் மலைவாழ் மக்களுக்குக் கூடுதல் மருத்துவ சேவை வாய்ப்புகள் உருவாக்குதல் மற்றும் மருத்துவமனைகளைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.

2. அவ்வப்போது ஏற்படும் தொற்று மற்றும் தொற்றா நோய்கள் கட்டுப்பாட்டிற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து செயல்படுத்துதல்.

3. அரசு மற்றும் மருத்துவ நிறுவனங்களின் உதவியுடன் நலப் பணிகள் மேலாண்மையை மேம்படுத்தி, குறைகள் நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

4. கூடுதல் பயன் பெறும்பொருட்டு அரசு மருத்துவமனைகளில் மருத்துவ சேவைகளை மேம்படுத்துதல்.

இத்திட்டம் 2005-லிருந்து ஐந்து வருடங்கள் ரூ.597.15 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின்மூலம் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன:

1. மாநிலத்திலுள்ள 270 மாவட்ட மற்றும் துணை மாவட்ட மருத்துவமனைகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

2. ஆரம்ப, இடைநிலை மற்றும் மேல்நிலை மருத்துவ நிறுவனங்களிடையே மேல் பரிந்துரைத் தொடர்பினை மேம்படுத்துதல்.

3. மருத்துவ நலச் சேவையாளர்களின் செயல்திறன் மற்றும் அறிவுத்திறனை மேம்படுத்துதல்.

4. நலவாழ்வு மேலாண்மைத் தகவல் முறையினை ஏற்படுத்துதல்.

5. நெடும் தொலைவிலுள்ள மற்றும் வசதிகள் கிடைக்கப்பெறாத இடங்களில் அரசு மற்றும் தொண்டு நிறுவனங்கள்மூலம் நலச்சேவைகள் ஏற்படுத்துதல்.

6. அனைத்து மருத்துவ மனைகளிலும் உருவாகும் மருத்துவமனைக் கழிவுகளைச் சுகாதார முறையில் அகற்றுவதற்கான மேலாண்மை முறையினை அனைத்து மருத்துவமனைகளிலும் ஏற்படுத்துதல்.

7. பழங்குடியினர் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்.

இத்திட்டத்தின் முதற்கட்டத்தில் தேனி, தருமபுரி, கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள இடைநிலை மருத்துவமனைகளில் மருத்துவ வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளன.

2004–05 ஆம் ஆண்டின் சாதனைகள்

1. இத்திட்டத்தின் முதற்கட்டத்தில் செயல்படுத்தப்படவுள்ள 5 மாவட்டங்களில் உள்ள 38 மருத்துவமனைகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் கண்டறியப்பட்டுள்ளன.

2. இத்திட்டம் செயல்படுவதற்கான விரிவான செயல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு உலக வங்கியிடம் வழங்கப்பட்டன.

3. இத்திட்டத்தில் மருத்துவமனைப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள், கட்டடப் பணிகள், வாகனங்கள் மற்றும் வல்லுநர் பணிகளுக்கான கொள்முதல் செய்வதற்கு செயல் திட்டங்கள் மற்றும் அவற்றைக் கொள்முதல் செய்வதற்கான மாதிரி ஒப்பந்தப்புள்ளி கோரும் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு, அவை 28–6–2004 முதல் 7–7–2004 வரை நடைபெற்ற மதிப்பீட்டின்போது உலக வங்கி மதிப்பீட்டுக் குழுவிடம் வழங்கப்பட்டன.

4. 5–1–2005 அன்று இத்திட்டத்திற்கான ஒப்பந்தம் புது தில்லியில் கையொப்பமிடப்பட்டது. இத்திட்டம் 27–01–2005 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

2005–06 ஆம் ஆண்டின் செயல் திட்டங்கள்

1. இத்திட்டத்தின் முதல் கட்டத்தில் செயல்படுத்தப்படவுள்ள தருமபுரி, கிருஷ்ணகிரி, தேனி, புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள 38 மருத்துவமனைக் கட்டடங்களில் கூடுதல்/விரிவாக்கம் மற்றும் புதுப்பித்தல் பணிகள் செயல்படுத்தல்.

மாவட்டத்தின் பெயர்	மருத்துவமனைகளின் எண்ணிக்கை
தருமபுரி	5
கிருஷ்ணகிரி	6
தேனி	6
புதுக்கோட்டை	12
கன்னியாகுமரி	9

2. இத்திட்டத்தின் முதல் கட்டத்தில் செயல்படுத்தப்படும் மாவட்டங்களிலுள்ள 38 இடைநிலை மருத்துவமனைகளுக்குத் தேவையான உபகரணங்கள், மருத்துவப் பொருட்கள் வழங்குதல்.

3. அனைத்து மருத்துவமனைகளுக்கும் பிரசவக் கண்காணிப்பு அட்டை (partograph) அச்சடித்து வழங்குதல்.

4. பொது மக்களிடம் சுகாதார வசதிகள் பற்றிய விழிப்புணர்வு உருவாக்குதல் மற்றும் மருத்துவமனைப் பணியாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

5. இத்திட்டத்தின் முதற்கட்டத்தில் செயல்படுத்தப்படும் மாவட்டங்களிலுள்ள 48 வட்டாரங்களுக்கு ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒன்று வீதம் மருத்துவ உபகரணங்கள் மற்றும் செல்லிடத் தொலைபேசி (cell phone) வசதிகளுடன்கூடிய 48 மருத்துவ வாகனங்கள் வாங்குதல்.

6. அமரர் ஊர்தி இல்லாத சுகாதார மாவட்டங்களுக்கு ஒவ்வொரு சுகாதார மாவட்டத்திற்கும் ஒன்று வீதம் 34 அமரர் ஊர்தி வாங்குதல்.

7. பழங்குடியினர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள 50 துணை சுகாதார நிலையங்களின் கட்டடங்களைப் புதுப்பித்து, தேவையான உபகரணங்கள் மற்றும் மரச்சாமான்கள் வழங்குதல்.

8. பழங்குடியினர் வாழும் பகுதிகளில் நடமாடும் வெளிப்புற மருத்துவ சேவைகளுக்கு ஆய்வக உபகரணங்கள் வசதியுடன் கூடிய 12 நடமாடும் ஊர்திகள் வாங்குதல்.

9. பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 25 மின் ஆக்கிகள் (generators) வாங்குதல்.

10. மருத்துவர்களுக்கும், மருத்துவப் பணி சார்ந்த பணியாளர்களுக்கும் அறிவுத் திறனை மேம்படுத்தும் பயிற்சிகள் வழங்குதல்.

11. தொற்றா நோய்கள் மற்றும் சாலை விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்காக தகவல், கல்வி, தொடர்பு சாதனங்கள் உருவாக்குதல்.

12. மாநிலத்திலுள்ள அனைத்து இடைநிலை மருத்துவ மனைகளுக்கும் நோய்க் குறிப்புத் தாள்கள் (case sheets), புறநோயாளிச் சீட்டுகள், பதிவேடுகள், மேல்பரிந்துரை அட்டைகள் (referral cards) அச்சடித்து விநியோகம் செய்தல்.

13. அனைத்து மருத்துவமனைகளுக்கும் தரமான மருத்துவ முறையைத் தயாரித்து அச்சடித்து வழங்குதல்.

14. மருத்துவமனைக் கழிவுகளைச் சுகாதார முறையில் அகற்றுவதற்கான பயிற்சி அளித்தல்.

15. இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் உள்ளிட்ட இருதயம் தொடர்பான நோய், கருப்பை வாய் புற்றுநோய் போன்ற தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்தும்பொருட்டு முன்னோடித் திட்டம் 4 மாவட்டங்களில் செயல்படுத்துதல்.

அத்தியாயம்–10

பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம்

பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின் முதல் கட்டம் உலக வங்கி உதவியுடனும், 100 சதவிகிதம் மத்திய அரசின் நிதி உதவியுடனும் 1997–1998 முதல் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பகுதிகளாக இயங்கி வருகிறது:

1. துணைத் திட்டம், மதுரை மற்றும் தேனி மாவட்டங்களைச் சார்ந்த நகரம் மற்றும் கிராமங்களை உள்ளடக்கியது.

2. தேசியத் திட்டம்.

பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தைச் சார்ந்த துணைத் திட்டமானது ரூ.23.14 கோடி திட்ட நிதி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்பட்டு 30–9–2004–ல் முடிவடைந்துள்ளது.

எனினும், பேறுசார் மற்றும் குழந்தை நல செயல் திட்டத்தின் அடுத்த கட்டம் செயல்படுத்தப்படும் வரையில் பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்ட தேசியத் திட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட (அல்லது) அதற்குப் பின்னர் கடந்த 9-வது திட்டக் காலத்தில் ஒப்பளிக்கப்பட்ட அனைத்து செயல்பாடுகளும் பத்தாவது திட்டக் காலத்தில் தொடரப்படும்.

இதில், 9-வது திட்டக் காலத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட பேறுசார் மற்றும் குழந்தைகள் நல முகாம், 24 மணி நேரமும் செவிலியருடன் இயங்கும் மகப்பேறு சேவை மற்றும் கட்டுமானப் பணிகள், ஒப்பந்தப் பணியாளர்களை பணியில் அமர்த்துதல் போன்ற திட்டங்களும் அடங்கும்.

பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின் 2-வது கட்டம் இந்த நிதியாண்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம், கட்டம்–2 மத்திய மதிப்பீட்டுக் குழுவால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 2005–06 ஆம் ஆண்டிலிருந்து 5 வருடங்களுக்கு ரூ.426 கோடி நிதியுதவியுடன் இந்த நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்பட உள்ளது. மத்திய அரசு 2005–06 ஆம் ஆண்டிற்கான தொகை ரூ.74 கோடியை அனுமதித்து ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டம் 100% மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படும் திட்டமாகும்.

2000 ஆண்டின் புத்தாயிரமாண்டு மேம்பாட்டு இலக்கு, தேசிய [2005 மார்ச் 21
மக்கள்தொகைக் கொள்கை, 2000 மற்றும் தேசிய சுகாதாரக் கொள்கை,
2002 முதலான வழிகாட்டிக் கொள்கைகளை அடிப்படையாகக்
கொண்டும், பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம் கட்டம்-I-ல்
அடைந்த அனுபவங்களைக் கொண்டும் பேறுசார் மற்றும் குழந்தை
நலத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

குறிக்கோள்கள்

1. தாய்மார்களின் இறப்பு விகிதம் மற்றும் நோய்வாய்ப்படுதலைக் குறைத்தல்.
2. சிசு இறப்பு விகிதம் மற்றும் நோய்வாய்ப்படுதலைக் குறைத்தல்.
3. 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் மற்றும் நோய்வாய்ப்படுதலைக் குறைத்தல்.
4. வளரிளம் பருவத்தினரின் உடல் நலத்தை மேம்படுத்துதல்.
5. இனப்பெருக்க உறுப்பு நோய்கள் மற்றும் பால்வினை நோய்களைத் தடுத்தல்.

வரும் 2005–06 ஆம் நிதியாண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் செயலாக்கப்பட உள்ளன:

கர்ப்பிணித் தாய்மார்களின் நலத்தை மேம்படுத்துதல்

1. மேலும் 260 ஆரம்ப சுகாதார நிலையங்களை, 24 மணி நேரமும் செவிலியர்கள் உதவியுடன் தொடர்ந்து செயல்படும் அவசர கால தாய்-சேய் நல மையங்களாக மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
2. கர்ப்ப காலப் பராமரிப்பு, பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு, பிரசவத்திற்குப் பின் தாயின் பராமரிப்பு போன்ற சேவைகளின் தரத்தை உயர்த்தும்வகையில், கர்ப்ப காலப் பரிசோதனை செய்யும் தவணைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் கர்ப்ப காலப் பரிசோதனை முகாம்கள் நடத்த குறிப்பிட்ட நாட்களை நிர்ணயித்தல், பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு, பிரசவத்திற்குப் பின் தாய்மார்களின் பராமரிப்புடன் இணைத்துச் செயல்படுத்துதல். கர்ப்ப கால முதலுதவி, பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு போன்றவற்றில் கிராமச் சுகாதார செவிலியரின் திறமைகளை உயர்த்துதல்.

2005 மார்ச் 21]

3. பரிந்துரை சேவைகளை மேம்படுத்துவதற்காக மற்றும் அவசர கால உதவி மையங்களை அமைத்தல்.
4. இரத்த வங்கிகளில் இரத்தம் தொடர்ந்து கிடைக்கும் வகையில் இரத்த தான முகாம்களை முறைப்படுத்தி நடத்துதல்.
5. அனைத்து மருத்துவமனைகளிலும், சுகாதார நிலையங்களிலும் பிரசவ காலத்தில் தாய் அல்லது உறவுப் பெண் துணையிருக்கும் திட்டத்தினைச் செயல்படுத்துதல்.
6. தாய் மரணங்களுக்கான காரணத்தைக் கண்டறிந்து தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க முறையாக ஆய்வுகள் நடத்துதல்.

இளஞ்சிசு மற்றும் குழந்தை நலம்

1. இளஞ்சிசு பராமரிக்கும் பிரிவு உள்கட்டமைப்பு வசதிகளைப் பலப்படுத்துதல் மற்றும் தொடர் குழந்தை நலக் கவனிப்பு முறைகள்மூலம் இளஞ்சிசு, குழந்தை மற்றும் சிறுவர்களின் இறப்பைக் குறைத்தல்.
2. தாய்மார்களுக்கு ஆலோசனைகள் வழங்க ஏற்பாடு செய்தல்.
3. தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் பச்சிளம் குழந்தை மற்றும் சிறுவர்களின் நோய்களுக்கான ஒருங்கிணைந்த பராமரிப்புத் திட்டத்தை ஒரு முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்துதல்.
4. குழந்தைகள் இறப்பு மற்றும் குழந்தைகள் இறந்து பிறத்தலுக்கான காரணங்களைக் கண்டறிய ஆய்வுகள் நடத்துதல்.
5. பெண் சிசுக் கொலை மற்றும் கருக்கொலைகளைத் தடுக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளுதல்.

வளரிளம் பருவத்தினரின் நலம் பேணுதல்

1. வளரிளம் பருவத்தினருக்கு முக்கியக் கவனிப்பு அளித்து அவர்களை நலக் கல்வியினைப் பெறுபவர்களாகவும், சேவை அளிப்பவர்களாகவும் உருவாக்கி நலச் சேவைகளில் தன்னார்வத் தொடர்புப் பணியாளர்களாகச் செயல்படச் செய்தல்.
2. இந்திய மருத்துவ முறைகளைப் பிரபலப்படுத்த வளரிளம் பருவத்தினரின் சேவையைப் பயன்படுத்துதல்.

3. வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமாக வளரிளம் பருவத்தினருக்கான நலக் கல்வி மற்றும் பாலினக் கல்வி அளித்தல்.

4 மேற்குறிப்பிட்ட வானொலி தகவல் திட்டத்திற்கு மாவட்ட அளவில் ஒருங்கிணைப்புக் குழு அமைத்தல் மற்றும் மாநில அளவில் மேற்பார்வைக் குழு அமைத்தல்.

குடும்ப நலம்

1 நடைபெற்று வரும் குடும்ப நலத் திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்துவதுடன், அதிகக் குழந்தைகள் பெறும் தாய்மார்களைக் கொண்ட 19 மாவட்டங்களுக்குத் தனிக் கவனம் செலுத்தி இத்திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்துதல்.

2 ஆணுறையை சமுதாயத்தில் எளிதில் கிடைக்கச் செய்தல், தற்காலிகக் கருத்தடை முறைகளைப் பயன்படுத்த ஊக்குவித்தல் போன்றவற்றை ஒரே சேவை மையத்தில் அனைத்து குடும்ப நல உதவிகளும் கிடைக்கும் முறையை விரிவுபடுத்துதல்.

3 பாதுகாப்பான கருக்கலைப்பு சேவையை மக்கள் எளிதில் அடைய வெற்றிட உறிஞ்சி (Manual Vacuum Aspiration) முறையைப் பிரபலப்படுத்துதல்.

4 அனைத்து குடும்ப நலச் சேவைகளும் ஒருங்கிணைக்கப்பட்ட அவசர கால தாய்-சேய் நல மையங்களில் (CEMONC) கிடைக்கும் வகையில் குடும்ப நலச் சேவை மையங்கள் நிறுவுதல்.

5 நவீன தழும்பில்லாத ஆண் அறுவை சிகிச்சை முறையைப் பிரபலப்படுத்துதல்.

இனப்பெருக்க உறுப்பு நோய்கள் மற்றும் பால்வினை நோய்கள்/ புற்றுநோய்களைக் கட்டுப்படுத்துதல்

1 385 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிறப்புறுப்பு/பால்வினை நோய்கள் (ம) புற்றுநோயைக் கண்டறியும் மையங்கள் நிறுவி சிகிச்சை வசதிகள் மக்களுக்கு எளிதில் கிடைக்க ஆவன செய்தல்.

2 பேறுசார் (ம) குடும்ப நலச் சேவைகள் குக்கிராமங்களிலும் கிடைக்கும் வகையில் பலப்படுத்துதல்.

சுகாதார நிலையங்களின் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்

1 வாடகைக் கட்டடங்களில் செயல்படும் துணை சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்களைக் கட்டுதல்.

2 பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள துணை சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்களைக் கட்டுதல்.

3 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், துணை சுகாதார நிலையங்களுக்கும் பராமரிப்புப் பணிகள், மின் வசதி மற்றும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல்.

4 ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் எரிவாயு அடுப்பு, கூடுதலாக, தேவைக்கேற்ப உபகரணங்கள் மற்றும் அறைகலன்களை வழங்குதல்.

5 அதிக எண்ணிக்கையில் பிரசவம் நடைபெறும் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 துணை சுகாதார நிலையங்களுக்கு செல்லிடத் தொலைபேசி (Cell Phone) இணைப்புகள் வழங்குதல்.

6 774 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத் தொலைபேசி இணைப்புகள் வழங்குதல்.

பயிற்சி

1 செயல்திறனை வளர்ப்பதற்கு, பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

2 கிராம அளவில் பணிபுரியும் மருத்துவ அலுவலர், பகுதி சுகாதார செவிலியர், கிராம சுகாதார செவிலியர் மற்றும் சுகாதார ஆய்வாளர்களுக்கு ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல்.

3 சுகாதாரப் பணியாளர்களுக்கு மேலாண்மைத் திறமை மற்றும் தகவல் தொடர்புத் திறமைகளை வளர்ப்பதற்கான பயிற்சி அளித்தல்.

மக்கள் நடத்தை முறையில் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் கல்வி அளித்தல்

1 முன் ஆலோசனைகள்மூலம் பெண் சிசுக் கொலை மற்றும் கருக்கொலைகளுக்கு எதிராக சமூகத்தைத் திரட்டுதல்.

[2005 மார்ச் 21

2. மாவட்டம், வட்டாரம் மற்றும் துணை சுகாதார நிலைய அளவில் பெண் குழந்தை உயிரைப் பாதுகாக்கும் குழுக்களை ஏற்படுத்துதல்.

3. இலக்குக்குட்பட்ட மக்கள் நலத்தைப் பேணும் வகையில் சமூகத்தில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் 'கலைப் பயணம்' என்னும் திட்டத்தை நடத்துதல்.

4 முக்கியமான இடங்களில் பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டங்களில் உள்ள நலச் செய்திகளை விளம்பரப் பலகைகள் மூலமாகவும், வானொலி மற்றும் தொலைக்காட்சிகளின் மூலமாகவும் விளம்பரப்படுத்துதல்.

நலத் திட்டங்கள் குறித்த தகவல் அளிக்கும் முறை

மாநிலம், மாவட்டம் மற்றும் வட்டார அளவில் கணினிமூலம் நலத் திட்டங்கள் குறித்த தகவல் அளிக்கும் முறையைச் செயல்படுத்துதல்.

மருத்துவக் கல்வி நிறுவனங்களை வலுப்படுத்துதல்

தாய் நலம், இளஞ்சிசு நலம், குழந்தை நலச் சேவைகளை வழங்குவதற்கு மருத்துவக் கல்வி நிறுவனங்களின் உள்கட்டமைப்பு வசதிகளைப் பலப்படுத்துதல்.

நகர நல மையங்கள்

நகர குடிசைவாழ் மக்கள் மற்றும் உடல் நலம் எளிதில் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய மக்களுக்குத் தேவையான அடிப்படை சுகாதாரச் சேவைகள் அளிக்கவும், அவை தொடர்ந்து கிடைக்கவும் வழிவகை செய்தல்.

2005 மார்ச் 21]

அத்தியாயம் – 11

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்

எச்ஐவி. எய்ட்ஸைத் தடுக்கும் திட்டங்களுக்கு இந்த அரசு தொடர்ந்து அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. இம்மாநிலத்தில் எச்.ஐ.வி./எய்ட்ஸுடன் வாழும் மக்களுக்குப் போதுமான அன்பு, அரவணைப்பு மற்றும் மருத்துவம் அளிப்பதிலும் இணையான முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டங்கள் முழு வெற்றி பெற தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் இவ்வாண்டு பல்வேறு நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. 2004 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட நோய் கண்டறியும் ஆய்வு (Sentinel Surveillance Survey) மற்றும் நடத்தைகளில் மாற்றம் கண்டறியும் ஆய்வுகளின் (Behavioural Surveillance Survey) முடிவுகள் அரசு எடுத்துள்ள ' நடவடிக்கைகளின்படி எதிர்பார்த்த வெற்றிகளை அளித்திருப்பதைக் காட்டுகின்றன.

எச்.ஐ.வி. நிலவரம் (HIV Prevalence)

பொது மக்களிடையே தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவினரிடம், எச்.ஐ.வி. தொற்றின் தன்மையைக் கண்டறிய, தொடர் இடைவெளியில் அதே இடங்களில் நடத்தப்படும் ஆய்வுகள் நோயின் நிலைப்பாட்டைக் கண்டறிவதில் உதவி புரிகிறது. தமிழகம் முழுவதும் 2004 ஆம் ஆண்டில் 2004 ஆகஸ்ட் திங்கள் முதல் 2004 அக்டோபர் திங்கள் வரை 85 இடங்களில் நோய் கண்டறியும் ஆய்வு (Sentinel Sites) நடத்தப்பட்டன. இந்த நோய் கண்டறியும் ஆய்வுக்காகக் கீழ்க்கண்ட பிரிவினர்கள் உட்படுத்தப்பட்டார்கள்: (1) அரசு மருத்துவமனைகளில் உள்ள பால்வினை நோய்ப் பிரிவுக்கு சிகிச்சை பெற வருபவர்கள், (2) ஊசி மூலம் போதை மருந்தைச் செலுத்திக் கொள்பவர்கள் (IVDU), (3) பெண் பாலியல் தொழிலாளர்கள், (4) ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுபவர்கள் (MSM), (5) முன் பரிசோதனைக்காக வரும் கர்ப்பிணித் தாய்மார்கள். இவ்வாய்வில் கர்ப்பிணித் தாய்மார்களுடைய எச்.ஐ.வி. நிலவரம் 2003 ஆம் ஆண்டு 0.75 சதவிகிதத்திலிருந்து 2004 ஆம் ஆண்டு 0.65 சதவிகிதமாகக் குறைந்துள்ளது எனத் தெரிய வருகிறது. அதேபோல் பால்வினை நோய்ப் பிரிவிற்கு மருத்துவ சிகிச்சை பெற வருபவர்களிடம் நடத்தப்பட்ட பரிசோதனையில் 2003 ஆம் ஆண்டு 9.20 சதவிகிதத்திலிருந்து 2004 ஆம் ஆண்டு 8.40 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. பெண் பாலியல் தொழிலாளர்களிடம் எச்.ஐ.வி. நிலவரத்தைக் கண்டறிய நடத்தப்பட்ட பரிசோதனையின் முடிவு 8.80 சதவிகிதத்திலிருந்து 4.0 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. ஊசிமூலம் போதை மருந்தைச் செலுத்திக்

கொள்பவர்களிடம் எச்ஐவி. நிலவரம் 39.92 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவோரிடையேயான எச்.ஐ.வி. நிலவரம் 4.40 சதவிகிதத்திலிருந்து 6.80 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.

தகவல், கல்வி மற்றும் தொடர்பு (Information, Education & Communication)

மக்களிடையே சிறந்த எச்ஐவி. தடுப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மிகவும் அவசியமான ஒன்றாகும். சமுதாயத்தில் எல்லாப் பிரிவினரிடையேயும் எச்.ஐ.வி./எய்ட்ஸ் பற்றிய போதுமான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதில் இச்சங்கம் வெற்றி பெற்றுள்ளது. மேலும், இளைய சமுதாயத்தினரிடையே, எச்ஐவி/எய்ட்ஸ் விழிப்புணர்வை அதிகப்படுத்த முயற்சி செய்து வருகிறது. நடத்தை கண்டறிதல் ஆய்வுகளின்மூலம் பொது மக்களிடையே, அதிக அபாயத்திற்குள்ளாகும் குழுவினரிடையேயும் எச்.ஐ.வி./எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு அதிகரித்துள்ளது தெரிய வருகிறது. சமுதாயத்தில் எச்ஐவி/எய்ட்ஸ் பற்றிய தவறான கருத்துகளைக் களைவதற்காகப் பல நடவடிக்கைகளையும் எடுத்து வருவதோடு, தகவல், கல்வி தொடர்பு நடவடிக்கைகள்மூலம் எச்.ஐ.வி./ எய்ட்ஸ் உடன் வாழ்பவர்களின் மனித உரிமையைக் காப்பதிலும், எச்.ஐ.வி./எய்ட்ஸுடன் வாழ்பவர்களைத் தனிமைப்படுத்தி வேறுபடுத்துவதற்கு எதிரான திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

சுய உதவிக் குழுக்களுக்கான உணர்வூட்டல் (Sensitization of SHG on HIV/AIDS)

எச்.ஐ.வி./எய்ட்ஸால் இன்று அதிக அளவில் பாதிக்கப்படுவது பெண்கள் என்பதும், இப்பாதிப்பை மௌனமாக ஏற்றுத் துன்பப்படுபவர்கள் பெண்கள் என்பதும் பல்வேறு ஆய்வுகளின் மூலமாக நிரூபிக்கப்பட்டுள்ளன. இதற்காக, தமிழகத்தில் இன்று வளமையான தளம் அமைத்துள்ள சுய உதவிக் குழு பெண்களை, எச்ஐ.வி./எய்ட்ஸின் பாதிப்பில் இருந்து தடுப்பதற்கும், பாதிப்பிற்கு உள்ளாகும் நிலை குறைவதற்கும், பாதிக்கப்பட்டோருக்குத் தேவையான "பாதுகாப்பு மற்றும் அரவணைப்பு தருவதற்கும்", இன விருத்தி உரிமைகளைப் பெறுவதற்கும் ரூ.1.54 கோடி செலவில் விழிப்புணர்வுப் பயிற்சிகள் நடத்தி இப்பெண்களிடம் தேவையான "அறிவு, நோக்கு மற்றும் வாழ்க்கைத் திறன்களை" வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிவப்பு ரிப்பன் குழு (Red Ribbon Club)

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்கள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் சிவப்பு ரிப்பன் குழுக்களை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளது. பள்ளி மற்றும் கல்லூரி செல்லா இளைஞர்களுக்கு நேரு இளைஞர் மையத்துடன் இணைந்து சிவப்பு ரிப்பன் குழுக்கள் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 2005–2006 ஆம் ஆண்டுக்கான ஆண்டுச் செயல் திட்டத்தில் ரூ.80.00 இலட்சம் முன்மொழியப்பட்டுள்ளது.

பள்ளிகளில் எய்ட்ஸ் கல்வித் திட்டம் (School AIDS Education Programme)

பள்ளிப் பாடத் திட்டத்தில் எச்.ஐ.வி./எய்ட்ஸ் தகவல்களை அறிமுகப்படுத்தியதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இது தவிர, இந்திய அரசின் நிதி உதவியுடன் இம்மாநிலத்தில் பள்ளிகளில் எய்ட்ஸ் கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2004–2005 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள 8,417 அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின்மூலம் நடத்தப்படும் உயர், உயர்நிலைப் பள்ளிகள், மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, தமிழ்நாட்டிற்கு யுனிசெஃப் மற்றும் யு.எஸ்.எய்டு உதவியுடன் செயல்படும் அபெக் நிறுவனமும் தங்களுடைய ஆதரவை அளித்துள்ளன. இவ்வாண்டில் இந்தத் திட்டம் மாநகராட்சி, நகராட்சி மற்றும் தனியார் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இலக்கு சார்ந்த குறுக்கீட்டுச் செயல் திட்டங்கள் (Targeted Interventions)

எச்ஐ.வி. தடுப்புத் திட்டங்கள், குறிப்பாக, அதிக அபாயத்தை எதிர் நோக்கியுள்ள குழுவினர் என்ற இலக்குக் குழுக்களிடையே செயல்படுத்தப்படும் திட்டங்களாக விளங்குகின்றன. இத்திட்டங்கள் அதிக அபாயத்தில் உள்ள குழுவினரைப் பாதுகாத்து, எச்.ஐ.வி. பரவுவதைத் தடுப்பதோடு மட்டுமல்லாமல், பொது மக்களிடையே எச்ஐ.வி. பரவுவதைத் தடுப்பதற்கும் வழிவகுக்கும். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமுதாய அடிப்படையில் இயங்கும் நிறுவனங்கள், சமூக மற்றும் பொருளாதார அடிப்படையில் ஒடுக்கப்பட்டு வாழும் மக்களுக்கு முக்கியத்துவம் அளித்து, இச்சங்கத்தின்மூலம் நிதி பெற்று செயல்பட்டு வருகிறது.

[2005 மார்ச் 21

தற்போது, 66 திட்டங்கள் இச்சங்கத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் 12 திட்டங்கள் பெண் பாலியல் தொழிலாளர்களுக்காகவும், 15 திட்டங்கள் வாகன ஓட்டுநர்களுக்காகவும், 16 திட்டங்கள் தொழிற்சாலையில் பணிபுரிவோர்களுக்காகவும், 12 திட்டங்கள் புலம் பெயரும் தொழிலாளர்களுக்காகவும், 2 திட்டங்கள் ஓரினச் சேர்க்கையாளர்களுக்காகவும், 3 திட்டங்கள் சிறைக் கைதிகளுக்காகவும், 3 திட்டங்கள் மலைவாழ் மக்களுக்காகவும், 1 திட்டம் இளைஞர் மற்றும் வளரிளம் பருவத்தினருக்காகவும், மற்றும் 2 திட்டங்கள் எச்.ஐ.வி./எய்ட்ஸ் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2005–2006 ஆம் ஆண்டில் மேலும் 11 தொண்டு நிறுவனங்கள் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கண்டறியப்பட்டுள்ளது. மாநிலத்தில் அதிக அபாயத்தை எதிர்நோக்கியுள்ள குழுவினர் அனைவரையும் உள்ளடக்கும் விதமாக இலக்கு சார்ந்த குறுக்கீட்டுச் செயல் திட்டங்கள் 77 ஆக அதிகப்படுத்தப்படவுள்ளன.

பால்வினை நோய்கள் மற்றும் பிறப்புறுப்பு நோய்ப் பிரிவுகள் (Sexually Transmitted Diseases / Reproductive Tract Infection (STD/RTI)

பால்வினை நோய் உள்ளவர்களுக்குப் பிறப்புறுப்புகளில் புண்ணோ, அழற்சியோ, சீழ்வடிதலோ இருப்பதால் எச்.ஐ.வி./எய்ட்ஸ் உள்ள நபரோடு பாதுகாப்பற்ற உடலுறவு கொள்ளும்போது எச்.ஐ.வி. தொற்று பரவ வாய்ப்புகள் மிகுதியாக உள்ளன. எனவே, மக்கள் மத்தியில் எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோய் பரவுவதைத் தடுக்கவும் விழிப்புணர்வை ஏற்படுத்துவது இன்றியமையாததாகும். இதைத் தடுக்கும் முகமாகத் தமிழகத்திலுள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் மற்றும் வட்ட மருத்துவமனைகளிலும் 57 பால்வினை நோய்ப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இப்பிரிவிற்குரிய மருந்துகள் மற்றும் தேவையான கருவிகள், பிற வசதிகளையும் தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் அளித்து வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் இப்பிரிவுகளை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆணுறைப் பயன்பாட்டை ஊக்குவித்தல் (Condom Promotion)

அதிக அபாயத்திற்குள்ளாகும் குழுவினர் மற்றும் குறைந்த அபாயத்திற்குள்ளாகும் குழுவினர் என்ற பாகுபாடின்றி அனைத்து மக்களிடையேயும் உடலுறவின்மூலம் பால்வினை நோய்/எச்.ஐ.வி. பரவுவதைத் தடுப்பதற்காக இலவச ஆணுறை வழங்கப்பட்டு வருகிறது.

2005 மார்ச் 21]

ஆணுறை விற்பனைத் திட்டத்தில் தொண்டு நிறுவனங்கள் மற்றும் மாநிலத்தில் உள்ள நியாய விலைக் கடைகள்மூலமாக விற்கப்பட்டு வருகிறது.

இரத்தப் பாதுகாப்பு (Blood Safety)

தற்போது 86 உரிமம் பெற்ற அரசு இரத்த வங்கிகளும், 26 அரசு இரத்த சேமிப்பு மையங்களும் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. சமீப காலத்தில் 11 முக்கியமான பெரிய அளவு இரத்த வங்கிகள் கணினி வலை இணைப்புமூலம் ரூ.6.56 இலட்சம் செலவில் இணைக்கப்பட்டுள்ளன. தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தின் ஒப்புதலோடு இவ்வாண்டு மேலும் 5 இரத்த வங்கிகளில் இவ்வசதி செயல்படுத்தப்படும்.

தன்னார்வ இரத்த தானத்தை ஊக்குவிக்கும் குறிக்கோளுடன், 01-10-2004 அனுசரிக்கப்பட்ட தேசிய தன்னார்வ இரத்த தான விழாவில் அனைத்துத் தன்னார்வ இரத்தக் கொடையாளர்கள் அழைக்கப்பட்டு, 50, 75, 100, 125 முறை மற்றும் அதற்குமேல் இரத்த தானம் அளித்தவர்களில் 23 நபர்களுக்குத் தங்கப் பதக்கங்களும், சான்றிதழ்களும் அளித்து கௌரவிக்கப்பட்டனர். தன்னார்வ இரத்தக் கொடை 2003–2004 ஆம் ஆண்டில் 64.05% இருந்தது. 2004–2005 ஆம் ஆண்டில் 78% உயர்ந்துள்ளது. இரத்தக் கொடையாளிகளிடையே எச்.ஐ.வி. சதவிகிதம் 0.18%- ஆகவே உள்ளது.

தற்போது இரத்தக் கூறுகளைப் பிரித்தளிக்கும் அமைப்புகள், தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் சென்னையில் இரண்டு அமைப்புகளும், ஆக மொத்தம் ஆறு அமைப்புகள் இயங்கி வருகின்றன. இவ்விடங்களில் நோயாளிகளுக்குத் தேவைப்படும் குறிப்பிட்ட இரத்தக் கூறுகளை மட்டுமே கொண்டு சிகிச்சை அளிப்பதன்மூலம் இரத்த உபயோகம் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த பெற்றோர் சேய் மேவா மையம் மற்றும் தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை மையம் (Integrated PPTCT and VCCTC Centres)

தாயிடமிருந்து சேய்க்கு எச்.ஐ.வி. தொற்று நேரிடையாகப் பரவுவதைத் தடுப்பதற்காக பெற்றோர் சேய் மேவா திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், தனியார் மகப்பேறு நிலையங்கள் மற்றும் மாநகராட்சி நல மையங்கள் உட்பட 65 மையங்களில் பெற்றோர் சேய் மேவா திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த

தாய்-சேய் மேவா மையத்திற்கு வருபவர்களின் எண்ணிக்கை 2003–2004-ல் 2,23,508 ஆக இருந்து 2004–2005 ஆம் ஆண்டில் 2,63,808 ஆக அதிகரித்துள்ளது.

தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்கள், தடுப்பு நடவடிக்கைகள், பராமரிப்பு மற்றும் அரவணைப்புச் சேவைகளுக்கு இடையே ஒரு பாலமாகச் செயல்பட்டு வருகின்றன.

தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை நிலையங்களின் சிறப்பம்சங்களாவன:

1. அதிக அபாயத்திலுள்ள குழுவினர்களுக்கு ஆலோசனைகளையும், பரிசோதனைகளையும் வழங்குதல்.
2. அதிக அபாயத்திலுள்ள குழுவினர்களுக்கு நடத்தை மாற்றங்களை ஊக்கப்படுத்துவது.
3. எச்ஐ.வி. தொற்றுள்ளவர்களைக் கண்டறிதல்.
4. எச்.ஐ.வி. தொற்றுள்ளவர்களுக்கு சமூக மற்றும் மனோரீதியான ஆதரவு அளித்தல்.
5. அவர்களிடையே காசநோய்த் தொற்றுள்ளதைக் கண்டறிதல்.
6. தேவையான மருத்துவ சிகிச்சைக்காக எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவர்களைப் பரிந்துரைத்தல்.

தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்களுக்கு வருபவர்களின் எண்ணிக்கை 2003–2004 ஆம் ஆண்டில் 85,000 ஆக இருந்து, 2004–05 ஆம் ஆண்டில் 1,16,250 ஆக உயர்ந்துள்ளது.

பெற்றோர் சேய் மேவா திட்டம், தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்கள் இணைக்கப்பட்டதன்மூலம் அவற்றின் செலவினங்கள் குறைக்கப்பட்டு, செயல்பாடுகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கை பொது மக்களிடையே ஆரம்ப நிலை தடுப்பு நடவடிக்கைகளுக்கு முதற்படியாக அமைந்துள்ளது.

தற்போது 65 பெற்றோர் சேய் மேவா திட்ட மையங்களும், 45 தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், 68 புதிய ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்கள் எச்ஐவி. தொற்றுக்கு அதிகப் பாதிப்புக்குள்ளான தாலுகா மருத்துவமனைகளில் 2005–06–ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

அன்பு, அரவணைப்பு மற்றும் மருத்துவம் (Care and Support)

இந்த அரசாங்கம், இம்மாநிலத்தில் உள்ள எச்.ஐ.வி./எய்ட்ஸுடன் வாழ்பவர்களின் நலனில் பெரிதும் அக்கறை கொண்டு, அவர்களுக்குத் தரமான மருத்துவ வசதி கிடைக்க அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. இச்சங்கம் அவ்வப்போது ஏற்படும் மேல் தொற்று மற்றும் ஆபத்துக் காலங்களில் ஏற்படும் தொற்றுக்குரிய மருந்துகளை வாங்குவதற்கான நிதி உதவியை வழங்கி வருகிறது. எச்ஐ.வி./எய்ட்ஸுடன் வாழும் மக்களுடைய கூட்டமைப்புகள், பகல் நேரக் காப்பகங்கள் மற்றும் சமுதாய நல மையங்களை நடத்திட உதவி புரிந்து வருகிறது. இச்சங்கம் தற்போது 13 தனியார் பேணகங்கள், 5 சமுதாய நல மையங்கள், 8 நல மையங்களுக்கு (Drop in Centre) நிதியுதவி அளித்து வருகிறது. இந்த அரசாங்கம் எச்.ஐ.வி. நுண்கிருமிக்கு எதிரான மருந்துகளுக்கு (ART) விற்பனை வரி விலக்கு அளித்துள்ளது. இதன்மூலம் எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸுடன் வாழும் மக்களின் மருந்துச் செலவினம் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், 2005–2006–ல் 8 புதிய சமுதாய நல மையங்களை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

எச்.ஐ.வி. நுண்கிருமிக்கு எதிரான மருத்துவம் (Anti Retroviral Therapy)

இந்திய அரசாங்கம் நமது நாட்டில் பொதுச் சுகாதார அமைப்பின்கீழ் எச்ஐ.வி. நுண்கிருமிக்கு எதிரான மருந்துகள் கிடைப்பதற்கான கொள்கை முடிவை எடுத்துள்ளது. இம்முடிவின்கீழ் முதல் கட்டமாக 1-4-2004 முதல் தமிழ்நாட்டில் தாம்பரத்தில் உள்ள அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையில் எச்.ஐ.வி. நுண்கிருமிக்கு எதிரான மருத்துவத் (ART) திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. அரசு இராசாசி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மதுரை, சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் நாமக்கல் மாவட்டத் தலைமை மருத்துவமனையிலும் எச்.ஐ.வி. நுண்கிருமிகளுக்கு எதிரான மருத்துவத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை 2,400 எய்ட்ஸ் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு எச்.ஐ.வி. நுண்கிருமிக்கு எதிரான இலவச மருத்துவம் (ART) நீட்டிக்கப்பட்டுள்ளது.

எச்.ஐ.வி. / எய்ட்ஸுடன் வாழும் மக்களை அதிக அளவில் ஈடுபடுத்துதல் (Greater Involvement of People Living with HIV/AIDS) (GIPA) :

இந்த அரசாங்கம் எச்.ஐ.வி./எய்ட்ஸ் தடுப்புத் திட்டங்களில், எச்.ஐ.வி./எய்ட்ஸுடன் வாழும் மக்களை அதிக அளவில் ஈடுபடுத்தி, இத்திட்டத்தை உறுதியுடன் செயல்படுத்துகிறது. தமிழ்நாடு எய்ட்ஸ்

கட்டுப்பாடு சங்கத்தின் பல்வேறு நிலைகளில் முடிவெடுக்கும் நடவடிக்கைகளில், எச்.ஐ.வி.யுடன் வாழும் குழுக்களும் சிறப்பாக ஈடுபடுத்தப்படுகின்றன. மிக முக்கியமாக, தமிழ்நாட்டில் உள்ள எல்லா மருத்துவமனை ஆலோசனைக் குழுக்களிலும் (Hospital Advisory Committee) எச்.ஐ.வி.யுடன் வாழும் பெண்களை உறுப்பினராகச் சேர்க்கும்படி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

பயிற்சி (Training)

50,000 அரசு மற்றும் தனியார் மருத்துவர்கள், செவிலியர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் கிராம அளவிலான சுகாதார மற்றும் ஊட்டச்சத்துப் பணியாளர்களுக்கு 2005–2006 ஆம் ஆண்டில் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

2005–2006 ஆம் ஆண்டுக்கான நிதி (Funding for the year)

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.63.00 கோடி நிதி செலவில் மேற்படி நடவடிக்கைகளைச் செயல்படுத்த இந்திய அரசின் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்திற்கு முன்மொழிந்துள்ளது.

அத்தியாயம்–12

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் 01-07-1994 அன்று கம்பெனிகள் சட்டம், 1956-ன்கீழ் நிறுவப்பட்டது. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் 9001:2000 தரச் சான்றிதழ் பெற்றுள்ளது.

செயல்பாடுகள்:

மனித மருந்துகள் கொள்முதல், சேமிப்பு மற்றும் விநியோகம்

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் தரம் வாய்ந்த மருந்துகள், மருந்துப் பொருட்கள், அறுவை சிகிச்சைக் கருவிகள் மற்றும் தையற் பொருட்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் தாராளமாகக் கிடைக்க வழிவகை செய்கிறது.

கால்நடை மருந்துகள் கொள்முதல், சேமித்தல் மற்றும் விநியோகித்தல்

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் நெறிமுறைப்படுத்தப்பட்ட கொள்முதல், சேமிப்பு மற்றும் விநியோக முறைமூலம் மருந்துகள், இரசாயனங்கள் மற்றும் நீர்த்த நைட்ரஜன் முதலியவற்றைக் கொள்முதல் செய்து கால்நடை இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு விநியோகம் செய்கிறது.

ஒவ்வொரு இயக்ககத்தின்கீழ் இயங்கும் அரசு மருத்துவ நிலையங்களுக்கு அந்தந்த இயக்ககத்தால் நிதி ஒதுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் உள்ள 24 மருத்துவக் கிடங்குகளிலிருந்து "பற்று வரவு கைச்சாத்து" மூலம் மருந்துகள் விநியோகம் செய்யப்படுகின்றன.

சி.டி. மற்றும் எம்.ஆர்.ஐ. மையங்களின் இயக்கம்

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், 35 சி.டி. மையங்களை அரசு மருத்துவமனைகளிலும், 2 எம்.ஆர்.ஐ. மையங்களை, ஒன்று சென்னை அரசு பொது மருத்துவமனையிலும், மற்றொன்றை அரசு இராசாசி மருத்துவமனை, மதுரையிலும் நிறுவி மிகக் குறைவான கட்டணமே ஸ்கேன் கட்டணமாக வசூலிக்கப்பட்டு பொது மக்களுக்குச் சேவை செய்து வருகிறது.

சென்னை அரசு ஸ்டேன்லி மருத்துவமனையிலுள்ள கல்லீரல், கணையம், பித்தநீர்ப்பை, குடல் சார்ந்த ரத்தக் கசிவுப் பிரிவு பராமரிப்பு

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் ஐ.எஸ்.ஓ 9001 தரச் சான்றிதழ் பெற்ற கல்லீரல், கணையம், பித்தநீர்ப்பை, குடல் சார்ந்த ரத்தக் கசிவு மையத்தை, சென்னை ஸ்டேன்லி மருத்துவமனையில் இரைப்பை குடல் சார்ந்த அறுவை சிகிச்சைத் துறையின்கீழ் ஒரு தனிப்பட்ட பிரிவாகச் செயல்படுத்தி வருகிறது. மேலும் இதன் உட்கட்டமைப்புக்குத் தேவையான அனைத்தும், இதன் வருவாய்மூலம் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தால் அளிக்கப்படுகிறது.

மகளிர் மற்றும் மகப்பேறு, அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை மற்றும் சென்னை கஸ்தூரிபா காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையிலுள்ள சிறப்பு வகுப்பு கட்டணப் பிரிவு பராமரிப்பு

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், சிறப்பு வகுப்பு மகப்பேறு கட்டணப் பிரிவை, சென்னை எழும்பூரிலுள்ள மகளிர் மற்றும் மகப்பேறு மருத்துவமனையில் 19-02-2003 அன்று நிறுவியது. கஸ்தூரிபா காந்தி மருத்துவமனையிலுள்ள சிறப்பு வகுப்பு கட்டணப் பிரிவை மே 2004-ல் நிறுவியது. இந்த இரண்டு கட்டணப் பிரிவுகளும் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தால் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

முழு உடற்பரிசோதனைத் திட்டம்

அரசு பொது மருத்துவமனையில் முழு உடற்பரிசோதனைத் திட்டமும், அதன் நிதிக் கட்டுப்பாடும் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின்கீழ் 01–04–2001 முதல் கொண்டுவரப்பட்டது. அரசு பொது மருத்துவமனை, சென்னையில் இத்திட்டம் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தால் மிகவும் சீரிய முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

பல்வேறு அரசு மருத்துவ நிலையங்கள்/மருத்துவமனையிலுள்ள கருவிகளின் கொள்முதல் மற்றும் பராமரிப்பு

பல்வேறு அரசு மருத்துவ நிலையங்கள் மற்றும் மருத்துவமனைக்குத் தேவையான உயர் தொழில்நுட்பம் மற்றும் அதிக மதிப்புள்ள மருத்துவக் கருவிகள், குறிப்பிட்ட அரசு ஆணையின்படி தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தால் கொள்முதல் செய்யப்பட்டு, விநியோகிக்கப்படுகின்றன. பெரும்பான்மையான மருத்துவக் கருவிகளின் வருடாந்திரப் பராமரிப்புப் பணியினை தமிழ்நாடு மருத்துவப் பணிகள்

கழகம் ஒப்பந்தப் புள்ளி அடிப்படையில் முடிவு செய்துள்ளது. மீதமுள்ள கருவிகளின் வருடாந்திரப் பராமரிப்புப் பணி பற்றி கூடிய விரைவில் முடிவெடுக்கப்படும்.

கட்டுமானச் செயல்பாடுகள்:

மண்டல நோய் அறுதியிடு மையங்களை நிறுவுதல்

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் திருவண்ணாமலை, திருப்பூர், விருதுநகர், விழுப்புரம், இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில் மண்டல நோய் அறுதியிடு மையங்களின் கட்டுமானப் பணியை முடித்துள்ளது. மேலும் இம்மையங்களுக்குத் தேவையான கருவிகளைக் கொள்முதல் செய்து நிறுவியுள்ளது. இவ்வாண்டு இந்த மையங்கள் தமது பணியினைத் தொடங்கும்.

மருந்துக் கிடங்குகளின் கட்டுமானப் பணி

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் சுமார் ரூ.105.00 இலட்சம் செலவில் சிவகங்கையில் மருந்துக் கிடங்கினைக் கட்டும் பணியினைத் துவங்கியிருக்கின்றது. இப்பணி 2005–2006 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். இக்கழகம் தேனி மாவட்டத்தில் ரூ.104.00 இலட்சம் (தோராயமாக) செலவில் மருந்துக் கிடங்கு கட்ட உத்தேசித்துள்ளது.

கொள்முதல் மைய விலைப் பட்டியல் நிர்ணயம்

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் பகிரங்க ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் அரசு மருத்துவமனைகளின் 20 துறைகளுக்குத் தேவையான 5,700 மருத்துவ சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் 1–4–2005 முதல் 31–3–2007 வரை கொள்முதல் மைய விலைப் பட்டியல் நிர்ணயம் செய்யும் பணியினை மேற்கொண்டுள்ளது. அரசு மருத்துவ மனைகளுக்குத் தேவையான மருத்துவக் கருவிகள் மற்றும் உபகரணங்களைத் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டு விலை நிர்ணயம் செய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து, அவற்றின் நிதிநிலைக்கேற்ப நேரடியாகக் கொள்முதல் செய்து கொள்ளலாம்.

ஆலோசனைப் பணிகள்

இந்தியாவில் மருந்தாளுமை மற்றும் மருந்துக் கிடங்குகள் நிர்வாகத்தில் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறது. பல மாநிலங்கள் இக்கழகத்தின் செயல்பாட்டைப் பின்பற்றி வருகின்றன.

ஆந்திரா மற்றும் இராஜஸ்தான் மாநிலங்களில் இதுபோன்ற நெறிமுறைபடுத்தப்பட்ட மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்கள் கொள்முதல் விநியோகிக்கும் முறையை நடைமுறைப்படுத்தும் ஆலோசனைப் பணியை தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மேற்கொண்டது. பிற நாடுகளிலிருந்தும் இக்கழகத்தின் பணியினை அறிய ஆர்வம் காட்டியுள்ளனர். இக்கழகத்தின் நிர்வாக அமைப்பைப் பலப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மருந்துகள் கொள்முதல்

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் 268 வகையான மருந்துகள், 63 வகையான அறுவை சிகிச்சைப் பொருட்கள் மற்றும் 84 வகையான தையற்பொருட்களைச் சிறந்த மருந்து தயாரிப்பாளர்களிடமிருந்து பகிரங்க ஒப்பந்தப்புள்ளிமூலம் கொள்முதல் செய்கிறது. மேலும் இக்கழகம் கால்நடைப் பிரிவுக்கான 119 வகையான இரசாயனப் பொருட்கள் மற்றும் நீர்த்த நைட்ரஜன் முதலியவைகளைக் கொள்முதல் செய்கிறது. மருந்துக் கிடங்குவாரியாக தேவையான மருந்துகள், மருந்துப் பொருட்கள் கொள்முதல் மற்றும் வழங்குதல் முதலியன கணினிமூலம் கண்காணிக்கப்படுகிறது.

தர உறுதி

தரம் வாய்ந்த மருந்து மற்றும் மருந்துப் பொருட்களை வழங்குவதற்கேதுவாக, இக்கழகம் தர நிர்ணய முறைமையை வடிவமைத்துள்ளது. ஒவ்வொரு தொகுப்பிலுள்ள மருந்துகளிலிருந்து மாதிரி மருந்து எடுக்கப்பட்டு, நன்மதிப்புள்ள மருத்துவப் பரிசோதனைக் கூடங்களுக்கு (பகிரங்க ஒப்பந்தப் புள்ளியின்மூலம் நிர்ணயம் செய்யப்பட்டவை) அனுப்பப்பட்டு மருந்தின் தரம் உறுதி செய்யப்படுகிறது. அவ்வாறு தரம் உறுதி செய்யப்பட்ட மருந்துகள் மட்டுமே மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

விநியோகம்

இயக்ககத்தால் செய்யப்படும் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் இக்கழகத்தால் கொடுக்கப்பட்டுள்ள பற்று வரவு கைச்சாத்துமூலமாக ஒவ்வொரு மருத்துவமனையும் அதற்குத் தேவையான மருந்துகளை, அதனுடன் இணைக்கப்பட்ட மருந்துக் கிடங்குகளிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். தடையில்லாமல் மருந்துகள் வழங்கும் வகையில் இக்கழகம் அதன் கிடங்குகளில் மூன்று மாதத்திற்குத் தேவையான மருந்துகளை இருப்பு வைத்துள்ளது.

உயிர்காக்கும் மருந்தாகிய நாய்க்கடி மருந்து, சைக்லோஸ்போரின், உறியூமன் இன்சுலின் போன்றவற்றை விற்பதற்காக அதன் விற்பனை விலையை நிர்ணயம் செய்து, விற்பனை மையம் ஒன்றை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நிறுவி விற்பனையைத் துவக்கியுள்ளது.

இணையதளம்

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கான இணையதளத்தை (www.tnhealth.org) இயக்கி செயல்படுத்தி வருகின்றது. நல உரையாடல்மூலம் தினமும் மாலை 4-00 மணி முதல் 6-00 மணி வரை பொது மக்கள் தங்களது நோய்க் குறைபாடுகளுக்கான ஆலோசனையை—ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்கும் மருத்துவர்களின் ஆலோசனையை இவ்விணைய தளத்தின்மூலம் பெறலாம்.

மற்ற நடவடிக்கைகள்

தமிழ்நாடு மின் வாரியத்தின் மருத்துவமனைகள், நகராட்சி, பேரூராட்சி மருத்துவமனைகள், பஞ்சாயத்து ஒன்றிய மருத்துவமனைகள், சிறைச்சாலை மற்றும் காவல் துறை மருத்துவமனைகள், இளம் பருவத்தினர் காப்பகங்கள், மறுவாழ்வு மையங்கள், கூட்டுறவு சர்க்கரைத் தொழிற்சாலைகள், கால்நடை நிலையங்கள், போக்குவரத்துக் கழகங்களின் மருத்துவமனைகள் போன்ற பல்வேறு மருத்துவ நிலையங்களுக்கும் இக்கழகம் சேவை செய்து வருகிறது.

[2005 மார்ச் 21

அத்தியாயம்–13

தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை

தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை 1981 ஆம் ஆண்டிலிருந்து தனி இயக்ககமாக செயல்பட்டு வருகிறது. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ள பழுதாகும் ஊர்திகளின் எண்ணிக்கையைக் குறைவாக வைத்திருப்பதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும். மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து இயக்ககங்களைச் சேர்ந்த மொத்த ஊர்திகளின் எண்ணிக்கை 2,646.

செயல்பாடுகள்

தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறையின்கீழ், ஏழு மண்டலப் பணிமனைகள் உள்ளன. இவை சென்னை, வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. இதைத் தவிர 9 மாவட்ட தலைமைப் பணிமனைகளும், மற்றும் 27 நடமாடும் பணிமனைகளும் இத்துறையில் இயங்குகின்றன. சென்னையில் ஒரு மறுசீர் பிரிவு மற்றும் மைய பழுது நீக்கப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

1981–ல் மொத்த வாகனங்களில் நல்ல முறையில் இயங்கி வந்த வாகனங்களின் விழுக்காடு 72.6 ஆக இருந்தது 2005 ஆம் ஆண்டில் 96 விழுக்காடாகப் படிப்படியாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின்கீழ் இயங்கும் பல்வேறு இயக்ககங்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்ற புதிய ஊர்திகள் விரைந்து வாங்கி வழங்கப்படுவதையும் இத்துறை உறுதி செய்கிறது.

தமிழக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர் மற்றும் தரமணியில் உள்ள மைய அரசின் தொழிற்பழகுநர் பயிற்சிக் குழுமத்தின் இயக்குநர் ஆகியோரால் அனுப்பப்படும் தொழிற்பயிற்சிச் சான்றிதழ் பெற்றவர்கள், பொறியியல் பட்டம் பெற்றவர்கள் மற்றும் பொறியியல் பட்டயம் பெற்றவர்களுக்கு தொழிற்பழகுநர் பயிற்சி இத்துறையினால் அளிக்கப்படுகிறது. இத்துறையில், 17 பொறியியல் பட்டதாரிகள், பொறியியல் பட்டயம் பெற்றவர்கள் மற்றும் 45 ஐ.டி.ஐ. படித்தவர்களுக்கு, தொழிற்பழகுநர் பயிற்சி அளிக்கத் திறன் உள்ளது.

2005 மார்ச் 21]

2004–05 ஆம் ஆண்டில் ரூ. 0.99 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு கணினி மற்றும் உபகரணங்களுடன் எல்காட் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு இவ்வியக்ககத்தில் நிறுவப்பட்டுள்ளது.

உலக வங்கி நிதியுதவி பெறும் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்படி, அவசர கால ஊர்திகளை, விபத்து மற்றும் பேறுகால நோயாளர்களுக்கு வழங்கும் பணியிலும் தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

2005–2006 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டம்

தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறையின் வளாகத்தில் உள்ள சென்னை மண்டலப் பணிமனைக்காக (சுகாதாரம்) பழுது பார்க்கும் கூடம் ஒன்று ரூ.15.00 இலட்சம் மொத்தச் செலவில் கட்டுதல்.

D
V211,31605
P05.76.2
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
226642
சென்னை-600 008

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.